812

# T.N.L.A Debates

OFFICIAL REPORT

VOL: LXVIII NO: 3,4

October 10th 11

1984

D
V211,31 N84
N84.68.3 4;1
136274

2567 / அ. நூ / 85

வெளியீடு 23-3-85]  [Issued 23-3-85

ஆவணம்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
2812

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

புதன்கிழமை, அக்டோபர் 10, 1984 - ... LXVIII எண் 3
Wednesday the 10th October 1984 ... LXVIII No 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம் ... 600 009
Legislative Assembly Secreta... George,
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்]  Price Rs. 3-50 paise

## உள்ளடக்கம்

**10-10-1984**


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள் | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 183—231 |
| 2. | அறிக்கை அளித்தல் | |
| | தமிழக முதலமைச்சர் அவர்களின் உடல் நலம் குறித்து | 231 |
| 3. | தகவல் கோரல் | |
| | (அ) சட்டமன்றத் தேர்தல் குறித்து | 231—233 |
| | (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் | 234 |
| | (இ) வடாற்காடு மாவட்டத்தில் நெற்பயிர் நோயினால் பாதிக்கப் பட்டிருப்பது. | 234 |
| 4. | ஒத்திவைப்புத் தீர்மானம் | |
| | கரும்புக்கு அரசு நிர்ணயித்துள்ள விலை | 234—243 |
| 5. | அறிவிப்பு | |
| | முதல் துணை மதிப்பீடுகள் 1984-85 | 244 |
| 6. | அரசினர் சட்ட முன்வடிவுகள் | |
| | (அ) பாரதியார் பல்கலைக் கழகம் பாரதிதாசன் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு 1984 | 244—248 |
| | (ஆ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்ட முன்வடிவு 1984 | 248 |
| | (இ) கடன் நிவாரண (இரண்டாவது (திருத்த) சட்ட முன்வடிவு 1984 | 249 |
| | (ஈ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு 1984 | 249—255 |
| | (உ) கட்டிடக் கட்டுமானப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்-பல்வகை விதித் துறைகள்) சட்ட முன்வடிவு 1983 தொடர்ச்சி | 255—306 |
| 7. | பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள் | 306—307 |

VRii.31 N84

N84.6...

136274
சென்னை-600 009

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984 அக்டோபர் 10, புதன்கிழமை

புரட்டாசி 25, ரக்தாக்ஷி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்."

ஒழுக்கமுடைய சான்றோரின் வாய்ச் சொற்கள், வழுக்கல் உடைய சேற்று நிலத்தில் ஊன்றுகோல்போல வாழ்க்கையில் உதவும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### சென்னையில் மேலும் ஒரு பால் பண்ணை அமைக்கும் திட்டம்.

21.—(* வினா எண். 22116) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் மேலும் ஒரு பால் பண்ணையை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான பணிகள் எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ மற்றும் ஆ): தென் சென்னையில் பால் பெருக்குத் திட்டம் 2-ன் கீழ் மூன்றாவது பால் பண்ணை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான அனுமதியை இந்திய பால் பண்ணைக் கழகம் 1984 ஆம் ஆண்டு இறுதிக்குள் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேற்படி அனுமதி கிடைத்தவுடன் புதிய பால்பண்ணைக்கான கட்டுமானப் பணிகள் 1985 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு 1988 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஆரம்பிக்கப்படுகின்ற பால் பண்ணை எத்தனை ஏக்கரில் எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் ஆரபிக்கப்படும்? தற்போது சென்னையில் பல தனியார் மா கள் கண்டபடி திரிந்து

கொண்டு சாணங்கள் போடுவதால் சாக்கடையை அடைக்கின்றது. இதன் விளைவாக கொசுத் தொல்லை ஏற்படுகின்றது. எனவே புதிதாகப் பால் பண்ணை ஆரம்பிக்கும் போதாவது இந்த மாடுகளை எல்லாம் அதிலே வளர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பால் பண்ணை, பாலை மட்டும் உற்பத்தி செய்து வினியோகம் செய்யும்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னையிலே இயங்கி வரும் பால் பண்ணையின் மூலமாக சென்னை மாநகரத்தில் வசிக்கக்கூடிய மக்களுக்கு நாள் ஒன்றுக்கு எவ்வளவு பால் சப்ளை செய்யப்படுகின்றது ? எல்லோருக்கும் பால் சப்ளை செய்யப்படுகின்றதா ? அது என்ன விலையில் வழங்கப்படுகின்றது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்தவரையிலே தற்போது 4½ இலட்சம் லிட்டர் பால் நாள்தோறும் வினியோகிக்கப்படுகிறது. சென்னை மாநகரத்தின் தேவையில் ஏறத்தாழ 60 சதவீதம் தேவையைக் கூட்டுறவு பால் பண்ணை மூலம் வினியோகித்து வருகிறோம். அடுத்து விலையினைப் பற்றிக் கேட்டார்கள். கூட்டுறவுப் பால் பண்ணை மூலம் விற்கப்படும் பால் லிட்டர் 3 ரூபாய் என்ற அளவுக்கு விற்கப்படுகின்றது. ஆனால் மார்க்கெட் விலையை பொறுத்தவரையில் 4½ ரூபாய் விற்றுக்கொண்டிருக்கின்றது.. இன்றைய தினம் சில குறைபாடுகள், சில சிரமங்கள் அதாவது வெளி மார்க்கெட்டிலே லிட்டர் 4½ ரூபாய்க்கு விற்கப்படுவதால் அதை வாங்க முடியாமல் மக்கள் லிட்டர் 3 ரூபாய்க்கான கூட்டுறவுப் பண்ணைப் பாலை வாங்க முற்படுகின்ற காரணத்தால் கூட்டுறவுப் பாலுக்கு கிராக்கி ஏற்பட்டு இருக்கின்றது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே இருக்கின்ற மக்களுக்கு தேவைப்படுகின்ற அளவுக்குப் பால் கிடைப்பதில்லை என்ற காரணத்தால் எல்லா மாவட்டங்களிலும் பால் உற்பத்தியாளர் ஒன்றியம் துவங்க அரசு முன்வருமா ? இப்போது அவ்வாறு எத்தனை மாவட்டங்களில் துவங்கப்பட்டு இருக்கின்றது ?



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இரண்டாவது பால் பெருக்குத் திட்டம் 9 மாவட்டங்களில் இயங்கி வருகின்றது. விரைவில் தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் பால் பண்ணைகள் அமைக்கப்பட்டு அது தமிழகத்தினுடைய தேவையை ஓரளவுக்குப் பூர்த்தி செய்யும் என்று கருதுகிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பால் பண்ணை அமைக்கப்படுவதைப் பொறுத்தவரையில் எல்லா மாவட்டங்களிலும் ஒரே கொள்கையின் அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும். அதாவது அமைக்கப்படுவது கூட்டுறவு பால் வழங்கும் சங்கமா அல்லது பால் உற்பத்தியாளர் சங்கமா என்ற நிலைமையில்லாமல் ஒரேவகையாக இருக்கின்ற முறையில் ஆரம்பிப்பதற்குரிய திட்டம் அரசினிடத்திலே இருக்கின்றதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆம். இருக்கின்றது. அந்த ஒருவழித் திட்டத்தை நாம் செயல்படுத்த தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

திரு. துரை ராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலே நாம் பால் சப்ளை செய்தாலும், தனியார்கள் ரூ. 4½-க்கு விற்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த நிலையை மாற்ற, மாவட்டங்களிலே கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்களை எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் விரைவாக அதிக அளவில் துவக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் கூட்டுறவு சங்கங்களைத் துவக்க முடியாது. ஏனென்றால் துவக்கிய பிறகு அது நடைபெறாவிட்டால் அதுவும் அரசுக்கு ஒரு பிரச்னையாக இருக்கும்.

திரு. எல். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, சமீப சில நாட்களாகச் சென்னை நகரத்திலே கடுமையான பால் தட்டுப்பாடு இருக்கிறது. அது நேரடியாக உபயோகிப்பாளருக்குப் போகாமல் மொத்த வியாபாரிகள் வாங்குவதால் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது என்ற நிலை இருக்கிறதே, அதைப் போக்கி மக்களுக்கு நேரடியாகக் கொடுக்கின்ற திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1984 அக்டோபர் 10

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குச் சென்னையில்
தட்டுப்பாடு இருப்பதற்குக் காரணமே வெளிமார்க்கெட்டில் ரூ.
4½ யும், ஆவின் பால் ரூ. 3-ம் என்றும் இருப்பதால், வெளி
மார்க்கெட்டில் இருக்கிற டீ கடைக்காரர்கள் மற்ற, மற்ற
பெரிய அளவில் பால் வாங்குபவர்கள் ஆவின் பாலை வாங்கு
கிறார்கள். அதைத் தவிர்த்து, நியாயமான உபயோகிப்பாளர்
களுக்குக் கொடுப்பதற்கு, அதிகாரிகளையும், போலீசையும்
வைத்துக் கொண்டு நிலையை சீர் செய்து, இன்றைக்கு நுகர்
பவர்களுக்கு நியாயமாகக் கிடைக்கின்ற எல்லா நடவடிக்கைகளை
யும் எடுத்து வருகிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இப்பொழுது பால் உற்பத்தியானது சென்னை நகரத்
திற்கு மட்டும் அல்ல, தமிழகம் பூராவுமே பற்றாக்குறையாக
இருக்கிறது என்பதை அரசு அறியுமா? இதற்குப் பிரதானமான
காரணம் பல இடங்களிலே இப்போது துவக்கப்பட்ட பால்
உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், துவக்கப்பட்டவுடனே,
ஓராண்டுக் காலத்திற்குள்ளே மூடப்பட்டிருப்பது என்பது
அரசுக்குத் தெரிய வந்திருக்கிறதா ? இதற்கு எல்லாம் முக்கிய
மான காரணம் மாட்டை வாங்கி பாலை கறப்பவர்களுக்கு
நியாயமான, சரியான விலை கிடைக்கவில்லை என்பதாகும்.
அதனால் ஒரு தடவை மாட்டை வாங்கியவர்கள், மறு முறை
மாட்டை வாங்குவதில்லை. அதை விற்று விட்டுப் போய்
விடுகிறார்கள். ஆகவே, பால் உற்பத்தியைப் பெருக்க சரியான
திட்டம் வகுத்து, கட்டுப்படியாகக்கூடிய விலையைக் கொடுத்து
அல்லது விநியோகத்தில் மானிய விலையைத் தந்து விடுங்கள்.
அப்படிச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தொடங்கப்படுகின்ற சங்கங்கள்
எல்லாம் சில நாட்களிலே உலர்ந்து விடுகின்றன, தொய்வு
ஏற்படுகின்றது என்று சொன்னால், அதற்காகத்தான் ஒரு
சங்கம் ஆரம்பிக்கும்போது குறைந்தது 100 லிட்டராக இருந்
தால் — வையபிலிட்டி என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே,
அப்படி ஒரு தன்னிறைவு கொண்டதாகயிருக்க வேண்டுமென்ற
அடிப்படையில், 100 லிட்டர் இருந்தால்தான் துவக்கப்படுகிறது.
40 லிட்டர். 50 லிட்டர் வைத்திருக்கிற இடத்திலேகூட சில
இடங்களில் நிர்ப்பந்தம் காரணமாக அல்லது வேறு சில தனிக்
காரணங்களுக்காக ஆரம்பித்து விட்டால் பிறகு அந்தச் சங்கம்
இயங்காமல் இருக்கிறது. அந்தச் சிரமங்களை நாம் எல்லாம்
கண்டு கொண்டிருக்கிறோம் எனவேதான் 100 லிட்டர் என்ற
அடிப்படையை வைத்தால் வையபிலிட்டியாக இருக்கும் என்பதற்
காக அதை வற்புறுத்துகிறோம்.



1984 அக்டோபர் 10]

அடுத்து விலை பிரச்னையைப் பற்றிச் சொன்னார்கள்.
1977-ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் பொறுப்
பேற்ற பொழுது தோராயமாக ரூ. 29 கொடுத்துக் கொண்டிருந்
தோம். இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் ரூ. 2
அதிகம் கொடுத்து சென்ற ஆண்டு ரூ. 40 ; இப்பொழுது
ரூ. 42 என்று கொடுக்கிறோம். 1977-லே ரூ. 29 கொடுத்துக்
கொண்டிருந்தோம். இப்பொழுது ரூ. 13 விலை உயர்வுக்கு
வழி செய்து, உற்பத்தியாளர்கள் மத்தியிலே இன்றைக்கு
ஒரு நிறைவு ஏற்பட்டிருக்கிறது.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தப் பால் பண்ணையை சென்னையிலே ஆரம்பிப்
பதன் அடிப்படை நோக்கம் என்ன ? வளரும் சென்னையிலே
இதுபோன்ற பால் பண்ணைகளை ஏற்படுத்தி மேலும் சுகாதாரச்
சீர்கேடுகள் ஏற்படாமல் இருப்பதற்காக அரசு ஏதாகிலும் முடிவு
செய்திருக்கிறதா ? அல்லது புறநகர்ப் பகுதியிலோ அல்லது
அண்டை மாவட்டப் பகுதியிலோ அதை ஏற்படுத்த அரசு ஏன்
திட்டம் வகுக்கவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குச் சென்னையைப்
பொறுத்த வரையிலும், கூட்டுறவு மூலம் 4½ இலட்சம் லிட்டர்
பால் விநியோகம் செய்து கொண்டிருக்கிறோம். அது 1990-வது
ஆண்டு 8 இலட்சம் லிட்டராக உயரும் என்று கணக்கிட்
டிருக்கிறோம். எனவே அந்த இடைவெளியைத் தவிர்ப்பதற்
காக, இடைவெளித் தேவையை நிரப்புவதற்காகத்தான் மூன்றா
வது பால் பண்ணையைக் குறிப்பாக, சென்னையை அடுத்த
புறநகர்ப் பகுதியில் சுகாதாரக் கேடு இல்லாமல், வேறு வசதிக்
குறைவில்லாமல், மாமல்லபுரம் செல்கின்ற பாதையிலே அமைக்
கின்ற முயற்சியை மேற்கொண்டிருக்கிறது.

(முற்பகல் 9-10)

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இன்றைக்கு
பூரண உணவு என்று சொல்லப்படுகிற பால் தமிழ் நாட்டிலே
தனி நபர்களுக்கு கிடைக்கக்கூடிய சராசரி அளவு எவ்வளவு
என்பதை அறிவிக்க இயலுமா ? உற்பத்தியாளர்களுக்கு பாதிக்
காத அளவிற்கு கட்டுபடியான விலை கிடைப்பதற்கு அரசு என்ன
நடவடிக்கை எடுத்துள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே
அதுகுறித்த தகவல் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி
போட்டால் பதில் அளிக்கிறேன்.

**மாவட்டந்தோறும் கால்நடைத் தீவனம் தயாரிக்கும் தொழிற் கூடங்கள் அமைக்கும் திட்டம்.**

22—(* வினா எண். 23116) திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைத் தீவனக் கலவைத் தொழிற்கூடங்கள் மாவட்டந்தோறும் திறக்கப்படுமா?

(ஆ) தற்போது மாதவரத்தில் இயங்கும் தொழிற்சாலையின் செயல் திறன் எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) இல்லை.

(ஆ) நாளொன்றுக்கு 75 டன் கால்நடைத் தீவனம் தயாரிக்கலாம்.

**தீவிர தென்னை அபிவிருத்தித் திட்டத்தை சேலம் மாவட்டத்திற்கு விரிவுபடுத்தும் திட்டம்.**

23—(*வினா எண். 21487) திரு. இ. கணேசன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீவிர தென்னை அபிவிருத்தித் திட்டத்தை சேலம் மாவட்டத்திற்கு விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) தமிழகத்தில் சென்னை மற்றும் நீலகிரி தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் தீவிர தென்னை வளர்ச்சித் திட்டம அமுலாக்கப்படுகிறது.

(ஆ) சேலம் மாவட்டத்தில் கீழ்க்கண்ட பணிகள் ஒவ்வொரு ஆண்டும் நிறைவேற்றப்படுகிறது:

(1) நெட்டை *குட்டை வீரிய ஒட்டு தென்னங் கன்றுகள் விநியோகம். — 60,000 எண்கள்.

(2) நெட்டை தென்னங் கன்றுகள் விநியோகிக்கும் திட்டம். — 2,20,000 எண்கள்

(3) பயிர்ப் பாதுகாப்பு பரப்பளவு — 3,500 எக்டர்.

(4) உரமிடும் பரப்பளவு — 2,500 எக்டர்.





(5) வயல் விளக்கத் திடல்கள் — 20 எண்கள்.

(6) விவசாயிகள் சுற்றுப் பயணம் (ஆண்டு ஒன்றுக்கு). — 1

(7) டேனிஷ்பட்டை நாற்றுப் பண்ணையில் தென்னங்கன்றுகள் உற்பத்தி. — 1,33,000 எண்கள்.

(8) கருந்தலைப் புழுவை கட்டுப்படுத்த ஒட்டுண்ணி விடவேண்டிய பரப்பளவு. — 640 எக்டர்.

(9) வாடல்நோய் கட்டுப்படுத்தும் திட்டம் மருந்திட வேண்டிய மரங்களின் எண்ணிக்கை. — 500 எண்கள்.

(10) சேலம் நகர்ப்புரத்தில் தென்னை விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் தென்னங் கன்றுகள் விநியோகம். — 48,000 எண்கள்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, தென்னை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு என்னென்ன உதவிகள் அளிக்கப்படுகின்றன? அந்த உதவிக்கு மாக்சிமம் ஒருவருக்கு இவ்வளவு பணம்தான் என்று வரையறை இருக்கிறதா? கன்றுகள் கொடுப்பதோடு, அவற்றை நடுவதற்கும் வங்கிகள் மூலமாக கடன் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் கடன்களை வாங்குவதிலே சிரமங்கள் ஏற்படுவதால், கடன் வழங்குவது கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்க ஏற்பாடு செய்யப்படுமா, இப்போது இனாமாக, மானியமாக ஒரு விவசாய்க்கு எவ்வளவு ரூபாய் கொடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எண்ணெய் வித்துத் துறையின் மூலமாக மேற்கொள்ளப்படுகிறது. பொதுவாக மாநிலம் முழுமைக்கும் எண்ணெய் வித்துத் துறையின் மூலமாக செலவு செய்யப்படுவதற்கு 700 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது. இதிலே தென்னை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தென்னங் கன்றுகள் விநியோகிக்கப்படுகின்றன. மற்றைய உதவிகள் ஆங்காங்கு இருக்கிற நிலைமைகளை ஒட்டி எண்ணெய் வித்துத் துறையின் மூலமாகச் செய்யப்படுகிறது.

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, தீவிர தென்னை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே இருக்கிற நெட்டை குட்டை தென்னைகள் மூலமாக உற்பத்தி அதிகமாகக் கிடைக்கிறதா? அல்லது இயற்கையாக இருக்கிற பச்சை சிவப்பு வகையில் வருகிற கன்றுகளின் மூலம் உற்பத்தி அதிகம் பெறப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1984 அக்டோபர் 1,

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அது மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. கன்னியாகுமரி மாவட்டம் கொஞ்சம் தனிப்பட்ட வகையில் உற்பத்தியை பெருக்கிக் கொண்டிருக்கின்றது.

**திரு. தி. கா. நல்லப்பன் :** தலைவர் அவர்களே, தீவிர தென்னை அபிவிருத்தித் திட்டம் என்கிற பெயரிலே தண்ணீர் இருக்கின்ற இடங்களில் தென்னை அபிவிருத்தி செய்யப்படுகிறது. தண்ணீர் இல்லாத பல்வேறு இடங்களிலும் இத்திட்டத்தின் கீழ் கன்றுகள் நடப்பட்டு, அவைகள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் பட்டுப்போய் விடுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே இம்மாதிரியான இடங்களை பரிசீலனை செய்து தண்ணீர் இல்லாத இடங்களில் கன்றுகளை நடாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே அரசு தென்னங் கன்றுகளை நடுவது இல்லை. அரசு தென்னை நாற்றுப் பண்ணை இருக்கிறது. அதில் உற்பத்தி செய்யப்படும் நாற்றுக்களை தனிப்பட்ட பெருமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. அவர்கள் அதை உரிய முறையில் பராமரிக்க வேண்டும் அதற்கான வகையில் அவர்களுக்கு உரிய ஆலோசனைகள் அந்தத் துறையின் மூலமாக வழங்கப்படும்.

**திரு. சேலம் மு. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, கேரள மாநிலத்தில் தென்னம் மட்டை கீற்றில் இருந்து தென்னம் நாற்று விடக்கூடிய ஒரு ஆராய்ச்சியைச் செய்து அதில் அவர்கள் வெற்றி கண்டிருப்பதாக இன்றைக்கு பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு ஆராய்ச்சியை தமிழகத்தில் மேற்கொள்ளவும், தென்னம் மட்டையில் இருந்து தென்னம் நாற்றுகளை உற்பத்தி செய்யவும் தமிழக அரசிடம் ஏதேனும் திட்டமுள்ளதா ? எதிர்காலத்தில் அந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, முதலில் தென்னையை உற்பத்தி செய்வோம். அதற்குப் பிறகு மட்டையில் இருந்து என்ன செய்வது என்பதை ஆராய்ச்சி செய்வோம்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** தலைவர் அவர்களே, தமிழகத்தில் தென்னை அபிவிருத்தித் திட்டம் நடைமுறையில் இருக்கிறபோதே தேங்காய் விலை, தேங்காய் எண்ணை விலை உயர்ந்து கொண்டே போவதால் இந்தத் திட்டத்தை அதிகமான அளவில் கவனம் செலுத்தி நல்ல முறையில் அதிகமான அளவில் தேங்காய் உற்பத்தி செய்யவும், தென்னை மரத்தில் இருந்து கள் இறக்குவதைத் தடை செய்யவும் அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1984 அக்டோபர் 10]

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, தென்னம் கன்றுகளை இப்போது நாம் வினியோகம் செய்கிறோம். இவைகள் தென்னை மரங்களாக வளர்ந்த பின்தான் தேங்காய் உற்பத்தி அதிகரிக்கும். ஏற்கெனவே இருந்தவர்கள் தென்னை கன்றுகளை நல்ல முறையில் வினியோகம் செய்திருந்தால் இப்போது தேங்காய் விலை அதிகமாகியிருக்காது. (கைதட்டல்) தென்னையில் இருந்து கள் இறக்குவதை தடை செய்வது என்பது இந்தக் கேள்விக்கு தொடர்புடையது அல்ல.

**திரு. ஆர். தியாகராசன் :** தலைவர் அவர்களே, தென்னங் கன்றுகளை நாம் இப்போது வினியோகித்துக்கொண்டு இருக்கிறோம். அந்தத் தென்னங் கன்றுகளுக்கு பூச்சிகளால் ஏற்படும் நோய் போன்றவற்றைத் தடுக்க அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா ? அதற்கான நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டு உள்ளதா ? அதேபோல் தென்னை மரங்கள் நன்கு வளர்ந்து இருந்தால் அவைகள் நோய் பாதிக்கப்பட்டு அழிந்து விடுகின்றன. இதன் காரணமாக காய்கள் பூச்சிகளால் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, இவைகளில் இருந்து வளருவது பாதிக்கப்படுகிறது. ஆகவே, இவைகளில் இருந்து அந்த தென்னைகளைக் காப்பாற்ற அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, தென்னை தீவிர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்துக்கள் எல்லாம் அடங்கும்.

**திரு. செ. சிவசாமி :** தலைவர் அவர்களே, தென்னை தீவிர அவிருத்தித் திட்டத்தின்கீழ் இன்றைக்கு நெட்டை—குட்டை தென்னைக் கன்றுகளையும், குட்டை—நெட்டை தென்னங் கன்றுகளையும் நாம் உற்பத்தி செய்து வினியோகம் செய்து வருகிறோம். தென்னங் கன்றுகள் குறித்து பிலிப்பைன்ஸ் நாட்டில் அதிகமான அளவில் ஆராய்ச்சிகள் செய்து பல கண்டு பிடிப்புகளைச் செய்து இருக்கிறார்கள். ஆகவே, அது போன்ற நாடுகளுக்கு இங்கேயிருந்து ஒரு குழுவை அனுப்ப அரசிடம் திட்டமுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது பற்றி உலக நாடுகளிலே இருக்கின்ற தென்னை ஆராய்ச்சிகளை எல்லாம் கண்டறிந்து தான் இந்தத் திட்டத்தை நாம் வகுத்து செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

**வடாற்காடு மாவட்டத்தில் வேளாண்மை கல்லூரி அமைக்கும் திட்டம்.**

*21*—(*வினா எண். *22445*) **திரு. பெ. சு. திருவேங்கடம் :** **திரு. கே. ஆர். சுந்தரம் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வடாற்காடு மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

(ஆ) 1986-87-ஆம் கல்வி ஆண்டில் ஆரம்பிக்கப்படலாம்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் தமிழ்நாட்டிலேயே உணவு உற்பத்தியிலே மிக முக்கியமான மாவட்டமாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக நெல் உற்பத்தியில் தமிழகத்திற்கே சோறு போடும் மாவட்டமாக இருந்து வருகிறது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலேயே ஏற்கெனவே அறிவித்து இருக்கிறார்கள். பட்ஜெட் கூட்டத் தொடரின் போது எந்தெந்த ஆண்டில், எந்தெந்த மாவட்டங்களில் வேளாண்மைக் கல்லூரி தொடங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது என்ன காரணத்தாலோ இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, இது ஒரு தவறான பதிலாக இருக்கிறது. இந்தக் கேள்வியை நான் ரொம்ப நாளைக்கு முன்பே கேட்டிருந்தேன். ஆகவே, இதை மறுபரிசீலனை செய்து, வருகின்ற கல்வி ஆண்டிலே, அந்த மாவட்டத்து மக்களின் நலன் கருதி அந்த வேளாண்மைக் கல்லூரியை அங்கே ஏற்படுத்த அரசு முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களையும்விட வடாற்காடு மாவட்டம் வறட்சி மாவட்டம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இங்கே பேசியிருக்கிறார்கள். எல்லா மாவட்டத்திற்கும் வடாற்காடு மாவட்டம் சோறு போடுவதாகச் சொன்னார்கள். எப்படியோ வடாற்காடு மாவட்டத்திற்கு ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள். இப்போது நெல்லை மாவட்டத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்க இருக்கிறோம். அடுத்த ஆண்டு தஞ்சை மாவட்டத்திலும், 1986-87-ஆம் ஆண்டில் வடாற்காடு மாவட்டத்திலும் தொடங்க உரிய ஏற்பாடுகளை அரசு செய்யும்.

(முற்பகல் 9-20)

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டம் மற்றவர்களுக்கு சோறு போடுகிறது என்று நான் சொல்லவில்லை. வேளாண்மைத் துறைக் குறிப்பில் தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக இறைவைப் பாசனம் மூலம் அதிகமாக நெல் உற்பத்திச் செய்வது வடாற்காடு மாவட்டம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதன் அடிப்படையில்தான் வடாற்காடு மாவட்டத்திற்கு வேளாண்மைக் கல்லூரி வேண்டு





மென்று வற்புறுத்துகிறோம். அதற்குக் காரணம் உங்களுடைய இலாகாவுக்கு சம்பந்தம் இல்லை என்றாலும், கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அங்கே சட்டக் கல்லூரி ஒன்று வரும் என்று சொல்லி, 5, 6 ஆண்டுகள் ஆகியும் இன்னும் வரவில்லை. அதைப் போன்று இதுவும் போய்விடக்கூடாது. ஆகவேதான் நாங்கள் வற்புறுத்துகிறோம். இதிலே கவனம் செலுத்தப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் நல்ல எண்ணங்களைப் பாராட்டுகிறேன். வடாற்காடு மாவட்டத்திற்கு புதிய வேளாண்மைக் கல்லூரி ஒன்று வேண்டும் என்பதில் அரசும் ஆர்வம் கொண்டிருக்கின்றது.

**திரு. கே. ஆர். சுந்தரம் :** தலைவரவர்களே, இந்த விவசாயக் கல்லூரியை ஆரம்பிக்க கடந்த ஆண்டு இடங்களைப் பார்வையிட்டதாகவும், குடியாத்தம் தாலுகா, வாலாஜா தாலுகாக்களில் பாலாற்றங் கரையோரத்தில் இடம் தேர்ந்தெடுக்கப் பட்டதாகவும் சொல்லப்படுகிறது. அப்படி இருக்கும்போது இந்த ஆண்டு தொடங்காமல் 1986-87-ஆம் ஆண்டில் தொடங்குவோம் என்று சொல்வதற்குப் பதிலாக அடுத்த ஆண்டிலேயே தொடங்க முயற்சி எடுத்துக் கொண்டால் அதற்கான நிதி உதவியைக்கூட அந்த மாவட்ட மக்கள் செய்ய தயாராக இருக்கிறார்கள். ஆகையால் அடுத்தாண்டு தொடங்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவரவர்களே, ஏற்கெனவே இடங்களை எல்லாம் பார்வையிட்டது உண்மைதான். 1986-87-ஆம் ஆண்டில் தொடங்கும்போது அப்படி பார்த்த இடங்களில் எதை தேர்வு செய்வது என்பதைப் பார்க்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த மாவட்ட மக்கள் நிதி உதவி செய்ய தயாராக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அவர்கள் எந்த வகையில் உதவி செய்ய இருக்கிறார்கள் என்ற விவரத்தை விளக்கினால் அதுபற்றி உடனடியாக முடிவு செய்ய வசதியாக இருக்கும்.

**திரு. ந. குலசேகர பாண்டியன் :** தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டம் தஞ்சைக்கு அடுத்தபடியாக உணவு உற்பத்தியில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. அங்கே மூன்று சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இவற்றை கருத்திற் கொண்டு, ஆம்பூர், வாணியம்பாடிக்கு இடையே பாலாற்றங் கரையோரத்தில் புதிய விவசாயக் கல்லூரி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? உடனடியாகக் கல்லூரியைத் தொடங்க ஏற்பாடு செய்தால் அதற்குத் தேவையான கட்டிடங்களை வாடகைக்குத் தர அந்தப் பகுதி மக்கள் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அரசு அடுத்த நிதியாண்டிலே அங்கே விவசாயக் கல்லூரியைத் தொடங்க முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, தஞ்சைக்கு அடுத்தபடியாக என்று சொன்ன காரணத்தால் தஞ்சைக்கு அடுத்தபடியாக அங்கே வேளாண்மைக் கல்லூரி தொடங்கப்படும்.

### 1983–84 ஆம் ஆண்டில் நமது மாநிலத்தில் உற்பத்தி செய்யப் பட்ட மிளகு.

25 (*வினா எண். 23140) திரு. டி. மணி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983-84-ஆம் ஆண்டில் மிளகு (நல்ல மிளகு) நமது மாநிலத்தில் உற்பத்தியின் அளவு எவ்வளவு ?

(ஆ) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா ?

(இ) என்னென்ன கலப்பு இன ரகங்கள் உள்ளன ?

(ஈ) இதில் பன்னியூர் ரகம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) 1983-84-ஆம் ஆண்டு டிசம்பர் வரை மிளகு உற்பத்தி சுமார் 229 டன்னாக மதிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) மிளகு உற்பத்தி செய்பவர்களிடமிருந்து மிளகு வியாபாரிகள் வாங்கி ஏற்றுமதி செய்வதாக சொல்லப்படுகின்றது.

(இ) பன்னியூர் 1 என்ற கலப்பின ரகம் ஒன்றுதான் உள்ளது

(ஈ) பன்னியூர் ரகம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

திரு. டி. மணி : தலைவரவர்களே, 1983–84 ஆம் ஆண்டில் வெளி நாடுகளுக்கு மிளகு ஏற்றுமதி செய்ததன் மூலமாக எவ்வளவு அந்நியச் செலாவணி கிடைத்தது என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, ஏற்றுமதி செய்யக்கூடியவர்கள் தனிப்பட்ட வியாபாரிகள். ஆகையினால் அரசிடம் அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. டி. மணி : தலைவரவர்களே, புதிதாக அறிமுகம் செய்யப்பட்டிருக்கும் பன்னியூர் ரகம் எந்த எந்த மாவட்டத்திற்கு ஏற்ற ரகமாக இருக்கிறது ? அது எந்த எந்த மாவட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது ? அதன் உற்பத்திப் பெருக்கத்தின் காரணமாக அதிக மகசூல் கிடைகிறதா ?





மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, பெரும்பாலும் எல்லா மாவட்டங்களிலும் இந்த ரகம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதிகமாக மகசூல் கிடைக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, மிளகுப் பயிர் கடல் மட்டத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட உயரத்தில் செழிப்பாக வளருகிறது என்று சொல்லப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்னால் கடல் மட்டத்திலும் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கை இருக்கிறது என்று ஒரு அறிக்கையில் சொன்னார்கள். அது எந்த அளவுக்கு வெற்றிகரமாக இருக்கிறது ? பெரிய அளவில் கடல் மட்டத்தில் பயிர் செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, தற்போது நீலகிரி மாவட்டத்தில்தான் இது அதிகமாகப் பயிர் செய்யப்படுகிறது. மற்ற மாவட்டங்களிலும் பயிர் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். இன்னும் முழுமையாக வெற்றி தரவில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, இந்த மிளகு ஏற்றுமதியை தனிப்பட்ட வியாபாரிகள் செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அதில் ஒரு பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசு அறியுமா ? மிளகைப் போல் அந்திமந்தாரை விதை இருப்பதால் அதை மிளகோடு கலப்படம் செய்து ஏற்றுமதி செய்வதால் முன்பு இருந்ததை விட மிளகு ஏற்றுமதி குறைந்து அன்னியச் செலாவணியும் குறையக் கூடிய அபாயம் ஏற்பட்டிருப்பதை அரசு அறியுமா ? ஆகவே, இதனைத் தவிர்க்க அரசே மிளகை கொள்முதல் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து நமது அந்நியச் செலாவணியைப் பெருக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே கலப்படம் என்பது எல்லாயிடத்திலும் இருக்கிறது, எல்லாப் பொருள்களிலும் இருக்கிறது. கலப்படத்தைத் தடுக்கவேண்டுமென்பதற்காக எல்லாவற்றையும் கொள்முதல் செய்ய ஆரம்பிப்பது என்பது அரசாங்கத்தால் முடியாது.

### திருவில்லிபுத்தூர் நகருக்கு வழங்கப்படும் குடிநீர்

26—(* வினா எண் 11886)—திரு. மு. சுந்தரராஜன் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மம்சாபுரம் அருகே உள்ள அத்தித்துண்டு என்ற இடத்திலிருந்து திருவில்லிபுத்தூர் நகருக்கு வழங்கப்படும் குடிநீரை விவசாயத்திற்குப் பயன்படுத்துவதால் அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது உண்மையா ?

[1984 அக்டோபர் 10

(ஆ) குடிநீர் ஆழ்கிணற்றிலிருந்து இரண்டு பர்லாங் தூரம் வரை தனியார்கள் புதிய கிணறு வெட்டவோ, கிணற்றை ஆழப்படுத்தவோ மின் இணைப்பு வாங்கவோ கூடாது என்கிற அரசாணை அந்தப் பகுதியில் மீறப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) ஆம்.

(இ) குடிநீர்த்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பு 36 விவசாயக் கிணறுகள் இருந்தன. தடை ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்பு மூன்று பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுகுறித்து மின்வாரியத்திடம் அறிக்கை கேட்கப்பட்டது. இராமநாதபுரம் மின் வாரியம் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் தடை ஆணை (நிலை) எண் 1106, பொதுப்பணித்துறை, நாள் 17–5–1967 கிடைக்கப்பெறாததால் 1975–81 ஆண்டுகளின்போது மூன்று பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டது என்றும் தற்போது நடைமுறையிலுள்ள மின் சட்டம் அல்லது அது தொடர்பாக விதிகளின்படி மேற்சொன்ன மூன்று கிணறுகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மின் இணைப்புகளைத் துண்டிக்க முடியாது என்றும் மற்றும் அவற்றிற்கு சிறப்பு ஒப்புதல் அளிப்பும், மின் ஏற்பும் அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம் என்றும் மின் வாரியம் தெரிவித்துள்ளது. மேலும் புதிய மின் இணைப்புகள் அளிப்பது நிறுத்தப்பட்டுவிட்டது என்றும் மின் வாரியம் தெரிவித்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் சண்பகத்தோப்பு இருக்கிறது. அங்கு தனிப்பட்ட விவசாயிகளின் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கிற காரணத்தால் திருவில்லிப்புத்தூர் நகர் குடிநீருக்கு எந்தவிதமான பாதிப்பும் கிடையாது. இப்போதுகூட இரண்டு கோடி முப்பத்தைந்து இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மாபெரும் குடிநீர் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுத்ததை ரத்து செய்யாமல் மேற்கொண்டும் விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட இலாகாவிற்கு ஆட்சேபணை இல்லை என்று கூறி தக்க நடவடிக்கைகள் எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூருக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தில் சுற்றுப்புறத்திலுள்ள பாசனக் கிணறுகளுக்கு அதிலிருந்து தண்ணீர் இறைப்பதால் திருவில்லிப்புத்தூருக்கு தண்ணீர் வழங்கு



1984 அக்டோபர் 10]

வது பாதிக்கப்படவில்லை என்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். மற்றபடி இப்போ திருக்கக்கூடிய விதிமுறைகள் தொடர்ந்து இருக்கும்.

கும்பகோணம் பாதாள சாக்கடைத் திட்டம்.

27—(* வினா எண். 17089)—திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது மற்றும் திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1983–84 ஆம் ஆண்டில் கும்பகோணம் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றி முடிக்கப்படுமா ?

(ஆ) அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) :
பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரை கும்ப
கோணம் நகராட்சி ஆறு பகுதிகளாக பிரிக்கப்பட்டு, ஐந்தாவது
பகுதியில் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதர பகுதி
களுக்கு பாதாள சாக்கடைத் திட்டம் தமிழ்நாடு குடிநீர்
வடிகால் வாரியத்தால் மறு ஆய்வு செய்யப்பட உள்ளது.
திட்ட அறிக்கை தயாரித்த பின்பே மதிப்பீடு பற்றிய விவரங்
களை அறிய முடியும்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : தலைவர் அவர்களே,
சென்ற பேரவைக் கூட்டத்தில் 1984-ம் ஆண்டுக்குள்ளே இந்தத்
திட்டம் முடிக்கப்படும் என்று உள்ளாட்சித் துறை அமைச்சர்
அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் இப்போது இப்படி
தாமதமாவதால் எஸ்டிமேட்டட் காஸ்ட்—இப்போது கும்ப
கோணம் நகராட்சி ஆணையாளர் ஆய்வு நடந்து விட்டது என்று
சொல்கிறார்கள். இப்போது திட்டம் ஆய்வில் இருக்கிறது
என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அமைச்சர் அவர்
கள் திட்ட மதிப்பீட்டை சரியாகச் சொல்லவில்லை. ஆகவே
காலம் கடத்தாது இருக்கிற செலவினங்களைக் குறைத்து இதற்
காக உடனடியாக ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்
களே, இந்த நகராட்சியின் கழிவுநீரை அகற்ற பாதாளச் சாக்
கடை அமைக்கும் திட்டத்திற்கு 1953-ல் அரசு அங்கீகாரம் அளித்
தது. திட்ட மதிப்பீட்டுத் தொகை 5-ம் பகுதிக்கு 18.70
இலட்சமும், இதர 1, 4 மற்றும் 6-ம் பகுதிகளுக்கு ரூ. 54.93
இலட்சமும், 5-ம் பகுதிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு
ரூ. 27.67 இலட்சம் செலவிட்டு 1969–70-ல் முடிவுற்றுவிட்டது.
அதற்குப் பின்னால் அந்தப் பகுதியிலிருந்து புதிதாகச் சேர்க்கப்
பட்ட இடங்கள் இருக்கின்றன. புதிதாகச் சேர்க்கப்பட்ட
இடங்களையும் திட்டத்தில் கொண்டுவர வேண்டும்.

[1984 அக்டோபர் 10

இப்போது நிறைவேற்றப்பட்டால், என்ன மதிப்பீடு
ஆகுமென்பதற்கு புது மதிப்பீடு போடப்பட்டது. எனவே,
அதற்கு ஆய்வுத் தொகை ரூ. 1.14 இலட்சம் ஆகுமென்று
திட்டமிடப்பட்டது. இதன் அடிப்படையில் நகராட்சியை
அந்த ஆய்வுப் பணத் தொகையைச் செலுத்துமாறு கேட்டுக்
கொள்ளப்பட்டது. இந்தத் தொகை நகராட்சியால் இன்னும்
செலுத்தப்படவில்லை.

(முற்பகல் 9-30)

திரு, இ. எஸ். எம். பக்கீர் முகமது : பேரவைத் தலைவர்
அவர்களே, இதற்கு முன்பு இரண்டு பிளாக்குகளில் வேலை
நடந்து கொண்டிருந்தது. மீதமுள்ள 4 பிளாக்குகளுக்கு
வேலை செய்ய, ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. முனிசி
பாலிடியினுடைய வருமானம் மிகவும் குறைந்துள்ளது. மீத
முள்ள 4 பிளாக்குகளில் வேலைசெய்ய வேண்டுமென்றால்,
அரசு சொல்லுகின்ற மதிப்பீடு தொகையைக் கட்டுவதற்கு
கும்பகோணம் நகராட்சி தயாராக இருக்கிறது. ஆகவே,
உடனடியாக அந்த வேலையை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்
டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை
வர் அவர்களே, எஞ்சியுள்ள பகுதிகளுக்கும் மதிப்பீடு தயார்
செய்து, அந்த மதிப்பீடு அனுப்பப்பட்டு, அதற்கான தீர்மானம்
நிறைவேற்றப்பட்டு, எந்தவகையில் நிறைவேற்ற வேண்டு
மென்று அந்த முனிசிபாலிடிக்கு அதற்கான அட்மினிஸ்ட்
ரேடிவ் சாங்ஷன் கொடுக்கப்பட்டு, அதற்கு அரசு அனுமதியும்
தந்து செயல்படுத்த வேண்டும். இப்போது ஆய்வுத் தொகை
ரூ. 1.14 இலட்சம் ஆகிறது. அதை அந்த நகராட்சி கொடுக்க
வில்லை. அதைச் செலுத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் தன் செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் தலைவர் அவர்களே,
நகராட்சி அதற்கான தொகையைக் கட்டுவதற்கு தயாராக
இருந்தும் அரசு உடனடியாக மதிப்பீடு செய்யாததாலும்,
தடைபெற்று ஏற்படுகின்ற வெள்ளத்தாலும், மழை
யினாலும் பொது மக்களுக்கு போக்குவரத்திற்குக்கூட சாலை
வசதிகள் சரியாக இல்லாத நிலைமை ஏற்படுகின்ற காரணத்தி
னால், இந்தத் திட்டத்தை அரசு உடனடியாக நிறைவேற்றிக்
கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறதா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : எந்தத் திட்டத்
தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் இராசாராமன் பேசு
கிறார்கள். இதே சாக்கடையா ? (சிரிப்பு)



1984 அக்டோபர் 10]

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, இந்தக் கேள்வியே சாக்கடைத் திட்டத்தைப்
பற்றித்தான். நான் ஏதோ புதிதாக கேள்வியைக் கேட்க
வில்லை. ஆதலால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த
சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும். கார
ணம், மழைக் காலங்களிலும், வெள்ளம் பெருக்கெடுத்து
ஓடும் காலங்களிலும், நகரத்திலே போக்குவரத்திற்குக்கூட
வசதியில்லாத நிலைமை ஏற்படுகிறது. சில வாரங்களுக்கு
முன்னால்கூட, போக்குவரத்து தடைப்பட்டது. எனவே,
உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத்
தலைவர் அவர்களே, எல்லாப் பிரச்னையும் ரூபாயில் இருக்
கிறது. ஆகவே, இந்த ரூ 1.14 இலட்சம் வேண்டும். அதற்கு ஏற்பாடு
செய்ய வேண்டும் அதற்கு தனியாக இராசாராமன்
அவர்கள் அக்கறை காட்டவேண்டும் கும்பகோணம் எனது
சொந்த ஊர் என்பது உங்களுக்குத் தெரியுமென்று கருதுகிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தத் திட்டம் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டது.
அங்கே 3 பிளாக்குகளில் வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு,
நிறைவேற்றப்பட்டன. புதிதாக ஆய்வுத் தொகை கட்ட வேண்
டியதில்லை என்று அந்த நகராட்சி அலுவலகத்தில் சொல்லு
கிறார்கள். மீதமுள்ள பிளாக்கு வேலைகளுக்கு மீண்டும்
ஆய்வுத் தொகை கட்டவேண்டிய அவசியம் இல்லை. நகராட்சி
யின் நிதி நிலைமை மிகவும் குறைவு. அமைச்சர் அவர்களின்
சொந்த ஊர் என்பதால், இதைச் சிறப்புத் திட்டமாகக் கருதி
அரசின் நிதியிலிருந்து அந்த ஆய்வுத் தொகையைக் கட்டி, அதை
நிறைவேற்ற வேண்டும். இது ஒரு யாத்திரை ஸ்தலம் என்பது
எல்லோருக்கும் தெரியும். கும்பகோணம் கொசுவிற்கு மிகவும்
பிரபலமானது. எனவே, இந்தச் சாக்கடை திட்டத்தை
நிறைவேற்றிக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத்
தலைவர் அவர்களே, மொத்தம் 6 பகுதிகளாகப் பிரிக்கப்
பட்டிருக்கிறது. மேலும், 'ஆடட் ஏரியாக்கள்' வேறு இருக்
கின்றன. ஆகவே, புதியதாக ஆய்வு செய்ய வேண்டும். மேலும்
இப்போது எக்ஸ்கலேஷன் காஸ்ட் அதிகமாகி இருக்கிறது.
எனவே, அந்த ஆய்வுத் தொகையை நகராட்சி கட்டினால்,
அதாவது ரூ. 1.14 இலட்சம் செலுத்தினால், அதற்கான
வேலைகளை குடிநீர் வாரியம் மேற்கொள்ளும்.

**மணப்பாறை நகராட்சிப் பகுதிக்குக் காவேரி ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டம்.**

28—(*வினா எண். 17331) திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மணப்பாறை நகராட்சியில் வசிக்கும் மக்களுக்குக் காவேரி ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் உள்ளதா ?

(ஆ) அது எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) ஆம்

(ஆ) இத்திட்டத்தின் அமைப்புத் தொகை ரூ. 374.80 லட்சத்தையும ஆண்டு பராமரிப்புத் தொகையையும் ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் இந் நகராட்சியில் நிதி நிலைமையிருப்பதால், நிதி உதவி கோரி அரசுக்கு கருத்துரு வந்துள்ளது. அது பரிசீலனையில் உள்ளது.

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறை நகராட்சி பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் நன்கு அறிவார்கள். நகராட்சியையும், அதையொட்டி இருக்கக் கூடிய பகுதியில் வாழும் மக்கள் குடிநீர் கிடைக்காமல் தொடர்ந்து அவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் பல ஆழ் குழாய் கிணறுகள் போட்டும் குடிநீர் கிடைக்கவில்லை. நீர் ஊற்றுகள் ஏதும் இல்லை. இந்த நிலையில் காவிரி நீரைக் கொண்டு வந்து அந்த மக்களுக்குக் குடிநீர்க் கொடுப்பதைத் தவிர வேறு மாற்று வழி இல்லை. இந்த நிலையில் நகராட்சியிடம் நிதி இல்லை என்ற காரணத்தைக் காட்டி இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்காமல் இருப்பது சரியில்லை. ஆகவே அரசே இந்தத் திட்டத்தை ஏற்று, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்குக் குடிநீர் கிடைப்பதற்கு, காவிரி நீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மணப்பாறை நகராட்சி மற்றும் 8 வழியிலுள்ள கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் புகைவண்டி நிலையம், தொழிற்சாலை மற்றும் வணிக நிறுவனங்களுக்கான குடிநீர் வசதி செய்யும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



136274



காவேரி ஆற்றை ஆதாரமாகக் கொண்டு அமைக்கும் திட்டம் மட்டுமே மணப்பாறை நகராட்சிக்கு நிரந்தர குடிநீர் வழங்கும் திட்டமாக அமையும். இத் திட்டத்தின் அமைப்புத் தொகை ரூ. 374.80 இலட்சத்தையும், ஆண்டு பராமரிப்புத் தொகையையும் ஏற்றுக் கொள்ள முடியாத அளவில் இந்நகராட்சியின் நிதி நிலைமையிருப்பதால், நிதி உதவி கோரி அரசுக்கு கருத்துரு வந்துள்ளது. மணப்பாறை குடிநீர்த் திட்டம், ஐரோப்பிய பொருளாதார குழுமத்தின் உதவிபெறும் திட்டங்களின் பட்டியலில் சேர்ப்பதற்காக, மைய அரசுக்கு அனுப்பப்பட உள்ளது. ஐரோப்பிய பொருளாதார குழுவின் ஒப்புதல் பெற்றவுடன் இத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்காக எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. இரா. கருப்பையா :** மக்களுக்கு அடிப்படையான வசதியான குடிநீர் வழங்க வேண்டிய பொறுப்பை நிறைவேற்ற வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது. கிராமப்புறங்களிலுள்ள மக்களுக்கு அரசு தன்னுடைய நிதியிலிருந்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுப்பதற்கான நடவடிக்கை ஏற்பாடுகள் இன் றைக்கு இருக்கிறது. ஆனால் சம்பந்தப்பட்ட நகராட்சி நிதி கொடுத்தால் தான் இத்திட்டத்தை நிறைவேற்ற முடியும் என் றிருக்கிறது. நகராட்சியில் நிதி வசதி இல்லை. எந்தக் காலத்தி லும் ஏதும் கொடுக்கப்பட போவதில்லை. ஆகவே அரசு நிதி உதவி அளித்து இதை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். ஐரோப்பிய பொருளாதார குழுமத்தோடு இதை முடிச்சுப் போடு வதன் காரணமாக, அரசே நேரடியாக அந்த நகராட்சிக்கு வேறு நீர் வாய்ப்பே கிடைக்காததால், முழு மான்யமாக கொடுத்து, அதை நிறை வேற்றிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, எதையும், எதோடும் முடிச்சுப் போட வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை, செய்து முடிக்க வேண்டியதே நம்முடைய எண்ணம். இப்பொழுது இருக்கக் கூடிய விதிமுறைகளின்படி நகராட்சி என்றால், 2/3 எல். ஐ. சி.யிலிருந்தும், 1/3 கவர்ன்மெண்டிலிருந்தும் கொடுத்து, அதை செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இப்போது எப்படியாவது செயல்படுத்துவது என்ற ஆசையின் காரணமாக இந்த ஐரோப்பிய பொருளாதாரக் குழுமத்திற்கு அனுப்பும்படி மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். தட் இஸ் தி அங்சையடி ஆப் தி கவர்ன்மெண்ட்டு இம்ப்ளிமெண்ட் தி ஸ்கீம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்ரீசியேட் செய்வார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மணப்பாறைக்கு காவேரி ஆற்று நீர் வழங்க 374 லட்சம் ரூபாய்

[1984 அக்டோபர் 10

வரையில் செலவாகும் என்று குறிப்பிட்டார்கள். குளித்தலை—
காவேரி ஆற்றிலிருந்து மணப்பாறை சுமார் 24 மைல் தூரத்திலே
இருக்கிறது. நடுவில்ல; 30, 35 கிராமங்கள் பலன் அடையக்கூடிய
திட்டமாக இது இருக்கிறது. மேலும் அந்தப் பகுதி மேடாகவும்,
மலைப்பாங்காகவும் இருக்கின்றது. எனவே அந்தப் பகுதிகளில்
கிணறுகளைத் தோண்டினாலும், தண்ணீர் கிடைப்பது அரிதாக
இருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள மக்கள் சுமார் 10, 15
வருடங்களாக—மணப்பாறையில் உள்ள மக்களும், அதனைச்
சுற்றியுள்ள கிராம மக்களும்—இதற்காக தக்க முயற்சிகளை
எடுத்துக் கொண்டு வருகிறார்கள். இதற்காக ஒரு கமிட்டி கூட
அமைத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களையும் சந்தித்து ஒரு அறிக்கை கொடுத்
திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை தலை சிறந்த ஒரு சீரிய
முன்னோடித் திட்டமாக மக்களுக்குப் பயன்படும் திட்டமாக
மனதிலே கொண்டு, இதை நிறைவேற்றுவதற்கு உடனடியாக
தக்க ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று நான் அறிய விரும்பு
கிறேன்.

(முற்பகல் 9–40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் திட்டத்தை செயல்
படுத்த, என்னென்ன முயற்சிகளை எடுக்கவேண்டுமோ, அவை
களை எல்லாம் அரசு எடுக்கும்.

திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மணப்பாறை குடிநீர் திட்டமானது அந்த
நகர மக்களுடைய நீண்டகால விருப்பம். அந்த விருப்பத்தை
நிறைவேற்றும் வகையில் காவிரியிலிருந்து, குளித்தலையிலிருந்து
மணப்பாறை வரை, திறந்தவெளி சால்வாய் மூலமாக தண்ணீர்
கொண்டு வந்தால், அது நீர்ப்பாசனத்திட்டத்திற்கும் பயன்படும்.
ஆகவே இந்தத் திட்டத்தின் மூலமாக தண்ணீரை திறந்தவெளி
கால்வாய் மூலமாக கொண்டு வர முயற்சி செய்யப்படுமா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் 400 மில்லி
மீட்டர் விட்டமுள்ள முன்பளுவேற்றப்பட்ட சிமிட்டி கற்காரைக்
குழாய்கள் மற்றும் எஃகுக் குழாய்கள் மூலம் 40 கி. மீ. வரை
கொண்டு வந்து பயன்படுத்துவது என்றுதான் இருக்கிறது.
இதை குழாய்கள் மூலம் கொண்டு வருவதுதான் பாதுகாப்பு.
நீங்கள் சொல்வது போல் திறந்தவெளி கால்வாயாக இருந்தால்,
அது கடைசியில் மணப்பாறைக்கு வந்து சேருமா என்பது சந்தேகம்.
எனவே இப்போது இருக்கக்கூடியது மூடு குழாய் திட்டம்தான்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1984 அக்டோபர் 10]

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறையிலே இருக்கக்கூடிய மக்கள் குடிநீருக்காக எவ்வளவு அல்லல் படுகிறார்கள் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே தெரியும். முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு குழந்தைவேலு அவர்கள் அங்கே வந்து பலமுறை உறுதியளித்திருக்கிறார்கள். அந்த மக்களுக்கு குடிநீர் வேண்டுமென்ற அந்தப் பிரச்சினையை, ஐரோப்பியாவோடும், ஆப்பிரிக்காவோடும் இணைத்து முடிச்சுப் போட்டு அமைச்சர் அவர்கள் இந்த கூட்டத் தொடரிலே இதை முடித்து விடலாம் என்று அங்கே இருக்கிற மக்கள் நினைக்கிறார்கள்—சொல்கிறார்கள். ஆகவே இதற்கு நிரந்தரமாக பரிகாரம் தேடுவதற்கு—உடனடியாக தண்ணீர் கேட்பவர்களுக்கு தண்ணீர் கொடுப்பதுதான் முறை—ஏதாவது விரைந்து செய்வதற்கு திட்டம் வைத்திருக்கிறார்களா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஐரோப்பிய பொருளாதாரக் குழு என்று தான் சொன்னேன். ஆப்பிரிக்கக் குழு என்று சொன்னதாக எனக்கு ஞாபகம் இல்லை. இதை இ. இ. சி. என்று சொல்வார்கள். எப்படியாவது எங்காவது பணத்தைப் பெற்று இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று 'அங்கைசட்டி' காண்பிப்பதைப் பார்த்து மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன்.

**கவுந்தப்பாடி, சலங்கை பாளையம் பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.**

29—(*வினா எண். 18475) திரு. பி. ஜி. நாராயணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், பவானி தொகுதியில் கவுந்தப்பாடி, சலங்கைப் பாளையம் பேரூராட்சிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எந்த நிலையில் உள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பெரியார் மாவட்டம் பவானி தொகுதியில் கவுந்தப்பாடி, சலங்கைப் பாளையம் மற்றும் பி. மேட்டுப் பாளையம் ஆகிய பேரூராட்சிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க கூட்டுக் குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஜி. நாராயணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மதிப்பீடு பற்றியும், இந்தத் திட்டம் கவுந்தப்பாடி, சலங்கைப்பாளையம் பேரூராட்சிக்கு உட்பட்ட எல்லாக் கிராமங்களுக்கும் பயன்படுமா? அல்லது ஒரு சில கிராமங்கள்தான் என்றால், அந்த கிராமங்களின் விவரத்தை அறிய விரும்புகிறேன்.

[1984 அக்டோபர் 10

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவுந்தப்பாடி திட்டம் 19.86 லட்சம். சலங்கைப் பாளையம் பேரூராட்சி திட்டம் 9.01 லட்சம். பி. மேட்டுப்பாளையம் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு 6.37 லட்சம். ஆக 35.24 லட்சத்திற்கு திட்டம் திட்டப்பட்டிருக்கிறது. இந்த 3 மூன்று பேரூராட்சிகளுமே 50 சதவீதத்தை அரசு மானியமாகப் பெறவும், 50 சதவீதம் செலவிற்காக ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கடனாகப் பெறவும், அதை 9 சதவீதம் வட்டியுடன் கூடிய கடனாகத் திருப்பித் தரவும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத்தை இந்த மூன்று பேரூராட்சிகளுக்கும் நடைமுறை சாத்தியமாக்கும் அளவிற்கு தற்பேதைய நிலவரப்படி திட்ட அறிக்கை. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியக் கண்காணிப்பாளர் அவர்களால் திருத்திய வரவு-செலவு கேற்றவாறு தயாரிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் செலவீடு 76.42 லட்சமாகும். இத்திட்ட அறிக்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மதிப்பீட்டுத் திட்டம் 76 லட்சம் ரூபாய் செலவிலே தலைமைப் பொறியாளரிடத்திலே இருப்பதாகக் கூறினார்கள். இத் திட்டத்தை மீண்டும் மீண்டும் ஆய்வு செய்து கொண்டேயிருக்கிறார்களே தவிர, வேறு மாதிரி நடவடிக்கை இல்லை, மிக விரைவாக இத்திட்டத்தை அமல் நடத்துவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தள்ளிப் போட்டுக் கொண்டே போனால் எஸ்கலேஷன் அதிகம் ஆகிவிடும் என்ற காரணத்தால் விரைவாக திட்டம் தீட்டி செயல்படுத்துவது நல்லது என்பதை அரசு உணர்ந்து அதை விரைவு படுத்தும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**ரெட்டணை கிராமக் குடிநீருக்காக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக்கிணறு.**

30 —(*வினா எண். 18812) திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி ரெட்டணை கிராமக் குடிநீருக்காக வெங்கந்தூர்—ரெட்டணை குறுக்குப்பாதையில் போடப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணறு ஒரு ஆண்டிற்கு மேலாகியும் கனெக்ஷன் கொடுக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) அந்த போர்வெல்லில் கனெக்ஷன் கொடுத்து குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?



1984 அக்டோபர் 10]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) இந்த ஆழ்துளைக் கிணற்றில் நீர் போதுமானதாக இல்லாததால் மின் இறைப்பான் பொருத்த முடியவில்லை. கோடைக்காலத்தில் இது வறண்டு போய்விடுகிறது. எனினும், வேறு புதிய நம்பகமான போதுமான நீர் ஆதாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட பின், ரெட்டணை கிராமம் முழுமைக்குமான குடிநீர்த் திட்டம் ஒன்றை நிறுவுவதற்கான ஆய்வுப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 1984–85-ல் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திண்டிவனம் தொகுதியிலே இருக்கிற ரெட்டணை கிராமம் பெரிய கிராமம். அங்கே குடிதண்ணீர் பற்றாக்குறையால் மக்கள் அல்லல்படுவதை பல்வேறு காலங்களில் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அங்கே போடப்பட்டிருக்கிற ஆழ்துளைக் கிணற்றில் போதுமான தண்ணீர் இல்லை என்பதால் வேறு ஒரு திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்விலே இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்த ரெட்டணை கிராமத்திலே வாழ்கின்ற சில பெருந்தனக்காரர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து குடிநீர் வாரியத்திலே போய் அப்படிப்பட்ட சர்டிபிகேட் தர வேண்டும் என்று சொன்னதனாலே இப்படி நிலைமை ஏற்பட்டிருப்பதாக ஊர் மக்கள் பேசிக் கொள்கிறார்கள். அதுதான் சரி என்று நானும் கருதுகிறேன். எனவே அந்த ஆழ்துளைக் கிணற்றிலேயே மறுபடியும் கனெக்ஷன் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு குற்றச் சாட்டைச் சொல்வதால், ஒரு விளக்கமான பதில் சொல்வது நல்லது என்று கருதுகிறேன்.

எனக்குக் கொடுக்கப்பட்ட குறிப்பில், ஒரு மின் இறைப்பான் ஒரு கையிறைப்பான் பொருத்தப்பட்ட இரண்டு ஆழ்துளைக் கிணறுகள் மூலம், இரண்டு இறந்த கிணறுகளுக்கும், ரெட்டணைக்கும் தற்போது தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது என்றும், மேலும் ஊராட்சி ஒன்றியத்தால் போடப்பட்ட 12 குழாய்களுக்கு குழாய் கிணறுகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்றும் கொடுத்திருக்கிறார்கள்.

மேலும், ஒரு ஆழ் துளை கிணற்றிலிருந்து மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியின் மூலமாக ஆதி திராவிட காலனிக்கும், கிராமத்தின் ஒரு பகுதிக்கும் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. கடுமையான வறட்சி காலத்தில், இந்த ஆழ்துளைக் கிணறும் வறண்டு விட்டது. அத்தோடு வெங்கந்தூர்-ரெட்டணை குறுக்குப்

[1984 அக்டோபர் 10

பாதையில் போடப்பட்ட ஆழ்துளைக் கிணற்று நீர் போது மானதாக இல்லாததுடன் கோடைக் காலத்தில் வறண்டும் போவதால், இக்கிணற்றை உபயோகப்படுத்த முடியவில்லை என்று கொடுத்திருக்கிறார்கள்.

ஆகவே, வேறு ஒரு புதிய நம்பிக்கையான, போதுமான நீர் ஆதாரம் ஒன்று ஆய்வின் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு கிராமம் முழுவதும் போதுமான நீர் வளத்துடன் அமையும் வண்ணம், ஒரு குடிநீர்த் திட்டம் 1984–85-ல் மேற்சொள்ள உத்தேசிக்கப்பட் டுள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கிணற்றிலேயே போதுமான தண்ணீர் இருக்கிறது என்று சொல்வதாக அறிகிறேன். அதை வேண்டுமானால் பரிசிலனை செய்யச் சொல்கிறேன். அந் தக் கிணற்றிலேயே போதுமான தண்ணீர் இருக்கிறதா என்று தொலைபேசி மூலமாகக் கேட்டு —அங்கேயே ஒரு எஸ். இ. இருப்ப தாக எனக்கு ஞாபகம், அப்படி இல்லை என்றாலும், இ.இ. யாவது அங்கே இருப்பார்கள் — அவரிடம் தொலைபேசி மூல மாகப் பேசி அதைப் பார்க்கச் சொல்லி, ரிப்போர்ட் வாங்கி தக்க நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும்.

### கைத்தறித் துணிகளை விற்பனைசெய்யும் நிலையங்களின் எண்ணிக்கையை உயர்த்தும் திட்டம்

31 —(*வினா எண் 22411) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வணிகவரி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கைத்தறித் துணிகளை விற்பனை செய்யும் நிலையங் களின் எண்ணிக்கையை உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், புதிய விற்பனை நிலையங்கள் எங்கெங்கு அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் 50 விற்பனை நிலையங்களும், இதர மாநிலங்களில் 75 விற்பனை நிலையங்களும் கீழ்க்கண்ட இடங் களில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது—

(1) தமிழகம் —

| | | |
|---|---|---|
| 1. | சென்னை மாவட்டம் | 7 |
| 2. | வட ஆற்காடு மாவட்டம் | 2 |
| 3. | செங்கற்பட்டு மாவட்டம் | 2 |



1984 அக்டோபர் 10]

(1) தமிழகம்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 4. | தென் ஆற்காடு மாவட்டம் | 6 |
| 5. | தஞ்சாவூர் மாவட்டம் | 3 |
| 6. | திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை மாவட்டம் | 5 |
| 7. | மதுரை-இராமநாதபுரம் மாவட்டம் | 3 |
| 8. | திருநெல்வேலி –கன்னியாகுமரி மாவட்டம். | 3 |
| 9. | சேலம் மாவட்டம் | 5 |
| 10. | கோயம்புத்தூர்–நீலகிரி மாவட்டம் | 4 |
| 11. | ஈரோடு மாவட்டம் | 10 |
| | | 50 |

(2) இதர மாநிலங்கள் —

| | | |
|---|---|---|
| 1. | கர்நாடகம் | 20 |
| 2. | ஆந்திரம் | 20 |
| 3. | கேரளம் | 25 |
| 4. | வட மாநிலங்கள் | 10 |
| | | 75 |

(முற்பகல் 9-50.)

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் கைத்தறி விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள் ளது பற்றி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதுபோன்று வெளி நாடுகளில் விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு உள் ளனவா ? புதிய ரக சேலைகள், பாலியஸ்டர் ரக சேலைகள், ஏஞ்சல் சேலைகள் உற்பத்தியை அதிகப்படுத்தியிருக்கிற காரணத் தினால் விற்பனையும் அதிகமாகியிருக்கிறதா ? நல்ல ரக நூலை வாங்கிக்கொண்டு மட்ட ரக நூலை வைத்து சேலைகளை உற் பத்தி செய்வதால் புராசஸ் செய்யும்போது லட்சக் கணக்கிலே நட்டமாகிவிட்டது என்று அதிகாரிகள் சொல்வது உண்மையா ? அப்படியானால் அதைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர் களே, சிங்கப்பூரிலே கோவாப்டெக்ஸால் தனியாக துவங்கப்பட் டிருக்கிற கோ–ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல் என்ற அமைப்பின் மூலமாக கைத்தறி துணிகள் வெளிநாடுகளுக்கு சிங்கப்பூரிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சென்ற ஆண்டு 1 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்த ஆண்டு 1½ கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. நெசவாளர்கள் எந்த நூலை வாங்குகிறார்களோ அந்த நூலில் அதற்குரிய ஆலைகளில் நெய்து தருகிறார்கள். மொத்த மாக சொன்னால் நெசவாளர்கள்மீது தவறாக சொல்வது போலாகும். எனவே குறிப்பாக தவறுபற்றி கவனத்திற்குக் கொண்டுவருகிறபோது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, கைத்தறித் துணிகளின் தேக்கத்தைப் போக்குவதற்காக வருடா வருடம் சென்னையிலே நடிகைகளை அழைத்து கைத்தறிக் கண்காட்சி, பொருட்காட்சி, கலை நிகழ்ச்சிகள் நடத்தி அவைமூலமாக விற்பனையை அதிகப்படுத்தி வருகிறோம். அதே சமயத்திலே வறுமையிலே வாடுகிற பிரமிளா, ஸ்ரீபிரியா, ராஜகலோசனா, ஈ. வி. சரோஜா, சுபலட்சுமி, சந்திரகாந்தா போன்ற நடிகைகளை சேல்ஸ் பெண்களாக அந்த விற்பனை நிலையங்களில் அமர்த்தி விற்பனையை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கைத்தறி நிலையங்களை ஸ்டுடியோக்களாக்கி விடலாம் என்று பார்க்கிறீர்களா? (சிரிப்பு)

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே குறிப்பாக குமரி மாவட்டத்திலே பல லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. நெசவாளப் பெருமக்களின் நலனைப் பாதுகாக்கும் இந்த அரசு 10 கோடி ரூபாய்க்கு மேல் தேக்கத்தை கொள்முதல் செய்து சென்ற ஆண்டு ஏழை விவசாயிகளுக்கு துணிகளைக் கொடுத்தது. அதுபோன்று இந்த ஆண்டும் வழங்க முன்வருமா? இந்த ஆண்டு தீபாவளியை முன்னிட்டு தேங்கிக் கிடக்கிற கைத்தறித் துணிகளை கொள்முதல் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்ினுடைய அவுட்லெட்ஸ் அல்லது விநியோகக் கடைகளின் மூலமாக சென்ற ஆண்டு 100 கோடி ரூபாய்க்கு விற்பனை ஆகியது. புதிதாக 125 கடைகள் திறக்கப்பட்டதையும் சேர்த்து பார்க்கிறபோது 150 கோடி ரூபாய்க்கு விற்பனையாகும் என்று எதிர்பார்க்கிறோம். தேக்கத்தைப் போக்குவதற்காக தீபாவளி போன்ற நேரங்களில் சிறப்புத் தள்ளுபடி அனுமதிக்கப்பட்டு வருகிறது. இந்த 10 நாட்களில் ஆங்காங்கே இருக்கிற தேக்கம் போக்கப்படும் என்று கருதுகிறேன். ஆடைகள் வழங்குகிற திட்டமும் அமலில் இருக்கிறது. அதுவும் நெசவாளர்களுக்குப் பயன்படும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : இந்த அங்காடிகளில் செயற்கைப் பட்டு சேலைகள் விற்பனை செய்யப்படுகின்றனவா? என்னுடைய தொகுதியான சின்னாளப்பட்டியிலே அதிகமான செயற்கை பட்டு சேலைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கோ-ஆப்டெக்ஸ் அதை கொள்முதல் செய்யாத காரணத்தால் தேக்கம் ஏற்பட்டு அந்த நெசவாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே ஏதாவது [illegible] செய்ய அரசு முன்வருமா ?





மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : சின்னாளப்பட்டி
யிலே மட்டுமல்ல, கோ-ஆப்டெக்சிலே 40கோடி ரூபாய் அளவுக்கு
தேக்கம் ஏற்படுகிறது. அது ஒன்றும் அதிகம் என்று சொல்ல முடி
யாது. ஆண்டு தோறும் நெசவாளர்களிடமிருந்து பிரதம சங்கங்
களுக்கு உதவுகிற வகையில் அவ்வப்போது கோ-ஆப்டெக்ஸ்
வாங்கி விற்பனை செய்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
சொல்வது போன்ற் தேக்கம் கோவாப்டெக்ஸ் கவனத்திற்கு
வருகிறபோது நெசவாளர்களுக்கு உதவுவதற்காக அவர்களிட
மிருந்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நான்
சொன்னதைப்போல் இப்போது 20 சதவீதம் ரிபேட் அறிவிக்கப்
பட்டிருக்கிறது. தீபாவளி, பொங்கல் போன்ற நாட்களில் ஆகும்
விற்பனை ஆண்டில் விற்பனையாகும் மொத்தத்தில் ஏறக்குறைய
பாதி விற்பனை ஆகும். இந்த ஆண்டு 150 கோடி அளவுக்கு தமிழ்
நாடு முழுவதும் விற்பனையாகும் என்று எதிர்பார்க்கிறோம்.
அதன் மூலமாக அவர்களுடைய சுமை ஓரளவுக்குக் குறையும்
என்று அரசு நம்புகிறது. தேக்கம் ஏற்படுகிறபோது அவர்களிட
மிருந்து கோவாப்டெக்ஸ் வாங்க முயற்சி செய்யும்.

திரு. பூ. மு. நரசிம்மன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சங்கங்கள் உற்பத்தி செய்கின்ற ஜனதா ரகங்கள், குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டம் பள்ளிப்பட்டு வட்டத்தில் தேங்கி கிடக்கின்றது. எனவே, உற்பத்தி செய்யப்பட்டுள்ள ஜனதா ரகங்களை அரசு கொள்முதல் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீபாவளியை முன்னிட்டு தமிழகம் முழுவதும் எல்லா இடங்களிலும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் துணிகளை வாங்கியிருக்கிறது. பொதுமக்களும் ரிபேட் என்ற காரணத்தால் அதிகமாக வாங்குவார்கள். எனவே, நெசவாளர்கள் சுமை ஓரளவுக்குக் குறையும் என நம்புகிறோம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கைத்தறி துணிகள் தேங்கி இருப்பதன் காரணமாக நெசவாள பெருமக்கள் இன்று பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை அரசு நன்கு அறியும். அதை போக்குவதற்கு மைய அரசை அணுகி டிபன்ஸ் டிப்பார்ட்மென்ட்ஸ்க்கு தேவையான துணிகளில் இந்த கைத்தறி துணிகளை வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது துணை ஜனாதிபதியாக உள்ள நம்முடைய ஆர். வி. அவர்கள் டிபன்ஸ் மினிஸ்ட்டராக இருந்தபோது அவரோடு தொடர்பு கொண்டு மாநில அரசு மைய அரசுக்கு எழுதி டிபன்ஸ் டிப்பார்ட்மெண்டு மற்றும் மைய சுற்றுலா அமைப்புகளில் எல்லாம் தமிழ் நாட்டிலுள்ள கூட்டுறவுத் துறை

கைத்தறித் துறையிலிருந்து துணிகளை வாங்க வேண்டும் என்று ஏற்கெனவே மையஅரசுக்கு எழுதப்பட்டு இருக்கிறது. தொடர்ந்து மைய அரசை அது குறித்து கேட்டுக் கொள்ளும், அவர்களும் உதவுவார்கள் என நம்புகிறோம்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி துணி விற்பனை நிலையங்களின்எண்ணிக்கை ய அரசுஉயர்த்த திட்டமிட்டுள்ளதா என்பது தான் கேள்வி. ஏற்கனவே இயங்குகின்ற விற்பனை நிலையம் மூடப்பட்டு இருக்கிறது. உதாரணமாக கீழப்பலூர் பேரூராட்சி யில் 20 ஆயிரம் ஜனத்தொகை உள்ள அந்த பேரூராட்சியில் இருந்த விற்பனை நிலையம் மூடப்பட்டு இருக்கிறது.விற்பனை சரியில்லை என காரணம் காட்டினார்கள். விற்பனையை பெருக்குவதற்கு வழிவகை காண வேண்டுமே தவிர மூடுவது சரியல்ல என்று புகார் மனு அனுப்பப்பட்டு இருக்கிறது. மறுபடியும் அந்த கீழப்பலூர் பேரூராட்சியில் விற்பனை நிலையத்தை துவங்குவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சொன்னது போல் ஏறத் தாழ 650 இடங்களில் இதுபோன்ற கடைகள் இயங்கிக்கொண்டு இருக்கின்றன. சிலயிடங்களில் தீபாவளி, பொங்கல், திருவிழாக் கள் நடைபெறும் காலங்களில் தற்காலிகமாக நூற்றுக்கணக்கான இடங்களில் கடைகள் துவக்கப்பட்டு அந்த விசேஷ காலம் முடிந்த வுடன் அந்த இடத்திலிருந்து அக்கடைகள் எடுக்கப்பட்டு இருக் கிறது. ஒரு கடை நடைபெறுகிறது என்றால் அந்த கடைக்கு வாடகை, அதில் பணிபுரியும் 2, 3 பணியாளர்களுக்கு ஊதியம், அங்கே நடைபெறுகிற விற்பனை இதை எல்லாம் கணக்கில் கொண்டு தான் கடைகள் பெரும்பாலும் துவக்கப்படுகின்றன. எல்லா இடத்திலும் நஷ்டத்தில் இயக்கிக்கொண்டு இருக்க முடி யாது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடத் தில் விற்பனை அதிகமாக இருக்கும் வாய்ப்பு இருக்குமானால் அதைப்பற்றி கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மறுபடியும் ஆலோசிக் கும்.

திரு. கோவைத் தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கைத்தறி துணி தேக்கத்திற்கு அடிப்படை கார ணத்தை கண்டுபிடிக்க அரசு முயற்சி செய்து இருக்கிறதா என் பதை அறிய விரும்புகிறேன்? நிர்வாகத்தில் ஏற்படுகின்ற அதிக செலவும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் அதிகமான லாபத்தை கருதி அதிகமான விழுக்காடுகளில் லாபம் வைத்து பொதுமக்கள் தலையில் சுமத்துகின்ற காரணத்தினால் ஏழை கைத்தறி நெச வாளர்கள் வாழ்க்கையில் ஒரு நிம்மதி ஏற்படாத நிலையில் அது தேக்கம் ஏற்படுகிறதா என்பதை அரசு கண்டுபிடித்து அதைப் போக்க அரசு முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேக்கங்களுக்கு பல காரணங்கள் உள்ளன. கூட்டுறவு துறையில் நெய்யப்படுகின்ற கைத்தறித் துணிகள் மக் களுடைய ரசனைக்கு ஏற்றவாறு அப்போதைக்கு அப்போது மாறி மாறி வராமல் பழைய முறையில் உற்பத்தி செய்யப்படுவது ஒரு காரணம் கலர், டிசைன், பல்வேறு அமைப்புக்களில் மக்க ளுடைய டேஸ்ட்டுக்கு ஏற்றவாறு, ரசனைக்கு ஏற்றவாறு இப் போது கவனம் செலுத்த ஆரம்பித்து இருக்கிறார்கள். ஆனால் பலயிடங்களில் பழைய முறையில் துணிகள் அல்லது பொதுமக்க ளுக்கு உபயோகம் ஆகிற பொருட்கள் எல்லாம் உற்பத்தி செய்யப் படுகின்ற காரணத்தால் பலயிடங்களில் தேக்கம் இருக்கிறது. அது வும் தேக்கத்திற்கு ஒரு காரணம். இப்போது அரசு இதற்கு தனி யாக டிசைன் சென்டர் எல்லாம் பலயிடங்களில் ஆரம்பித்து எந்த எந்த டிசைன் மக்களுக்கு அதிகமாக பிடிக்கும், அதை எல்லாம் மக்களிடத்தில் அறிமுகம் செய்யும் விதத்தில் அவர்களுக்கு ஆலோசனை கூறி தகுந்த முறையில் உற்பத்தி செய்ய அரசு அதற் குரிய நடவடிக்கை எடுத்துக்கொள்கிறது. அதிகமான லாபம் பெறும் விதத்தில் கோ-ஆப்டெக்ஸ் இயங்குகின்றது என்று அதற் கான காரணம் சொல்வது சரியான வாதம் அல்ல.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

சமுதாய அபிவிருத்தித் திட்டத்திற்கான 'யுனிசெப்' (UNICEF) நிறுவனத்தின் நிதியுதவி.

32—(*வினா எண். 20529) திரு. செ. செம்மலை : மாண்பு மிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமுதாய அபிவிருத்தித் திட்டத்திற்கு UNICEF ஏதேனும் நிதியுதவி செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) ஆம்.

(ஆ) விவரங்கள் கீழ் வருமாறு :—

(1) வட்டார வளர்ச்சித் திட்டத்தில் ஊரக வளர்ச்சித் துணை இயக்குநர் பதவிக்கு இணையான திட்ட மேலாளர் பதவிக்கு ஓர் ஆண்டுக்கு ஆகும் செலவினமாக ரூ. 22,796.95 அளித்துள்ளது.

(2) ரூ. 653 இலட்சங்கள் செலவில் நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்த உள்ள சமூக முதலீட்டு திட்டத்தின் கீழ் 'யுனிசெப்' நிறுவனம் ரூ. 200 இலட்சங்கள் அளிக்க இசைந்து 1982-83-இல் ரூ. 6.64 இலட்சம் அளித்தது. இவ்வாண்டு ரூ. 48.64 இலட்சம் அளிக்கிறது.

(3) ஊட்டச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 61 வளர்ச்சி வட்டாரங்களுக்கு ஒரு வளர்ச்சி வட்டாரத்திற்கு ரூ. 1,60,000 வீதம் 1978-79 வரை 'யுனிசெப்' (UNICEF) நிதியுதவி அளித்துள்ளது.

(4) ஊரக குடிநீர் வழங்கு திட்டத்தின்கீழ் கைப்பம்புகள் பராமரிப்பவர்களுக்காக பயிற்சி முகாம்கள் கட்டவும் நடத்தவும் யுனிசெப் உதவி செய்கிறது.

(5) இராம முழுவளர்ச்சித் திட்டத்தின்படி மேல நீலித நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஐந்து சமுதாய கூடங்கள் கட்ட யுனிசெப் நிறுவனம் ரூ. 65,000 அளித்துள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 'யுனிசெப்' நிறுவனம் இப்படிப்பட்ட திட்டங்களுக்காக நிதியுதவி அளிக்கும்பொழுது எத்தனை ஆண்டுகளுக்கு அப்படி நிதியுதவி அளிக்க சம்மதித்திருக்கிறது என்பதையும், மேலும் கூடுதலாக நிதியுதவியை இந்த நிறுவனத்திலிருந்து பெறுவதற்காக அரசு மத்திய அரசின் மூலமாக ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 'யூனிசெப்' நிறுவனம் 1985-86 ஆம் ஆண்டு வரையிலேயும் நிதிகளை நமக்கு பல்வேறு தலைப்புகளிலே வழங்குவதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறது. மேலும் அவர்களிடத்திலேயிருந்து நாம் நிதியைப் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம்.

திருவொற்றியூர் நெடுஞ்சாலை புதுவண்ணைப் பகுதியில் சாலையின் இருபுறத்திலும் கடைகள் வைத்து வியாபாரம் செய்வதினால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்.

33—(*வினா எண். 21563) திரு. வே. இராஜசேகரன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுவண்ணைப் பகுதியில் திருவொற்றியூர் நெடுஞ்சாலையின் இருபுறத்திலும் கடைகள் வைத்து வியாபாரம் செய்வதினால், போக்குவரத்திற்கு மிகவும் இடைஞ்சல் ஏற்பட்டு வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், வியாபாரிகளுக்குக் கடைகள் வைத்துக் கொள்ள புதிய மார்க்கட் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) ஆம்.



வியாபாரிகளுக்குப் புதிய மார்க்கெட் கட்டும் திட்டம்
(ஆ) வியாபாரிகளுக்குப் புதிய மார்க்கெட் கட்டும் திட்டம்
அரசிடமோ அல்லது சென்னை மாநகராட்சியிடமோ கிடையாது.
அரசிடமோ அல்லது சென்னை தவிர்ப்பதற்கு வியாபாரிகள் சாலை
போக்குவரத்து நெரிசலை அப்புறப்படுத்துவதற்கு காவல்
ஓரங்களில் நடத்தும் கடைகளை நடவடிக்கைகள் அவ்வப்
துறையினரின் ஒத்துழைப்புடன் தகுந்த
பொழுது எடுக்கப்படும்.

திரு. கு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே,
இப்படிப் போக்குவரத்துதிற்கு இடைஞ்சலாக நடைபாதை
களிலே ஏராளமான பேர் கடைகளை வைத்து வியாபாரம்
செய்கிறார்கள். இராஜாஜி சாலையிலே நடக்கின்ற இத்தகைய
கடைகளை அகற்ற வேண்டுமென்று நீதிமன்றத்தில் வழக்கு
போட்ட நேரத்தில், நீதிமன்றம் அங்கே அந்தக் கடைகளுக்குத்
தனியார் பணத்தை வசூல் செய்கிறார்கள்: அதை மாநகராட்சி
வசூல் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அதைப்
போல அங்கே கடை வைத்திருப்பவர்களிடத்திலேயிருந்து மாநக
ராட்சி அதற்கான வாடகையை வசூலிப்பதற்கு ஏதாவது நட
வடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, இத்தகைய சாலையோரங்
களில் கடை வைத்திருப்பவர்கள் அன்றாடம் அழுகும் பொருட்
களான பூ, பழம், காய்கறி வியாபாரம் செய்யும் சிறு வியாபாரி
கள். சில நேரங்களில் நாம் அவர்களிடத்திலே மனிதாபி
மானத்தோடு அணுக வேண்டியிருக்கிறது. மேலும், நாம்
ஏதாவது வேகமாக நடவடிக்கை எடுத்தால் மாண்புமிகு உறுப்
பினர்கள் போன்றவர்கள் சில நேரங்களில் சிபாரிசுக்கு வந்து
விடுகிறார்கள். ஆகவே, சில நேரங்களில் நடவடிக்கை எடுப்
பதற்கு நாம் தாமதப்படுத்தினாலும், தவறுகள் ஏற்படுகின்ற
பொழுது நாம் நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம்.

திரு. கு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே,
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள
வில்லை. தனியார் அங்கே பணத்தை வசூல் செய்கிறார்கள்.
அதுபற்றி நீதிமன்றம் தீர்ப்பு கொடுத்து, இப்படிச் செய்யக்
கூடாது. மாநகராட்சியே அதை வசூல் செய்ய வேண்டும் என்று
சொல்லியிருப்பதால், மாநகராட்சியே அவர்களிடத்திலேயிருந்து
நிதியைப் பெற்று அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்
யுமா என்பதைத்தான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்பு
மிகு பேரவைத் தலைவரவர்களே, மாநகராட்சிதான் அங்கே
கடை வைப்பதற்கு ஒரு இடத்தில் வசூலித்துக் கொண்டிருக்
கிறது: தனியார் யாரும் வசூலிப்பதில்லை என்பதைத் தெரிவித்
துக்கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே,
புதுவண்ணைப்பகுதியில் திருவொற்றியூர் நெடுஞ்சாலை பகுதி
என்று மட்டும் இல்லாமல், சென்னையில் பரவலாக முக்கிய

மான இடங்களில் போக்குவரத்திற்கு இடைஞ்சலாகக் கடைகளை அமைத்து வருவதும், அதை அப்புறப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து தங்களது வேலைகளைச் செய்யவிடாமல் அரசியல்வாதிகளே இருக்கிறார்கள் என்பதாக அதிகாரிகள் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைகளைப் போக்க முடியுமா? மேலும் தனிப்பட்டவர்களே, சாலையிலே இருபக்கமும் போடப்பட்டுள்ள கடைகளுக்கு வாடகையை வசூலிக்கிறார்கள் என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஒரு அரசியல்வாதிதான். எனவே அவர் எந்த அரசியல் வாதியைக் குறிப்பிடுகிறார் என்று தெரியவில்லை. அந்தந்தக் கடைகளுக்குரிய தரை வாடகையை மாநகராட்சிகளும், நகராட்சிகளும்தான் வசூலித்துக் கொண்டிருக்கின்றன.

ஓசூர் பேரூராட்சியினை நகரியமாக்கும் திட்டம்.

34—(*வினா எண். 22499) டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்திலுள்ள ஓசூர் பேரூராட்சியினை நகரியமாக்க செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) ஆம். (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, ஹோசூர், உள்ளாட்சித் துறையின் கீழே ஒரு நகரப் பஞ்சாயத்தாக இருந்து கொண்டிருப்பதை நகரியமாக ஆக்குவது பற்றி அரசின் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த இன்றைய சத்துணவுத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. குழந்தைவேலு அவர்கள் அங்கே வருகை தந்தபோது நகராட்சியாக ஆக்கித் தருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அப்படி நகராட்சியாக ஆக்குவதற்குரிய திட்டம் இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து குறிப்புகள் நம்முடைய பேரூராட்சி நிர்வாகிகளுக்கு வந்திருக்கின்றன. அதுபற்றிய பரிசீலனையைச் செய்து முடித்ததற்குப் பின்னால் அதுபற்றிய நடவடிக்கை எடுக்கப்படும்.



தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு 1982—83 மற்றும் 1983—84-ஆம் ஆண்டுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி.

35—(*வினா எண். 22790) திரு. மா. சின்னராசு மற்றும் திரு. செ. செம்மலை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய கிராம வேலைவாய்ப்புத் திட்டத்திற்காக 1982—83 மற்றும் 1983—84 ஆண்டுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

(ஆ) அதில் மாநில அரசின் பங்கு எவ்வளவு?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்காக 1982-83-ம் ஆண்டிற்கு ரூ. 3241.80 இலட்சமும்; 1983-84-ம் ஆண்டிற்கு ரூ. 3680.07 இலட்சமும் நிதி ஒதுக்கப்பட்டது.

(ஆ) அதில் 1982-83-ம் ஆண்டிற்கு ரூ. 1,636 இலட்சமும் 1983-84-ம் ஆண்டிற்கு ரூ. 1882.12 இலட்சமும் மாநில அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

திரு. மா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இந்த நிதியுதவியைச் செய்கின்றபோது திட்டங்களை எடுத்துக் கொள்வதற்கான நிபந்தனைகள் ஏதேனும் விதிக்கின்றதா? அப்படியானால் அந்த நிபந்தனைகள் என்னென்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, நிபந்தனைகள் ஏதும் விதிக்கப்படுவதில்லை. கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்களுக்கு நாம் வேலை வாய்ப்பை அளித்திட வேண்டும் என்பதுதான் அந்தத் திட்டத்தின் பொருளும், நோக்கமுமாகும்.

திரு. மா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்றபோது ஒவ்வொரு ஒன்றியத்திலும் அல்லது மாவட்டத்திலும் இந்தத் திட்ட வேலைகளை எடுத்துக்கொள்கிறவர்கள் அவர்களாகவே அந்தந்தப் பகுதிகளில் இன்னின்ன திட்டங்களைத்தான் நிறைவேற்ற வேண்டும் என்ற வகையில் ஒரு வரையறையை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இன்ன வகையான பொதுப்பணியைத்தான் நிறைவேற்ற வேண்டும் என்ற வகையில் மத்திய அரசு ஒரு கட்டுப்பாடு வைத்திருக்கின்றதா? எல்லாப் பொதுத் தேவைகளுக்கான காரியங்களையும் இந்த நிதியிலிருந்து செய்வதற்கு அரசு உத்திரவிடுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக கிராமப்புறங்களில் சாலைகள், மயானச் சாலைகள், பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் சமுதாய நலக்கூடங்கள் போன்ற இத்தகைய பணிகள் எல்லாம் செய்யப்படுகின்றன. இவைதான் செய்ய வேண்டும் என்ற வகையில் நிபந்தனை எதுவும் இல்லை. பொதுவாக அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற கிராமங்களின் வளர்ச்சிக்கும், அரசு வளர்ச்சிக்கும் பயன்படுகின்ற வகையில் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி வருகிறோம்.

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு மாநில அரசினுடைய பங்கு 50 சதவீதம் என்று தெரிகிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புவது என்னவென்றால் மாநில அரசு ஒதுக்குகின்ற நிதிக்குத் தகுந்தவாறு மத்திய அரசு இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்கின்றதா? அல்லது மத்திய அரசு ஒதுக்குவதற்குத் தகுந்த மாதிரி மாநில அரசு ஒதுக்குகின்றதா? மேலும் மற்ற மாநிலங்களைவிட தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை தமிழக அரசு நல்ல முறையில் செயல்படுத்துகின்றது என்று மத்திய அரசு நமக்குச் சான்றிதழ்கள் எல்லாம் வழங்கி இருக்கின்ற நிலையில் இந்தத் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்குக் கூடுதலாக நிதியுதவி மத்திய அரசினிடத்திலே இருந்து பெறுவதற்குரிய வகையில் மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தி வருகின்றதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ஒதுக்குகின்ற அளவுக்கு மாநில அரசு பணத்தை ஒதுக்கி இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றது. இந்தியாவிலேயே இந்தத் திட்டத்தை மிகச் செம்மையாகச் செயல்படுத்தி, சாலைகளை மட்டுமல்லாமல் நிரந்தரமான காரியங்களுக்குத் தேவைப்படுகின்ற கட்டிடங்களையும் உருவாக்குகின்ற வகையில் இந்தத் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்திய மாநிலம் என்ற பெயர் நம்முடைய தமிழ் மாநிலத்திற்குக் கிடைத்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-10]

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலிலே, நிரந்தரமாக கட்டிடங்களைக் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்குகிறது என்று சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலே கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் உயர்





நிலைப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள் கட்டிடம் கட்ட அனுமதி கோரியும் அரசு அனுமதி மறுத்தது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு வந்ததா? இல்லை என்றால் அதைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்பது அல்ல. நிதி வசதிக்கேற்ப அவை ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. எந்தப் பகுதியில் அத்தகைய நிலை என்பதை உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பாரானால் அதன்மீது பரிசீலனை செய்யப்படும்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் எடுக்கப்படுகின்ற அந்தத் திட்ட வேலைகளை எல்லாம் எந்த முறையிலே எடுக்கின்றார்கள். எடுக்கின்ற அந்தத் திட்டங்களில் வேலைகள் யார் மூலமாகத் தரப்படுகின்றன. அந்த வேலைகளை எல்லாம் தனிப்பட்டவர்கள் எடுத்து, தனியாக இலாபம் சம்பாதிப்பது அரசுக்குத் தெரியுமா என்பவற்றிற்கெல்லாம் பதிலை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நடைபெறுகின்ற பணிகள் கிராம சேவக்குகளின் மூலமாகத் தான் நடைபெற்று வருகின்றன. தனியார்களின் மூலமாக நடைபெறவில்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சாலைகள் அமைப்பதற்கான நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், பல இடங்களிலே சாலைகளை அமைப்பதற்கு மக்கள் இனாமாக இடம் கொடுத்தால் தான் செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். தேவைப்பட்டால் நிலங்களை கையகப்படுத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் இந்தத் திட்டத்தின் கீழ் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைகளைப் போட வேண்டுமென்பது இந்தத் திட்டத்தின் கீழ் வருகிறது. ஆனால், இந்தத் திட்டத்தின் கீழ் நிலங்களை நாம் கையகப்படுத்த இயலாது.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்த என். ஆர். இ. பி.யின் கீழ் எல்லா சாலைகளையும் எடுத்துக் கொள்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் தற்பொழுது பதில் சொன்னார்கள். அப்படி இல்லை, லிங்க் ரோட்ஸ்—இணைப்புச் சாலைகளைத் தான் எடுக்கிறார்கள். ஒரு பஞ்சாயத்திலிருந்து காலனிக்குப்

[1984 அக்டோபர் 10

போகிற இணைப்புச் சாலையைத் தான் எடுக்கிறார் களே தவிர, அந்தப் பஞ்சாயத்துக்கு உட்பட்ட, பெரிய, மேஜர் பஞ்சாயத்து, பெரிய கிராமமாக இருக்கும். அந்த இடத்திலே இருக்கிற சாலைகளை எடுப்பதில்லை. உதாரணமாக, காட்பாடி டவுன் ஷிப்பை எடுத்துக் கொண்டால், (குறுக்கீடு) உதாரணத் திற்குச் சொல்கிறேன், திருவலம் பஞ்சாயத்து அல்லது வேறு அம்மூர் பஞ்சாயத்து (குறுக்கீடு) என்று உதாரணத்திற்குச் சொல் கிறன், சார்.

The Hon. Thiru Trichi R. SOUNDARARAJAN : Township has nothing to do with ஊரக வளர்ச்சித்துறை.

திரு. துரைமுருகன் : You are taking up only the link roads. இணைப்புச் சாலைகள் எடுக்கிறார்களே தவிர, உள்ளூரிலே இருக் கிற சாலைகளை இத்திட்டத்தின்கீழ் எடுப்பது கிடையாது. ஆகையினாலே குண்டும் குழியுமாக இருக்கும்போது அமைச்சர் ஒட்டு மொத்தமாக எல்லா சாலைகளையும் எடுக்கிறோம் என்று சொல்வது இந்த அவைக்குத் தவறான தகவலைத் தருவதாகும். ஆகவே, எல்லா சாலைகளும் இனிமேல் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எல்லா சாலைகள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகக் கணக்கிட்டுக் கொண்டிருக்கிறார் கள். நகரியம் வேறு, ஊராட்சி ஒன்றியம் வேறு. இது ஊரக வேலை வாய்ப்புத் திட்டம். கிராமப் புறத்திலேயிருந்து மெயின் சாலைக்கு வருகிற சாலைகளைத் தான் நாம் என்.ஆர். இ.பி. திட்டத்தின்கீழ் எடுக்கிறோம். கிராமச் சாலைகளைப் பொறுத்த வரையில் தான் நான் எல்லா சாலைகலையும் என்று எடுத்துச் சொன்னதை உறுப்பினர் அவர்கள் தவறாக எல்லாச் சாலைகளும் என்று கணக்கிட்டால் அதற்கு நான் பொறுப்பு அல்ல.

நகராட்சிப்பள்ளி ஆசிரியர்களுக்கும் " விடுமுறைப் பயணச் சலுகை " வழங்கும் திட்டம்.

36—(*வினா எண். 23268) திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஊழியர்களுக்கு அரசு வழங்கியுள்ள " விடு முறைப் பயணச் சலுகை " தொகை (Leave Travel Concession) நகராட்சிப்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதனை வழங்க அரசு முன்வருமா ?



1984 அக்டோபர் 10]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) மற்றும் (ஆ): அனைத்து நகராட்சி மற்றும் நகரியங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் " விடுமுறை பயணச் சலுகை " வழங்க வேண்டும் என்ற கோரிக்கை அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை அரசினுடைய பரிசிலனையில் இருக்கிறதென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார் கள். இலட்சக்கணக்கான அரசு ஊழியர்களுக்கு இந்தச் சலுகையை தம்முடைய அரசு வழங்கியிருக்கிறது. இந்தச் சலுகையை நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்குவதால் எத்தனை பேர்கள் பயன்பெறுவார்கள் ? அதனால் அரசிற்கு எவ்வளவு செலவு ஏற்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, அந்த விவரங்களைத் தான் இப்போது கேட்டிருக்கி றோம். அவைகள் வந்த பிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

இலங்கையிலிருந்து அகதிகளாக வரும் தமிழர்கள்.

37—(* வினா எண். 21900) திரு. எம். சின்னசாமி : மாண்பு மிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

இலங்கையிலிருந்து 1983 ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு வந்த அகதிகள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : 1983-ல் இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் 23,454 நபர்கள் (Repatriates) தாயகம் திரும்பியுள்ளனர். இது தவிர, இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டு 23,010 ஆதரவற்றவர்கள் (Refugees) வந்துள்ளனர்.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, இலங்கையி லிருந்து தாயகம் திரும்பி வந்தவர்களுக்கு அவர்கள் வாழ்வதற்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர் களே, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய இலங்கை தமிழர் களுக்கு தங்குவதற்காக இடம், சமையல் பாத்திரங்கள், துணி மணிகள், பாய் ஆகியவைகளுக்காக 600 ரூபாய் மதிப்பூதியமும் இனாமாக வழங்கப்படுகிறது. இவர்களுக்கு தாயகம் திரும்பிய வர்களுக்கு தருவதைப் போல ரொக்கப்படி பணம் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து மாதம் ரூ. 110 லிருந்து ரூ. 357.50 வரைக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

[1984 அக்டோபர் 10

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, இந்த நிதி உதவி செய்வதற்கு ஆகும் செலவை மத்திய அரசு முழு பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறதா ? அல்லது நம்முடைய மாநில அரசு ஏற்றுக்கொள்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, இந்த நிதி உதவிக்கு மத்திய அரசு பொறுப்பேற்று செயல்படுகிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தியா பிரிந்த சமயத்தில் பாகிஸ்தானிலிருந்து விரட்டப்பட்ட இந்துக்களுக்கு அளிக்கப்பட்ட தொகை, அதேபோல பங்களாதேஷிலிருந்து இந்தியா வந்தவர்களுக்கு அளிக்கப்பட்ட தொகை மிக அதிகமான தொகை என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் இலங்கையிலிருந்து, தமிழ் பேசுகிறார்கள், தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக துரத்தப்படக்கூடிய இந்த இலட்சக்கணக்கான மக்களுக்கு வாழ்வளிப்பது நம்முடைய கடமை. அமைச்சர் அவர்கள் சொல்கிற சமயத்திலே ஒரு குடும்பத்திற்கு 110 ரூபாய் கொடுக்கப்படுவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் தாய்க்குலத்தைச் சேர்ந்தவர்கள். 110 ரூபாயை வைத்துக்கொண்டு ஒரு குடும்பத்தை இந்த காலத்தில், இந்த விலைவாசியில் நடத்த முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பல முகாம்களில் நான் பார்த்திருக்கிறேன். கொடுக்கப்படுகின்ற பணம் போதாது என்ற காரணத்தால் அவர்கள் கடைத் தெருக்களில் பிச்சை எடுக்கக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். இன்றைக்கு மாநில அரசாங்கம் உதவித் தொகையை அதிகப்படுத்த வேண்டும். இல்லை என்றால் மத்திய அரசை தட்டிக் கேட்டு குறைந்தபட்சம் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 10 ரூபாய் அளவிற்கு கொடுப்பதற்கு முயல வேண்டும். இதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, நான் பதிலில் விளக்கமாக குறிப்பிட்டிருக்கிறேன். அதாவது குடும்ப உறுப்பினர்களில் எண்ணிக்கையைப் பொறுத்து 110 ரூபாயிலிருந்து 357.50 ரூபாய் வரை மாதத்திற்கு அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி , தலைவர் அவர்களே, என்னுடைய கேள்விக்கு முழுமையாகப் பதில் அளிக்கவில்லை. The Hon. Minister has not answered my question. I wanted to know whether the rate of roupees 3.50 per day per head is enough. Other States have been given substantial amount. Is it not a partisan attitude ?

Mr. SPEAKER : It is not enough. But there is no money.

Thiru V. KRISHNAMURTHY : This Government must impress upon the Central Government to give more money.



1984 அக்டோபர் 10]

Mr. SPEAKER : Of course, we are all here to get more money from the Central Government.

Thiru V. KRISHNAMURTHY : We have got a right to demand more money from the Central Government. Why not we get it ? Let the Hon. Minister reply. I have a right to get a reply from the Minister. So let the Hon. Minister answer for the specific question of mine.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் மண்டபம், கொட்டப்பட்டு போன்ற முகாம்களுக்கு வரவழைக்கப்பட்டு, அவர்கள் அங்கே தங்கி, அவர்களுக்கு இந்தச் சலுகைகள் எல்லாம் கொடுக்கப்பட்ட பிறகு மறுவாழ்வும் கொடுக்கப்படுகிறது. வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அவர்கள் உதவி பெற்று வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இலங்கையில் இருந்து வரும் அகதிகளுக்கு—குறிப்பாக சமீபத்தில் நடந்து இருக்கக்கூடிய அந்தக் கலவரங்களின் காரணமாக வந்து இருக்கும் அகதிகளுக்கு—பணம் மற்றும் பிற வசதிகள் செய்வது பற்றி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மண்டபம் காம்பிற்கு நான் விஜயம் செய்தபோது, அங்கேயுள்ள அகதிகள் தெரிவித்த சீரியஸ்ஸான கஷ்டம் என்னவென்று சொன்னால், சர்க்கார் கொடுக்கும் பணத்தில் பெரும்பகுதியை டௌட்ஸ் லஞ்சமாக எடுத்துக்கொண்டு விடுகின்றனர். என்றும், முழுப்பணம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்றும், அவர்களுடைய சொத்துக்கள், அவர்களால் எடுத்துக்கொண்டு வரப்பட்ட சொத்துக்கள் கூட பாதுகாப்பாக வைத்துக்கொள்ள இயலவில்லை என்றும், அது மட்டுமல்லாமல், அது சம்பந்தமாக போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று புகார் கொடுத்த நேரத்தில் அங்கேயுள்ள சப்-இன்ஸ்பெக்டர் ஒரு பெண்ணை கற்பழித்ததாக மிக வேதனையோடு தெரிவித்தார்கள். இது பற்றி அரசுக்குத் தெரியுமா? அது பற்றி விசாரணை உண்டா? இவைகள் எல்லாம் பத்திரிகைகளிலும் வந்துள்ளன, நானும் நேரில் கேட்டு இருக்கிறேன். இது ஒரு சீரியஸ்ஸான விஷயமாக இருப்பதால், இது குறித்த விசாரிக்க ஒரு 'ஹை லெவல்' கமிட்டி ஏற்பாடு செய்யப்படுமா? அவர்களுடைய உடைமைகளையும், கற்பையும் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக தகவல் ஒன்றும் அரசுக்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இது பற்றி விவரமாக எழுதிக்கொடுத்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

[1984 அக்டோபர் 10

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, தனிப்பட்ட முறையில் யாரும் கம்ப்ளைன்ட் சொல்லவில்லை, ஒட்டு மொத்த மாக பலர் இப்படி நடக்கிறது என்று சொன்னார்கள். அது மாதிரியான தகவல்கள் பத்திரிகைகளிலும் வந்து இருக்கின்றன. பத்திரிகைகளில் வந்த செய்திகளை சேகரித்து, சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அவர்களுக்கு தெரிவிக்கவில்லையா? அப்படி யானால் அந்தத் துறை என்ன செய்கிறது? (குறுக்கீடு்ள்) இலங்கை அகதிகள் பிரச்னை ஒரு சென்சிடிவ் பிரச்னை என்பதால் அது பற்றி நான் அறியவிரும்புகிறேன். ஆகவே, இது பற்றி விசா ரிக்க ஒரு ஹை லெவல் கமிட்டி அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று நான் ஏற்கனவே கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பாரா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மூலக்கேள்வி இலங்கையிலிருந்து 1983 ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு வந்த அகதிகள் எத்தனை பேர் என்பதாகும். ஆகவே, அந்த அடிப்படையில் தான் நான் பதில் சொல்ல முடியும்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மூலக்கேள்வி யைத் தொடர்ந்து கேட்கப்பட்ட துணை வினா அந்த எல்லை யைத் தாண்டி கேட்கப்பட்டு, அதற்கு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லியாகிவிட்டது. ஆகவே, இது மூலக்கேள்வியை ஒட்டி யதல்ல என்று சொல்லி தப்பிக்கக்கூடாது. இது பற்றி விசா ரிக்க ஒரு ஹை லெவல் கமிட்டி அமைக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த தகவல் களை எழுதிக் கொடுத்தால், அதைப் பரிசீலித்துப் பார்த்து, ஹை லெவல் கமிட்டி அமைத்து, அது குறித்து நாம் விசாரிக்க லாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் இருந்து வந்து இருக்கிற அகதிகளுக்குப் போதுமான பாதுகாப்பு, பிற வசதிகள், மற்றும் அவர்களுடைய வாழ்க்கை நலன்கள் காக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் தான் பல்வேறு முயற்சிகளை மத்திய அர சின் கூட்டுறவோடும், ஒத்துழைப்போடும் இந்த அரசு மேற் கொண்டு வருகிறது. நிதி வசதி ஆகியவற்றின் அடிப்படையில் ஓரளவுக்கு நாம் இவைகளைச் செய்து கொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில பல குறைபாடுகள் இருக் கின்றன என்று எடுத்துத் தெரிவித்தார்கள். அதை விசாரிக்க ஒரு உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று அமைக்க வேண்டும் என்றும், அந்தக் குழு அவற்றை ஆராயவேண்டும் என்றும் கேட்டார்கள். அதை அரசு ஏற்றுக்கொண்டு, அது பற்றி விசாரிக்க ஒரு உயர்மட்டக் குழு அமைக்க தக்க நட வடிக்கைகளை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1984 அக்டோபர் 10]

திரு. ப. நெடுமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே' இலங்கையில் இருந்து வந்து இருக்கக்கூடிய அகதிகளுக்கு அளிக் கப்படுகின்ற உதவிகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொ ன்னார்கள். அந்த உதவிகள் ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தப்படி இந்தியாவிற்குத் திரும்பும் அகதிகளுக்குத்தான் கொடுக்கப்படு கின்றன. இலங்கையிலிருந்தும், ஈழத்தில் இருந்தும் கலவரத் தின் காரணமாக இங்கே 1 லட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத் தமிழ் அகதிகள் வந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் மண்டபம் முகாமில் எந்தவிதமான உதவிகளும் செய்யப்பட வில்லை. அது பற்றி அதிகாரிகளிடத்தில் கேட்டபோது அவர் களுக்குக் கொடுக்கமுடியாது என்று திட்டவட்டமாகச் சொல்கிறார்கள். நானும்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி 1983-ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு வந்த அகதிகள் எத்தனை பேர் என்பது. இதிலே ஸ்ரீமாவோ—சாஸ்திரி ஒப்பந்தப்படியுள்ள தமிழர்கள் ஈழத் தமிழர்கள் என்று இரண்டாகப் பிரித்துக் கேட்பதற்கு இடமில்லை.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, இலங்கையி லிருந்து வந்திருக்கக்கூடிய அகதிகள் யாராக இருந்தாலும் அவர் களிடம் வேறுபாடு இல்லாமல் எல்லோருக்கும் எல்லாவிதமான உதவிகளையும் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர் களே, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகளுக்கும், இலங்கையில் இனக் கலவரங்களில் பாதிக்கப்பட்டு, ஆதரவற்று, தாயகம் திரும்பிய தமிழர்களுக்கும் ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப் பந்தப்படி இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக் கும் கொடுக்கின்ற சலுகைகள் எல்லாம் ஆதரவு அற்ற தமிழர் களுக்கும் கொடுக்கப்படுகின்றன. இதைத்தான் ஏற்கெனவே நான் பதிலளித்தபோது குறிப்பிட்டிருக்கிறேன். முகாம்களில் தங்குகின்றவர்களுக்கு தங்க இடம், சமையல் இடம், துணிமணிகள், பாய் ஆகியவற்றிற்கு 600 ரூபாய் வீதம் கொடுக் கப்படுகிறது. அதைப்போன்று ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந் தப்படி தாயகம் திரும்புகின்றவர்களுக்கு ரொக்கப்படி (பணம்) குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து மாதம் 110 ரூபாய் முதல் 357.50 ரூபாய் வரையில் கொடுக்கப்படு கிறது.

அது மட்டுமல்ல. கொட்டப்பட்டு, மண்டபம் போன்ற முகாம்களில் ஆதரவற்ற 1,351 பேர்கள் தங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு இலட்சம் பேர் என்று தெரிவித்தார்கள். மற்றவர்கள் கப்பல் மூலம், விமானம் மூலம், படகு மூலம் வருகை தந்து, தங்களுடைய நண்பர்

[1984 அக்டோபர் 10

கள், உறவினர்கள் போன்றவர்களுடைய வீடுகளுக்குச் சென்று
விட்டார்கள். பணவசதி இல்லாமல், நண்பர்கள், உறவினர்
கள், இல்லாமல், ஆதரவற்ற நிலையில் இருக்கிறவர்களுக்கு
அரசே வேண்டிய உதவிகளை எல்லாம் செய்து வருகிறது.
அவர்கள் கொட்டப்பட்டு, மண்டபம் போன்ற முகாம்களில்
தங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, இலங்கையிலிருந்து உயிருக்கும் மானத்திற்கும்
பாதுகாப்புத் தேடி வரும் தாய்மார்கள் பெரும்பாலும் தோட்
டத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள். ஆகவே, அங்கிருந்து
வருகின்ற பெண்களுக்கு இங்கே தோட்டங்களில் அல்லது வேறு
ஏதாவது வேலைவாய்ப்பு அளிக்க ஏதாவது சிறப்பு ஏற்பாடு
செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்
களே, தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு பல திட்டங்கள் வகுக்
கப்பட்டு, அவற்றின் மூலம் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்
கப்படுகிறது. தோட்டத் தொழிலில் அமர்த்தல், தனிப்பட்ட
முறையில் தொழில் நடத்த கடன் வழங்குதல், பிற மாநிலங்
களில் குடியமர்த்துதல் போன்ற இப்படிப்பட்ட திட்டங்கள்
மூலம் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படுகிறது. தோட்டங்
களில் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க ஏற்பாடு செய்
யப்படுமா என்ற முறையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
கேட்டிருக்கிறார்கள். தேயிலை மலைத் தோட்டங்களில் 2,326
குடும்பங்களுக்கும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் மலைத்
தோட்டங்களில் 285 குடும்பங்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்
கப்பட்டிருக்கிறது. அங்கே எல்லாம் பெண்களும் வேலை
செய்கிறார்கள். அதைப்போன்று சின்கோனா மலைத் தோட்
டங்களில் 125 குடும்பங்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

38—(*வினா எண். 22155) திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு
சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா—

இலங்கையிலிருந்து அகதிகளாக வரும் தமிழர்களை அந்த
மானில் குடியேற்றுவதற்குத் தமிழக அரசு மத்திய அரசுக்குப்
பரிந்துரை செய்ய முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : இலங்கையி
லிருந்து தாயகம் திரும்புவோரை அந்தமான் தீவுகளில் குடி
யமர்த்துவது பற்றி, இந்த அரசு ஏற்கனவே மத்திய அரசு
டன் கடிதத் தொடர்பு கொண்டுள்ளது. இது அரசின் பரி
சீலனையில் இருந்து வருகிறது.



1984 அக்டோபர் 10]

திரு. ப. சுந்தரம் : தலைவரவர்களே, நாங்கள் அந்த
மானுக்குச் சென்றிருந்தபோது, அங்கே இருக்கிற தமிழர்கள்
''இங்கே பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் காலியாக இருக்
கிறது. இலங்கையிலிருந்து வருகிற தமிழர்களை அந்தமானில்
குடியமர்த்த உங்களுடைய அரசு மத்திய அரசுக்கு சிபாரிசு
செய்து அனுமதி பெற ஏற்பாடு செய்யுங்கள்'' என்று சொன்
னார்கள். அந்த அடிப்படையில்தான் இந்த கேள்வி போடப்
பட்டது. அமைச்சர் அவர்கள் இந்த அரசு மத்திய அரசைத்
தொடர்பு கொண்டுள்ளது என்று குறிப்பிட்டார்கள். எந்த அடிப்
படையில் மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யப்பட்டது? எந்த
ஆண்டில் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்பு
கிறேன்.

(முற்பகல் 10–30)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்
களே, 1980-ஆம் ஆண்டு மத்திய அரசு மறுவாழ்வுத் துறை
மாநில அரசு மறு வாழ்வுத் துறைக்கு ஒரு கடிதம் அனுப்பியது.
அந்தக் கடிதத்தில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர்
அந்தமானில் குடியமர்த்த இயலாது என்று மாநில அரசிற்கு
எழுதி அனுப்பியது. இதற்கு மறுபடியும் தமிழக அரசு 1982ஆம்
ஆண்டு ஒரு கடிதம் எழுதியது. அந்த அடிப்படையில் தாயகம்
திரும்புவோர் அந்தமானில் குடியமர்த்தப்பட வேண்டுமென்ற
அடிப்படையில் கடிதம் எழுதியது. அதற்கு மத்திய அரசு உள்
துறை மறு வாழ்வுத் துறையோடு கலந்தாலோசனை செய்து,
அந்தமான் நிர்வாகத்தில் பல பிரச்சினைகள் இருப்பதால், அந்தப்
பிரச்சினைகளின் காரணமாக குடியமர்த்த இயலாது என்ற
கடிதத்தை மறுபடியும் தமிழக அரசிற்கு எழுதியது. காரணம்
என்னவென்றால், அங்கு மக்கட் தொகை பெருக்கத்தின் காரண
மாக நிலம் கிடைக்காமல் ஏற்படும் சிரமமே. தென் பகுதியில்
பழங்குடியினர் கோரிக்கைகளை விடுத்துள்ளார்கள். அதன்
அடிப்படையில் இயற்கை தாவர சூழ்நிலைகளின் காரணமாக
இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோரை குடியமர்த்த இய
லாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே 5 குடும்
பங்கள் அந்தமானில் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதைக்
குறிப்பிட விரும்புகிறேன். இது 1983-ஆம் ஆண்டு அமைச்ச
ரவையில் கொண்டுவரப்பட்ட பிறகு, அதைப்பற்றி முடிவு
செய்து மறுபடியும் அந்தமான் தீவுகளில் தாயகம் திரும்பு
வோரை குடியமர்த்த வேண்டுமென்ற முடிவு எடுத்து, அந்த
முடிவை மத்திய அரசுக்கு எழுதியனுப்பி இருக்கிறோம். அது
அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை நான் குறிப்பிட
விரும்புகிறேன்.

[1984 அக்டோபர் 10

திரு. ப. சுந்தரம் : அந்தமானில் எல்லா மாநிலத்தவரும்
அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் தமிழர்கள் மட்டும்
அனுமதிக்கப்படுவதில்லை. தமிழக அரசு மத்திய அரசிற்கு
மீண்டும் வலியுறுத்தி தமிழர்களை அந்தமானில் குடிவைக்க
முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்
களே, அமைச்சரவையில் முடிவு எடுத்து, மத்திய அரசிற்கு
எழுதியிருக்கின்றது. மத்திய அரசின் பரிசீலனையில் அது இருக்
கிறது. கடிதம் வந்தவுடன் பிறகு அவைக்கு தெரிவிக்கப்படும்.

Dr. K. SOURIRAJAN: Is there any Central assistance given for the rehabilitation of the repatriates from Ceylon? If it is so, what is the quantum of Central assistance as well as the State assistance? Atleast for the repatriates the Central Government must give some assistance. It is the responsibility of the Central Government. I want to know the percentage of assistance given by the Centre.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத்
தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்ன பதிலிலே சொல்லி
யிருக்கிறேன். மத்திய அரசு உதவியுடன் தான் இன்றைக்கு
மாநில அரசு அவர்களுக்கு பல்வேறு உதவிகளைச் செய்து
வருகின்றது என்று.

திரு. துரை முருகன் : இலங்கையிலே இருந்து வருகின்ற
அகதிகளை அந்தமானிலே கூட குடியமர்த்த மத்திய அரசு
மறுப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால்,
பங்களாதேஷிலிருந்து வந்தவர்கள், பாகிஸ்தான் அகதிகளாக
வந்தவர்கள், தண்டகாரண்யத்திலே கொண்டு வந்து குடியமர்த்
தப்பட்டார்கள். தண்டகாரண்யத்திற்கு வந்தவர்கள் எங்க
ளுக்கு இந்த இடம் தேவையில்லை என்று பல கோடி ரூபாய்
செலவு செய்த இடத்தை விட்டு மீண்டும் எல்லைப் புற பகுதிக்கு
போய்விட்டார்கள். நீங்கள் எல்லாம் பாராளுமன்றத்தில் கூட
இதையெல்லாம் சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தண்டகாரண்யம் வரை நாம்
போகக் கூடாது.

திரு. துரைமுருகன் : வட புலத்திலிருந்து வந்த அகதிகளை
வெண்ணைக் கண்ணோடும், தமிழகத்திலிருந்து வரும் அகதி
களை மட்டும் சுண்ணாம்புக் கண்ணோடும் நோக்குகிற மத்திய
அரசை எதிர்த்து, மாநில அரசு போராட்டம் நடத்தத் தயாரா
என்று கேட்கிறேன். (பதில் இல்லை).



1984 அக்டோபர் 10]

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இலங்கையிலிருந்து அகதிகளாக வரக் கூடியவர்கள்
தோட்டத் தொழிலைத் தவிர, வேறு எந்தத் தொழிலையும்
அறியாத காரணத்தால், அவர்களை அந்தமானில் குடியேற்றி,
தோட்டத் தொழிலுக்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க
வேண்டும். 1982-ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முத
லமைச்சர் அவர்கள் தலைமையிலே அனைத்துக் கட்சிக் குழு
டில்லிக்குப் போய் பிரதம மந்திரி அவர்களைப் பார்த்து
பேசி, அங்கே தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளின் சார்பிலே
அளிக்கப்பட்ட மனுவில், தமிழர்களை அந்தமானில் குடியேற்ற
வேண்டுமென்ற கோரிக்கை சொல்லப்பட்டது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் எல்லோ
ரும் அமைதியாக இருக்க வேண்டும்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர்
அவர்களே, இலங்கையிலேயிருந்து வந்த அகதிகளுக்குத் தோட்ட
தொழிலைத் தவிர வேறு வகைத் தொழில்களான வியாபாரம்
போன்றவைகள் தெரியாது. எனவே அவர்களை அந்தமானில்
குடியேற்றவும், அவர்களுக்கு நிரந்தரமாக தொழில்
வாய்ப்புகள் அளிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு அனைத்
துக் கட்சிகளும் முடிவு செய்து, மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் தலைமையில் டெல்லிக்குப் போய், 1982-ஆம் ஆண்டு
பிரதமரைச் சந்தித்து, அந்தக் கோரிக்கையை வலியுறுத்தி
யிருக்கிறோம். அதைத் தொடர்ந்து வலியுறுத்தி மாண்புமிகு
பிரதமரிடம் இருந்து அந்தமானில் தமிழ் அகதிகளை குடி
யேற்றுவது சம்பந்தமாக திட்டவட்டமான வாக்குறுதி எதையும்
பெறுவதற்கு இந்த அரசாங்கம் இதுவரை என்ன செய்திருக்
கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே இலங்கையிலிருந்து தாயகம்
திரும்பிவரும் அகதிகளை குடியமர்த்தும் அடிப்படையிலே,
6-7-1984 அன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தப்
பொருள் பற்றி ஆய்வு செய்யப்பட்டது. அந்தக் கூட்டத்தில்,
இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர்களை அந்தமான்
தீவுகளில் குடியமர்த்துவது என்று முடிவு செய்யப்பட்டது.
இதைத் தொடர்ந்து மத்திய அரசின் அகதிகள் மறுவாழ்வுத்
துறை அமைச்சர் அவர்களுக்கு 15-8-1984-ஆம் தேதியன்று
கடிதம் எழுதப்பட்டது. அதற்கு மத்திய அமைச்சர் அவர்கள்
தனது 25-8-1984 நாளிட்ட கடிதத்தில் இப்பொருள் பற்றி
தாம் கவனித்து வருவதாகவும், முடிவான பதிலை விரைவில்
அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்துள்ளார். மத்திய அரசின்
பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

[1984 அக்டோபர் 10

### வடாற்காடு மாவட்டத்தில் 1983-84 ஜனவரி வரை கால்நடை பராமரிப்புத் துறையால் கால்நடைகளுக்கென நடத்தப் பெற்ற மக்கள் தொடர்புத் திட்டங்கள்.

39—(*வினா எண். 22855) திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டத்தில் கால்நடைப் பராமரிப்புத் துறையால் கால்நடைக்கென மக்கள் தொடர்புத் திட்டம் 1983-ல் இருந்து 1984 ஜனவரி மாதம் வரை எத்தனை இடத்தில் நடந்து உள்ளது ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : வட ஆற்காடு மாவட்டத்தில் 1983 ஜனவரி முதல் 1984 ஜனவரி வரை 1,428 இடங்களில் கால்நடை பராமரிப்புத் துறையால் கால்நடைகளுக்கென மக்கள் தொடர்பு திட்டங்கள் நடந்துள்ளன.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் கால்நடைக்காக 1,428 இடங்களில் மக்கள் தொடர்பு திட்டம் நடந்துள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் நடந்த செலவு என்ன ? இதனால் ஏற்பட்ட பலன் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செலவு பற்றிய விவரம் என்னிடம் கொடுக்கப்படவில்லை. அதற்காக தனிக் கேள்வி போட்டால், கொடுக்கப்படும்.

சிகிச்சை செய்த கால்நடைகளின் எண்ணிக்கை 26,929. காயடிக்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை 6,501. தற்போது ஊசி போடப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை, 1,46,772. குடற் புழு நீக்கம் செய்யப்பட்ட ஆடுகளின் எண்ணிக்கை 1,17,849. குடற்புழு நீக்கம் செய்யப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை 13,189. சினை பரிசோதனை செய்யப்பட்ட பசு, மற்றும் எருமைகளின் எண்ணிக்கை 5,658. இனவிருத்திக்கு வராத, பசு மற்றும் எருமைகளுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகளின் எண்ணிக்கை விவரம் 2,294. செயற்கை முறை கருத்தரிப்பு மூலம் சிகிச்சை செய்யப்பட்ட பசு மற்றும் எருமைகளின் எண்ணிக்கை 142. நடைபெற்ற கூட்டங்கள் 434. சுண்டுவாத அறுவை சிகிச்சை செய்த கால்நடைகளின் எண்ணிக்கை 305.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் அமல்படுத்தப்பட்ட இந்தக் கால்நடைக் கண்காணிப்புத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1984 அக்டோபர் 10]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் தமிழகம் முழுவதும் செயல்பட்டு வருகிறது.

### 1981–82, 1982–83 ஆண்டுகளில் சிறு தொழில் துவங்க ஆதி திராவிடர் மக்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள்.

40—(* வினா எண். 19218) திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981–82, 1982–83 ஆண்டுகளில் சிறு தொழில் துவங்க தமிழ் நாட்டில் உள்ள ஆதிதிராவிடர் மக்களிடம் இருந்து வரப் பெற்ற விண்ணப்பங்கள் எத்தனை?

(ஆ) எத்தனை பேர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) 1981–82-ல் 108 விண்ணப்பங்களும், 1982–83-ல் 326 விண்ணப்பங்களும் ஆதி திராவிட தொழில் முனைவோர்களிடமிருந்து சிறு தொழில் பதிவு கோரி மாவட்டத் தொழில் மையங்களில் பெறப்பட்டன.

(ஆ) 1981–82-ல் 108 பேர்களுக்கும், 1982–83-ல் 325 பேர்களுக்கும் சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பெற்றன.

(முற்பகல் 10–40)

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது 1981–82, 1982–83-ஆம் ஆண்டுகளில் விண்ணப்பம் கோரிய அத்தனை பேருக்கும் உரிமங்கள் கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இவைகளில் எத்தனை பேர்கள் அந்த சிறு தொழிலை செய்துக் கொண்டிருக்கிறார்கள், என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981–82 மற்றும் 1982–83-ல் முறையே 108 மற்றும் 326 விண்ணப்பங்கள் ஆதிதிராவிட தொழில் முனைவோர்களிடமிருந்து சிறு தொழில் பதிவுச் சான்றிதழ் கோரி, மாவட்ட தொழில் மையங்களில் பெறப்பட்டன.

அவற்றில் 1981–82ல் 89 பேர்களுக்கு தற்காலிக பதிவு சான்றிதழ்களும், 19 பேர்களுக்கு நிரந்தர பதிவு சான்றிதழ் களும் வழங்கப்பட்டுள்ளன. 1982–83-ல் 274 பேர்களுக்கு தற்காலிக பதிவுச் சான்றிதழ்களும், 51 நிரந்தர பதிவுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. ஒரு மனு மட்டும் 1982–83-ல் நிராகரிக்கப்பட்டது.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வி, அந்த உரிமங்களைப் பெற்றவர்களில் எத்தனை பேர்கள் தொழில் செய்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஒன்று. இரண்டாவதாக, இந்த மாவட்ட தொழில் மையம் மூலமாக சம்பந்தப்பட்ட மனு தாரர்களுக்கு நீங்கள் குறிப்பிட்ட இந்த வங்கிக்கு சென்று கடனைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சிபாரிசு மட்டும் செய்து விடுகிறார்கள் ஆனால் அவர்கள் போய்க் கேட்டால், சம்மந்தப்பட்ட மனுதாரர்களுக்கு கடனை வழங்க வங்கிகள் முன் வருவதில்லை. நேற்றையதினம் கூட என்னுடைய தொகுதியில் ஒரு குறிப்பிட்ட மொர்க்கண்டைல் பேங்குக்கு சென்று ஒரு ஆதிதிராவிட பெருமக்களை சைக்கிள் கடை வைப்பதற்காக கடனைப் பெறச் சொல்லி சி ாரிசு செய்து விட்டார்கள். ஆனால் அந்த வங்கியில் பணம் கொடுக்க மறுத்துவிட்டார்கள். இப்படிப்பட்ட நிலமை இருக்கிறது.

ஆகவே, ஆதிதிராவிட பெருமக்களுக்காவது, இந்தக் குறை களைப் போக்க, அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளை இதற் காக தெரிவு செய்து, அவர்களுக்கு உடனடியாக உதவி கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட சிறு தொழில் முனைவர்கள் பெரும்பாலும் மிகவும் ஏழ்மையாகவே இருப்ப தால், அவர்கள் கடன் உதவிப் பெற தேவைப்படும் முன் வரம்புத் தொகையை வழங்க இயலாதவர்கள் என்ற அடிப்படையில், மைய அரசிடமிருந்து கிடைக்கும் உதவியைப் பயன்படுத்தி தொழில் துவங்கத் தேவைப்படும் நிதியில் 25 சதவீதத்தை தமிழ்நாடு ஆதிதிராவிட வீட்டு வசதி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தின் வழியாக, தொழில் வணிகத் துறை இயக்குநர் அலுவலகம் வழங்குகிறது. அந்த அடிப்படை யில் தேவைப்படும் மீதித் தொகை 75 சதவீதத்தை வங்கிகள் கடனாக வழங்குகின்றன. அந்த திட்டத்தின் அடிப்படையில் மார்ச் 83 வரை 224 தொழில் முனைவர்களுக்கு முன் வரம்புத் தொகையாக, இந்தத் தொழில் மையங்கள் மூலம் வழங்கப்பட்ட தொகை 8.69 இலட்சமாகும்..





மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிக்கை அளித்தல்.

தமிழக முதலமைச்சர் அவர்களின் உடல்நலம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுப் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கை அளிப் பார்கள்.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவர் குழுவினால் அளிக் கப்பட்டிருக்கக் கூடிய அறிக்கையை அவைமுன் படிக்கிறேன்.

*Report from the Committee* : " Chief Minister this morning cheerfull. His clinical condition, stable. He disposed off a few important files.

என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. நன்றாகத் தேறி வருகிறார்கள். சில முக்கியமான பைல்களையெல்லாம் பார்த்திருக்கிறார்கள், என்கிற அந்தத் தகவலை நான் பேரவைக்குச் சொல்லிக் கொள் கிறேன்.

3. தகவல் கோரல்.

(அ) சட்டமன்றத் தேர்தல் குறித்து.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், சட்டமன்றத் தேர்தல் சம்பந்தமாக இந்திய அரசின் தேர்தல் ஆணையர்-செயலாளர் சில கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் சம்பந்த மாகவும் சொல்லியிருக்கிறார்கள். இன்றையதினம் கூட, நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்கள் எல்லாம் டெல்லிக்குச் சென்றிருக்கிறார்கள், பாராளுமன்ற தேர்தலுக் கான சில விதிமுறைகளைப் பற்றி கலந்து பேசுவதற்காக. இந்த மன்றத்தின் உறுப்பினர் என்ற முறையில் நான் கேட்க விரும்புகிறேன், இந்தச் சட்டமன்றத்தினுடைய ஆயுள் காலம் எப்பொழுது முடிவுறும்? ஒருவேளை பாராளுமன்றத் தேர்தல் வந்தால் அதனுடனேயே நம்முடைய தேர்தலையும் வைத்துக் கொள்ளப் போகிறீர்களா............(மணியடிக்கப் பெற்றது).

I want to know the reaction of the Government.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நம்முடைய சட்டமன்றத்தினுடைய ஆயுள் காலம் எவ்வளவு என்பது எல்லோருக்கும் தெரியும். ஐந்து வருடம் வரையில் இருப்போம்.

திரு. ரா. உமாநாத் : பொதுவாக கேட்கப்பட்ட பிரச்சினையல்ல இது. நம் அவை சம்பந்தப்பட்டது.

It has gone on record.

நம்முடைய அமைச்சர் அவர்கள் பிரசங்கத்திலேயோ அல்லது அறிக்கையிலேயோ இரண்டு தேர்தல்களையும் ஒன்றாக நடத்துவது என்று நாங்கள் விரும்புகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எலக்ஷன் கமிஷன் சொல்லியதாக நேற்றையதினம் பத்திரிகையிலே பார்த்தால் அப்படி நடக்காது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலையில் ஒரு அன்சர்டன் கன்டிஷன் ஏற்பட்டிருக்கிறது இந்த அவைக்கு.

Un certain condition is there. What is the Government's position ? What is the reaction of the Government?
என்ற முறையில் அவைக்கு ஒரு செக்யூரிட்டி கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, தமிழக மாநில சட்டப் பேரவையைப் பொறுத்தவரைக்கும் ஆயுட்காலம் ஜூன் 18 வரையிலும் இருக்கிறது, பாராளுமன்றத்திற்கு ஜனவரி 20 வரையிலும் ஆயுட்காலம் இருக்கிறது 5 ஆண்டுகாலம் என்ற அடிப்படையில். எற்கனவே 3,4 திங்கள்களுக்கு முன்னால் தேர்தல் கமிஷனர் 5, 6 மாதங்கள் இடைவெளி இருக்குமானால் இரண்டையும் சேர்த்து நடத்துவது பல்வேறு வகைகளிலே சௌகரியமாக இருக்கும் என்ற அறிக்கை ஒன்றை வெளியிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி சொல்லியிருப்பனதப்போன்று, நேற்றைய செய்தித்தாள்களில் தேர்தல் கமிஷனின் செயலாளர் இரண்டையும் தனித்தனியாக நடத்தவேண்டிய நிலைமைகள் ஏற்படும் என்ற அளவுக்கு ஒரு செய்திக் குறிப்பைக் தந்திருக்கிறார்கள். தேர்தல்கள் இரண்டையும் ஒன்றாக நடத்துவதா அல்லது தனித்தனியாக நடத்துவதா என்பதை முடிவு செய்கின்ற பொறுப்பு தேர்தலை நடத்துகின்ற பொறுப்பு எலக்ஷன் கமிஷனுக்கு இருந்தாலும்; மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. ஆனால் இந்த மாநில அரசைப் பொறுத்தவரைக்கும் பல சமயங்களில் எடுத்துச் சொல்லியபோதும் சரி திரு. உமாநாத் சொன்னதைப் போன்று 5 மாத இடைவெளி இருப்பதன் காரணமாக இரண்டையும்



ஒன்றாக நடத்துவதால் எல்லா அரசியல் கட்சிகளுக்கும் மட்டுமல்ல, அரசுக்கும் நல்லது. அது மாத்திரமல்ல, அதன் காரணமாக அரசினுடைய பணிகள் மற்றைய பணிகள் எல்லாம் கூட முதலில் தேர்தலுக்கு இரண்டு மாதம் செலவு மறுபடியும் தேர்தலுக்கு 2 மாதம் செலவு இப்படி, எல்லாம் ஏகப்பட்ட செலவுகள் அரசுக்கு ஆகும்—இரட்டிப்பாகின்ற அளவுக்கு எல்லோருக்கும் இரட்டிப்புச் செலவுகள் ஏற்படுகின்றன என்பது மட்டுமல்லாமல் இரண்டையும் ஒன்றாக இணைத்து நடத்துவதன் மூலமாக ஏற்படுகிற தன்மை என்ன என்று சொன்னால்—தேர்தல் செலவு தோராயமாக நான் சொல்கிறேன் இரண்டு கோடி ரூபாய் என்று சொன்னால்—இரண்டையும் சேர்த்து நடத்தினால் மாநில அரசு ஒரு கோடி ரூபாயை ஏற்றுக்கொள்ளவேண்டும், மத்திய அரசு ஒரு கோடி ரூபாயை ஏற்றுக் கொள்ளவேண்டும். என்பது நியதி.

ஆனால் தனியார் இப்போது தேர்தலை நடத்தினால் முழுப் பொறுப்பையும் மத்திய அரசுதான் ஏற்றுக்கொள்ள வேண்டும். பிறகு சட்டமன்றத்திற்கு தேர்தல் வருகிறபோது அதற்கு ஆகிற செலவின் முழுப் பொறுப்பையும் நாம் தான் ஏற்றுக் கொள்ளவேண்டும். இப்போது 2 கோடி, பிறகு 2 கோடி ஆக 4 கோடி ரூபாய் அரசுக்கே செலவாகும். இவைகளையெல்லாம் யோசித்துத்தான் ஒன்றிரண்டு ஆண்டு இடைவெளி இருந்தால் சேர்த்து நடத்து என்று கேட்பதிலே அர்த்தம் இல்லாமல் இருக்க முடியும், ஆனால் 4, 5 மாத இடைவெளி இருப்பதன் காரணமாக சேர்த்து நடத்த வேண்டு மென்பதுதான் இந்த அரசின் எண்ணமாக இருந்து வருகிறது. நேற்றைக்குப் பத்திரிகையிலே வந்திருக்கிற செய்தியை வைத்து ஏற்பட்டிருக்கிற நிலைமைகளை விளக்கி மத்திய அரசுக்கு இந்த அரசின் சார்பில் முடங்கல் எழுதி இந்தக் கருத்தை வலியுறுத்தலாம் என்று இந்த அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு முடிவுசெய்ய வேண்டியது மத்திய அரசுதான். இரண்டையும் ஒன்றாக நடத்துவதா, தனித் தனியாக நடத்துவதா என்பதை தேர்தல் கமிஷன் முடிவு பண்ணமுடியாது. மத்திய அரசு முடிவு எடுத்ததற்குப் பிறகுதான் தேர்தல் கமிஷனுக்கு பொறுப்பு வரும். என்றாலும் கூட அதற்கெல்லாம் கிளாரிபிகேஷன் வேண்டும், தெளிவு வேண்டும், நம்முடைய விருப்பம் இது என்றும் அதற்கான காரணகாரிய விளக்கங்களைச் சொல்லி ஒரு கடிதம் எழுதுகிற நிலையில் மாநில அரசு இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிக்கைகள்

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில எதிர்க்கட்சி மெம்பர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த பிரச்சினைபற்றி அறிவிக்கை கொடுத்து இருக்கிறோம். மதுரா கோட்ஸ்-ல் ஒருதலைப்பட்சமாக ஒப்பந்தம் மீறப்பட்டு இருக்கிறது............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது ஆய்வில் இருக்கிறது.

(முற்பகல் 10–50.)

(இ) வடாற்காடு மாவட்டத்தில் நெற்பயிர் நோயினால் பாதிக்கப் பட்டிருப்பது

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான பிரச்சினையை அரசின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் விளைந்துள்ள நெற் பயிர்கள் துங்கு வைரஸ் என்ற வியாதியால் தாக்கப்பட்டு பட்டுப்போய் இருக்கிறது. அதற்கு மருந்து தெளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நோட்டீஸ் எழுதிக் கொடுங்கள்.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கு மருந்து கூட கிடைக்காமல் தத்தளிக்கிறார்கள். இதனால் ஆயிரக்கணக்கான ஏக்கர் காய்ந்து நாசம் அடைந்து இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது குறித்து இந்த மன்றத்தில் அறிக்கையை வைந்தால் விவசாயிகள் மத்தியில் ஏதாவது ஒரு நிலைமை உருவாகும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கை வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

கரும்புக்கு அரசு நிர்ணயித்துள்ள விலை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், வி. கிருஷ்ணமூர்த்தி, என். வரதராஜன், சோ. அழகர்சாமி, கே. சௌந்திரராசன், ப. நெடுமாறன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் மற்றும் டி. மணி ஆகியோர் "ஆண்டுதோறும் கரும்புக்கு முத்தரப்பு மாநாட்டினைக் கூட்டி





விலை நிர்ணயம் செய்து வந்த தமிழக அரசு நடப்பு ஆண்டில் இந்த முறையைக் கடைப்பிடிக்காமல், மிகக் குறைந்த விலையை அரசு நிர்ணயம் செய்திருப்பதால் தமிழகத்தில் கரும்பு உற்பத்தி குறைந்து விட்டதாலும் கரும்பு விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களைப் பற்றி விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல் களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரூல் 55 இன்படி இந்த மன்றத்தின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று ஏற்கெனவே நோட்டீஸ் கொடுத்தேன். அதை தாங்கள் படித்து விட்டீர்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை 22 சர்க்கரை ஆலைகள் உள்ளன. பல இலட்சக்கணக்கான விவசாயிகள் கரும்பு உற்பத்தி செய்கிறார்கள். இந்திய நாட்டைப் பொறுத்தவரை 80 இலட்சம் டன் சென்ற ஆண்டு உற்பத்தி ஆகியது. பொது மக்களுக்கு ஒரு கிலோ 4 ரூபாய்க்கு கிடைத்தது. ஆனால் இந்த ஆண்டு ஒரு கிலோ 6 ரூபாய் அளவுக்கு சர்க்கரை விலை உயர்ந்து விட்டது. சர்க்கரை உற்பத்தி குறைந்து விட்டது. அதே போன்று தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சென்ற ஆண்டிற்கு முந்தைய ஆண்டில் 8½ இலட்சம் டன் சர்க்கரையை நம்முடைய மில்கள் எல்லாம் உற்பத்தி செய்தது. ஆனால் இந்த ஆண்டில் சர்க்கரை உற்பத்தி மிக மிக குறைந்து ஏறத்தாழ 5½ இலட்சம் டன் அளவுக்குக் குறைந்து விட்டது. இதற்கு மிக முக்கியமான காரணம் சர்க்கரை விலை உயர்ந்ததே தவிர, கரும்பு விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய நியாயமான விலை கிடைக்காத காரணத்தால் இந்தியாவில் இருக்கக் கூடிய விவசாயிகள், தமிழகத்தில் இருக்கக் கூடிய விவசாயிகள், இந்திய அரசு, மாநில அரசு கடைப் பிடிக்கக் கூடிய இந்த விலை கொள்கையின் கோளாறு காரணத்தால், இன்றைய தினம் தமிழ் நாட்டிலும், இந்திய நாட்டிலும், கரும்பு உற்பத்தி குறைந்து சர்க்கரை உற்பத்தி குறைந்து consumers are very much affected. They are paying more price now. நான் இந்த மன்றத்தை ஒத்தி வைத்து இங்கே பிரேரணை எழுப்புவது எல்லாம் இந்த நிலையில் இந்திய அரசு 3 இலட்சம் டன் சர்க்கரையை இறக்குமதி செய்கிறார்கள். இந்த விநோதமான நிலை உலகத்தில் எந்த நாட்டிலும் இருக்காது. அந்த கொள்கை குழப்பங்கள் மாநில, மத்திய அரசுகளுக்கு இருக்கிற காரணத்தினால் தான் இந்த உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்பதை இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசு நீண்ட காலமாக காங்கிரஸ் காலத்திலேயும் சரி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த சமயத்திலும் சரி, அனைத்திந்திய அண்ணா தி.மு.க. இருந்த சமயத்திலும் சரி, முத்தரப்பு மாநாடு என்று நம்முடைய

கரும்பு விவசாயிகள், அதைப்போல ஆலை நிர்வாகிகள் இவர்
களைக் கொண்டு முதலமைச்சர், அல்லது தொழில் அமைச்சர்,
விவசாய அமைச்சர் இவர்கள் எல்லாம் இருந்து கருத்து கேட்டு
என்ன விலை நிர்ணயம் செய்வது என்று பேசி அவர்கள் அறிவிப்
பார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ சென்ற ஆண்டு நடை
பெற்ற இந்த கரும்பு சீசனில் இந்த முத்தரப்பு மாநாடு கூட்டப்
படவில்லை. முத்தரப்பு மாநாடு கூட்டப்படாமல் அரசு ஒரு
விலையை கொடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். சென்ற வருடத்
திற்கு முந்தைய வருடம் கொடுத்த விலையை விட மிக மிகக்
குறைவு. இது மிக மிக பாதகமான காரியம் ஆகும். நான்
இந்த மன்றத்தில் எடுத்து வைக்க விரும்புவது எல்லாம் கரும்பு
விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும். சென்ற
ஆண்டு குறைந்த பட்சம் 200 ரூபாய் கொடுத்து இருக்க வேண்டும்.
அதை மாநில அரசு கொடுக்காது இருந்த காரணத்தினால்தான்
இந்த ஆண்டு கரும்பு உற்பத்தி மிக மிக பாதிக்கப்பட்டு இருக்
கிறது. பல மில்கள், 22 மில்களுக்கு இன்றைய தினம் 50 சத
வீதம் ஆப் தி செப்பாசிட்டி கூட கரும்பு சப்ளை இல்லாத ஒரு
நிலைமை இருக்கிறது. இவைகளை எல்லாம் மனதில் வைத்து
இதை நம்முடைய தமிழக அரசு மிக உன்னிப்பாக கவனித்து
சென்ற ஆண்டு சப்ளை செய்த கரும்பு விவசாயிகளுக்கு குறைந்த
பட்சம் 30 ரூபாய் அளவுக்கு கொடுத்து குறைந்த பட்சமாக
ஒரு டன்னுக்கு 200 ரூபாயாக இருக்கும் என்ற ஒரு கியாரண்டியை
ஏற்படுத்தி இந்த ஆண்டு அதிகமான அளவுக்கு வருகின்ற சீசனில்
அதிகமான அளவுக்கு கரும்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசு
முன் வருமானால் தமிழ்நாட்டில் மிகப் பெரிய தொழிலாக இருக்
கக்கூடிய இந்த சர்க்கரைத் தொழில் அதை நம்பி இருக்கக்கூடிய
இலட்சக்கணக்கான விவசாயிகள் அதிலே வேலை செய்யக்கூடிய
ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்வு சிறக்கும். ஆகவே,
இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இப்
பிரச்சினை பற்றி விவாதிக்க வேண்டுமென்று நான் உங்கள் மூல
மாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, கரும்பு விவசாயிகளுக்குக் கட்டுப்படியான
விலைப் பிரச்சினை சம்பந்தமாக விவாதிப்பதற்காக இந்தச்
சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்ற
பிரச்சினையின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.
ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்று
தமிழ்நாட்டில் முன்னோர்கள் சொன்னார்கள். அப்படிச் சொன்
னது எதற்காக என்பதை நாம் அறியோம் ஆனால், இன்றைக்குத்
தமிழகத்திலே வதங்கிக் கொண்டிருக்கும் விவசாய மக்களுக்கு
அது பொருந்தும் என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டியிருக்
கிறது.





இந்த மூன்றாண்டுக் காலத்திலே பார்த்தால்; 1981—82 ஆம்
ஆண்டில் தமிழ்நாட்டில் ஒரு டன்னுக்கு 205 ரூபாய் பெற்றிருக்
கிறார்கள். 1982—83 ஆம் ஆண்டில் ஒரு டன்னுக்கு 175 ரூபாய்
பெற்றிருக்கிறார்கள். 1983—84 ஆம் ஆண்டில் அது 165 ரூபாய்
என்ற அளவிற்குக் குறைந்திருக்கிறது.

இந்த ஆண்டு விவசாய விலை நிர்ணயக் கமிஷன் 155 ரூபாய்
ஒரு டன்னுக்கு கொடுக்கலாம் என்று சொன்னால், மத்திய அரசோ
அடிப்படை விலை 135 ரூபாய் என்று அறிவித்திருக்கிறது. அவர்
கள் ஏன் அப்படி அறிவித்தார்கள் என்பது நமக்குத் தெரியும்.
ஏனென்றால், சர்க்கரை-ஆலை முதலாளிகள் கோடி கோடியாகக்
கொள்ளையடித்து மக்களைச் சுரண்டுகிறார்கள். விவசாயிகளை
சுரண்டுகிறார்கள். இப்படி அவர்கள் பூதமாக வளர்
வதற்கு மத்திய அரசு துணை போகிறது. மத்திய அரசின்
கொள்கையின் காரணமாகவும், இன்றைக்கு நீங்கள் கடைப்பிடிக்
கின்ற கொள்கையின் காரணமாகவும் தமிழ்நாட்டின் விவசாயிகள்
பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

தற்பொழுது சர்க்கரை உற்பத்தி குறைந்திருப்பது மட்டுமல்ல,
இன்றைக்கு விவசாய மக்களின் உற்பத்திச் செலவு கூடி, உர
விலை உயர்ந்து அவர்களுடைய வாழ்க்கைச் சுமை கூடியிருக்
கின்ற நேரத்தில், உள்ளி உள்ளே போன கதையாக, படிப்படியாக
அவர்களுக்குக் கிடைக்கின்ற விலை குறைந்து கொண்டே
வருகிறது.

அண்டை மாநிலங்களைப் பார்த்தால், ஆந்திராவில் ஒரு
டன்னுக்கு 200 ரூபாய் கிடைக்கிறது : கர்நாடகத்தில் 205
ரூபாய் ஒரு டன்னுக்குக் கிடைக்கிறது ; ஆனால் தமிழ்நாட்டில்
165 ரூபாய்தான் கிடைக்கிறது. அதுவும் கூட, முதலில்
155 ரூபாய் என்று அறிவித்து, பிறகு மீண்டும் 165 ரூபாய் என்று
10 ரூபாயை உயர்த்தியிருக்கிறோம். மத்திய அரசைக் கேட்டால்,
நாங்கள் அடிப்படை விலையை 135 ரூபாய் என்று அறிவித்து
விட்டோம், மாநில அரசுகள் ஆலைகளோடு பேசி அந்தந்த
மாநிலத்திற்குத் தக்கவாறு விலையை நிச்சயித்துக் கொள்ளலாம்
என்று தப்பிக்கிறார்கள். அண்டை மாநிலங்களில் இருப்பவர்கள்
200 ரூபாய், 205 ரூபாய் என்றும் பெறுகின்றபொழுது, நம்
முடைய விவசாயிகளுக்கு மட்டும் 165 ரூபாய் தான் கிடைக்
கிறது. தமிழ்நாட்டில் பயங்கரமான விளைவை அது உண்டாக்
கும். ஆலைகளோடு பேசி அதிகமான விலையைப் பெற்றுத் தர
வேண்டிய பொறுப்பை மத்திய அரசு ஏற்க வேண்டும்.

இன்னும் சொல்லப் போனால், கரும்பை, விற்கின்ற விவ
சாயிக்கு அவன் கொடுத்த கரும்புக்கு எப்பொழுது பணம் வரும்
என்று தெரியாது. கோடிக்கணக்கான ரூபாய் கொடுக்கப்படாமல்
தேங்கியிருக்கிறது. அதற்கு வட்டி இல்லை. ஆனால் அவர்கள்

முன் பணம் வைத்துச் செய்வதற்கு ஆலைகளிலிருந்து பெறுகின்ற
பணத்திற்கு அதிக வட்டி போட்டு கொள்ளையடிக்கிறார்கள்.
எனவே, இப்படி விலைவாசி உயர்வால் ஒரு பக்கமும், வட்டியால்
ஒரு பக்கமும் வாடுகின்ற அந்தக் கரும்பு விவசாயிகளுக்கு
ஒரு டன்னுக்கு 200 ரூபாய் என்று கொடுக்க வேண்டும். அடிப்
படை விலையாக 250 ரூபாய் என்று நிர்ணயிக்க வேண்டுமென்று,
பொதுவாக அனைத்துச் சங்கங்களும்—அநேகமாக ஆளுங்கட்சி
அங்கம் வகிக்கும் விவசாய சங்கமும் வற்புறுத்தி வருகிறது.
எனவே, உடனடியாக 200 ரூபாயைக் கொடுப்பதற்கான
முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டும். எனவே, அதுபற்றிய
முழு விவரங்களையும் விவாதிப்பதற்கு இந்த அவையின் இதர
அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்
களே, கடந்த ஆண்டுகளிலே சர்க்கரை அதிகமாக உற்பத்தியாகி
இருக்கிறது. அதிகமான தேக்கம் இருந்ததாகச் சொல்லப்பட்டது.
ஆனால் இப்பொழுது உற்பத்தி குறைந்து, வெளி நாடுகளிலே
யிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய அவல நிலை இருக்கிறது.
இதைப்பற்றி இன்றைக்கு நம் நாட்டிலே உள்ள அத்தனை பேர்
களும் மிகவும் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய நிலையில் இருக்
கிறோம்.

இன்றைக்குக் கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகள்
தொடர்ந்து இந்த அரசாங்கத்தினிடத்திலே பல கோரிக்கைகளை
வைத்து, உண்ணாவிரதம், போராட்டம் என்றெல்லாம் நடத்திக்
கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு ஆண்டும் முத்
தரப்பு மாநாடு என்று, கூட்டி ஆலைமுதலாளி, அரசாங்கம், விவ
சாயப் பிரதிநிதிகள் ஆகியவர்களுடன் பேசி ஏதோ ஒரு முடிவு
செய்து வந்தார்கள்.

(முற்பகல் 11–00)

கடந்த ஆண்டிலிருந்து அந்த முறையைக் கைவிட்டுவிட்ட
தாகத் தெரிகின்றது. அதுமட்டுமல்லாமல் எனக்கு முன்னால்
இங்கே பேசிய திரு. கிருஷ்ணமூர்த்தி, திரு. வரதராஜன் ஆகியோர்
சொன்னது மாதிரி 205 ரூபாயிலிருந்து குறைந்து கடந்த ஆண்டு
டன்னுக்கு 175 ரூபாய் என்றிருந்து, அதற்குப்பிறகு மேலும்
குறைந்து இந்த ஆண்டு 165 ரூபாய் என்ற அளவுக்கு வந்து,
இப்படி குறைந்து கொண்டே போகின்றது. மற்ற பொருட்களின்
விலைகள் எல்லாம் ஏறிக்கொண்டிருக்கின்ற நிலைமையில் கரும்
புக்கு மட்டும் இப்படி பத்து, பத்தாகக் குறைவதற்கான காரணம்
என்ன? ஆனால், ஆலை முதலாளிகள் கொள்ளை இலாபம்
அடித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். கரும்பு உற்பத்தி பண்





ணக்கூடிய விவசாயிகள்தான் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்
கள். இது பற்றி எத்தனை முறை அரசாங்கத்தினிடத்திலே
சொன்னாலும் அது செவிடன் காதிலே விழுந்த சங்கு மாதிரி
தான் இருககின்றது.

இன்றைக்கு கரும்பை உற்பத்தி பண்ணிய விவசாயிகள் கரும்
பைப் பயிரிடுவதை விட்டுவிட்டு கருவேல மரம், உடை மரம்,
சவுக்கு மரம் போன்ற மரங்களை வளர்த்தால் அதிகமான இலா
பம் வரும் என்ற நிலையில் அப்படிப்பட்ட மரங்களை
விவசாயிகள் பயிரிடுகின்ற ஒரு மோசமான நிலைமை
ஏற்பட்டிருக்கின்றது கரும்பு உற்பத்தி பண்ணுவதற்கு
நல்ல வாய்ப்புக்கள் இருந்தும், அதற்கான செழுமை
யான வசதிகள் இருந்தும்கூட கரும்பு உற்பத்தி இன்றைக்
குக் குறைந்து கொண்டு வருகின்றது. ஆந்திரப்பிரதேசத்திலே
திரு. ராமாராவ் அவர்கள் முதலமைச்சராக வந்தவுடன் டன்
னுக்கு 200 ரூபாய்க்குக் குறைவாக எந்த ஆலையாவது விவ
சாயிகளுக்குக் கொடுத்தால் அந்த ஆலைகளை எல்லாம் அர
சாங்கம் ஏற்று நடத்தும் என்று சொன்னார்கள். அவ்வாறு
செய்யா விட்டாலும் அப்படி தைரியமாக ஒரு அறிவிப்பாவது
செய்தார்கள். அப்படி ஒரு பயமுறுத்தலாவது செய்தார்கள்.
ஆனால், நம்முடைய அரசாங்கம் முதலாளிகளை பயமுறுத்
துவதில்லை. அவ்வாறு பயமுறுத்தாவிட்டாலும் நம்முடைய
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏன் தைரியமாக முதலாளி
களை வற்புறுத்தி விவசாயிகளுக்கு நியாயமான விலை கொடுக்
கின்ற வகையில் செய்யக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.
மத்திய அரசைப் பொறுத்த வரையில் அது விவசாய மக்களுக்கு
விரோதமான கொள்கையைத்தான் கடைப்பிடித்து வருகின்றது.
எனவே, அவர்களை எதிர்த்துப் போராடி விவசாயிகளுக்கு உரிய
விலை பெற்றுத்தர வேண்டும் என்ற நிலைமை ஒரு புறத்திலே
இருந்தாலும், மாநில அரசு தன்னுடைய அதிகாரத்தைப் பயன்
படுத்தியாவது வேறு மாநிலங்களிலே எப்படி விலை நிர்ணயம்
செய்திருக்கிறார்களோ அந்த மாதிரி நிர்ணயம் செய்து கொடுக்
கக்கூடிய நடவடிக்கையை ஏன் எடுக்கவில்லை? நம்முடைய
மாநிலத்திலே இருக்கின்ற கரும்பாலைகள் ஒழுங்காகச் செயல்பட,
அந்த ஆலைத் தொழிலாளர்களுக்கு நிரந்தரமான வேலை
கிடைக்க, கரும்பு சாகுபடி பண்ணக்கூடிய விவசாயிகளுக்குக் கட்
டுப்படியாகக் கூடிய விலை கிடைக்க—கொள்ளை இலாபம்
கிடைக்க வேண்டியதில்லை, கட்டுப்படியாகக்கூடிய விலை
கிடைத்தாலே போதும்—அதாவது குறைந்த பட்சம் 250 ரூபாய்
டன் ஒன்றுக்குக் கிடைக்கின்ற வகையில் ஏற்பாடு செய்து அந்த
விலையைப் பெற்றுத் தருவதற்குரிய வகையில் உடனடியாக,
முத்தரப்பு மாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய
வேண்டும்.

மேலும், போன ஆண்டு கொடுத்த கரும்புக்கு இந்த ஆண்டு
விலை நிர்ணயம் செய்கின்ற நிலைமை இல்லாமல் இந்த ஆண்டு
கரும்பை நடும்போதே உங்களுக்கு இன்ன விலை இந்த ஆண்டு
கிடைக்கும்; அதாவது 8.5 சதவீதம் ரெக்கவரி இருந்தால் அப்
படிப்பட்ட கரும்புக்கு இன்ன விலை கொடுக்கப்படும் என்று
அறிவிக்க வேண்டும். இப்படிப்பட்ட பல்வேறு நிலைமைகள்
குறித்து விவாதிக்க வேண்டி இருப்பதால் இந்த அவையின் இதர
அலுவல்களை ஒத்திவைத்துவிட்டு இப்பிரச்சனை குறித்து விவா
திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. சௌந்திரராசன் : பேரவைத் துணைத்தலைவர்
அவர்களே, இன்றைக்கு கரும்பு விவசாயிகளுக்குக் கட்டுப்படி
யான விலை கிடைக்காமல் ஒரு அவல நிலையில் இருக்கக்கூடிய
நிலைமை உருவாகி இருப்பது மிகவும் துரதிருஷ்டவசமானது
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விலைவாசியெல்லாம்
ஒருபுறத்திலே உயர்ந்துகொண்டு போகின்ற சூழ்நிலையில் இந்தக்
கரும்புக்கு மட்டும் ஆண்டுக்காண்டு விலை குறைந்து
கொண்டே வந்து கடைசியில் 135ரூபாய் தான் தரமுடியும்
என்ற வகையிலே விலை நிர்ணயம் செய்யப்பட்டிருப்பது என்பது
மிகவும் வருந்தத்தக்கது. இன்றைய தினம் தமிழகத்திலே 22
ஆலைகள் இருக்கின்றன. அந்த ஆலைகளின் முதலாளிகள் எல்
லாம் இன்றையதினம் ஒருபுறத்திலே இலாபத்திலே கொழுத்துக்
கொண்டிருக்கின்றார்கள்; மறுபுறத்திலே அவர்கள் விவசாயி
களின் இரத்தத்தை உறிஞ்சிக்கொண்டிருக்கிறார்கள். இதிலே
இருக்கின்ற ஒரு அவல நிலைமை என்னவென்றால் விவசாயி
களுக்கு என்ன விலை கிடைக்கும் என்று உறுதியாகத் தெரியாத
ஒரு சூழ்நிலையில் இன்றைக்கு விவசாயம் மிகுந்த அளவிற்குப்
பாதிக்கப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட நேரத்தில் அரசாங்
கம் ஆண்டுதோறும் கூட்டுகின்ற முத்தரப்பு மாநாட்டைக் கூட்டி
உரிய விலையை, நியாயமான விலையைக் கொடுப்பதற்குரிய
நடவடிக்கைகளை எடுப்பதற்கு மாறாக ஏனோதானோ என்றிருக்
கின்ற சூழ்நிலை உருவாகி இருப்பது வருந்தத்தக்கதாகும்.
எனவே, இந்தச் சூழ்நிலையில் அரசாங்கம் விவசாயிகளைப் பாது
காக்கின்ற வகையில் முத்தரப்பு மாநாட்டை கூட்டி அவர்களுக்கு
உரிய விலை, நியாயமான விலை கிடைக்க ஏற்பாடு செய்ய
வேண்டும். டன்னுக்கு 250 ரூபாயாவது கிடைக்கின்ற அளவுக்கு
ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். ஆலைகளில் நஷ்டம்
ஏற்பட்டு அதன் காரணத்தால் விவசாயிகளுக்கும் பாதிப்பு ஏற்
படுகின்றது. என்றால் கூட ஓரளவுக்குக் கவலைப் பட மாட்
டார்கள். ஆனால், ஆலை முதலாளிகள் அதிகமான இலாபத்
தைச் சம்பாதித்துக் கொழுத்துக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையில்
ஆண்டுதோறும் கரும்பு விலையை மட்டும் குறைத்துக்கொண்டு
போவது சரியல்ல. ஒரு முற்போக்கு சர்க்கார் இங்கே இருக்
கின்றது என்றுசொல்கின்ற சூழ்நிலையில் இப்படிப்பட்ட நிலைமை
ஆண்டுக்காண்டு ஏற்பட்டுக்கொண்டு வருவதற்குத் துணை





யாக அரசு இருப்பது விரும்பத்தக்கதல்ல என்று சொல்லி, இது
குறித்து முழுமையாக விவாதிக்கின்ற அளவில் இந்த அவையின்
இதர அலுவல்களை ஒத்திவைத்து இப்பிரச்சினை குறித்து
விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, கரும்பு விவசாயமும் சர்க்கரைத் தொழிலும்
தமிழகத்தில் மிகச் சிறப்பாக இருந்து வருகிற தொழில்கள்.
இரண்டும் ஒன்றை ஒன்று இணைந்து செயல்பட்டாலொழிய
இந்த இரண்டு தொழில்களும் சரியாக நடக்காது. ஆனால்,
அண்மைக் காலத்தில் கரும்பு விவசாயம் செய்யக்கூடியவிவசாயிகள்
சொல்ல முடியாத கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகி வருகின்றார்கள்.
அவர்களைப் பாதுகாக்க வேண்டிய ஒரு பெரும் பொறுப்பு அர
சாங்கத்திற்கு உண்டு. அதிலே சர்க்கரை ஆலை முதலாளிகள்
எந்த அளவுக்கு விவசாயிகளை வஞ்சிக்கிறார்கள் என்பது அர
சாங்கம் அறியாதது அல்ல. மதுரை மாவட்டத்திலே ஒரு
சர்க்கரை ஆலையை அரசாங்கம்தான் எடுத்துக் கொள்ள வேண்
டிய ஒரு அவசியம், ஒரு கட்டாயம் ஏற்படுத்தப்பட்டது—அங்கே
இருக்கக்கூடிய விவசாயிகளை அங்கேயிருக்கக்கூடிய சர்க்கரை,
ஆலை முதலாளி வஞ்சித்துவிட்டார் என்ற காரணத்தினாலே—
ஆகவே, தொடர்ந்து தமிழகம் பூராவும் இருக்கக் கூடிய சர்க்
கரை ஆலை முதலாளிகள் விவசாயிகளுக்குப் போதுமான அள
வுக்கு, அவர்களுக்கு என்ன நியாயமான விலையைக் கொடுக்க
வேண்டுமோ அந்த விலையைக் கொடுக்க மறுக்கிறார்கள். அர
சாங்கமே இதை வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்தால் எந்தப்
பயனும் இல்லை. ஒன்று விவசாயிகளைக் கூப்பிட்டுச் சொல்லி
விடுங்கள், இனிமேல் கரும்பு விவசாயமே யாரும் செய்ய வேண்
டியதில்லை, உங்களுக்கு உரிய விலை இதிலே வராது என்று.
விவசாயிகள் வேறு விவசாயத் தொழிலைச் செய்யத் தொடங்கு
வார்கள். ஆகவே, இதிலே அரசாங்கம் தலையிட்டு விவசாயி
களுக்குக் குறைந்த பட்சம் ஒரு டன்னுக்கு ரூ. 250-ஆவது
கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் வற்புறுத்தி
இதை விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை
ஒத்திவைத்து இந்தப் பிரச்சினைபற்றி விவாதிக்க வேண்டு
மென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, கரும்புக்கு உரிய விலை கொடுக்கப்
பட வேண்டும், விவசாயப் பெருமக்கள் நிறைவடையத்தக்க வகை
யில் எந்த விவசாயியும் பாதிக்கப்படாத வகையில் அந்த விலை
அமைய வேண்டுமென்ற கருத்தினை இந்த ஒத்திவைப்புத் தீர்
மானத்தினைக் கொண்டு வந்ததன் மூலமாக மாண்புமிகு உறுப்
பினர்கள் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே இந்த
அரசுக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லையென்பதை
நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[டாக்டர் கா. காளிமுத்து] [1984 அக்டோபர் 10

மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தெரிவித்ததைப் போல இதற்கான விலைக் கொள்கையிலே குழப்பங்கள் இருப்பதற்குக் காரணம் மாநில அளவிலே அல்ல, அகில இந்திய அளவிலே விலை நிர்ணயம் செய்வதிலே ஏற்படுகின்ற சில சிக்கல்களின் அடிப்படையிலே தான் விவசாயப் பெருமக்கள் சில நேரங்களிலே பாதிப்புக்கு ஆளாக வேண்டிய நிலைமை நேரிடுகிறது என்பதை நான் கவனப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் விவசாயப் பெருமக்கள் உற்சாகம் இழக்காமல் கரும்பு விவசாயத்தைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்ற வகையிலேதான் அவர்களுடைய உற்பத்திச் செலவுகளை எல்லாம் கருத்திலே கொண்டு டன்னுக்கு 200 ரூபாயாவது நிர்ணயிக்க வேண்டுமென்று இந்த அரசு மைய அரசுக்குப் பரிந்துரை செய்தது என்பதையும் ரூ. 135 தான் மைய அரசாலே நிர்ணயிக்கப்பட்டிக்கிறது் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். என்றாலும் இதிலே அரசாங்கம் விலகிக் கொண்டு மைய அரசு நிர்ணயித்த அதே விலையில் கிடைக்கட்டும் என்கிற வகையிலே ஒதுங்கிக் கொள்ளாமல் விவசாயப் பெருமக்களுக்கு எந்த அளவுக்கு அதிக விலை கிடைக்க வேண்டுமோ அந்த அளவிலே ரூ. 165 என்று நிர்ணயம் செய்திருக்கிறது. ரூ. 165 நிர்ணயம் செய்திருக்கிறது என்றாலும் அது போதுமானது அல்ல, அது நிறைவானது அல்ல என்கிற கருத்தினை மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

*திரு. ப. நெடுமாறன் அவர்கள் இங்கே எடுத்து தெரிவித்ததைப்போல கரும்பு விவசாயம் நடைபெற்றால்தான் ஆலைகள் இயங்க முடியும் என்பது உண்மை. ஆலைகள் இருந்தால்தான் கரும்பு விவசாயம் நடக்கும் என்பதும் உண்மை. ஆகவே, இரண்டும் ஒன்றை ஒன்று இணைந்து ஒன்றை ஒன்று சார்ந்திருக்கிறது என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. இதிலே தனிப்பட்ட முதலாளிகளைக் கொழுக்க வைக்க வேண்டுமென்பதற்காகவோ அவர்களுக்கு ஆதாயத்தைத் திரட்டித் தர வேண்டுமென்பதற்காகவோ அரசு எந்த முடிவையும் எடுக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்த்தாக வேண்டும், இதிலே கூட்டுறவைச் சேர்ந்த ஆலைகளும் இருக்கின்றன. ஆகவே, எல்லாவற்றையும் கருத்திலே கொண்டுதான் நாம் சில முயற்சிகளை மேற்கொண்டு விலையைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய அவசியத்திலே இருக்கிறோம்.

[முற்பகல் 11-10]

முத்தரப்பு மாநாடு என்று ஆண்டுதோறும் கூட்டப்பட்ட மாநாடு இந்த ஆண்டு கூட்டப்படவில்லை என்பதை சுட்டிக் காட்டினார்கள். முத்தரப்பு மாநாடு என்பது வெறும் சம்பிரதாய சடங்காக இருந்து பயனில்லை என்பது தான் என்னுடைய கருத்து. ஏனென்றால் அதன்மூலமாக நாம் விலையை உடனடியாக நிர்ணயம் செய்ய முடியாது. ஆலை அதிபர்களுடைய



1984 அக்டோபர் 10] [டாக்டர் கா. காளிமுத்து]

கருத்து கேட்கப்படுகிறது ; அதைப் போலவே விவசாய பெருமக்களுடைய கருத்து கேட்கப்படுகிறது. அந்தக் கருத்துக்கள் கேட்கப்பட்ட பிறகு இருக்கிற நிலைமைகளை கருத்தில் கொண்டு நாம் ஒரு முடிவை எடுக்கிறோம். அதற்காக முத்தரப்பு மாநாடு என்பது தொடர்ந்து பயன்பட்டு வருகிறது. ஆகவே வெறும் கூடிக்கலைகிற அளவிலே இந்த மாநாடு இருந்துவிட்டால் அதிலே எந்தவிதமான பலனும் இல்லை. அதில் இரண்டு முறை கண்ட அனுபவம், ஆலையைச் சேர்ந்த பெருமக்களும், விவசாயப் பெருமக்களும் நேரடியாக தங்கள் கருத்துக்களை பரிமாற ஆரம்பித்து அதிலே கசப்பு வளரத்தக்க அளவிற்கு நிலைமை உருவான காரணத்தால் அவர்களுடைய கருத்து என்னவென்பதை பெற்றுக் கொண்டு நாம் முடிவுகளை எடுக்கலாம் என்கிற வகையில் தான் இந்த மாநாட்டை நாம் இந்த ஆண்டு கூட்டவில்லையே தவிர வேறு எந்த நோக்கமும் இல்லையென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாய பெருமக்களுடைய நலனில், கரும்பு விவசாயிகளுடைய நலனில் இந்த அரசு எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணத்தை மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு ஆலை, விவசாயப் பெருமக்களை பாதிப்பிற்கு ஆளாக்குகிற அளவிற்கு இயங்கிய போது அந்தத் தனியார் ஆலையை அரசாங்கமே மேற்கொண்டிருக்கிறது என்பதை எண்ணுகிறபோது கரும்பு விவசாய பெருமக்களின் பால் அரசாங்கத்திற்கு இருக்கிற அக்கறையைத் தான் இது புலப்படுத்துகிறது என்பதை நானும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கொடுக்கப்பட்டிருக்கிற விலை போதாது என்பது தான் இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்த அனைத்து உறுப்பினர்களுடைய கருத்தாகும். அந்தக் கருத்தை நான் எண்ணிப்பார்க்கிறேன். எந்த அளவிற்கு விலையை அதிகப்படுத்தி கொடுக்க முடியும் என்பதைப் பற்றி நானே நேரடியாக அறிவித்துவிட இயலாது. ஏனென்றால் இதிலே பல்வேறு துறைகளின் தொடர்பு இருக்கிறது. ஆகவே அந்தத் துறைகளின் கருத்துக்களை ஒட்டுமொத்தமாகப் பெற்று விரைவில், இன்னும் சொல்லப்போனால் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவதற்கு முன்னாலே அறிவிக்கிறேன் என்கிற உறுதியைத் தந்து, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டியதில்லை என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 5. அறிவிப்பு.

### முதல் துணை மதிப்பீடுகள் 1984–85.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1984–85 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் அறிக்கையை பேரவையில் அளிப்பதற்கு ஆளுநர் அவர்கள் 1984 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12 ஆம் நாள் வெள்ளிக்கிழமையை குறித்திருக்கிறார்கள்.

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### [அ] பாரதியார் பல்கலைக் கழகம் பாரதிதாசன் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன் வடிவு 1984.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். :

" 1984 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ".

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வருவதற்காக இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்படுகிறது. இதிலே ஒரு முக்கியமான அம்சம் என்னவென்றால் 'செனட்' என்று சொல்லப்படுகிற ஆலோசனைக் குழு, 'சிண்டிகேட்' என்று சொல்லப்படுகிற ஆட்சிமன்றக் குழு, ஸ்டாண்டிங் கமிட்டி ஆன் அகடமிக் அபேர்ஸ் என்று சொல்லப்படுகிற கல்வி விவகாரங்கள் குறித்த நிலைக் குழு என்று இந்த மூன்று அமைப்புகள் பல்கலைக் கழகத்தில் இருக்கின்றன. இதற்கு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்படுபவர்களாக இருந்தாலும் அல்லது நியமிக்கப்படுபவர்களாக இருந்தாலும் மொத்தமாக ஆறு ஆண்டுகள் பதவி வகித்து விடுவார்களானால், அங்கம் வகித்து விடுவார்களானால் மீண்டும் அவர்கள் நியமனம் செய்யப்படுவதற்கோ அல்லது அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கோ தகுதியற்றவர்கள் என்று இந்தச் சட்ட முன்வடிவிலே சொல்லப்பட்டிருக்கிறது. இது எல்லா பல்கலைக் கழகங்களுக்கும் பொருந்தும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆறு ஆண்டுகள் பணியாற்றிவிட்டால் அதற்கு மேல் அவர்கள் நியமிக்கப்படுவதற்கோ அல்லது தேர்தலில் நின்று வெற்றி பெற்று வருவதற்கோ அவர்களுக்கு தகுதியில்லை என்று சொல்கிறபோது ஏற்கனவே நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே அதற்கு சில காரணங்களைத் சொன்னார்கள். 'அன்ஹெல்தி பிராக்டீஸ்' அதாவது தொடர்ந்து பொறுப்பிலே இருப்பது ஒரு ஆரோக்கியமற்ற சூழ்நிலையை ஏற்படுத்திவிடும்; 'வெஸ்டட் இண்டரஸ்ட்' அதாவது தவறுகளுக்கு வழி வகுத்து விடும்......



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதைப்பற்றியெல்லாம் விளக்கமாக பின்னால் பேசிக்கொள்ளலாம். இப்போது அறிமுக நிலையில் வேண்டியதில்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து மசோதாவைப் படித்துவிட்டுப் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன். தேர்ந்தெடுக்கப்படுகிற சில உறுப்பினர்களைப் பற்றி, தேர்ந்தெடுக்கப்படுகிற முறைகளைப் பற்றி இந்த மசோதாவில் வருகிறது. ஆகவே அதைப் படித்துவிட்டுப் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கும் சட்ட முன்வடிவிலே, எக்சிஸ்டிங் ப்ரொவிஷன், அமெண்டிங் ப்ரொவிஷன் என்ற பகுதியிலே இது குறித்துச் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ் என்பதிலே வேண்டுமானால், மத்திய சர்க்கார் கொடுத்து இருக்கக்கூடிய ஆலோசனைகளின் அடிப்படையில் இந்தத் திருத்தங்களைக் கொண்டு வந்து இருக்கிறோம் என்று போட்டு இருக்கிறீர்களே தவிர, இந்தச் சட்டமுன்வடிவின் உள்ளே போய் பார்த்தால் இவைகளைப் பற்றிய கருத்துக்கள் இருக்கின்றன. ஆகவே தான் இதை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன். அமைச்சர் அவர்கள் மசோதாவை மீண்டும் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் கருத்துக்களைச் சொல்லியிருக்கிற பகுதி இதிலே இருக்கிறது, ஆகவே, அமைச்சர் அவர்கள் இதனைக் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆறு ஆண்டுக் காலத்திற்கு மேல் யாரும் பதவியில் இருக்கக் கூடாது. அப்படிப்பட்டவர்களை நியமனம் செய்யக்கூடாது. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் அது செல்லாது என்று சொன்னார்கள். ஆனால் அந்த விதியை மீறி இங்கே காரியங்கள் நடைபெற்று இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 15 ஆண்டுகாலம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே பணி புரிந்த பேராசிரியர் சண்முகநாதன் மீண்டும் உங்களுடைய சிபாரிசின் பேரில், ஆலோசனையின் பேரில் ஆளுநர் அவர்களால் நியமிக்கப்பட்டிருக்கிறார், இந்த 6 ஆண்டு காலம் என்பதை மீறி அவர் எப்படி நியமிக்கப்படுகிறார் என்பதை நான் அறிய விரும்புகிறேன். அதைப் போலவே பேராசிரியர் பாலகிருஷ்ணன் அவர்கள் 15 ஆண்டுக்காலம் செனட், சிண்டிகேட்டில் பணிபுரிந்தவர் மீண்டும் தேர்தலில் வெற்றி பெற்று வந்து இருக்கிறார்கள். இது எப்படி? நீங்கள் இப்படிப்பட்ட நிலைமைகளைத் தடுக்க அவசரச் சட்டம் கொண்டு வந்தீர்கள். ஆனால் இந்தப் பேராசிரியர் சண்முகநாதன், பேராசிரியர் பால

[திரு. அ. ரகுமான்கான்] [1984 அக்டோபர் 10

கிருஷ்ணன் ஆகியோர் 15 ஆண்டுக் காலத்திற்குமேல் பதவி வகித்தவர்கள் எப்படி மீண்டும் நியமிக்கப்பட்டார்கள்? இது தான் என்னுடைய அப்ஜெக்ஷன். ஆகவே, இந்தச் சட்டத்தைக் கொண்டு வர உங்களுக்குத் தகுதி இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது இந்தச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்வதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது. அதற்கு அனுமதி அளிக்கலாமா வேண்டாமா என்கிற அளவிற்குத்தான் இப்போது பேச வேண்டும். சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறபோது சொல்ல வேண்டிய கருத்துக்களை எல்லாம் இப்போது பேசிக்கொண்டிருக்க வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்கிறபோது சொல்கிற கருத்துக்கள் என்பது வேறு. இப்போது அமைச்சர் அவர்கள் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறார்கள். அறிமுகம் செய்கிறபோது அதிகாரபூர்வமான என்னுடைய எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் இக்கருத்துக்களைக் கூறுகிறேன். ஏனென்றால் இதிலே சொல்லி இருக்கும் ஷரத்துக்களுக்கு முரணாக நடைமுறை இருக்கிறது. 15 ஆண்டுக் காலம் சிண்டிகேட், செனட்டில் பதவி வகித்தவர் மீண்டும் நியமிக்கப்படுகிறார். அரசாங்கத்தின் சிபார்சின் பேரில் நியமிக்கப்படுகிறார். அதற்குத்தான் உதாரணமாக பேராசிரியர் பாலகிருஷ்ணன், பேராசிரியர் சண்முகநாதன் ஆகியோரைக் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில் நான் கொண்டுவந்த அவசர சட்டத்தை எதிர்த்து அவர்கள் ஒரு ஸ்டே வாங்கி இந்த நியமனத்தைச் செய்து இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, அந்த அடிப்படையில் அது செய்யப்பட்டு இருக்கிறது. அது நாங்கள் ஒப்புக்கொண்டது அல்ல. யாரையும் நாங்கள் போடவேண்டும் என்று விரும்பவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே: இங்கே எந்த அவசரச் சட்டத்தை மாற்றுவதற்கு மசோதா கொண்டு வந்து இருக்கிறார்களோ அதற்குப் புறம்பாக கவர்னர் அவர்கள் 15 ஆண்டுக்காலம் பதவியில் இருந்தவரை மீண்டும் சிண்டிகேட் உறுப்பினராக நியமனம் செய்து இருக்கிறார். எந்த கவர்னர் இந்த அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தாரோ அவரே தான் இந்த நியமனத்தையும் செய்து இருக்கிறார்........

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சட்டத்திற்கு விரோதமான நியமனமாக இருந்தால் அது செல்லாது.



1984 அக்டோபர் 10]

திரு. அ. ரகுமான்கான் : சட்டத்திற்கு விரோதமாக இருந்தால் அது செல்லாது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அந்த அவசரச் சட்டத்தையும், இந்த நியமனத்தையும் செய்தவர் ஒரே கவர்னர்தானே. ஆனால் அமைச்சர் அவர்கள் சொல்கிறார், சட்டப்படி அது தவறு என்று. அப்படியானால் அரசாங்கத்தின் பரிந்துரை இல்லாமல் கவர்னர் எப்படி இதைச் செய்தார்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, அங்கே இருந்து பரிந்துரை செய்யப்பட்டு வருகிறபெயர்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த பெயர்கள் இருந்து இருக்கலாம். ஆனால் என்னுடைய கையில் அதைப் பற்றிய தகவல் தற்போது இல்லை. இப்போது அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பற்றி பேசியிருக்கிறார்கள். ஆனால் இங்கே அவை முன் உள்ள மசோதாக்கள் பாரதியார், பாரதிதாசன் பல்கலைக் கழங்களைப் பற்றியதாகும். அந்த நியமனங்களைப் பற்றிய விவரங்கள் என்னிடத்தில் தற்போது இருந்தால் பதில் சொல்லலாம். எனக்குத் தெரிந்தவரையில், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில் இந்தச் சட்டத்தை அமல்படுத்த தடை வாங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. இது தான் எனக்குக் கிடைத்து இருக்கும் விவரம்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல பாரதியார், பாரதிதாசன் பல்கலைக்கழகங்களுக்கான மசோதாவாக இருந்தாலும், இவற்றிலேயே இந்த விதிகள் எல்லாப் பல்கலைக் கழகங்களுக்கும் பொருந்தும் என்ற ஷரத்து இருக்கிறது. ஆகவே, பேராசிரியர் சண்முகநாதன், பேராசிரியர் பாலகிருஷ்ணன் ஆகியோர் 15 ஆண்டுகாலம் பொறுப்பில் இருந்தும் மீண்டும் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள், தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டத்தை நீங்கள் வாபஸ் பெறவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவரவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில், அந்தச் சட்டத்தைச் செயல்படுத்துவதற்கு தடை வாங்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தைச் சொல்லியிருக்கிறேன். அதற்குமேலும் இதைப்பற்றி பேசிக்கொண்டிருப்பது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நம்முடைய ப்ரொசீஜரை மீறிக்கொண்டு போவதாகத் தெரிகிறது. எல்லா விவரங்களையும் சொல்லி விட்டீர்கள். சட்டமுன்வடிவு கன்சிடரேஷனுக்கு வரும்போது மற்றவற்றைப் பேசலாம். (குறுக்கீடு) லீகாலிட்டியைப்பற்றி (Legality) முதலிலே சொல்லியிருக்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது. இங்கே ஒரு அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த அவசரச் சட்டத்திற்குப் புறம்பாக கவர்னர் நியமனம் செய்திருக்கிறார். பேராசிரியர் சண்முகநாதன் எந்தக் கோர்ட்டிலும் போய் ஸ்டே வாங்கவில்லை. ஆகவே, இந்தச் சட்டத்தை நான் வன்மையாக எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" 1984 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகம்; பாரதிதாசன் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.



(இ) கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1984

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு. 1984.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் "

திரு. கோ. அழகர்சாமி : துணைத் தலைவரவர்களே, இந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு தனி அதிகாரிகள் நியமிக்கப்படக் கூடிய இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவை நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வன்மையாக ஆட்சேபிக்கிறேன். ஏற்கனவே கடந்த 10 ஆண்டு காலமாக கூட்டுறவுச் சங்கங்கள் தனி அதிகாரிகள் நிர்வாகத்தில் நடந்துகொண்டிருக்கின்றன.

அது மட்டுமல்ல. பத்து ஆண்டுகளுக்கு முன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபை பல கூட்டுறவுச் சங்கங்களில் இருந்துகொண்டிருக்கிறது. அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபை நல்லமுறையில் செயல்பட்டுக் கொண்டிருந்தாலும் அந்த நிர்வாகஸ்தர்களை விலக்கிவிட்டு ஆளும் கட்சியினர் தங்களுடைய கட்சிக்காரர்களை அங்கே நியமனம் செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டு, சட்ட விரோதமாக காரியங்கள் நடைபெறுகின்றன,

உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை தாலுகாவில் செங்கமங்கலம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் எங்களுடைய கட்சித் தோழர்கள் கருப்பையா, இராஜாமணி, சுப்பையா போன்றவர்கள் தொடர்ந்து 10 ஆண்டு, 20 ஆண்டு காலமாக ஒவ்வொரு தடவையும் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் செயல்பட்டிருக்கிறார்கள். ஆளும் கட்சிக்காரர்கள் தங்களுடைய கட்சிக்காரர்களை அங்கே நியமிக்க வேண்டும் என்பதற்காக கடந்த 3—8—1984 அன்று அந்த நிர்வாகஸ்தர்களை விலக்கிவிட்டு, அகில இந்திய அண்ணா தி.மு.கவைச் சேர்ந்த செல்லத்துரை என்பவரை தலைவராகவும், அன்புசெல்வம் என்பவரை உதவித் தலைவராகவும் பால்வாசகம், மகாதேவன் உடையப்பன், ராமசற்குணம், சுப்பிரமணி, இராஜமாணிக்கம் சிவசாமி, ஆகியவர்களை நிர்வாகஸ்தர்களாகவும் நியமித்து டிபுடி ரெஜிஸ்திரார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார். இதற்கு முன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நிர்வாக சபை இருந்திருக்கிறது.

ஆகவே இந்த மாதிரி தமிழ்நாட்டிலே உள்ள பல கூட்டுறவுச் சங்கங்கள் பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள், இராமங்களிலே கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள், இது போன்று எத்தனையோ சங்கங்கள் மக்களுக்கு அத்தியாவசியமான பொருள்களை விநியோகம் செய்யும் நிலையில், 10 ஆண்டுகளுக்கு முன்னாலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், தங்களுக்கு வேண்டிய ஆட்களை புகுத்துவதற்கு இப்படிப்பட்ட ஒரு மோசமான நிலைமை கையாளப்படுகிறது. கூட்டுறவு வங்கியாக இருந்தாலும் நில வள வங்கியானாலும் சரி, தனியார் நிர்வாகத்தில் இருக்கிற சரி, பல கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல இலாபகரமாக ஓடிக்கொண்டிருந்த நிலை மாறி, இப்போது நஷ்டத்திலே ஓட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

சட்டம் வேண்டுமென்று சொல்லப்பட்டது. சட்டம் நிறைவேற்றப்பட்டு ஓராண்டிற்கு மேல் ஆகிவிட்டது. 1983 பிப்ரவரியில் சட்டம் நிறைவேற்றப்பட்டு 1 1/2 ஆண்டுகளுக்கு மேலாகியும் கூட விதிகள் இயற்றப்படவில்லை. விதிகள் தயார் செய்யப்பட்டு, தேர்தல் நடத்தப்படவில்லை, 10 ஆண்டுகளாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடைபெறமால் இருப்பது. அதற்கு என்ன காரணம்? அந்தத் தேர்தலை நடத்த உங்களுக்கு பயமா? ஏன் நடத்தவில்லை? (குறுக்கீடு) ஆகவே இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதையே நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி, பேசும்போது தவறான ஒரு தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் பால் கூட்டுறவு சங்கத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரை நீக்கிவிட்டு வேறொருவர் நியமிக்கப்பட்டிருக்





கிறார் என்று. பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இதுவரை தேர்தலே நடத்தப்படவில்லை. சிப் ப்ரமோட்டர் போடப்பட்டு, அதுவும் நியமிக்கப்பட்ட குழுவே மாற்றி இருக்கலாமே தவிர அவர்கள் சொன்னது போல் தேர்ந்தெடுக்கப்பட்ட குழு அல்ல. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நாம் ப்ரொசிஜரை பாலோ பண்ணுவதில்லை. நேரத்திற்குத் தகுந்தாற்போல் வளைந்து கொண்டுபோக வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) விதியைக்கடைப்பிடிக்க வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு உறுப்பினர் இராமலிங்கம் அவர்கள் தவறாகப் பேசியிருக்கிறார்கள். விவரம் தெரிந்து பேசவேண்டும். ஏற்கனவே இன்றைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கங்களில் தொடர்ந்து தலைவர்களாக இருக்கிறார்கள். நானும் ஒரு சங்கத்தின் தலைவர். புதியதாக சங்கங்களுக்கு அதுவும், உற்பத்தியாளர் சங்கங்களுக்கு, நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் போடவேண்டும். இந்த சங்கங்கள் 20 ஆண்டுகளுக்கு முன்பு துவங்கப்பட்டது; தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடத்தப்படவேண்டும். 70 ஆம் ஆண்டு, 76ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், இன்றைக்கு தலைவர்களாக இருக்கிறார்கள். அவர்களை நீக்கிவிட்டுத்தான் போட்டிருக்கிறார்கள். நான் தவறான தகவலை கொடுக்கவில்லை. அவர்கள் தெரிந்து பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. இரெ. இராசமாணிக்கம் : துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் தனி அலுவலர் நியமனம் இரண்டாவது திருத்த சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் இந்தச் சட்டம் அறிமுகம் செய்யப்படுகின்ற நிலையிலேயே கடுமையாக எதிர்க்கிறேன், காரணம், தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் தேர்தல் பல ஆண்டுகள் நடத்தப்படாமல், ஜனநாயகம் படுகுழியிலே தள்ளப்பட்டிருக்கிறது. ஜனநாயக முறைப்படி நடத்தப்படவேண்டிய கூட்டுறவுச் சங்கங்கள் தேர்தல் நடைபெறாத காரணத்தால், இன்றையதினம் பல கூட்டுறவுச் சங்கங்கள் சரியாக இயங்கவில்லை. கூட்டுறவுச் சங்கங்களிலே இன்றையதினம் நிதிநிலை மிக மோசமாக இருக்கிறது என்பதையும் நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். சிறப்பாக நடைபெற்ற பல கூட்டுறவுச் சங்கங்கள், தனி அதிகாரியின் நிர்வாகத்திலே இருப்பதால், இப்போது நிதிநிலைமை மோசமாக இருப்பதோடு நிர்வாகம் கூட சரியாக நடத்தப்படவில்லை,

ஆகையினாலே, ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தி, தலைவர்கள் அந்தப் பொறுப்பிலே அமர்ந்து நிர்வாகத்தை நிர்வகிக்க உடனடியாக தேர்தல் நடத்திட நான் தமிழக அரசை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்ட மன்றத்தில் பலமுறை ஜனநாயக முறைப்படி தேர்தல்கள் நடத்தப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் நிர்வாகப் பொறுப்பு ஏற்பார்கள். தனி அலுவலர்கள் பதவிக் காலம் நீட்டிக்கப் படமாட்டாது என்று பலமுறை அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அறிவிக்கப்பட்ட அமைச்சர்கள் தான் மாறியிருக்கிறார்களே தவிர, இங்கே சொல்லப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. புதிய அமைச்சராக வந்திருப்பவர் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இப்படிப்பட்ட வாக்குறுதிகள் சட்ட மன்றத்தில் பலமுறை, ஊராட்சி மன்றத் தேர்தலானாலும், கூட்டுறவுச் சங்கத் தேர்தலாக இருந்தாலும், தேர்தல் நடத்தப்படும், நடத்தப்படும் என்று கூறப்பட்டதே தவிர, தேர்தல் நடத்தப்படவில்லை.

(முற்பகல் 11.30)

அதோடு, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் நடத்தாததால், அந்தச் சங்கங்களிலே பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கு கூட வழியில்லாமல் இன்றைக்கு கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தை நல்ல முறையில் இயங்கச் செய்ய வேண்டும் என்றால், ஜனநாயக முறைப்படி தேர்தலை நடத்தி, தலைவர்களை நிர்வாகப் பொறுப்பிலே உட்கார வைக்க வேண்டும். ஆகவே, விரைவிலே கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலை நடத்த வேண்டும். தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்கக் கூடாது. அது நியாயமில்லை. எனவே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எதிர்த்து அமர்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நகராட்சிகளுக்கும், ஊராட்சிகளுக்கும் தேர்தல் நடத்தப்படவில்லை என்பது மட்டுமல்ல, கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கூட தேர்தல் நடத்த முடியாது என்ற அளவிற்கு அரசு வந்திருக்கிறது. இது மிகமிக துரதிருஷ்டவசமானது என்று தான் சொல்ல வேண்டும். ஏன் என்றால், சென்ற 10 வருட காலமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்படவில்லை. ஆனால், தனி அதிகாரிகள் என்று சொல்லக் கூடிய தனி நபர்கள் எல்லாம் இன்று சேர்ந்து நடத்தக் கூடிய ஒரு அரங்கமாக இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மாறியிருக்கின்றன. சென்ற 1, 2 வருடங்களாக, தேர்தல் நடத்தாமல் இருப்பதற்குக் காரணம் என்ன சொல்லப்





பட்டது என்றால், ஒரு காம்பரஹென்சிவ் லா இது சம்பந்தமாக இல்லை, எனவே, அதை உருவாக்குவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படிப் பட்ட ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. அன்றே இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்கு வேண்டிய ரூல்ஸ், அதாவது விதிகளை உருவாக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்லப்பட்டது. அன்று கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்தவர் என்ன சொன்னார் என்றால், இந்தச் சட்டத்தின் ஆய்வு நடக்கக்கூடிய நேரத்திலே ஒரு மாத காலத்திற்குள்ளே இந்த செலக்ட் கமிட்டி உறுப்பினர்களை உட்கார வைத்து, விதிகளை உருவாக்கி அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இங்கே சொல்லப்பட்டது. அதுவும் செய்யப்படவில்லை. இன்று வரையிலும் அதாவது ஏறக்குறைய 1 வருட காலத்திற்கு மேலாகியும் விதிகள் உருவாக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, அமைச்சர் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள், 1983 ஆம் வருடத்திலே கூட்டுறவுச் சங்கங்களுக்காக தேர்தல்கள் நடத்தப்படும் என்று. இது பத்திரிகையிலே அறிவிக்கப்பட்டு வந்திருக்கிறது. இவ்வளவு விஷயங்கள் எல்லாம் நடந்ததற்குப் பிறகு இப்போது என்ன மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்றால், மேலும் ஒரு வருடக் காலத்திற்கு தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கு சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது தேவையா என்பதை கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இன்று ஒரு விதியை அமைப்பதற்காக வேண்டி 1 வருட காலத்திற்கு அவகாசம் கேட்டுவிட்டு, பிறகு தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பது சரியல்ல. நியாயம் அல்ல. இது ஜனநாயக மரபு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேவைப்பட்டால் 2 மாதம், 3 மாதத்திற்குள்ளே, விதிகளை உருவாக்கி, தேர்தலை நடத்துவதற்கு முடியும். எனவே, இந்த 1 வருட காலத்திற்கு நீட்டிப்பது என்பதை மாற்றி, 3 மாத காலம், அல்லது 6 மாத காலம் என்று சுருக்கிக் கொள்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். இந்த நேரத்திலே நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாததினால், பல இடங்களிலே மக்களுடைய உரிமைகள், வசதிகள் இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக்கின்றன. பல ஆயிரக்கணக்கான கூட்டுறவுச் சங்கங்களிலே ஏற்கனவே மக்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த, விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த கடனுக்கான அளவு, அதற்கான நிபந்தனைகள் எல்லாம் மாற்றப்பட்டு, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலேயிருந்து கிடைக்க வேண்டிய உதவி கிடைக்காமல், இன்றைக்கு தனி அதிகாரிகள் அவர்களுடைய இஷ்டத்திற்கு விதிகளையும் நடைமுறைகளையும் மாற்றிக் கொண்டு செயல்பட்டு வருகிறார்கள் என்பதை நான் அமைச்சர் அவர்களிடத்திலே சொல்ல விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சில பொறுப்புகளிலே இருக்கிற தலைவர்களை, அவர்கள் மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்திற்காக, அவர்கள்

மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக குடியாத்தம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலே கடந்த 8 ஆண்டுகளாக இருந்த தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமையை, அவர்கள் மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர்கள் (மணி அடிக்கப்பட்டது) என்பதற்காக, மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆளும் கட்சியின் ஆட்களை கொண்டு வருவதற்கு முயற்சி செய்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிற நேரத்திலே, அதை எதிர்த்துப் பேசிய மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்களும், மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் ராசமாணிக்கம் அவர்களும், மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களும், இந்த அரசாங்கம் வேகமாக தேர்தலை நடத்த வேண்டும் என்ற உணர்வோடு நின்றார்கள், சொல்லிக் கொண்டிருந்தார்கள் என்று தெளிவாகச் சொன்னார்கள். எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கூட, இந்தத் தேர்தல்களை நடத்த வேண்டும் என்று ஆர்வத்தோடுதான், அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றுதான், கடந்த ஒரு வருடத்திற்கு முன்னாலே இத்தகைய சட்டத்தை இந்த அவையிலே அங்கீகாரம் பெற்றார்கள்.

இந்தச் சட்டத்தினுடைய உள் விதிகள் ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு விதமாக இருக்கிற காரணத்தினால், அந்தந்த துறைகளிலே அது அதற்கு ஏற்றவாறு அந்த உள்விதிகளை ஏற்படுத்த வேண்டிய கால கட்டாயத்திலே இருக்கிற காரணத்தால், இவ்வளவு அதிகமான நாட்கள் ஆகியிருக்கின்றன என்பதையும் எடுத்து சொல்லி, மிக வேகமாக இதை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்று முதலமைச்சர் சொல்லியிருக்கின்ற காரணத்தினாலே, ஒரு வருட காலம் என்று இதிலே கேட்டிருந்தாலும், எவ்வளவு வேகமாகத் தேர்தலை நடத்த முடியுமோ, அவ்வளவு வேகமாக நடத்துவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் பேசும்போது, தேர்தலை சந்திக்க நீங்கள் பயப்படுகிறீர்கள் என்று சொன்னார்கள். பயப்படவேயில்லை. எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் டாக்டர் முதல்வர் அவர்கள், எந்தக் காலத்திலும் எந்தத் தேர்தலையும் சந்திக்க பயப்பட்டதேயில்லை, தயாராகவே இருக்கிறார்கள். எப்பொழுதும் நாங்கள் தயார் என்ற அந்த உண்மையைச் சொல்லி, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதிக்குமாறு கோருகிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

**(உ) கட்டிட கட்டுமானப் பணியாளர்கள் (பணி நிலைமைகள் பல்வகை விதித்துறைகள்) சட்ட முன்வடிவு 1983—(தொடர்ச்சி).**

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கக் கூடிய கட்டிட கட்டுமானப் பணியாளர்கள் (பணி நிலைமைகள் - பல்வகை விதித் துறைகள்) என்கிற இந்தத் தனிச் சட்டம் செலக்ட் குழுவினுடைய ஆய்விற்கு விடப்பட வேண்டும் என்று சொல்லி நான் ஒரு அமெண்ட்மெண்ட், அதாவது திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதை வழிமொழிந்து இங்கே சில கருத்துக்களை நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது வரைக்கும் கட்டிடத் தொழிலாளர்களுக்காக தனிச் சட்டம் கொண்டு வரப்பட்டதேயில்லை, முதன் முதலாக கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய ஒரு புரட்சிகரமான சட்டம் இது என்று பூரித்துப் போய் இங்கே பேசினார்கள். அத்தோடு மட்டும் அல்ல, நான் ஒரு கொத்தனாரின் பேரன். ஆகவே, ஒரு கொத்தனாரின் பேரனாக இத்தகைய சட்டத்தைக் கொண்டு வரும் வாய்ப்பு கிடைத்ததில் எனக்கு மிக மகிழ்ச்சி என்று சொல்லியிருக்கிறார்கள், அவருடைய மகிழ்ச்சியில் நானும் பங்கு கொள்கிறேன்.

அது மட்டும் அல்லாமல், இன்னொன்றையும் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே கட்டப்படுகிற சில சர்க்கார் கட்டிடங்களைக் கூட கொத்தனாரை வைத்து திறந்து, கட்டிடங்களைக் கட்டுபவர்கள் கொத்தனார்கள், நாங்கள் உழைப்பை மதி

கிறோம் ஆகவே, கொத்தனாரை வைத்தே சர்க்கார் கட்டிடங்களைத் திறக்கிறோம் என்று சொல்கிற அளவுக்கு, கொத்தனார்கள் மீது அக்கறை உள்ள சர்க்கார் என்றெல்லாம் பேசப்பட்டு வருகிறது. சட்டமும் இதோ கொண்டு வந்திருக்கிறீர்கள்.

(முற்பகல் 11–40)

ஆனால் சட்டம் என்று சொன்னால் அது கட்டடத் தொழிலாளர்களுக்கு உண்மையிலேயே நடைமுறையில் பயன் அளிக்கக் கூடிய சட்டமாக இருக்க வேண்டும். சட்டத்தைப் பார், ஷரத்துக்களைப்பார் என்று சொல்லி பிரச்சினை தீர்ந்து விட்டது என்றால் அது கல்யாணம் ஆகிவிட்டது. ஆனால் மணமக்கள் பிரம்மச்சாரிகளாக இருக்கிறார்கள் என்று சொல்வதுபோல் தான் இருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்கிறேன், ஆனால் சட்டத்திலே உள்ள ஷரத்துக்களையெல்லாம் அமல்படுத்த முடிகிறதா உங்களால்? இந்த சர்க்காரால்? சிறுவர்களை இந்தத் தொழிலில் பயன்படுத்தக்கூடாது என்று இந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. நான் அதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். சில நேரங்களிலே, பள்ளிகளிலே, கல்லூரிகளிலே, படிக்க வேண்டிய பிள்ளைகள் வறுமையின் காரணமாக இந்த வேலைக்குப் போகிற சூழ்நிலை ஏற்படுகிறது என்றால், அவர்கள் போவது தவறுதான் அவர்கள் போகக்கூடாதுதான். அதை தடைசெய்திருக்கிறீர்கள், இந்தச் சட்டத்தின் மூலமாக. நான் கேட்கிறேன், என்ன நடக்கிறது நடைமுறையில்? சிவகாசியிலே இருக்கிற பேக்டரிகளிலே பீடித் தொழிற்சாலைகளிலே சிறுவர்கள் பயன்படுத்தப் படுகிறார்கள். அர்பன்சிங் கமிட்டி போடப்பட்டது. அவர்களால் அந்த அறிக்கை தரப்பட்டது. ஆனால் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதை நடைமுறைப்படுத்த முடிகிறதா உங்கள் அதிகாரிகளால்? சட்டத்திலே போட்டுவிட்டாலும் பீடி தொழிற்சாலையிலே வேலை செய்கின்றார்கள் சிறுவர்கள் என்ற நிலைமையை உங்கள் அதிகாரிகள் இருந்ததற்குப் பிறகு, தொழிலாளர் நலத் துறை அமைச்சராக நீங்களும் இருந்ததற்குப் பிறகு, இந்த நிலைமையைப் பார்க்கிறபோது இங்கே சொல்லப்பட்டு இருக்கக்கூடிய ஷரத்துக்கள் சரியாகப் பயன்படுத்தப்படும் என்ற சந்தேகம இருக்கிறது. கட்டடத் தொழிலாளர்கள் வாரத்திலே இத்தனை நாட்கள் வேலை செய்யவேண்டுமென்றும், ஒரு நாளைக்கு அவர்கள் 9 மணி நேரம் வேலை செய்யவேண்டுமென்றும், இளைஞர்கள் ஒரு நாளைக்கு 6 மணி நேரம் வேலை செய்யவேண்டும் என்றும், பெண்கள் காலை 6 மணிக்கு மேலே, இரவு ஏழு மணிக்கு முன்னாலே தான் வேலை செய்ய வேண்டுமென்றும் வேலை செய்யக்கூடிய கொத்தனார் வீட்டுப் பெண்களுடைய குழந்தைகள், தாய்மார்களுடைய குழந்தைகளைக் காக்



கக்கூடிய காப்பகங்கள் இருக்க வேண்றுமென்றும் இதுபோன்ற நல்ல அம்சங்கள் இந்தச் சட்டத்திலே கொண்டு வரப்பட்டிருக்கின்றன. நான் மறுக்கவில்லை. ஆனால் நடைமுறையில் அமல்படுத்த முடிகிறதா உங்களால்? உங்கள் அதிகாரிகள் இவைகளையெல்லாம் சரிசெய்வார்களா என்ற சந்தேகம் இருக்கிறது. காரணம் ஒருவர் 480 நாட்கள் வேலை பார்த்தால் அவரை நிரந்தரமாக்க வேண்டுமென்று சொன்னார்கள். கடற்கரையிலே சுண்டல் விற்கிற பிள்ளைகளைக் கூட நிரந்தரமாக்குவேன் என்று அமைச்சர் சொன்னால் கிண்டலுக்காக சொல்லவில்லை, சுண்டல் விற்கிறவர்களைச் சிந்தித்தே சொன்னார் என்று கருதுகிறேன்.

குடிநீர் வடிகால் வாரியத்திலே 480 நாட்களுக்கு மேலாக வேலைபார்த்தவர்கள் இருக்கிறார்கள், ஹவுசிங் போர்டிலே இருக்கிறார்கள், கழிவு நீர் அகற்றும் வாரியத்திலே 10 வருடமாக வேலைபார்த்துக் கொண்டிருக்கிறார்கள். 480 நாட்கள் வேலை செய்தால் போதும் என்று சட்டம் பேசுகின்ற அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன், அது நடைமுறைபடுத்தபட்டு இருக்கிறதா? இந்தச் சட்டத்திலே கட்டடத் தொழிலாளர்களுக்கு நன்மை கிடைக்கும் என்று சொல்கிறீர்களே, நீங்கள் நியமிக்கப் போகும் ஆய்வாளர்கள் இருக்கிறார்களே, அவர்கள் இதை கவனிப்பார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆகவே கடந்த கால அனுபவங்கள் கசப்பான அனுபவங்களாக இருக்கின்றன. அமைச்சர் அவர்கள், சட்டத்தைப் படிக்காமல் பேசுகிறேன் என்று அடிக்கடி குற்றச்சாட்டு சுமத்திவிடுவார் என்ற காரணத்தினால் நான் கொஞ்சம் கவனமாக இதைப் படித்துப் பார்த்தேன். ஏதோ புரட்சிகரமான திட்டங்களை இந்தச் சட்டத்தில் கொண்டு வந்திருப்பார்கள் என்று பார்த்தால் ஒரு அரசாங்க உத்தரவின் மூலமாக நிறைவேற்றப்படுகிறவைகளையெல்லாம் இந்தச் சட்டத்திலே சொல்லியிருக்கிறீர்கள். இந்தக் கட்டடத் தொழிலாளர்கள் வேலை பார்க்கக்கூடிய இடத்திலே அவர்களுக்கு குடிநீர் வசதி கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால் இந்தச் சட்டத்தின் மூலமாகத்தான் வரவேண்டும், கொத்தனார்கள் வேலை செய்கிற இடத்திலே குடிநீர் இல்லாமல் சிரமப்படுகிறார்கள். அவர்கள் வேலைக்கு போனவுடனே ஒரு குடத்தில் தண்ணீரைக் கொண்டு போய் வைத்துவிட்டு தான் வேலையை ஆரம்பிக்கிறார்கள். அதற்கு இப்போது ஒரு சட்டம். அது மட்டும் அல்ல காயம் ஏற்படும் சூழ்நிலை இருந்தால் முதலுதவி செய்ய வேண்டும் என்று அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிற ஒரு சட்டம். தொழிலாளர்களுக்கு காயம் பட்டால் உடனே முதலுதவி செய்வதற்கு ஒரு சட்டம் வேண்டுமா? ஆகையால் அந்த ஷரத்துக்களை உள்ளடக்கிய ஒரு சட்டம் கொண்டு வந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு சிற்றுண்டி வசதி வேண்டும், அதற்கு ஒரு மசோதா. கட்டிடத் தொழிலாளர்களுக்கு சிற்றுண்டி வேண்டும் என்று சாதாரணமாக சொல்லுகின்ற ஒரு அரசு உத்திரவு மூலம் நிறைவேற்றக்கூடிய காரியம். தொழி

[திரு. அ. ரகுமான்கான்] [1984 அக்டோபர் 10

லாளர்களுக்கு ஏதோ அபாரமான காரியங்களை செய்வதற்காகக் கொண்டு வந்து இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் செய்ய வேண்டியதை செய்து இருக்கிறார்களா என்பது தான் கேள்வி. கர்நாடகத்தில் திரு எக்டே ஆளுகிறார். அவர் கொத்தனார் பேரன் அல்ல. நம்முடைய அமைச்சர் அவர்கள் போல். அவர் கொள்ளனர் வகுப்பைச் சேர்ந்தவர் அல்ல. கட்டிடத் தொழிலாளியும் அல்ல. அந்த பரம்பரையில் வந்தவரும் அல்ல. ஆனால் கர்நாடகத்தில் அண்மையில் அவர் ஒரு சட்டம், ஒரு உத்திரவு போட்டிருக்கிறார். அதை நான் இங்கே உங்கள் மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அதற்குப் பெயர் 'Work.rs and Contractors Benevol.nt Fund' கொஞ்சம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிலே தொழிலாளர் வீட்டுப் பிள்ளைகள் பி. ஏ., பி.எஸ்ஸி. படிக்க வேண்டும் என்றால் மேல்நிலைப் பள்ளியில் படிக்க வேண்டும் என்றால் அந்தக் கட்டிடத் தொழிலாளர்கள் வீட்டு பிள்ளைகள் படிப்பதற்கு கர்நாடக அரசு பண உதவி செய்கிறது. நான் கேட்கிறேன் திரு. எக்டே அவர்கள் கொத்தனார் பேரன் அல்ல. ஆனால் தொழிலாளர் நல அமைச்சர் என்ற பெயரைத் தாங்கியிருக்கிற உங்களைப் பார்த்து உங்கள் மூலம் நான் கேட்கிறேன், இந்த சரத்தை இதில் ஏன் நீங்கள் கொண்டுவரவில்லை. கொண்டுவருவதற்கு உங்களுக்கு என்ன தடை. கர்நாடக அரசுக்கு இருக்கக்கூடிய அதிகாரம் தானே உங்களுக்கும் இருக்கிறது. தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் உரையில் சொல்ல வேண்டும்.

அதைப்போல் பள்ளியில் படிப்பதற்கும் எல்லா தொழிலாளர் வீட்டு பிள்ளைகளுக்கும் அரசு பண வசதி செய்து கொடுக்கிறது. அது மட்டும் அல்ல, மெடிக்கல் டிரீட்மெண்டு இந்தச் செலவை அரசு ஏற்றுக்கொள்கிறது. ஆகவே நான் கேட்கிறேன் ஈ.எஸ்.ஐ. சட்டம் தொழிலாளர்களுக்கு அப்ளிகபிள் ஆவதுபோல் அவர்களுக்கும் அது பொருந்தும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாதாடலாம். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இடத்தில் ஒரு சந்தேகத்தை கேட்க விரும்புகிறேன். ஈ.எஸ்.ஐ.-க்கு காண்டிரிப்யூஷன் தொகை எப்படி கொடுக்கிறார்கள். மாநில அரசு ஒரு தொகை கொடுக்கிறது. மைய அரசு ஒரு காண்டிரிப்யூஷன் கொடுக்கிறது. தொழிலாளர் ஒரு காண்டிரிப்யூஷன் தருகிறார். முதலாளி ஒரு காண்டிரிப்யூஷன் தருகிறார். இது தானே ஈ.எஸ். ஐ.-க்கு உரிய மொத்தத் தொகை. கட்டிட தொழிலாளர்களுக்கு ஏது நிரந்தரமான முதலாளி. நிரந்தரமான முதலாளி இல்லாத போது எப்படி தொகை கொடுக்க முடியும். ஆகையால் ஈ. எஸ். ஐ. எப்படி அவர்களுக்கு அப்பிளிகபிள் ஆகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதில் உரையில் எனக்கு விளக்கம் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1984 அக்டோபர் 10] [திரு. அ. ரகுமான்கான்]

அது மட்டும் அல்ல, நான் இன்னும் ஒன்றையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே தொழிலாளர்களுடைய தொழில் பாதிக்கப்பட்டால் அதன் முன்னேற்றத்திற்கு அரசு கட்டிட தொழிலாளர்களுக்கு கடன் உதவி செய்கிறார்கள். அடுத்து இன்னும் ஒன்று, இங்கே அரசாங்கமே கட்டிட வேலை செய்கிறபோது தொழிலாளி இறந்து விட்டால் அல்லது 'டிஸ் ஏபிள்டு' அதாவது நிரந்தரமாக வேலை செய்ய முடியாதபடி ஆகிவிட்டால் அரசாங்கம் ரூ. 10,000 தருகிறது. ஆனால் இங்கே நம்முடைய மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்கள் மூலம் சொல்லப் பட்டு இருக்கிற உரையை நான் உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

For those who are not benefited by the above provision the Government has decided to provide for payment of Rs 10,000 as compensation from the Chief Minister's Relief Fund to the bereaved family. The building construction workers have to register themselves with the Labour Department on payment of Rs. 5 - to ge: the benefit of the scheme.

அதாவது, Workmen Compensation Act. என்ற சட்டத்திலே பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு தொகை பெற்றால் கூட அதை பெறுவதில் சிரமங்கள் இருக்கின்றன. ஆகையால் அந்த நடைமுறை சிரமத்தை குறைப்பதற்கு

For those who are not benefited by the above praovision the Gove nment has dec ded to provide for payment of Rs.10000 at compensation fiom :he Ch ef Ministers Relief Fund :o the bereaved family

என்று முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து கட்டிட தொழிலாளர்களுக்கு கட்டுமான பணியாளர்களுக்கு விபத்திற்கு உள்ளானால் 10,000 ரூபாய் வழங்கப்படும் ஆனால் தொழிலாளர்கள் தலைக்கு 5 ரூபாய் தரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏறத்தாழ தமிழ்நாட்டில் 1 லட்சத்து 25 ஆயிரம் கட்டிட தொழிலாளர்கள் இருக்கிறார்கள். தலைக்கு 5 ரூபாய் என்று சொன்னால் எவ்வளவு தொகை போடுகிறார்கள். அதை பாங்கியில் போட்டால் எவ்வளவு வட்டி வரும். ஆகவே இந்தத் தொகையை கொத்தனார் கட்டிடத் தொழிலாளர்களிடம் வாங்கி அவர்கள் என்றைக்கோ ஒரு நாள சிலர் இறந்தால், விபத்திற்கு உள்ளானால் அவர்களுக்கு நாங்கள் தொகை தருகிறோம் (மணியடிக்கப் பெற்றது) ஆகையால் நான் சொல்ல விரும்புகிறேன் கொத்தனார் கட்டிட தொழிலாளர்கள் 30 நாளும் சாவது இல்லை. ஆகவே அவர்களுடைய பணத்தை வாங்கியே அவர்

களுக்கு கொடுக்கக் கூடிய ஒரு திட்டம் என்று அறிவித்து இருக்கிறீர்களே தவிர நடைமுறை உண்டா? ஜி. ஓ. உண்டா? எத்தனை பேருக்கு கொடுத்து இருக்கிறீர்கள்? நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஆளுநர் அறிவிப்பாக இருக்கிறதே தவிர

The Government have decided

என்று தான் சொல்லியிருக்கிறார்களே தவிர நடைமுறையில் எத்தனை கொத்தனார்கள் இறந்து முதலமைச்சர் நிவாரண தொகை கொடுத்து இருக்கிறார்கள். தயவுசெய்து பட்டியலை சட்டசபையில் வையுங்கள் என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட வேண்டும் என்று நான் சொல்வதற்கு எவ்வளவு காரணங்கள் இருக்கிறது தெரியுமா? நேரத்தின் அருமை கருதி ஒன்று இரண்டை மட்டும் நான் சோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11.50).

உங்களையே எடுத்துக் கொள்ளுங்கள், நீங்கள் ஒரு வீடு கட்டுகிறீர்கள், ஆனால் எதற்காக அந்த வீடு கட்டப்படுகிறது என்றால், என்னுடைய குடும்பத்து உறுப்பினர்களுக்காகக் கட்டப்படுகிறது என்று நம்முடைய அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் ஒரு அறிக்கை விட்டு விட்டால் இந்தச் சட்டம் அந்த வீடு கட்டுகின்ற தொழிலாளர்களுக்குப் பயன் படாது. சொந்த உபயோகத்திற்காக, சொந்தக் குடும்பத்திற்காக, பேமிலி மெம்பர்ஸ்க்காக அந்த வீட்டைக் கட்டுகிறோம் என்று சொன்னால், அந்தக் காரணத்தைக் காட்டி அமைச்சரவர்கள் அறிக்கை வெளியிட்டு விட்டால் அந்த வீடு கட்டுவதற்காகப் பணியாற்றுகின்ற கட்டிடத் தொழிலாளர்கள் இருக்கிறார்களே அவர்கள் வயிற்றில் அடிக்கும் காரியம் இல்லையா இது? இந்தச் சட்டம் அவர்களுக்கு அமல் ஆகாது; இன்னொரு பிரிவிலே வேலை பார்ப்பவர்களுக்கு இந்தச் சட்டம் அமல் ஆகும். உண்மையிலேயே அது சொந்த உபயோகத்திற்காக என்று இருந்தாலும் கூடப் பரவாயில்லை; ஆனால் இந்தப் பிரிவுகளின் கீழ் நுழைந்து கொண்டு தொழிலாளர்களை ஏமாற்றுகின்ற நிலைமை ஏற்படும். சொந்த உபயோகத்திற்காக என்று பத்து மாடி வீடு கட்டினாலும், அரண்மனை போன்று கட்டினாலும், அதில் வேலை செய்கின்ற, அந்தக் கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்கின்ற, அந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்ற தொழிலாளர்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.





மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகம் இந்த அரசுக்கும் ஏற்பட்டது. உங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டது நியாயமானது தான். அதைப் போல இந்த அரசுக்கும் ஏற்பட்டது. அப்படி யாரும் தப்பித்துக் கொள்ளாமல் இருக்கத்தான் புதிதாக ஒரு திருத்தம் கொண்டு வந்திருப்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் படித்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவரவர்களே, திருத்தத்தைப் படிக்காமல் திருத்தம் சொல்லக் கூடாது என்பதற்காகத்தான் அதை நான் பார்த்தேன்.

"The Government may by notification"

அரசாங்கம் நோட்டிபிகேஷன் மூலமாக ஃபேமிலி பர்ப்பஸுக்காகத்தான் இந்தக் கட்டிடம் அல்லது இந்த வீடு கட்டப்படுகிறது என்று அறிவித்து விட்டால் அதில் வேலை பார்க்கின்ற தொழிலாளர்களுக்கு இந்தச் சட்டம் அமல் ஆகுமா, ஆகாதா? இதற்கு விளக்கம் தேவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இவைகளையெல்லாம் மனத்திலே வைத்துக் கொண்டு Rule making powers வரும் பொழுது அதில் தெளிவாக அறிவிக்கப்படும். எக்ஸ்ப்ளனேஷனை நீங்கள் நன்றாகப் பார்த்திருப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. படித்திருக்கிறீர்கள். இதைப் பற்றிய விவரங்கள் Rule making powers வரும் பொழுது, ரூலில்—விதிகளில் வரும்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவரவர்களே, தொழிலாளர் நல மந்திரியாக இருப்பவரிடத்திலேயிருந்து இதைப் போன்ற பதிலை நான் எதிர் பார்க்கவில்லை. இப்பொழுதே இதற்கு ஏற்பாடு செய்து இதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யலாமே, கொள்கை அடிப்படையில் சொல்லலாமே. இதிலே எங்கே ரூல்ஸ் விவகாரம் வரப் போகிறது? தொழிலாளர்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கிறீர்கள். கட்டிடம் அல்லது வீடு கட்டுகின்ற தொழிலாளர்களில் ஒரு பிரிவினருக்கு இந்தச் சட்டத்தினால் எந்தப் பலனும் கிடையாது; மற்றொரு பிரிவினருக்கு இந்தச் சட்டத்தினால் பலன் உண்டு என்று தொழிலாளர் வர்க்கத்தையே இரண்டு பிரிவாகப் பிரிக்கப் பார்க்கிறீர்களே, இது நல்லதா? இதற்குப் பெயர் தொழிலாளர் விரோதமா இல்லையா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அருமைச் சகோதரர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள், உங்களுக்குத் தெரியும், கம்யூனிஸ்ட் கட்சி என்றால், தாங்கள் சொல்வதுதான் சரி, வேறு யார் சொன்னாலும் சரி அல்ல என்று நினைப்பவர்கள், அவர்களே ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு இலட்சம் ரூபாய்க்குக் கீழே உள்ள வீடுகளுக்கு இந்தச் சட்டம் பொருந்தக் கூடாது என்று திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை உங்களுடைய ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறேன்.
It is a complicated and compl.x problem அதற்காகத்தான் இதைப் பற்றி ஆலோசித்து விதிகளை நிர்ணயிக்கின்றபொழுது செய்யலாம் என்று எண்ணி, இப்படிப்பட்ட திருத்தத்தை அரசு கொண்டு வந்திருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, உறுப்பினர்களுடைய கருத்துக்களை மதிப்பவர்கள் நாங்கள். அதில் எந்தவிதமான வேறுபாடும் கிடையாது.

கிராமங்களிலே வேலை செய்பவர்கள் யார் ? கட்டடங்கள் அல்லது வீடுகளில் வேலை பார்க்கின்ற கட்டிடத் தொழிலாளர்கள் கட்டிடக் கொத்தனார்கள் தானே, அவர்களுக்கு இந்தச் சட்டத்தில் என்ன பலன் இருக்கிறது ? ஆயிரக்கணக்கான கிராமங்களில் வீடு கட்டுகின்ற தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இந்தச் சட்டத்தினால் பலன் உண்டா ? 14 மாடி அல்லது 20 மாடிக் கட்டிடங்கள், அரண்மனை போன்ற கட்டிடங்கள், பங்களாக்கள் போன்ற கட்டிடங்கள் பெரிய நகரங்களில் கட்டப்படலாம். ஆனால் ஆயிரக்கணக்கான கிராமங்களிலே வீடுகளைத் தொழிலாளர்கள் கட்டுகிறார்களே அவர்களுக்கு இந்த உரிமை அல்லது இந்தச் சட்டத்தின் சலுகை கிடையாது என்று சொல்வது அவ்வளவு சரியல்ல என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்றையும் உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நீங்கள் ஒரு வீடு கட்டுவதாக வைத்துக் கொள்ளுங்கள். பெரிய காம்பவுண்ட் சுவர் இருக்கிறதே, அதுவும் வேலை தான் ; பாத்ரூம் இருக்கிறதே, அதுவும் வேலைதான் ; பெட் ரூம் இருக்கிறதே, அதுவும் பணிதான். ஆனால் நம்முடைய அமைச்சரவர்கள் உத்தரவு போடுவார்கள், எப்படி ? காம்பவுண்ட் பணி தனியானது, பாத் ரூம் வேலை தனியானது, பெட் ரூம் வேலை தனியானது என்று உத்தரவு போட்டு விட்டால் இந்தச் சட்டம் செல்லாது. நான் உங்களைக் கேட்கிறேன், இவைகளெல்லாம் மொத்தமான பணி அல்லவா ? காம்பவுண்ட் பணி தனிப் பணியா ? காம்பவுண்ட் கட்டுவதாக இருந்தால்............





மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதுவல்ல அர்த்தம்............

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிலாளர் நலனிலே அக்கறை உள்ளவர்கள். தொழிலாளியாகவே எப்போதும் இருக்க விரும்புகிறவர்கள். ஆகவே தொழிலாளர்களைப் பற்றிப் பேசுகின்றபோது சில விளக்கங்களைக் கொடுக்கக் கடமைப்பட்டு இருக்கிறார்கள். அதற்கு முயற்சிக்கிறார். ஆனாலும் என்ன செய்வது ? பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகச் சொல்ல விரும்புகிறேன், அதாவது அவர்கள் சொல்கின்ற சட்டங்களிலே உள்ள சில குறைபாடுகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அதற்கெல்லாம் அவர்கள் இறுதியிலே பதில் சொல்லட்டும். ஒருவருடைய பணியைத் தனித் தனியாகவும் சொல்லலாம் ; மொத்தப் பணியாகவும் அறிவிக்கலாம் ; அப்படி தனித்தனியாக அறிவித்து விட்டால் இந்தச் சட்டம் செல்லாது. எனவே மொத்தப் பணியாகத்தான் அறிவிக்க வேண்டும். தனித்தனியாக இருந்தாலும் மொத்தப் பணி என்று தான் சொல்ல வேண்டும். மொத்தப் பணிகளைத் தனித்தனி பணி என்று சொல்வதால் கட்டிடத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதன் காரணத்தால் இந்தச் சட்டம் அமலுக்கு வராத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்திலே முக்கியமான பிரச்சினை என்னவென்று கேட்டால் முக்கியமான ஒரு தகவலைச் சொல்லி இருக்கிறார்கள். பெண் பணியாளர்களுக்குப் பிரசவ சூழ்நிலை ஏற்பட்டு, அவ்வாறு பிரசவம் ஆகி 6 வார காலத்திற்குப் பிறகுதான் அவர்களை வேலைக்கு வைக்கவேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கின்றது. பெண்கள் பிரசவம் ஆகி 6 வார காலத்திற்குள் அவர்களை வேலைக்கு அமர்த்தக்கூடாது என்று நீங்கள் சொல்வது தாய்க்குலத்தின் மீது நீங்கள் அக்கறை கொண்டு செய்திருக்கக் கூடிய நல்ல காரியம் தான். அதை வரவேற்கிறேன். ஆனால் கட்டிடத் தொழிலிலே ஈடுபடுகின்ற பெண்கள் ஏழை எளியவர்கள்தானே. அப்படியானால் 6 வார காலம் அவர்களுக்கு வேலையில்லாதபோது அவர்களுக்கு ஏதாவது இந்தச் சர்க்கார் நிவாரணம் கொடுக்கலாமே, உதவிகள் கொடுக்கலாமே.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் பேச்சிலே நான் குறுக்கிடக் கூடாது என்று தான் இருந்தேன். மெட்டர்னிட்டி பெனிபிட் ஆக்ட் இதற்கு அப்ளிக்கபிள் என்று இதில் இருப்பதைப் பாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மெட்டர்னிட்டி ஆக்ட் இதற்கு அப்ளிக்கபிள், இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட் ஆக்ட் அப்ளிக்கபிள், வேஜஸ் ஆக்ட் அப்ளிக்கபிள் மேலும் எல்லாச் சட்டங்களும் இதற்குப் பொருத்தமுடையது என்று சொல்கிறார். நான் அவரைப் பார்த்துக் கேட்கிறேன். மெட்டர்னிட்டி பெனிபிட் ஆக்ட் இதற்கு அப்ளிக்கப்பிள் என்று சொன்னாலும் சொல்லுகின்ற பொருத்தம் எந்த அடிப்படையில் என்பதைப் பார்க்க வேண்டும். ஈ.எஸ்.ஐ. பெனிபிட்டிலே வருகின்ற சிக்கல் போல் இதிலேயும் சிக்கல் வரக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. ஓர்க்மென்ஸ் காம்பென்சேஷன் ஆக்ட் அப்ளிக்கபிள் என்று சொன்னார்கள். பிறகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 5 ஆயிரம் ரூபாய், 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கக் கூடிய திட்டத்தை ஏன் கொண்டு வர வேண்டும் ? இறந்து போனால் ஓர்க்ஸ்மென்ஸ் காம்பென்சேஷன் ஆக்ட் அப்ளிக்கபிள் என்று சொல்லிவிட்டு பிறகு ஏன் தனியாக ஒரு திட்டம் கொண்டு வர வேண்டும் ? எனவே மெட்டர்னிட்டி ஆக்டினுடைய பெனிபிட் அவர்களுக்கு இருந்தாலும் கூட அவர்களுக்கு ஒரு உதவித் தொகை கொடுக்கக் கூடாதா ? ராஜ நர்த்தகிக்கு 1,500 ரூபாய் மாதம் கொடுக்கவில்லையா ? பல புலவர்களுக்கு மாதம் 1,500 ரூபாய் கொடுக்கவில்லையா ? சீர்காழி கோவிந்தராஜனுக்கு மாதம் 1,500 ரூபாய் கொடுக்கவில்லையா ? வைஜயந்திமாலாவிற்கு மாதம் 1,500 ரூபாய் கொடுக்கவில்லையா ? அவையெல்லாம் மக்களுடைய வரிப்பணம் தானே. அது போல் கொத்தனார் வேலை செய்யும் ஏழைப் பெண்ணுக்குக் கொடுத்தால் குடியா மூழுகி விடும் ? ஆகவே மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தொழிலாளர் விரோத அமைச்சர் போல் சட்டம் பேசக் கூடாது. கருணை அடிப்படையில் கட்டிடத் தொழிலாளப் பெண்களுக்கு அந்தத் தொகையைத் தர வேண்டும் என்று உங்கள் மூலமாக அவர்கள் சார்பாக வாதாடி, வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றே ஒன்று சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் சட்டம் படித்தவர்கள். நீதிமன்றங்களில் தொழிலாளர்களுக்கான பல்வேறுவழக்குகளில் பங்கேற்றுப்பார்த்தவர்கள். சிறந்த வழக்குகள் பற்றி அவருக்குத் தெரியும். சட்டங்களின் அடிப்படைகளும் அவர்களுக்குத் தெரியும். தொழில் அதிபர்களைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கத்திற்குச் சட்டம் கொணடுவர அதிகாரம் இருக்கின்றதா இல்லையா என்று நான் கேட்கிறேன். அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் 'டு எனேபிள்' என்ற வகையில் அதாவது சட்டத்தை உண்டாக்க, இந்த விதியைக் கொண்டுவர சர்க்காருக்கு அதிகாரம் வேண்டும் என்று கேட்கிறார். உதாரணமாக ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். காயம் அடைந்த பணியாளர்களுக்கு முதல் உதவி சிகிச்சை அளித்தே தீர வேண்டும் என்று சட்டத்தில் இருக்கின்றதா இல்லையா? அப்படிச் செய்வதற்கு விதி வகுக்கலாம் என்





போடப்பட்டிருக்கின்றது. உதாரணமாக ஒரு இடத்திலே தண்ணீர் நிறைய இருக்கின்றது என்றால் அந்தத் தண்ணீரைத் தாண்டிக் கட்டிடத் தொழிலாளர்கள் வேலைக்குப் போகவேண்டும் என்றால் அவர்களை அழைத்துப் போகின்ற முதலாளி அந்தத் தொழிலாளர்களைப் பாதுகாப்பாக, தண்ணீரில் மூழ்கிவிடாத அளவுக்குக் கொண்டு போக வேண்டும். நான் கேட்கிறேன். தண்ணீரைக் கடந்து போகின்ற தொழிலாளர்கள் பாதுகாப்பாகப் போகவேண்டும். அவர்கள் தண்ணீரில் மூழ்கிவிடாத அளவுக்குத் தொழில் அதிபர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் விதி செய்யலாம் என்றிருக்கின்றது. நான் கேட்கிறேன், தண்ணீரில் மூழ்கி செத்ததற்குப் பிறகு உங்கள் விதி என்ன செய்யப்போகிறது ? இந்த மாதிரி பல உத்தரவுகளைப் போட்டிருக்கிறீர்கள்.

(நண்பகல் 12–00)

அதோடு மட்டுமல்லாமல் நான் இதிலே தெரிவிக்க விரும்புவது விபத்து ஏற்பட்டாலும் சரி, இந்தச் சட்டத்தின் அடிப்படையில் முதலாளி மீறினாலும் சரி, நீதிமன்ற விசாரணை இருக்கிறது அல்லவா, அது, அரசாங்கம் நியமிக்கக்கூடிய அதிகாரி—ஆய்வாளர் புகார் மனு கொடுத்தால்தான் விசாரிக்கப்படும். இவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய சட்டத்தை மீறியதற்கு, 3 மாதம் ஜெயில், ரூ. 2,000 அபராதம். ஆனால் புகார் கொடுப்பது கொத்தனார் அல்ல; புகார் கொடுப்பது கட்டிடத் தொழிலாளி அல்ல; சர்க்கார் அல்ல; யார் புகார் கொடுக்க வேண்டுமென்றால் அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களாலே நியமிக்கப்படுகிற ஆய்வாளர் இருக்கிறாரே அந்த ஆய்வாளர் புகார் கொடுத்தால் தான் விசாரிக்கப்படும். அந்தக் கட்டிடத் தொழிலாளியை வேலை வாங்குகிற முதலாளி, அந்த ஆய்வாளரைக் கவனிக்க வேண்டிய விதத்தில் கவனித்தால், அவர் புகார் கொடுக்க மாட்டார், பாதுகாப்பு உண்டா ? ஆகவே, இந்தச் சட்டம் பயங்கரமானது தொழிலாளர்களுக்கு விரோதமான சட்டம். ஆகையினாலே தொழிலாளர் நல மந்திரி அல்ல ; தொழிலாளர் விரோத மந்திரி இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற்று இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டிடத் தொழிலாளர் நலனுக்கான இந்தச் சட்டம் மிகவும் முக்கியமான சட்டம். தமிழ்நாட்டிலே ஏறத்தாழ 25 இலட்சத்திற்கு மேற்பட்ட கட்டிடத் தொழிலாளர்கள் இருந்து வருகிறார்கள். ஒரு நிரந்தரமான முதலாளியோ அல்லது நிரந்தரமான பணியிடமோ இல்லாத ஒரு தொழில் இது. அன்ஆர்கனைஸ்ட் லேபர் என்று சொல்லப்படுகிற இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற இலட்சக் கணக்கான தொழிலாளர்களின் நலனை மனதிலே கொண்டு இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்பதை நான்தான் வருத்தத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. ப. நெடுமாறன்] 1984 அக்டோபர் 10

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அமைச்சர் அவர்கள் இங்கே அவர்களுடைய விளக்க உரையிலே எவ்வளவு சொன்னாலுங்கூட, இந்தச் சட்டத்திற்குள்ளே நான் அலசி ஆராய்ந்து பார்த்தால், அந்தத் தொழிலாளிக்கு உண்மையிலேயே இந்தச் சட்டத்தினால் ஏந்தவிதமான பாது காப்பும் இல்லையென்பதைத்தான் நான் மீண்டும் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இதிலே கட்டிடத் தொழிலாளர்களுக்குப் பணி அளிக்கின்ற கான்ட்ராக்டர்களைப் பற்றி போதுமான குறிப்பு இல்லை. கன்ஸ்ட்ரக்ஷன்--கான்ட்ராக்டர், ரிஜிஸ்தர் ஒன்று வைத்தால் தான் யார் தொழிலாளிக்கு அளிக்க வேண்டியதை அளிக்க வில்லையென்பதை நாம் உணர்ந்து அவர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் அவர்கள் ரிஜிஸ்தர் வைப்பதற்கான குறிப்பு எதுவும் இந்தச் சட்டத்தில் இல்லை.

அதைப் போலவே, இந்தச் சட்டத்திலே பிரிவு 1 (4) ல் கட்டிட நிறுவனங்கள் வகைப்படுத்தப் பட்டிருக்கின்றன. அப்படி வகைப் படுத்தி மற்ற விவரங்கள் எல்லாம் அதிலே சொல்லப்பட்டிருக்கின்றன. மற்ற உறுப்பினர்கள் அதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே, நான் அந்த விவரத்திற்குள் போகாமல் சொல்கிறேன். கட்டுமானப் பணியிலே அபாயமானது, அபாயம் இல்லாதது என்று இல்லை. கட்டடத் தொழிலாளியின் பேரனாக இருக்கிற நம்முடைய அமைச்சர் அவர்கள் சட்டடத் தொழிலிலே எது அபாயம் கொண்டது, எது அபாயம் இல்லாதது என்று எப்படி வரையறுக்க முடியும் என்று சொல்ல வேண்டும். எந்தத் தொழிலிலும் அபாயம இருக்கிறது. ஆனால், நீங்கள் அபாயம் இல்லை என்று சொல்லி, அபாயம் இல்லாத தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு எல்லாம் நஷ்டஈடு போன்றவைகள் எல்லாம் இல்லை என்று சொல்வார்களானால் இந்த ஓட்டையைப் பயன்படுத்திக் கொண்டு தொழிலாளிக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியதை நிச்சயமாக மறுப்பார்கள் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாற்றுத் தலைவரவர் களே, அபாயமானது, அபாயம் இல்லாதது என்று பிரித்திருப்பது எண்ணிக்கைக்குத்தான். அபாயம் உள்ள தொழிலில் ஒருவர் வேலை செய்தாலும் இந்த ஆக்ட் அப்ளை ஆகும். அபாயம் இல்லா ததில் 50 என்று இருக்கிறது. அதை 20 ஆகக் குறைக்கலாம என்று அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்று நேற்றே சொன்னேன்.

திரு. ப. நெடுமாறன்: இதிலே அபாயம் இல்லாத தொழில் எது என்பதை அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கமாகச் சொல்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன். கட்டிடத் தொழிலிலே ஆரம்பத்திலிருந்து முடிவு வரை எல்லாமே அபாயம்



1984 அக்டோபர் 10] [திரு. ப. நெடுமாறன்]

நிறைந்தது. ஆகவே, அபாயம் இல்லாதது, அபாயம நிறைந்தது
என்று பிரித்திருப்பது எல்லா வகையிலும் தவறானது. அதைப்
போலவே இந்தச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு எச் பகுதியில்
நிறுவனம் என்பதில் எது, எது அடங்காது என்பதற்கு ஒரு
பட்டியல் இங்கே அளிக்கப்பட்டிருக்கிறது. அதாவது மத்திய
அரசின் அதிகாரத்திற்குட்பட்ட, மத்திய அரசால் நடத்தப்
படுகிற எல்லாத் தொழில்களும், அதைப் போலவே
ரெயில்வே, விமான தளங்கள், பெரிய துறைமுகங்கள், வங்கிகள்,
இன்ஷூரன்ஸ் இதுபோன்ற எல்லாமே விதிவிலக்கு அளிக்கப்பட்
டிருக்கின்றன. கட்டிடத் தொழிலிலே மிகப் பெரும்பான்மையான
தொழிலை அளிக்கக்கூடியவை மத்திய அரசும், மத்திய அரசு
நிறுவனங்களும்தான். இன்றைக்கு தமிழகத்திலே 25 லட்சத்
திற்கு மேற்பட்ட கட்டிடத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்
என்றால், குறைந்தபட்சம் அதிலே பாதி பேர்களுக்கு மேலே
மத்திய அரசு அல்லது அதனைச் சார்ந்த அமைப்புகளிலே
கட்டப்படுகின்ற கட்டிடங்களிலே வேலை செய்கிறவர்கள்தான்.
இவர்களுக்கு எல்லாம் இந்தச் சட்டம் பொருந்தாது என்று
சொன்னால் பிறகு யாருக்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்
படுகிறது? எதற்காக மத்திய அரசு நிறுவனங்களுக்கு மத்திய
அரசு அமைப்புகளிலே கட்டப்படுகிற கட்டிடங்களுக்கு இதிலிருந்து
விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள்
தன்னுடைய உரையிலே தெளிவாக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். ஆகவே இந்த பிரிவு 2 (எச்) என்று இருக்கக்
கூடியது பூராவையும் அடியோடு இந்தச் சட்டத்திலிருந்து நீக்க
வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

அதேபோல, பிரிவு 39. அதைப்பற்றி முன்னாலே பேசிய
பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். சொந்த அனுபவத்
திற்கு கட்டப்படுகிற அல்லது தன்னுடைய குடும்ப அனுபவத்
திற்கு கட்டப்படுகிற கட்டிடங்களுக்கு இதிலேயிருந்து விதிவிலக்கு
என்று சொன்னார்கள். இது எந்த வகையிலும் சரியல்ல. 50
லட்சம் அல்லது ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள கட்டிடங்
களைக் கூட சிலர் தங்களின் சொந்த அனுபவத்திற்கு கட்டு
கிறார்கள். அதிலே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை
பார்க்க வேண்டிய அவசியமிருக்கிறது. அவர்கள் எல்லாம் இந்தச்
சட்டத்தின் கீழ் வரமாட்டார்கள் என்று சொல்வது நியாயமில்லை
ஆகவே இந்தப் பிரிவை அடியோடு நீக்க வேண்டுமென்று
வற்புறுத்த விரும்புகிறேன்.

அதைப் போலவே விபத்திலே இறப்பவர்களுக்கு அளிக்கப்
படுகிற நஷ்டயீட்டைப் பற்றியும் மற்ற உறுப்பினர்கள் இங்கே
சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். 1984 ஆம் ஆண்டு நிதிநிலை
அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபோது அந்தக் கூட்ட தொடரின்
துவக்கத்தில் ஆளுநர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள்.
கட்டிடத் தொழிலாளர்கள் விபத்தில் இறந்தால் தமிழக
முதல்வர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் பத்தாயிரம் இழப்

பீட்டுத் தொகை வழங்கப்படும். என்று கூறினார்கள். இதைப் பற்றி அரசு தரப்பிலே என்ன விளக்கம் அளிக்கப்பட்டது என்று சொன்னால், ஒவ்வொரு கட்டிடத் தொழிலாளியும், ஒவ்வொரு மாதமும் 5 ரூபாய் தொடர்ந்து கட்டினால் அதன்பிறகு அவன் விபத்திலே இறப்பானேயானால் அவனுக்கு 10 ஆயிரம் அளிக்கப்படும். இந்த ரூபாய் கட்டாத தொழிலாளர்களுக்கு இந்த உதவி இல்லையென்று அரசாங்கத் தரப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. இது சரியல்ல. மாதம் 5 ரூபாய் வீதம் 25 லட்சம் தொழிலாளர்கள் கட்டினால் கிட்டதட்ட 1¼ கோடி ரூபாய் கிடைக்கிறது. இந்த 1¼ கோடி ரூபாய்க்கு ஒரு மாத வட்டி மட்டுமே 18 லட்சம் ரூபாய் ஆகிறது. சாதாரணமாக தமிழ் நாட்டிலே விபத்திலே சிக்கி இறக்கிற கட்டிடத் தொழிலாளர்கள் 100 பேர்களுக்கு மேலே இருக்க மாட்டார்கள். அப்படியானால் அரசாங்கம் 10 லட்சம் ரூபாய் மட்டுமே அளிக்க வேண்டிவரும். தொழிலாளர்கள் அளிக்கிற 1¼ கோடி ரூபாயிலிருந்து ஒவ்வொரு மாதமும் கிடைக்கிற 18 லட்சம் ரூபாய் வட்டியிலிருந்து நீங்கள் 100 பேர்கள் இறந்து போனால் 10 லட்சம் மட்டுமே அளிப்பீர்கள ஒரு ஆண்டுக்கு இந்தத் தொகை என்பது எவ்வளவு வரும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே அரசாங்கம ஒவ்வொரு மாதமும் 5 ரூபாய் வாங்குகிற இந்த முறையை நிறுத்தி விட்டு, மொத்தத்திலே 5 ரூபாய் என்ற ரீதியிலே வாங்க வேண்டுமென்று இங்கே வற்புறுத்த விரும்புகிறேன்.

இன்னொன்று. இன்றைக்கு மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் சொந்தமாக வீடு கட்டுகிறார்கள். எங்கேயாவது வங்கியிலே இன்ஷூரன்ஸ் கம்பெனியிலே அல்லது வேறு எங்கேயாவது கடன் வாங்கித்தான் அவர்கள் வீடுகளைக் கட்டுகிறார்கள். இப்படி வீடு கட்டுவதற்கு ஆரம்பிப்பார்களானால் முதலில் இன்ஷூர் செய்யவேண்டுமென்று அவர்களை வற்புறுத்த வேண்டும். அதற்கான வழிவகைகளை இந்தச் சட்டத்திலே செய்திருக்க வேண்டும் அப்படி இன்ஷூர் செய்தால் தான் அந்தக் கட்டிடத்தில் விபத்தில் சிக்கி ஒரு தொழிலாளி இறந்தால் அந்தத் தொழிலாளிக்கு இன்ஷூரன்ஸ் கம்பெனி நஷ்டயீடு கொடுக்கும். சிறிய தொகையை வைத்து வீடு கட்டுபவர்களுக்கும் நிச்சயமாக நஷ்டஈடு கிடைக்கும். இல்லையென்று சொன்னால் சாதாரண மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் வீடு கட்டுகிற போது தொழிலாளி இறந்துபோனால் அவர்களால் நஷ்டஈடு கொடுக்க முடியாது. இந்த நிலையில் தொழிலாளிக்கும் கஷ்டம், வீடு கட்டுகிறவர்களுக்கும் கஷ்டம். ஆகவே, யார் வீடு கட்டுவதாக இருந்தாலும் அவர்கள் முதலில் இன்ஷூர் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தும் வகையிலே இந்தச் சட்டத்திலே வழிவகை செய்ய வேண்டும் என்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.





(பிற்பகல் 12-10).

நம்முடைய அமைச்சர் அவர்கள் தான் ஒரு கட்டிடத் தொழிலாளியின் பேரன் என்று சொன்னார்கள். அதற்கும் மேலாக அவர் ஒரு நல்ல தொழிற்சங்கவாதி. ஆனால் இந்தச் சட்டத்திலே, பார்த்தால் இந்த இரண்டும் பிரதிபலிக்கவில்லை. ஒரு கட்டிடத் தொழிலாளியின் பேரனாக இருந்து இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது என்றால், அவர் பாட்டனார் உயிரோடு இருந்து இருந்தால், இதை அவர் பார்த்து இருந்தால் நிச்சயமாக அவரைசபித்து இருப்பார் என்பதில் ஆட்சேபணை இல்லை. இப்படி ஒரு சட்டம் கொண்டு வருவதற்காகவா நீ அமைச்சரானாய் என்று நிச்சயமாக அவர் பாட்டனார் இருந்து இருந்தால் கேட்டு இருப்பார். ஆகவே, பாட்டனாரின் சாபத்திற்கு ஆளாகவேண்டிய நிலைமை நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு வந்து விட்டது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. ஆகவே, எங்களுக்காக என்று இல்லாவிட்டாலும், தமிழ் நாட்டில் உள்ள லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு என்று இல்லாவிட்டாலும், அவர்களுடைய பாட்டனாருக்காகவாவது இந்தச் சட்டத்தில் உள்ள ஓட்டை உடைசல்களை அடைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறத்திலே சொல்வார்கள் — ஒப்புக்காக அழுவது என்று. அப்படி ஒப்புக்காக அழுகிற வேலையை நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தின் மூலம் அதிகமாக வெளியிட்டு இருக்கிறார்கள். இல்லாததை இருப்பதுபோல் காட்டுவதால் எந்தவிதமான பலனும் இல்லை. இந்த நேரத்தில் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்த மதிப்பிற்குரிய திரு. கிருஷ்ணய்யர் அவர்கள் கூறியுள்ள கருத்தை நினைவுகூற விரும்புகிறேன்.

"....that is what Law does and all laws which talks tall but acts small becomes paper tigers."

அந்த வாசகங்கள் இந்தச் சட்டத்திற்குச் சரியாக பொருந்தக் கூடியது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அவரைச் சார்ந்து இருக்கும் கட்சி உறுப்பினர்களும் இந்தச் சட்டத்தைப் பற்றி எவ்வளவு பெரிதாகப் பேசினாலும் கூட, இந்தச் சட்டத்திலே எதுவும் இல்லை, ஆகவே, இது ஒரு பேப்பர் டைகர் என்ற முறையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறீர்கள். இந்தச் சட்டத்தைப் பற்றி முழுவதுமாகப் பரிசீலனை செய்யவும், அதிலே உள்ள ஓட்டை உடைசல்களையும் அடைக்கும் வகையில் இதை ஆய்வுக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டு, அதை வற்புறுத்தி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

*Thiru T. Venkata Reddy : Hon'ble Chairman, Sir, I first of all congratulate our Hon'ble Minister for having brought this Act with the laudable idea of protecting the un-organised labourers in the State. We know that in our State a majority of the labourers are un-organised

The most exploited class by the contractors are only the building workers and those who are engaged in other activities connected with the building construction. With a laudable idea of protecting them this Act has been brought. But if we go through the provisions of this Act, I am afraid we may not be able to protect them at all.

For instance, if we take up Clause 1 (4) it reads as "the persons who engage less than 50 persons are exempted under this Act." We know as a matter of fact, the Contractors will only employ less than 50 persons and cheat the Government and the provisions of this Act. Most of the Contractors who were the beneficiaries hitherto will also show dubious figures in the Registers and show that the employees under them are only less than 50. This will only help the Contractors and the employers and not the workers. I request the Hon'ble Minister to delete that portion of this Act. Otherwise, the very attitude for which the Government have brought this Act, i.e., to help the un-organised sector will be lost.

I request the Hon'ble Minister to go through the Definition Clause regarding the words "work" and "worker". It reads as "work" means a work of building construction or a work of engineering construction". This will not include the brick-making, stone-cutting and the jelly making. We know that for any building construction as a matter of fact, the brick and jelly and the stones are the most essential and primary need. Those are the raw-materials, for building construction or work of engineering construction. But those workers who are engaged in this work are not attracted by this Act. The definition for the words "work" and "worker" should be made more comprehensive to attract these workers also under this Act. This Act must include the primary labourers who are engaged in brick making, stone-cutting and jelly making. They must be brought within the purview of this Act. If they are not brought under the purview of this Act, 50 per cent of the workers will not come under the purview of this Act. I therefore request the Hon'ble Minister to make the definition of the words 'work" and "worker" more comprehensive to bring all the primary workers who are engaged in the construction work.

In Chapter II, the Bill provides for the constitution of an 'Advisory Board'. The Advisory Board will not have the power to enforce the Act. If the Advisory Board is constituted without any power to push through their advise to benefit the workers it will remain only as a paper Advisory Board. The State Advisory Board must be vested with the power to enforce the provisions of this Act.



Clause 39 of this Act provides for exemption of the construction of buildings intended for self-occupation of the persons who carries on such building construction for the occupation of the members of his family. This is also a wrong notion, which the Minister has in his mind. For any construction of a building there must be some persons some labourers to be engaged. Whether it is a own building, or a building for rent or for construction of a factory, the person who owns the building must employ certain masons, coolies and certain other people. The person who would like to dwell in the house cannot engage his own men for construction work. As a person if I want to construct a building I cannot construct the house myself or employ my sons or children. I necessarily require the assistance of a Contractor, Carpenter and other workers.

(பிற்பகல் 12-20)

So if that provision is taken away, the employer will only give a declaration to the Government that he is constructing a house for his own, though, later on, he may lease it out for purposes of rent. That provision must be deleted from this Act, as otherwise many buildings will come up, on the ground that they are meant for own use. As a matter of fact we know that loans are given by the Land Development Societies and House Mortgage Societies. We have to get a declaration from the persons seeking loans that they are constructing houses for their own use. But unfortunately, loans are given to the persons who construct houses for giving them on lease or for letting them out for rent. Though necessary provisions are there, they are more often misused. So when you make a provision with a lacuna therein, it is more likely the peolpe will misuse the provision. The Bill is a very complicated and hazardous one. I therefore request the Hon'ble Minister to make the Bill more comprehensive without any lacuna, as otherwise very laudable object of protecting the unorganised labour will not be achieved by this Act. Therefore I request the Hon'ble Minister to go through the provisions of this Act once again and have a Committee consisting of persons who can give their valuable suggestions, so as to make this Bill a comprehensive one without any lacuna therein. So that the people who have been deprived of the benefits under this Act will enjoy the same. There would also be no exploitation by the contractors and employers etc. I request the Hon. minister to send this Bill to a Select Committee, to make it a comprehensive Bill and also to enable the unorganised labour to have better and more facilities under this Act. Thank you.

[1984 அக்டோபர் 10

*திரு. இ. சட்டநாத கரையாளர் : மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் ஒரு தனிச் சிறப்பு பெற்ற
சட்டமாகும். இதைப்போன்ற ஒரு சட்டம் எந்த மாநிலத்திலும்
இதுவரையில் கொண்டுவரப்படவில்லை. மகாராஷ்டிரத்தில்
இதோடு ஓரளவு ஒப்பிடக் கூடிய ஒரு சட்டம் உள்ளது. ஜனதா
அரசு மத்தியிலே இருந்த காலத்தில் திரு ரவீந்திர வர்மா அவர்கள்
ஒருநகல் சட்டம் கொண்டுவந்தார்கள். அதன்மீது தொழிற்சங்கங்
களை அழைத்து விவாதம் நடந்துள்ளது. ஆனால் அது மன்றத்
திற்கு வராமல் போய்விட்டது. இந்த அவையிலே இப்படி ஒரு
சட்டம் வேண்டுமென்று நான் கேட்ட நேரத்திலே மாண்புமிகு
தொழிலாளர் நல அமைச்சரவர்கள் மத்திய அரசு ஒரு சட்டம்
கொண்டுவரும் அப்படி கொண்டுவரவில்லையாயின் நானே
கொண்டு வருவேன் என்று சொன்னார்கள். அந்த வாக்குறுதியை
காக்கும் முறையிலே இன்று ஒரு சட்டம் கொண்டுவநதமைக்கு
நான் அவரைப் பாராட்டுகிறேன். இந்தச் சட்டம் அசாதாரண
மான சட்டம் என்று சொன்னார்கள். 'இட் இஸ் எ நாவல் என்-
அக்ட்மெண்டு. ஏனெனில் அன்-ஆர்கனைஸ்டு செக்டாரில் தொழி
லாளிகள் இந்த நாட்டிலே பல தரமாக இருக்கிறார்கள். ஆனால்
அதிலே கட்டிடத் தொழிலாளிகள் தனி ரகம். அவர்களுக்கு
நிரந்தரமான முதலாளி கிடையாது. வேலை செய்ய நிரந்தர
மான ஒரு இடம் கிடையாது. அன்-ஆர்கனைஸ்டு செக்டாரிலே,
இதர தொழிலாளிகளுக்கு ஓர் இடம் இருக்கும், அல்லது நிரந்தர
முதலாளி இருப்பார்கள். லோடிங் அண்டு அன்-லோடிங் தொழி
லாளிகளைப்போல. ஆனால் இவர்கள் எந்த நிலைமையிலும் வரா
தவர்கள் சென்னையிலே வேலை செய்யக்கூடிய ஒருவர் நாளைக்கு
சேலத்திற்குச் செல்லலாம். கோவைக்குச் செல்லலாம். இன்று ஒரு
முதலாளியிடம் வேலை செய்யலாம். நாளை வேறு ஒரு முதலாளி
யிடம் இருந்துவிட்டு சில நாட்களிலே மீண்டும் மாறலாம். அப்படிப்
பட்டவர்களுக்கு எல்லாம் ஒரு சட்டம் கொண்டு வந்து பாது
காப்புக் கொடுப்பது என்பது மிகவும் கடினமான காரியம்.

சென்னை சர்வகலாசாலை நடத்திய ஒரு சர்வேயில் தமிழ்
நாட்டிலே 25 லட்சம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்றும்
அவர்களுக்கு உதவியாக, பில்டிங் கன்ஸ்ட்ரக்சனுக்கு, மெட்டி
ரியல்ஸ் சப்ளை செய்யக் கூடிய வேலையைச் செய்யக்கூடியவர்கள்
ஒரு 10 லட்சம் பேர்கள் இருப்பார்கள் என்றும் சொல்லியிருக்
கிறார்கள். இந்தப் புள்ளிவிவரத்தைப் பார்த்தால், இந்தச் சட்ட
அடிப்படையிலே பாதுகாப்பைப் பெறக்கூடிய தொழிலாளர்
கள் எவ்வளவு பேர்கள் என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.
நான் அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்
கிறேன். எல்லா தொழிலாளர்களுக்கும் பாதுகாப்புக் கிடைக்கக்
கூடிய முறையிலே இதிலே என்னென்ன திருத்தங்கள் செய்ய
வேண்டுமோ, அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான்
கேட்டுக் கொள்கிறேன். கிராமத்திலே வேலை செய்யக்கூடிய
ஒரு சிறு கட்டிடத் தொழிலாளியாக இருந்தாலும், கொத்





தனாராக இருந்தாலும், அவர்களுக்கும் இந்தச் சட்டத்தின் பாது
காப்பு கிடைக்க வேண்டும். அசோசியேசன் ஆப் டிரேடர்ஸ்
மற்றும் சாணன் டெங்சென்லி அன்ட் கம்பெனி போன்ற பெரிய
கம்பெனிகளிலே வேலை செய்யக்கூடிய கட்டிடத் தொழிலாளர்
களுக்கும் இந்தச் சட்டத்தின் பாதுகாப்பு கிடைக்க வேண்டும்.
மற்ற எல்லாத் தொழிலாளர்க்கும் பாதுகாப்பு கொடுக்கக்கூடிய
முறையில் இந்தச் சட்டம் இருக்க வேண்டும்.

அடுத்தபடியாக, இந்தச் சட்டத்தை அமல்படுத்தும்போது,
நிவாரணம் கிடைக்கக்கூடிய முறை என்ன என்பதை தயவு செய்து
வரையறுக்க வேண்டும். கட்டிடப் பணியிலே ஈடுபட்ட தொழி
லாளி, அவர்கள் கொத்தனார் என்ற பெயரிலே இருந்தாலும்
சரி, அல்லது சித்தாள் என்ற பெயரிலே இருந்தாலும் சரி,
இன்னும் கார்ப்பென்டர், பெயின்டர், கம்பி கட்டுபவர் போன்ற
எந்த பெயரிலே, இருந்தாலும், எல்லோருக்கும் நஷ்டஈடு கிடைக்க
வேண்டும். அதுதான் இந்தச் சட்டத்தில் உள்ள அடிப்படையான
முக்கியமான குறிக்கோள். இதை நாம் எப்படி கொடுக்கப்
போகிறோம் என்பதுதான் பிரச்சனை. இதிலே பெரியகம்பெனி
களிலே வேலை செய்யக்கூடியவர்களுக்கு எல்லாம் இந்தச் சட்டத்
திலே பல வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதை நான்
மிகமிக வரவேற்கிறேன். அன்-ஆர்கனைஸ்டு செக்டாரிலே
இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கும், அவர்கள் பாதுகாப்பைப்
பெறுவதற்காக — ஆர்கனைஸ்டு செக்டாரிலே ஏற்கனவே நீண்ட
காலம் அவர்கள் போராடிப் பெற்ற பல்வேறு தொழில் பாது
காப்புச் சட்டங்களும், தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்களும்
இன்றைக்கு இவர்களுக்கும் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச்
சட்டத்திலே, Workmen's Compensation Act, Payment of Wages
Act, Industrial Disputes Act, Maternity Benefit Act போன்ற
பல்வேறு சட்டங்கள் இவர்களுக்கும் பொருந்தும் என்று
கொண்டு வந்து இருப்பது மிகமிக வரவேற்கத்தக்கது. ஆர்க
னைஸ்டு செக்டாரில் உள்ள தொழிலாளர்களையும், அன்-ஆர்க
னைஸ்டு செக்டாரில் உள்ள தொழிலாளர்களையும் ஒரு கட்டு
மானத்திற்குள் கொண்டு வந்து, அவர்களுக்கும் இந்தச் சலுகைகள்
எல்லாம் கிடைக்கக்கூடிய முறையில் செய்திருப்பதை நான்
வரவேற்கிறேன். ஆனால் இந்தத் தொழில்களிலே ஈடுபட்டுள்ள
25 லட்சம் தொழிலாளர்களுக்கும், இந்தத் தொழில்களுக்கு
மெட்டிரியல்ஸ் சப்ளை செய்யக்கூடிய தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்
களுக்கும் சேர்த்து, மொத்தமாக 35 லட்சம் பேர்களில் எத்தனை
சதவீதத்தினருக்கு இந்தச் சலுகை கிடைக்கும்? யார் யாருக்கு
இதனால் லாபம் வரும்? என்பதை எல்லாம் தயவு செய்து
நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உத்தேசமாகப் பார்த்தால்
என்னுடைய கணக்குப்படி 20 சதவீதம் அதாவது One fifth of
the total population will be benefited.

என்று கருதுகிறேன். ஏனெனில் இன்று கொத்தனார் என்று
சொன்னால், நாம் சாதாரணமாக நினைப்பது யாரை ? ஒரு
கட்டிடம் கட்டும்போது கொத்தனாரை அழைத்து இதை எப்படிச்
செய்வது என்று,தான் நாம் நடைமுறையிலே கேட்போம். அப்படிப்
பட்ட கொத்தனார் வெறும் தொழிலாளியாக இருக்கலாம்.
அல்லது வெறும் உடல் உழைப்பை மட்டும் கொடுக்கக்கூடிய
தொழிலாளியாகவும் இருக்கலாம். அல்லது நான்கு பேர்களை
அழைத்து வந்து அந்த வேலையைச் செய்யக்கூடியவர்களாகவும்
இருக்கலாம். அல்லது , மெட்டிரியல்ஸ்களை, அதாவது ஜல்லி,
கல், செங்கல் போன்றவைகளை வாங்கி வந்து கொடுக்கக்கூடிய
பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாகவும் அவர்கள்
இருக்கலாம். இவை அத்தனையையும் சேர்த்துச் செய்பவரை
பொதுவாக கொத்தனார் என்று சொல்கிறோம். இதில் கொஞ்சம்
அனுபவம் உள்ள ஒரு மேசன், தலைமை கொத்தனார் என்று
அழைக்கப்படுகிறார். பிறகு அவரே ஒரு காண்டிராக்டராகவும் ஆகி
விடுகிறார். இவர் இந்தச் சட்ட அடிப்படையிலே பாதிப்பதாக
வருமேயானால் இந்தச் சட்டத்தினாலே எந்தப் பலனும் யாருக்கும்
கிடைக்காது.

(பிற்பகல் 12-30)

கட்டிடத் தொழிலாளர்களுக்கு அங்கஹீனம் நிகழ்ந்தால்,
அல்லது உயிரை இழந்தால் நஷ்ட ஈடு கொடுப்பது யார் என்று
இந்தச் சட்டத்திலே தெளிவாக இல்லை. வொர்க்மென் காம்பன்
சேஷன் ஆக்ட்டின்படி ஏற்கனவே நஷ்டஈடு பெற்று வருகிறார்கள்
தொழிலாளர்கள் . இந்த சட்டப்படி காம்பன்சேஷன் பெற
வேண்டிய நிலை ஏற்பட்டால், அதை யார் கொடுப்பது இந்தத்
தொழிலிலே யார் மாஸ்டர்? யார் சர்வெண்ட் ? என்ற பிரச்னை
வருகிறது, அந்தக் கட்டிடத்தை யார் பிரைமரியாக கட்ட எடுத்
தார்களோ, அவர் காண்டிராக்டரோ அல்லது தனிப்பட்ட
கட்டிடச் சொந்தக்காரர்களோ அவர்கள்தான் மாஸ்டர் என்று
வருகிறது. இது சரியல்ல.

நான் பணிவன்போடு சொல்லிக் கொள்வதெல்லாம், இதை
வெறும் தொழிலாளர் நலச் சட்டமாக மட்டும் வைத்துப் பார்க்
காமல் சமூக நலச் சட்டமாகவும் பார்த்து இதில் திருத்தங்களைக்
கொண்டு வரவேண்டும் என்பதுதான். ஒருவர் வீடு கட்டுகிறார்
என்றால், 50 ஆயிரம் ரூபாய் அல்லது 1 இலட்சம் ரூபாய்
எஸ்டிமேட் வைத்து வீடு கட்ட ஆரம்பித்தால், டபுள் பெட்
ரூமோடு வீடு கட்ட வேண்டும் என்று முதலில் திட்டமிட்டு,
கட்டிக் கொண்டே வரும்போது, அது சிங்கிள் பெட்ரூம் வீடாக
மாற்றப்பட்டு, அந்த வீட்டை கட்டி முடிக்கும்போது 1 இலட்சம்
ரூபாய் கடன் வாங்கியிருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கும்.
அப்படி இருக்கக்கூடிய நிலையில், ஒரு ஆக்சிடென்ட் நடந்து



வொர்க்மென் காம்பன்சேஷன் ஆக்டின் படி கோர்ட்டுக்குப்
போய் நஷ்ட ஈடு 20 ஆயிரம் வேறு கொடுக்க வேண்டிய நிலை
வந்தால், அந்தக் கட்டிடச் சொந்தக்காரர் எந்த நிலைமைக்குப்
போவார் தெரியுமா? எங்களுக்கு ஏற்கெனவே தெரியும்.
அதற்காக வீட்டை விற்றவர்களும் இருக்கிறார்கள். இப்படிப்
பட்ட நிலைமை வீடு கட்டுகிறவர்களுக்கு இருக்கிறது. ஆகவே,
சமூக நலத்தை அடிப்படையாக வைத்து கவனித்துச் சட்டம்
செய்யுங்கள். ஏனென்றால் இந்தப் பிரச்சினை அன்-ஆர்கனைஸ்டு
செக்ஷனிலே உள்ள ஒரு காம்பிளிகேட்டட் பிரச்சினை. வெறும்
தொழிலாளர் பிரச்சினை மட்டும் அல்ல.

ஆகவே, நான் தொழிலாளர் நல அமைச்சரை வேண்டிக்
கொள்வது தொழிலாளர் நல கண்ணோட்டத்தோடு மட்டும்
பார்க்காமல், இதை சமூக நலப் பிரச்சினையாகவும் பார்த்து
எல்லோர்க்கும் நன்மை கிடைக்கக் கூடிய முறையிலே இதில்
வேண்டிய பாதுகாப்பு வழிகள் செய்யப்பட வேண்டும். அதற்
காகத்தான் வெல்பேர் போர்டு ஒன்றை இதற்காகவே தனியாக
கிரியேட் பண்ண வேண்டும் என்று வேண்டுகிறேன். அவர்கள்
தான் இந்த நஷ்ட ஈட்டைக் கொடுக்க வேண்டுமே தவிர,
கட்டிடத்தைக் கட்டுகின்ற காண்டிராக்டர்களோ, அதைச்
சார்ந்தவர்களோ இந்த நஷ்ட ஈட்டை கொடுப்பது என்பது
அவர்களால் தாங்க முடியாத ஒன்று.

அது மட்டும் அல்லாமல், இன்று நாட்டிலே பல்வேறு வகை
யான கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. குடியிருக்க எல்லோருக்
கும் வீடு வேண்டும் என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.
அந்த நிலையில் பல கோடி ரூபாய்களிலே கட்டிடங்கள் கட்டப்
படுகின்றன. அப்படி கட்டப்படுகின்ற வீடுகள் கட்டிடங்கள்
தனி நபர்களுக்காக மாத்திரம் அல்ல, ஒட்டு மொத்தமாக
சமூகத்தின் நன்மைக்காகவும் கட்டப்படுகிறது. அப்படி கட்டப்
படுகிறபோது சமுதாயம், அதிலே ஏற்படுகிற இழப்புக்கும்
கடமைப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்கான வழி வகைகளை
செய்யவேண்டும். ஒரு கட்டிடத்தைக் கட்டுவதற்கான எஸ்டி
மேட்டை சப்மிட் பண்ணும்போதே, பிளானுக்கு அப்ரூவல்
கொடுக்கும்போது, ஒரு சிறு தொகையை அவர்களிடமிருந்து
வசூலிக்க வேண்டும். 10 கோடி ரூபாய்க்கு வீடு கட்டுகிறார்கள்
என்றால் அதிலே ஒரு சிறு தொகையை பாயிண்ட் 5 பர்சண்டாவது
அதற்கென்று ஒரு செக்யூரிட்டி இன்ஷூரன்ஸ் போல அல்லது
டிப்பாசிட் போல ஒரு பணத்தை வாங்கினால், அது ஒரு பெரும்
தொகையாக மாறும். லேபர் வெல்பேர் போர்டே அதற்கு
ஸ்டேச்சுடரி புரவிஷன் செய்து அவர்களிடம் அதை கொடுப்
போமேயானால், அதை வைத்து இவர்களுக்கு ஏற்படக்கூடிய
இழப்புக்களை ஈடு செய்ய முடியும்.

[திரு. கி. சட்டநாத கரையாளர்] [1984 அக்டோபர் 10

இதைப் போன்ற ஒரு திருத்தத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, கொண்டு வரவேண்டும். அப்பொழுதுதான் இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியுமே தவிர, தற்சமயம் வந்திருக்கக்கூடிய இந்தச் சட்டத்தினால் ஒரு பகுதி கட்டிடத் தொழிலாளர்களுக்குத்தான் நன்மை ஏற்பட முடியும். அதற்காக இதை வரவேற்கிறேன். என்றாலும், கிராமப்புறங்களிலே ஆங்காங்கு தனிப்பட்ட முறையிலே விவசாயியாகவும், கொத்தனாராகவும் வாழக்கூடிய பெரும் மக்கள் இருக்கிறார்களே அவர்களுக்கு இதிலே பாதுகாப்பு இல்லை. அவர்களுக்கும் பாதுகாப்பு கிடைக்கக் கூடிய முறையிலே சில விதிமுறைகளை வகுத்து நீங்கள் செயல்படுத்த வேண்டும். அவுர்கள் எந்த விதத்திலேயாவது இந்தச் சட்டத்திற்கு வெளியே இருந்தால் அவர்களையும் இதிலே இணைத்துப் பார்க்கக் கூடிய வழி வகைகளை செய்து, அமைச்சர் அவர்கள் அருளுவார்கள் என்ற நல்ல எண்ணத்தோடு அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

டாக்டர் கே! சமரசம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1983-ஆம் ஆண்டு கட்டிடக் கட்டுமானப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்—பல்வகை விதித் துறைகள்) குறித்துக் கொண்டு வந்திருக்கின்ற சட்டமுன் வடிவின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் சில கருத்துக்களை இந்த மன்றத்திலே வைக்க முன் வருகிறேன்.

'' வீடு கட்டும் பாட்டாளி வீதியிலே தூங்குகிறான்— '' ஆனால் அந்த முதலாளியோ—'' கூடி அந்த மாளிகையில் கும்மாளம் போடுகின்றான் என்று '' வீடு கட்டும் பாட்டாளியினுடைய நிலை பற்றி அன்றொரு நாள், நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள், கருத்து தெரிவித்திருந்தார்கள். திரைப்படத்தின் வாயிலாக.

. அப்படிப்பட்ட கட்டிடப் பணியாளர்களுக்கு எல்லாம் எப்படியாவது வாழ்வு தந்தாக வேண்டும். ஒரு பாதுகாப்புத் தந்தாக வேண்டும். அவர்கள் இந்த நாட்டிலே பிறந்தவர்கள்தாம் என்றமுறையிலே, அதை உலகிற்கு அறிவிக்கக் கூடிய முறையிலே அவர்கள் வாழ்விற்கு உத்தரவாதம் தருகின்ற எண்ணத்தின் அடிப்படையிலே இங்கே இந்தச் சட்ட முன்வடிவினைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

சுதந்திரம் அடைந்து இத்தனை நாட்களாகியும், ஏன் உலகம் தோன்றி இத்தனை நாட்கள் ஆகியும் எந்தச் சட்டமன்றத்திலாவது இப்படி கட்டடப் பணியாளர்களுக்கு ஒரு பாதுகாப்புச் சட்டம் கொண்டுவந்து இருக்கிறார்களா என்றால் எனக்குத் தெரிந்தவரையில் இல்லை. அப்படி ஒரு சட்டத்தை உருவாக்கி அமலுக்கு அதைக் கொண்டுவர வேண்டுமென்ற அடிப்படையில்



1984 அக்டோபர் 10] [டாக்டர் கே. சமரசம்]

மிகநல்ல ஒரு சட்டத்தை உருவாக்கி நிறைவேற்றுவதற்காக இங்கே வைத்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தில் 41 விதிகள் தனித்தனியாகவே தெளிவாகவே சொல்லப்பட்டிருக்கின்றன. இதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன என்று நண்பர்கள் சொன்னார்கள். அது உண்மை நான் மறுக்கவில்லை. அந்தச் சிக்கல்களைத் தீர்க்கவேண்டுமென்று சொல்வது குறையில்லை, தீர்த்து வைக்கவேண்டுமென்று அகில இந்திய அண்ணா தி.மு.க. சார்பாக நான் அரசைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

யார் யாருக்கு எந்த எந்த வகையிலே எல்லாம் பாதுகாப்புக் கொடுத்திருக்கிறோம் என்பதைப் பார்க்கவேண்டும். சிறுவர்கள், பெண்கள், கர்ப்பிணிகளாக இருந்தால் பிரசவத்திற்கு முன்பு 6 வாரங்கள், பின்பு 6 வாரங்கள் என்ற முறையிலே இவர்களுக்கு எல்லாம் பாதுகாப்புக் கொடுப்பதோடு, அவர்களுக்கு ஓய்வூதியம், விடுமுறை, சலுகை, நூறுக்கு , மேற்பட்டவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற இடங்களில் விடுப்பு தரவேண்டும். சம்பளம் எவ்வளவு தரவேண்டும், முதலுதவி தரவேண்டும் என்பன போன்றவற்றையெல்லாம் மிகத் தெளிவாக விதிகளிலே கூறியிருக்கிறார்கள். இன்னும் சிலவற்றைச் சேர்க்கவேண்டுமென்று கோரிக்கை வைப்பதிலே தவறில்லை. ஆனால் கொண்டு வந்திருப்பதை வரவேற்கிறார்களா என்றால் எடுத்த எடுப்பிலேயே இதை எதிர்க்கின்றேன் என்று சொல்வதுதான் மிக மிக ஆச்சரியமாக இருக்கிறது.

ரோடில் ஒருவன் விழுந்துகிடக்கின்றான். அந்த வழியிலே வருகின்ற பலர் அவனைப் பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள். பக்கத்துக் கடையிலே போய் சிகரெட்டை வாங்கி பற்றவைத்துக் கொண்டு நிற்கிறார்களே தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை. அதற்குப் பிறகு அந்த வழியே வந்த ஒருவன் விழுந்து கிடந்தவனை எடுத்து மடியிலே கிடத்தி வேண்டிய உதவியைச் செய்கிறபோது பக்கத்துக் கடையிலே சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தவன் ஏனய்யா சும்மா பார்த்துக் கொண்டிருக்கிறாய், அவனுக்கு டீ, காபி ஏதாவது வாங்கிக் கொடு என்று சொன்னானாம். இதைப்போலவே இன்னொருவன் ஏனய்யா வீதியிலே அவனை வைத்துக் கொண்டிருக்கிறாய், உடனடியாக வண்டியிலே ஆஸ்பத்ரிக்குக் கொண்டு போ என்றானாம், இன்னொருவன் கஞ்சிக்கு இல்லாமல் விழுந்துகிடக்கானய்யா, அவனுக்கு சாப்பாடு போடு என்று சொன்னானாம். இப்படி எல்லாம் சொல்லிக் கொண்டிருந்தவர்கள் அவனுக்கு ஒரு உதவியையும் செய்யவில்லை. அவர்கள் எல்லாம் அவனுக்கு ஆணையிட்டது கைவந்தகலையாக அவர்களுக்கு இருந்து ஆணையிட்டதைப்போல பல ஆண்டுக்காலமாக ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் அந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்தார்களா என்றால் இல்லை. ஆனால் திருத்தங்கள் வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். அதற்காக அதிகாரத்தைச் செலுத்தக்கூடிய வகையில், விமர்சனங்கள் செய்யக்கூடிய முறையிலேதான் இருக்

இறதே தவிர அவர்கள் சொல்வது வேறு எந்த வகையிலேயும் இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். வதந்திகளைக் கிளப்பி வாதாடு வதைப் போல் நண்பர்கள் விமர்சனம் இருக்கிறதே தவிர என்ன என்ன திருத்தங்கள் செய்யவேண்டுமென்ற நிலை வருமானால் அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று நான் கூட உங்கள் சார்பாக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கின்றேன்.

விவசாயிகள் கிணறு வெட்ட அரசாங்கத்திடம் அனுமதி பெற வேண்டுமென்ற விதிகள் எல்லாம் தேவைதானா? அதற்கு விலக்கு அளிக்கலாம் அல்லது மாற்று வழி கண்டுபிடிக்கலாம் என்ற முறையில் முடிவுக்கு வரவேண்டும்.

ஆகவே, பல பிரச்சினைகளை தேவையற்ற முறையிலே நாமாகவே உருவாக்கிக் கொள்ளக் கூடாது என்று நான் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன். வேலைக்குச் செல்லக்கூடியவர்கள் எல்லாம் பதிவு செய்ய வேண்டும், அரசாங்கத்திற்குத் தெரி வித்துவிட வேண்டும் என்று சொல்வது நடைமுறைக்கு ஒத்து வராத ஒன்று. பணியிலே உள்ளவர்களுக்கு ஏதாவது பிரச்சினை வருமானால் உதவி, சலுகைகள் வேண்டுமென்றால் மாவட்ட கண்காணிப்புக் குழு அல்லது வேறு ஏதாவது ஒரு குழுவை நியமித்து, அந்தக் குழு அதைப் பார்த்து எப்படி பரிந்துரை செய்கிறதோ அதை வைத்து அரசாங்கம் நடவடிக்கை எடுத்து அந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் எந்தப் பிரச்சினையும் தீர்வதற்கு அது வழிவகுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்தப் பிரச்சினைமீது பேசினாலும் ஒத்திவைப்புத் தீர்மான மோ அல்லது வேறு எந்தத் தீர்மானத்தின்மீது பேசினாலும் தேர்தலைக் கண்டு பயமா, தேர்தலைக் கண்டு பயமா என்று கேள்வி கேட்கிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். புளிய மரத்திலே தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருக்கின்ற வௌவால் மாம்பழத்தைக் கண்டு சப்புக் கொட்டிக் கொண்டு இருப்பதைப்போல் எதிர்க்கட்சிகள், உதிரிக் கட்சிகளாக இருக்கிறவர்கள் கோட்டையை நினைத்து சப்புக் கொட்டிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் குதர்க்கமாகப் பேசு கிறார்கள். கடைசியில் மக்களைத்தான் அவர்கள் சந்திக்கவேண் டும். சந்திக்க வேண்டிய இடம் மக்கள்தான். மக்களுக்குத் தேவையான திருத்தங்களை எதிர்க்கட்சிகள் கொண்டுவருவது இயல்பு. அந்த வகையில் சில திருத்தங்களை அரசு கொண்டுவர வேண்டுமென்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு இந்த சட்ட முன்வடிவை ஆதரித்து முடிக்கிறேன், நன்றி. வணக்கம்,





(பிற்பகல் 12-40)

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, தமிழ்நாடு கட்டிட கட்டுமான பணியாளர்கள் பணி
நிலைமை அவர்களுக்குள்ள விதிமுறைகள் சட்டமுன்வடிவு
சம்பந்தமாக இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சியின் சார்பாக கருத்
துக்களை கூறுவதற்கு விரும்புகிறேன். கட்டிட பணிகளில்
கட்டுமான பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு சட்ட
பாதுகாப்பு தேவை சட்டம் தேவை என்கின்ற கிளர்ச்சியும்
இயக்கமும் பல ஆண்டு காலமாக தமிழகத்தில் நடந்து வருகிறது.
அந்த தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும்
என்ற உணர்வோடு ஒரு சட்டம் இயற்றப்படவேண்டும் என்ற
முறையில் இந்தச் சட்டமன்றத்தில் பல்வேறு சந்தர்ப்பங்
களில் குரல் எழுப்பப்பட்டு இருக்கிறது. இந்தத் தொழிலிலே
20 இலட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் இருக்கி
றார்கள். ஆண்கள், பெண்கள், முதியோர். வாலிபர், சிறுவர்
ஆகிய அனைத்து பகுதியினரும் இந்த தொழிலிலே ஈடுபட்டு
வேலை செய்து வருகிறார்கள். இந்தத் தொழிலாளர்கள் பாது
காப்பு அற்ற நிலையில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் அதா
வது திரட்டப்படாத வரிசையில் இருக்கக்கூடியவர்கள். அவர்
களுக்கு பாதுகாப்பு கிடைக்கவேண்டும் என்ற உணர்வோடு
சட்டம் கொண்டுவரப்படவில்லை. ஆனால் கொண்டுவரப்பட்டு
இருக்கிற சட்டம் எந்த அளவுக்கு அந்தத் தொழிலாளர்களுக்கு
பாதுகாப்பு அளித்து இருக்கிறது என்பது தான் இன்றைய தினம்
கேள்விக் குறியாக இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்பு
கிறேன். சட்டம் 1983ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் அறிமுகம்
செய்யப்பட்டது. இன்றையதினம் 1984ஆம் ஆண்டு கடைசியில்
இதை நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு இருக்கிறோம்.
இந்தத் தொழிலாளர்கள் நிலையை கருத்தில் கொண்டு இந்தச்
சட்டம் உருவாக்கப்பட்டு இருக்கிறதா என்றால் நிச்சயமாக
இல்லை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். காரணம்
இந்தத் தொழிலாளர்களுக்கு நிரந்தரமான எஜமானர்கள்
இல்லை. நிரந்தரமாக பணியிடங்கள் இல்லை என்பதை
அனைவரும் அறிவோம். ஆனால் இதிலே இருக்கக்கூடிய,
இதிலே பணிபுரியக்கூடிய, தொழில் செய்யக்கூடிய 20 லட்சம்
தொழிலாளர்களில் எத்தனை தொழிலாளர்கள் இந்தச்
சட்டத்தின் மூலமாக வாய்ப்பு கிடைக்கும் என்பதை நம்முடைய
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்து தெளிவுபடுத்துவார்கள்
என்று நம்புகிறேன். அது மிகவும் பயன் உள்ளதாக இருக்கும்
என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். இதிலே குறிப்பிட்டு
இருக்கக்கூடிய பல்வேறு சரத்துக்கள் யாருக்கு இது பொருந்
தும், எந்தத் தொழிலாளிக்கு இது பொருந்தாது என்று வைத்து
இருக்கக்கூடிய நடைமுறை, இந்தச் சட்டத்தில் வைத்து இருக்கக்
கூடிய சரத்துக்கள் இவைகளை எல்லாம் வைத்து பார்க்கக்கூடிய
நேரத்தில் 50 தொழிலாளர்கள் அல்லது மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் கூறுகிறார் 20 தொழிலாளர்கள் வேலை செய்யக்

(திரு. இரா. கருப்பையா) [1984 அக்டோபர் 10

கூடிய நிறுவனங்கள், காண்டிராக்டர்கள், இவர்களுக்கும் இது
பொருந்தும் வகையில் அரசு பின்னால் மாற்றம் செய்ய உத்தேசித்
துள்ளது என்ற முறையில் அவர்கள் கூறுகிறார்கள். இவ்வறைக்கு
நடைமுறையில் எல்லா இடங்களிலும் இந்தக் கட்டிடத் தொழிலில்
வேலை செய்யக்கூடியவர்கள் சில நிறுவனங்கள் மூலமாகத்
தான் வேலை செய்கிறார்களா, காண்டிராக்டர்கள் மூலமாகத்
தான் வேலை செய்கிறார்களா? 5, 4, 10 என்ற முறையில்
லட்சக்கணக்கான தொழிலாளர்கள் அனைத்து இடங்களிலும்
வேலை செய்யக்கூடிய நிலைமை இவ்வறைக்கு யதார்த்தமாக
இருக்கிறது. ஆகவே, அந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு
அந்த அனைத்து தொழிலாளர்களும் பயன் அடையக்கூடிய
முறையில் இந்தச் சட்டத்தில் சரத்துக்கள் இருந்து இருக்குமா
னால் நிச்சயமாக அது வரவேற்கக்கூடிய ஒன்றாகும் என்று
நான் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது அபாயகரமான
பணி, அபாயகரம் இல்லாத பணி என்று இதிலே வித்தியாசங்கள்.
அந்த முறையில் வித்தியாசங்கள் இன்றைய தினம் இந்தச் சட்டத்
திலே கொண்டுவரப்பட்டு இருக்கிறது. வித்தியாசமான முறையில்
அதிலே பணிபுரியக்கூடிய தொழிலாளர்களுக்கு ஒரு எண்ணிக்கை.
அது இல்லாத நிலையில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு
ஒரு எண்ணிக்கை என்கின்ற முறையில் அதிலே குறிப்பிடப்பட்டு
இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு இடத்
தில் ஒரு தொழிலாளி வேலை செய்தாலும்கூட அந்தத் தொழி
லாளிக்கும் இந்தச் சட்டத்தினுடைய பயன், பாதுகாப்பு இருக்க
வேண்டுமென்ற முறையில் சட்டத்தினுடைய விதிகளை தெளி
வான முறையிலே இயற்றப்பட வேண்டும்.

நிறுவனம் என்று சொல்லும் நேரத்தில், மத்திய அரசு,
இரயில்வே, மத்திய அரசுப் பாதுகாப்புத் துறை போன்ற
நிறுவனங்கள் அனைத்திற்கும் இந்தச் சட்டம் பொருந்தாது
என்ற முறையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியென்றால்
அந்தக் கட்டிடப் பணியில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்கள்
தொழிலாளர்கள் இல்லை என்று இந்த அரசாங்கம் கருதுகிறதா
அல்லது அமைச்சரவர்கள் கருதுகிறார்களா என்று கேட்க
விரும்புகிறேன்.

பெண் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வேலை
செய்யும் நேரத்தைக் பொறுத்தவரையில் காலை 7 மணிக்கு
முன்பும், மாலை 6 மணிக்குப் பின்பும் வேலை செய்யக் கூடாது
என்று இந்தச் சட்டத்திலே ஒரு பிரிவு இருக்கிறது. இப்படிக்
குறிப்பிட்ட நேரத்திற்கு முன்போ அல்லது பின்போ அவர்கள்
வேலை செய்யக் கூடாது என்ற நிலையிருந்தாலும் சில சந்தர்ப்
பங்களில் ஒரு குறிப்பிட்ட வேலையை—கான்க்ரீட் போடுவது
போன்ற அந்த வேலையை முடித்துவிட்டுச் செல்ல வேண்டு
மென்ற நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில்
எந்த முறையிலே வேலை செய்வது என்பதற்கான நடைமுறை
களை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1984 அக்டோபர் 10] [திரு. இரா. கருப்பையா]

பெண் பணியாளர்கள் பிரசவம் ஆவதற்கு 6 வாரங்களுக்கு
முன்பும், பிரசவம் ஆகி 6 வாரங்களுக்குப் பின்பும் வேலைக்கு
அமர்த்தப்படக்கூடாது என்று இருக்கிறது. இதில் மெட்டர்னிட்டி
பெனிபிட் ஆக்ட் இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொல்வார்.
அந்தத் தொழிலாளிகளை 6 வாரம் முன்பும், 6 வாரம் பின்பும்
வேலைக்கு வைத்துக்கொள்ளக் கூடாது என்றால் அந்தக் காலத்
தில் அவர்களின் வாழ்க்கைக்கு வழி எங்கே இருக்கிறது என்பது
தெரியவில்லை. அவர்கள் அன்றாடம் வேலைக்குச் சென்று,
அந்தக் கூலியைப்பெற்று அன்றைக்கிரவு தங்களுடைய
வீட்டிலே உணவைச் சமைத்துச் சாப்பிடும் நிலைமையிலே தான்
இருக்கிறார்கள். ஏதோ கட்டிடத் தொழிலாளர்கள் என்றால்
அவர்கள் மற்ற ஸ்தாபன ரீதியாக இருக்கக்கூடிய தொழிற்
சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களைப் போல
வசதி படைத்தவர்கள் அல்ல. அன்றைக்கு வேலை செய்தால்
தான் அன்றைக்குக் கூலி கிடைத்தால்தான் அதை வைத்துக்
கொண்டு உணவை உண்ண வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.
அப்படிப்பட்ட நிலையிலே உள்ளவர்களை 6 வார காலத்திற்கு
வேலைக்கு வைத்துக்கொள்ள வேண்டாம் என்றால் அந்த 6
வார காலத்தில் அந்தத் தொழிலாளர்களுக்கு யார் பாதுகாப்பு
கொடுப்பது, யார் உணவு கொடுப்பது என்பது கேள்விக்குறியாக
இருக்கிறது. எனவே அதற்கு மாற்று ஏற்பாடு என்ன? 6 வார
காலத்திற்கு அந்தப் பெண் தொழிலாளர்களின் வாழ்க்கைக்கு
மாற்று ஏற்பாடு என்ன என்பது சம்பந்தமாகவும் இந்தச்
சட்டத்திலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தால் அது சரியாக
இருந்திருக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

சொந்த அனுபோகத்திற்காக அல்லது குடும்ப உறுப்பினர்
களின் அனுபோகத்திற்காகக் கட்டப்படும் வீடுகளில் வேலை
பார்க்கின்ற கட்டிடத் தொழிலாளர்களுக்கு இந்தச் சட்டத்
திலேயிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படி
யென்றால் அங்கே வேலை செய்யும் தொழிலாளர்கள் தொழி
லாளர்கள் இல்லையா? அவர்களுக்கு ஒரு ஆபத்து
என்றால் அவர்களைப் பாதுகாப்பது எப்படி? அவர்களுக்கு
நஷ்டயீடு கொடுப்பது எப்படி? இதுபோன்ற பல்வேறு பிரச்
னைகள் இருக்கின்றன. அதற்கு வேண்டுமானால் வேறு பல
விதிமுறைகளை இயற்றிக்கொள்ளலாம். கட்டிடத்திற்கு வரை
படம் போடும் நேரத்திலேயோ அல்லது அனுமதி பெறும்
நேரத்திலேயோ அதில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு
குறிப்பிட்ட ஒரு சதவிகிதத்தை ஒதுக்குமாறு செய்யலாம்.
நகரப் பஞ்சாயத்துக்கள் அல்லது நகராட்சிகளாக இருந்தால்
அதற்காக லைசென்ஸ் கட்டணம் பெறுகிறார்கள். அந்த
நிதியிலிருந்து ஒரு பகுதியை ஒதுக்கியாவது அந்தத் தொழி
லாளர்களுக்கு அதிலிருந்து நஷ்டயீட்டைக் கொடுக்க அல்லது
க்ஷேமநல நடவடிக்கைகளை எடுத்து ஈடு செய்வது சரியாக
இருக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. இரா. கருப்பையா] [1984 அக்டோபர் 10

கடைசியாக நான் குறிப்பிட விரும்புவது இந்தச் சட்டத்திலே
பல்வேறு மாற்றங்களை இன்றைக்குச் செய்ய வேண்டிய
அவசியம் இருக்கிறது. அமைச்சரவர்கள் இந்தச் சட்டத்தை
அறிமுகப்படுத்துகின்ற நேரத்தில் தான் ஒரு கட்டிடத் தொழி
லாளியின் பேரன் என்ற முறையில் அறிமுகப்படுத்தினார்கள்.
தான் ஒரு கட்டிடத் தொழிலாளியின் பேரன் என்ற உணர்வு
இருந்தால்மட்டும் போதாது. அந்தக் கட்டிடத் தொழிலாளர்
களுக்கு என்ன நன்மைகளைச் செய்திருக்கிறோம் என்பதையும்
பார்க்க வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு
அமைச்சரவர்களுக்கு இன்னொரு பெருமையும் இருக்கிறது.
அதாவது அவர்கள் இரயில்வே தொழிலாளியாக இருந்தவர்கள்
தொழிற் சங்க இயக்கத்திலே இருந்து வந்தவர்கள். அவர்
களுக்கு அந்த அனுபவம் உண்டு. அப்படிப்பட்ட அனுபவம்
உள்ள அவர்கள் இன்றைக்கு அமைச்சர் பொறுப்புக்கு வந்
திருக்கிறார்கள். அதிலும் அவர்கள் இன்றைக்குத் தொழிலாளர்
நல அமைச்சராக வந்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-50)

ஆனால் இந்த அனுபவங்களை எல்லாம் வைத்துக் கொண்டு
அவர் கொண்டுவந்திருக்கக்கூடிய சட்டத்தைப் பார்க்கக்கூடிய
நேரத்தில் மிகப் பெரிய ஏமாற்றமாக இருக்கிறது. சாதாரண
மாக எல்லோரும் ஒன்று சொல்வார்கள். அதாவது நல்ல திறமை
யான டாக்டர் ஒருவர் ஒரு நோயாளியைக் கவனித்து அவருக்கு
அறுவை சிகிச்சை செய்தார். அப்படிப்பட்ட திறமையான டாக்
டரிடத்திலே அந்த நோயாளியைக் கொண்டுவந்தவர்கள் நோயாளி
நல்ல முறையில் பத்திரமாக, பாதுகாப்பாக இருப்பார் என்ற
உணர்வோடு இருக்கிறார்கள். ஆப்பரேஷன் முடிந்ததற்குப்
பிறகு டாக்டர் சொல்கிறார், நல்ல முறையில் என்னுடைய
முழுமையான திறமைகளை எல்லாம் பயன்படுத்தி நான் அறுவை
சிகிச்சை செய்திருக்கிறேன் என்று. அடுத்த கேள்வியைப் போடு
கிறார்கள் வந்தவர்கள், நோயாளி எப்படி இருக்கிறான் என்று.
நோயாளி இறந்துவிட்டான் என்று டாக்டர் சொல்கிறார். அந்த
மாதிரி தான் நானும் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்
என்று அமைச்சர் அவர்களும் சொல்வதுபோல் இருக்கிறது.
இவ்வளவு திறமையைக் கொண்டிருக்கக்கூடிய அமைச்சர் அவர்கள்
நானும் ஒரு சட்டம் கொண்டுவந்திருக்கிறேன் என்று சொல்கிறார்.
ஆனால் அந்தச் சட்டம் கொண்டு வந்ததற்குப் பிறகு அந்தச்
சட்டத்தின் பயன் பிறகு கிடைக்கும் என்று சொல்லக்கூடிய
நேரத்தில் சமுத்திரத்தில் பெருங்காயத்தைக் கரைத்தது போல்
இப்போது ஏறக்குறைய 25 இலட்சம் தொழிலாளர்கள் இருக்கி
றார்கள் என்றால் அவர்களில் — நான் அறுதியிட்டுச் சொல்கிறேன்
இரண்டாயிரம் பேர்களுக்குக் கூட இந்தச் சட்டத்தின் பயன்
கிடைக்கக்கூடிய நிலைமை இல்லை.



1984 அக்டோப 10] [திரு இரா. கருப்பையா]

பல்வேறு சட்டங்கள் எந்த அளவுக்கு அமலாகியது என்பது
நமக்குத் தெரியும். உதாரணமாக ஃபேக்டரிச் சட்டம். பத்து
பேர் இருந்தால்தான் அந்தச் சட்டம் அமலாகும் என்று சொல்லப்
பட்டவுடன் அடுத்த நாளே ஃபேக்டரியில் வேலை செய்பவர்
களின் எண்ணிக்கையை ஒன்பது பேர்களாக மாற்றி விடுகிறார்கள்.
அதன் காரணத்தால் அந்தத் தொழிலாளர்களுக்கு ஃபேக்டரிச்
சட்டத்தின் பலன் கிடைக்காத நிலைமைதான் ஏற்படுகின்றது.

அதுபோல் கடை நிறுவனங்கள் சட்டத்தைப் பொறுத்தவரை
யில் குறைந்தபட்சக்கூலி, குறிப்பிட்ட வேலை நேரம் என்றெல்
லாம் சொல்லியிருந்தபோதிலும் அதன் பலன் எத்தனை பேருக்குக்
கிடைக்கின்றது என்பது கேள்விக்குறியாகத்தான் இருக்கின்றது.
480 நாட்கள் பணி புரிந்தால் அவர்கள் எல்லாம் நிரந்தரத்
தொழிலாளர்களாக ஆக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள்.
ஆனால் எவ்வளவு தொழிலாளர்கள் அவ்வாறு நிரந்தரத்
தொழிலாளர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது கேள்விக்
குறிதான். அரசுப் பணிகளில் அவ்வாறு பணிபுரிந்த தொழிலாளர்
கள் கூட அதன் காரணத்தால் பயன் அடையாத நிலைமையில்
அந்தச் சட்டம் அமலாகாமல்தான் இருக்கின்றது. எனவே
பல சட்டங்களைப் போட்டாலும், அந்தச் சட்டங்கள்
எல்லாம் யாருக்குப் பயன் அளிக்க வேண்டும் என்று
போடுகிறோமோ அதற்கு நேர் எதிரான விளைவுகள்தான்
ஏற்படுகின்ற நிலைமை இருக்கின்றது. எனவே மக்களை
ஏமாற்றுகின்ற வகையிலே, விளம்பரத்திற்காக மட்டும்
தான் இந்தச் சட்டங்கள் இருக்கின்றன என்பதைக் குறிப்பிட
விரும்புகிறேன். எனவே இதிலே பல்வேறு சூழ்நிலைகள் இருக்
கின்றன. அந்தச் சூழ்நிலைகள் அனைத்தையும் முழுமையாக
ஆராய்ந்து பரிசீலனை செய்ய வேண்டும். ஆனால் இந்தச் சட்
டத்தை உடனடியாக நிறைவேற்றிவிட வேண்டும் என்ற வகையில்
ஒரு அவசரம் இருப்பதாகத் தெரிகிறது. ஒன்றரை ஆண்டுக்
காலம் இந்தச் சட்டம் சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டு
அப்படியே இருந்திருக்கின்றது. எனவே மேலும் சற்று காலம்
எடுத்துக் கொண்டு இதனைப் பொறுக்குக் குழுவிற்கு விட்டு
முழுமையாக அனைத்து தரப்பினரின் கருத்துக்களையும் கேட்க
வேண்டும். தொழிலாளர்கள் தரப்பிலேயிருந்து அவர்களுடைய
அபிப்பிராயங்களையும், பொதுமக்களின் அபிப்பிராயங்களையும்
கேட்க வேண்டும். பல்வேறு பொது மக்களின் பிரதிநிதி
களும், தொழிற் சங்கத்தின் பிரதிநிதிகளும் இருக்கிறார்
கள். அவர்கள் அனைவரின் கருத்துக்களையும் தெரிந்துகொண்டு
அதற்குத் தகுந்த மாதிரியான சட்டத்தை உருவாக்குவதன் மூலம்
அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடிய அனைத்து தொழி
லாளர்களுக்கும் பாதுகாப்பை ஏற்படுத்த முடியும். எனவே
அந்த வகையிலே தொழிலாளர்களுக்கு முழுமையான பாதுகாப்பு
கொடுக்கக்கூடிய சட்டத்தை உருவாக்க வேண்டும் என்று கூறி
இந்தச் சட்டத்தைப் பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டும் என்று
வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இங்கே தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரபபட்டிருக்கின்ற தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு கட்டிடக் கட்டுமானப் பணியாளர் குறித்த சட்டமுன்வடிவைப் பற்றி சில கருத்துக்களை நான் சார்ந்திருக்கின்ற இயக்கத்தின் சார்பாகக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

முதலிலே இந்தச் சட்டமுன்வடிவு 1983-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு கிடப்பிலே வைக்கப்பட்டு தூங்கி வழிந்து, இன்றைய தினம் எழுந்து நடமாட ஆரம்பிப்பதற்காக வந்திருக்கின்றது என்று நான் கருதுகிறேன். இது எந்த நோக்கத்திலே கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்டம் என்று சொன்னால் வரப்போகும் தேர்தல் நேரம் வேகமாக வந்து கொண்டிருக்கின்றது. உறுதி மொழிகளை அள்ளி, அள்ளி எறிகின்ற வகையில் சட்டம் என்ற பெயரால் ஒன்றைக் கொண்டு வந்து நானும் சட்டம் செய்து இருக்கிறேன் நாட்டுக்கு என்று சொல்வதற்காகத்தான் கொண்டுவரப்பட்ட சட்டமாக இது இருக்கின்றதே தவிர, யாருக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கின்றதோ அவர்களுக்குப் பயன்படக்கூடிய சட்டமாகக் கொண்டுவரவில்லை என்பதை நான் முதலிலே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டத்திலே எங்காவது தெளிவு இருக்கிறதா ? அல்லது அந்தத் தொழிலாளிகளுக்கு நல்ல பல காரியங்களைச் செய்ய வேண்டுமென்பதற்கான துணிவாவது இருக்கிறதா என்று கேட்டால், சட்டம் உருவாக்கியவர்களுக்கு, சட்டத்தை நிறைவேற்ற வேண்டியவர்களுக்குத் துணிவும் இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நெஞ்சிலே கை வைத்துப் பார்க்கிறார், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள். அவரை எனக்குத் தெரியும். அவர் ஆரம்பத்திலே சொன்னார், நான் ஒரு கொத்தனார் பேரன் என்று. கொத்தனார் நல்ல கொத்தனாராக இருந்தால் எங்கெங்கே சாந்து வைத்து அடைக்க வேண்டுமோ, எங்கெங்கே ஓட்டை உடைசல் இல்லாமல் இருக்க வேண்டுமோ, அதை எல்லாம் செய்திருப்பார்கள். இதுதான் அண்ணா அவர்கள் கற்றுத் தந்தது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் தாத்தா கட்டின பட்டீஸ்வரம் கோவில் கோபுரம் இன்றும் அப்படியே சிறப்பாக இருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் துணைத் தலைவர் அவர்களே, தாத்தா சிறந்த கொத்தனார் என்பதிலே யாருக்கும் ஆட்சேபனை இல்லை. பேரன் நிலைமை என்ன என்பதுதான் எங்களுக்குச் சந்தேகம்.



திரு. கே. சௌந்திரராசன் : நான் அதையே குறிப்பிட விரும்புகிறேன். தாத்தா கொத்தனார் நல்ல வேலை செய்திருக்கிறார். அதனாலேதான் ஒரு ஸ்டேஷன் மாஸ்டராக வளர்ந்து தொழிலாளர் நலத் துறையில் மிகப் பெரிய பெயர் பெற்று இன்றைய தினம் தொழிலாளர் நலத்துறை அமைச்சராக இருக்கிறார் பேரன். தாத்தா போட்ட விதை அந்த அளவிற்கு வந்திருக்கிறது. பேரன் போடுகிற இந்தச் சட்டத்திலே எவ்வளவு ஓட்டைகள் இருக்கின்றன என்பதை இன்றைய தினம யாருக்காக அவர்கள் இந்தச் சட்டத்தையே உருவாக்குகிறார்களோ, அவர்களே நாளையதினம் பேரணி நடத்த இருக்கிறார்கள் என்பது எடுத்துக் காட்டும். முன்னாள் நீதிபதி திரு. கிருஷ்ண ஐயர் அவர்கள் கூட இந்தச் சட்டத்தைப் பற்றி கருத்துக்களைத் தெரிவிக்கும்போது, இதில் எத்தனை ஓட்டைகள் இருக்கின்றன என்பதற்கு பல்வேறு ஆதாரங்களை இங்கே தந்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் விட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட இந்தச் சட்டத்தையும் கொடுத்துவிட்டு, இதற்கு அமென்ட்மென்ட்-டும் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், எந்த அளவுக்கு அவசரத்தோடு இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அதற்கு அவரே அமென்ட்மென்ட் கொண்டு வர வேண்டிய அளவிற்கு நிலைமை இருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்கிற பொழுது இந்தச் சட்டத்திலே தெளிவு இல்லை, துணிவு இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

யாருக்காக இந்தச் சட்டம் ? 50 பேர்கள் வேலை செய்தால் அவர்களுக்கு உண்டு என்று சொல்கிறார்கள். சொந்தமாகக் கட்டிடம் கட்ட ஆரம்பித்தால் அதற்குப் பொருந்தாது என்று சொல்கிறார்கள். மத்திய சர்க்கார் நிறுவனங்கள் அத்தனையையும் கட்டுப்படுத்தாது என்று சொன்னால் வேறு யாருக்காக இந்தச் சட்டம் ? மாண்புமிகு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி துணைத் தலைவர் அவர்கள் கூறியதைப்போல் 25 இலட்சம் பேர்களுக்கு வாழ்வளிக்க வேண்டிய ஒரு சட்டம் 2,000 பேர்களுக்குக் கூட பயன்படாது என்று சொன்னால், நான் குறிப்பிட விரும்புவதெல்லாம், இந்தச் சட்டம் தேர்தலிலே நீங்கள் சொல்வதற்குப் பயன்படக் கூடிய ஒரு சட்டமே தவிர நாட்டு மக்களுக்கு ஏற்ற சட்டம் அல்ல என்பதுதான்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும் நான் அதிகம் உள்ளே சென்று பார்க்க விரும்பவில்லை. காரணம் நேற்றும் இன்றைய தினமும் பல்வேறு உறுப்பினர்கள் இந்தச் சட்டத்தைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டும், இந்தச் சட்டத்தில் எதுவும் இல்லை, பெயர்ப் பலகைத்தான் இருக்கிறது என்று சொல்லிவிட்டார்கள். நான் இந்தச் சட்டத்தைப் பற்றி குறிப்பிட வேண்டுமானால் இந்தச் சட்டம் யாருக்காக இயற்றப் படுகிறது என்று நீங்கள் குறிப்பிடுகிறீர்களோ, அவர்களுக்கு இது ஒரு

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இங்கே தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரபபட்டிருக்கின்ற தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு கட்டிடக் கட்டுமானப் பணியாளர் குறித்த சட்டமுன்வடிவைப் பற்றி சில கருத்துக்களை நான் சார்ந்திருக்கின்ற இயக்கத்தின் சார்பாகக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

முதலிலே இந்தச் சட்டமுன்வடிவு 1983-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு கிடப்பிலே வைக்கப்பட்டு தூங்கி வழிந்து, இன்றைய தினம் எழுந்து நடமாட ஆரம்பிப்பதற்காக வந்திருக்கின்றது என்று நான் கருதுகிறேன். இது எந்த நோக்கத்திலே கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்டம் என்று சொன்னால் வரப்போகும் தேர்தல் நேரம் வேகமாக வந்து கொண்டிருக்கின்றது. உறுதி மொழிகளை அள்ளி, அள்ளி எறிகின்ற வகையில் சட்டம் என்ற பெயரால் ஒன்றைக் கொண்டு வந்து நானும் சட்டம் செய்து இருக்கிறேன் நாட்டுக்கு என்று சொல்வதற்காகத்தான் கொண்டுவரப்பட்ட சட்டமாக இது இருக்கின்றதே தவிர, யாருக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கின்றதோ அவர்களுக்குப் பயன்படக்கூடிய சட்டமாகக் கொண்டுவரவில்லை என்பதை நான் முதலிலே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டத்திலே எங்காவது தெளிவு இருக்கிறதா ? அல்லது அந்தத் தொழிலாளிகளுக்கு நல்ல பல காரியங்களைச் செய்ய வேண்டுமென்பதற்கான துணிவாவது இருக்கிறதா என்று கேட்டால், சட்டம் உருவாக்கியவர்களுக்கு, சட்டத்தை நிறைவேற்ற வேண்டியவர்களுக்குத் துணிவும் இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நெஞ்சிலே கை வைத்துப் பார்க்கிறார், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள். அவரை எனக்குத் தெரியும். அவர் ஆரம்பத்திலே சொன்னார், நான் ஒரு கொத்தனார் பேரன் என்று. கொத்தனார் நல்ல கொத்தனாராக இருந்தால் எங்கெங்கே சாந்து வைத்து அடைக்க வேண்டுமோ, எங்கெங்கே ஓட்டை உடைசல் இல்லாமல் இருக்க வேண்டுமோ, அதை எல்லாம் செய்திருப்பார்கள். இதுதான் அண்ணா அவர்கள் கற்றுத் தந்தது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் தாத்தா கட்டின பட்டீஸ்வரம் கோவில் கோபுரம் இன்றும் அப்படியே சிறப்பாக இருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் துணைத் தலைவர் அவர்களே, தாத்தா சிறந்த கொத்தனார் என்பதிலே யாருக்கும் ஆட்சேபனை இல்லை. பேரன் நிலைமை என்ன என்பதுதான் எங்களுக்குச் சந்தேகம்.





திரு. கே. சௌந்திரராசன் : நான் அதையே குறிப்பிட விரும்புகிறேன். தாத்தா கொத்தனார் நல்ல வேலை செய்திருக்கிறார். அதனாலேதான் ஒரு ஸ்டேஷன் மாஸ்டராக வளர்ந்து தொழிலாளர் நலத் துறையில் மிகப் பெரிய பெயர் பெற்று இன்றைய தினம் தொழிலாளர் நலத்துறை அமைச்சராக இருக்கிறார் பேரன். தாத்தா போட்ட விதை அந்த அளவிற்கு வந்திருக்கிறது. பேரன் போடுகிற இந்தச் சட்டத்திலே எவ்வளவு ஓட்டைகள் இருக்கின்றன என்பதை இன்றைய தினம யாருக்காக அவர்கள் இந்தச் சட்டத்தையே உருவாக்குகிறார்களோ, அவர்களே நாளையதினம் பேரணி நடத்த இருக்கிறார்கள் என்பது எடுத்துக் காட்டும். முன்னாள் நீதிபதி திரு. கிருஷ்ண ஐயர் அவர்கள் கூட இந்தச் சட்டத்தைப் பற்றி கருத்துக்களைத் தெரிவிக்கும்போது, இதில் எத்தனை ஓட்டைகள் இருக்கின்றன என்பதற்கு பல்வேறு ஆதாரங்களை இங்கே தந்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் விட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட இந்தச் சட்டத்தையும் கொடுத்துவிட்டு, இதற்கு அமெண்ட்மென்ட்-டும் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், எந்த அளவுக்கு அவசரத்தோடு இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அதற்கு அவரே அமெண்ட்மென்ட் கொண்டு வர வேண்டிய அளவிற்கு நிலைமை இருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்கிற பொழுது இந்தச் சட்டத்திலே தெளிவு இல்லை, துணிவு இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

யாருக்காக இந்தச் சட்டம் ? 50 பேர்கள் வேலை செய்தால் அவர்களுக்கு உண்டு என்று சொல்கிறார்கள். சொந்தமாகக் கட்டிடம் கட்ட ஆரம்பித்தால் அதற்குப் பொருந்தாது என்று சொல்கிறார்கள். மத்திய சர்க்கார் நிறுவனங்கள் அத்தனையையும் கட்டுப்படுத்தாது என்று சொன்னால் வேறு யாருக்காக இந்தச் சட்டம் ? மாண்புமிகு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி துணைத் தலைவர் அவர்கள் கூறியதைப்போல் 25 இலட்சம் பேர்களுக்கு வாழ்வளிக்க வேண்டிய ஒரு சட்டம் 2,000 பேர்களுக்குக் கூட பயன்படாது என்று சொன்னால், நான் குறிப்பிட விரும்புவதெல்லாம், இந்தச் சட்டம் தேர்தலிலே நீங்கள் சொல்வதற்குப் பயன்படக் கூடிய ஒரு சட்டமே தவிர நாட்டு மக்களுக்கு ஏற்ற சட்டம் அல்ல என்பதுதான்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும் நான் அதிகம் உள்ளே சென்று பார்க்க விரும்பவில்லை. காரணம் நேற்றும் இன்றைய தினமும் பல்வேறு உறுப்பினர்கள் இந்தச் சட்டத்தைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டும், இந்தச் சட்டத்தில் எதுவும் இல்லை, பெயர்ப் பலகைத்தான் இருக்கிறது என்று சொல்லிவிட்டார்கள். நான் இந்தச் சட்டத்தைப் பற்றி குறிப்பிட வேண்டுமானால் இந்தச் சட்டம் யாருக்காக இயற்றப் படுகிறது என்று நீங்கள் குறிப்பிடுகிறீர்களோ, அவர்களுக்கு இது ஒரு

கானல் நீர், இது ஒரு மாய மான். எதிர்காலத்திலே ** பெரும் பெரும் கட்டிட அதிபர்களை மிரட்டுவதற்கும் பயன் படுகின்ற ஒரு சட்டமாக இருக்குமே தவிர, அதற்கு வழி வகுக்குமே தவிர, நிச்சயமாக நாட்டு மக்களுக்கு, கட்டிடத் தொழிலாளர் களுக்குப் பயன்படக் கூடிய சட்டமே அல்ல என்பதைக் கூறி நான் சார்ந்திருக்கிற * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது எல்லாம் இப்போது வேண்டாம். திரு. சௌந்திரராசன் ** என்று சொன்னதும், நான் சார்ந்திருக்கிற என்பதற்குப் பின் அவர்கள் குறிப்பிட்டதையும், தொடர்ந்து நடந்த விவாதம் அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அடுத்து அமைச்சர் பேசுவார்.

[பிற்பகல் 1-00]

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திலே கலந்து கொண்ட 11 மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டம் 1983-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அறிமுகப்படுத் திய போதே அரசின் சார்பாக சொல்லப்பட்டது. நாங்கள் இப் போதே இதை ஆய்விற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை. அவகாசம் தருகிறோம்; உங்களுடைய கருத் துக்களை எல்லாம் சொல்லுங்கள். அந்தக் கருத்துக்களை எல்லாம் மனதிலேகொண்டு நாங்கள் திருத்தங்களைக் கொண்டு வருகிறோம் என்று சொன்னோம். எனவே தான் இப்போது ஆய்விற்கு எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்லப்பட்டது. அதுதான் காலதாமதத்திற்குக் காரணம். இந்த அரசு அன்று சொன்னதை இன்று நிறைவேற்றுகிறது. இந்த இடைக் காலத் திலே பல்வேறு தலைவர்கள், தொழிற்சங்கங்கள், உச்ச நீதி மன்ற ஓய்வுபெற்ற நீதிபதி திரு. கிருஷ்ண அய்யர் அவர்கள் உள்பட எல்லோரும் சொன்ன கருத்துக்களை ஏற்று நாங்கள் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறோம் என்ற காரணத் தினால், இதை மீண்டும் செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டிய தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டம் விரைவாக அந்தத் தொழிலாளர்களுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதிலே இந்த அரசு அக்கறையாக இருக்கிறது.

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்த உடனே கட்டிடத் தொழிலாளர்களுக்காக தொழிற் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அதை புரட்சித் தலைவர் அவர்கள் ஆரம்பிக்கச் சொன்னார். எடமலை என்பவர் தான் பொதுச் செயலாளராக போடப்பட்டார். அந்தத் தொழிற் சங்கச் சட் டங்களை என் கையால் எழுதினேன் என்பதைப் பெருமையாகச்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





சொல்லிக் கொள்கிறேன். இதற்கெல்லாம் காரணமாக இருந்தவர் புரட்சித் தலைவர் அவர்கள். ஒரு குடும்பத்தில் நான்கு பேர்கள் இருப்பதாக வைத்துக்கொண்டாலும் 25 இலட்சம் தொழிலாளர் கள் என்றால் ஒரு கோடி மக்கள் இந்தச் சட்டத்தின் வாயிலாக பலனை பெறப் போகிறார்கள். இந்தச் சட்டம் அமலுக்கு வந்த பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள், தொழிற்சங்கத்தைச் சேர்ந்த வர்கள், மற்றவர்கள் எல்லாம் கொடுக்கிற கருத்துக்களைப் பெற்று அதற்குப் பின்னாலே வேண்டிய திருத்தங்களை இந்த அரசு கொண்டுவரும் என்பதையும் உறுதி மொழியாக இந்த நேரத் திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போதே 14-க்கு மேற்பட்ட திருத்தங்கள் கொண்டு வந்திருக்கிறோம். நாங்கள இதுதான் முடிந்த முடிவு, இதற்கு மேலே எந்தத் திருத்தமும் கொண்டு வரப்போவதில்லை என்று சொல்லவில்லை. இந்தியா வில் வேறு யாரும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவில்லை. நாங்கள் தான் கொண்டு வந்திருக்கிறோம். நான் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம், நடைமுறையில் என்னென்ன திருத்தங்கள் வேண்டுமென்று அடுத்த பட்ஜெட் செஷன் நடக் கிறபோது சொல்வீர்கள், அவற்றைக் கேட்டு இந்த அரசு புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் இயங்கக்கூடிய அரசு, அந்தத் திருத்தங்களைக் கொண்டு வரும் என்பதைச் சொல்லிக்கொள் கிறேன். அப்படி இல்லையென்றால் அடுத்த ஆண்டு கொண்டு வரும். இல்லையென்றால் தொடர்ந்து எந்தெந்த ஆண்டுகளில் சொல்கிறீர்களோ, தொடர்ந்து 5 ஆண்டு காலத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் தேவையான திருத்தங்களைக் கொண்டு வரும், என் பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இந்தச் சட்டம் யாருக்கும் உபயோகப்படாது என்று சொன் னார்கள். நான் இந்த மன்றத்தில் சேலஞ்சாகச் சொல்கிறேன். இருக்கிற 22 மாநிலங்களில் நம் மாநிலம் போக 21 மாநிலங் களில் எந்த மாநிலத்தில் இவ்வளவு தீவிரமான சட்டங்களைக் கொண்டு வந்து விடுகிறார்கள் என்பதைப் பார்ப்பதற்கு நான் உயிரோடு இருக்க வேண்டுமென்று கருதுகிறேன். யாரும் கொண்டு வரமுடியாது. அதை நான் தெளிவாகச் சொல்கிறேன். அவ்வளவு தீவிரமான சட்டத்தை இப்போது நாம் கொண்டு வந்திருக் கிறோம். இது என்னுடைய கருத்து. ஏனென்றால் இதற்காக புரட்சித் தலைவர் அவர்களும், நானும், தொழிலாளர் நல இலாக்காவைச் சேர்ந்தவர்களும், சட்டத்துறையைச் சேர்ந்தவர் களும் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும், மற்றவர்களும் எல் லோரும் நிரம்ப 'ஸ்லீப்லெஸ் நைட்ஸ்' தூக்கமில்லாத இரவுகளைச் செலவு செய்து தான் இதை உருவாக்கி இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்தச் சட்டத்தைப் பற்றிப் பேசிய உறுப்பினர்கள் தீவிரமாகப் பேசினார்கள். திரு. ரகுமான்கான் பெயரை சொன்னால் அவர்க் கள் உடனே எழுந்திருக்கமாட்டார்கள் என்றால் நான் சொல் வதற்குத் தயாராக இருக்கிறேன். இதே தீவிரத்தை திராவிட முன்

னேற்றக்கழகம் ஆட்சியில் இருக்கும்போது காட்டி, இந்தச் சட்டத்தைக்கொண்டு வந்து இருந்தால், அதை இம்ப்ரூவ் செய்கிற வகையில் நாம் இப்போது திருத்தங்களைக் கொண்டு வந்து இருக்கிற வாய்ப்பாக இருக்கும். அப்போது நீண்ட தூக்கத்தில் இருந்து விட்டார்கள்.

இப்போது திரு. ஹேமச்சந்திரன் போன்றவர்கள், திரு. கருப்பையா போன்றவர்கள் பேசினார்கள். இந்தச் சட்டம் யாருக்குப் பயன்படப்போகிறது என்று சொன்னால், ஒரு இரண்டாயிரம் பேருக்குத்தான் பயன்படும் என்று சொன்னார்கள். (குறுக்கீடு) பெயரைச் சொல்லி விட்டேன் என்பதற்காக எழுந்திருக்க வேண்டாம். நான் பேசி முடித்த பின்னர் உங்கள் கருத்துக்களைச் சொல்லலாம். திரு. கருப்பையா போன்றவர்கள், திரு. ஹேமச்சந்திரன் போன்றவர்கள் சார்ந்த கட்சி இப்போது இரண்டு மாநிலங்களில் நாட்டை ஆண்டு வருகிறது. அந்த இரண்டு மாநிலத்திலும் ஏன் இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவில்லை. இங்கே சொல்கிறார்கள், நீங்கள் 2,000 பேருக்கு பயன் அளிக்கக் கூடிய வகையில்தான் இந்தச் சட்டத்தைக்கொண்டு வந்து இருக்கிறீர்கள் என்று நான் கேட்கிறேன், அதைக்கூட நீங்கள் கொண்டு வரவில்லையே ? இதைக் கொண்டு வருவதற்கு நாங்கள் எவ்வளவோ சிரமப்பட்டு இருக்கிறோம். இதிலே ஓட்டை உடைசல்கள் இருந்தால் அதைத் திருத்திக்கொள்ளலாம், சீர்படுத்திக் கொள்ளலாம். அதற்கான தெளிவான வகையில் ஆலோசனைகளைச் சொல்லாமல், என்னை எப்படியாவது ‘ அக்யூஸ் ’ செய்ய வேண்டும், திட்ட வேண்டும் என்ற முறையில் பேசியிருக்கிறீர்கள்.

திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசும்போது பெண்களைப் பற்றிச் சொன்னார்கள். எக்காரணத்தைக்கொண்டும் 6 மணிக்கு மேல் பெண்கள் வேலை செய்வதை அனுமதிக்க முடியாது. பெண் தொழிலாளி என்றால் காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரைதான் வேலை செய்ய முடியும். அதற்கு மேல் வேலை செய்யலாம் என்பதற்கு ஏதேனும் ஒரு லூப் ஹோல் இருந்தால் அதை வைத்துக்கொண்டு, ஏதாவது காரணம், காட்டி அவர்களை வேலை வாங்கிவிடக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம். ஆகவே, அதை அரசு ஏற்றுக்கொள்ளாது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் மற்றவர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கும் நான் பதில் சொல்லிவிடுகிறேன். அவர்கள் 6 வாரகாலம் வேலை இல்லாமல் இருந்தால் யார் ஊதியம் கொடுப்பார்கள் என்று என்னோடு தோளோடு தோள் நின்று, தொழிலாளர்களுக்காக தியாகம் செய்த திரு. கருப்பையா அவர்கள் கேட்டார்கள். “ It was a shock to me ”. “ It was a shock to my heels ” 6 வார காலம் என்று நாங்கள் சொல்லியிருக்கிற அதே நேரத்தில், அவர்களுக்கு மெட்டர்னிடி பெனிபிட் ஆக்ட்.



பொருந்தும் என்று சொல்லியிருப்பதால், அந்தக் காலத்திற்கு அவர்களுக்கு நிச்சயமாக ஊதியம் உண்டு என்று பொருள். அது அவர்களுக்கும் தெரியும். ஆனால் தன்னுடைய பெயர் பேப்பரில் வரவேண்டும் அல்லவா ? அதற்காக இப்படிச் சொல்லியிருக்கிறார். ஆகவே, அந்த 6 வார காலத்திற்கு அவர்களுக்கு சம்பளம் கிடைக்கும். (குறுக்கீடுகள்) குற்றம் சொல்லவேண்டும் என்பதற்காக இப்படிச் சொல்ல வேண்டாம்.

அதைப் போலவே, 50 பேர்களுக்கு மேல் உள்ள இடங்களில் தான் இது பொருந்தும் என்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். அதை 20 பேர் என்பதாகக் குறைத்து தான் அறிவிப்பு கொண்டு வரப்போகிறோம். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாச் சட்டங்களிலும் இருக்கின்றன. நாங்கள் புதிதாக எதையும் செய்து விடவில்லை. பாக்டரிஸ் ஆக்ட்டில் இருக்கிறது. பவர் இருந்தால் 10 பேருக்கு மேல் இருந்தால் பொருந்தும் என்றும், பவர் இல்லை என்றால் 20 பேருக்கு மேல் இருந்தால் பொருந்தும் என்றும் இருக்கிறது. அதைப்போலவே இ.எஸ்.ஐ. ஆக்டிலே 20 பேருக்கு மேல் இருந்தால் பொருந்தும் என்று இருக்கிறது. பி.எப். ஆக்ட்டிலும் 20 பேருக்கு மேல் இருந்தால் பொருந்தும் என்று இருக்கிறது. அதற்கும் கீழே உள்ளவர்களுக்கு இந்தச் சட்டத்தைப் பொருந்துமாறு செய்யவேண்டும் என்று கொண்டு வந்தால், பைனான்சியல் பர்டனை அவர்களால் தாங்க முடியாது என்று அரசு இப்போது கருதுகிறது. ஆனால் இந்தச் சட்டத்தை அமல்படுத்திய பின்னால், நடைமுறையில் வருகிற நிலைமைகளைப் பார்த்து இன்னும் குறைக்க முடிந்தால், அப்போது அதைப் பரிசீலித்து அரசு முடிவு எடுக்கத் தயாராக இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் இன்ஷூரன்ஸ் பற்றிச் சொன்னார்கள். இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு 41-வது விதியிலே இடம் இருக்கிறது. எனவே, அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியது இல்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பழனியப்பன் (தி.மு.க.) அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஒரு தொழில் அதிபர் மீது குற்றம் சாட்டப்பட்டால் அவர் வாதம் செய்து வழக்கு மன்றத்திற்குச் சென்று நான் இன்னாரிடத்தில் தான் இதற்கான பொறுப்பைக் கொடுத்து இருக்கிறேன். அவர் தான் இந்தத் தவறுக்குக் காரணம், அவர்தான் இதற்குப் பொறுப்பு என்று சொல்லி தப்பித்துக் கொண்டு விடலாம். அந்த முதலாளி சொல்கிற சாட்சியங்களைத் தான் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, முதலாளியே இதற்குப் பொறுப்பாகவேண்டும் என்று கேட்டார்கள். அங்கே நடக்கும் எல்லாத் தவறுக்களுக்கும் அவரையே குற்றவாளி என்று வைத்து விசாரிக்கவேண்டும், எக்காரணம் கொண்டும் விட்டு விடக்கூடாது என்று சொன்னார்கள். நான் ஒரே கருத்தை

[திரு. எஸ். இராகவானந்தம்] [1984 அக்டோபர் 10

மட்டும் சொல்ல விரும்புகிறேன். எல்லாவற்றிற்கும் முதலாளியே பொறுப்பு என்று சொல்லமுடியாது. அவருக்குக் கீழே இருப்பவர்களுக்கு அவர் பொறுப்பை ஒப்படைத்து இருக்கிறார். ஆகவே, அந்தந்தப் பிரிவுகளுக்கு பொறுப்பானவர்கள் அந்தத் தவறுக்கு பொறுப்பாவார்கள். ஆகவேதான் இப்படி நாங்கள் செய்து இருக்கிறோம். பாக்டரி ஆக்ட் 101-வது பிரிவிலே இருப்பதைத் தான் நாங்கள் சொல்லியிருக்கிறோம்.

(பிற்பகல் 1-10)

Section 101 of the Factories Act reads as follows: ". . . . exemption of occupier or manager from liability in certain cases."

அதைத்தான் இதில் இம்போர்ட் செய்து போட்டிருக்கிறோம். என்னுடைய கையிலே இருக்கிற புத்தகத்தில் 62-வது பக்கத்தில் இது இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அருமைத் தோழர் நான் 7, 8 ஆண்டுகளாக ஸ்டேஷன் மாஸ்டராக இருந்த உவரிலிருந்து வரக்கூடியவர் என்ற 'பற்றோடு அவர்களுக்கு இதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து அருமைச் சகோதரர் ரகுமான்கான் அவர்கள் பேசும்போது ஒரு எக்சிகியூட்டிவ் ஆர்டர் மூலமாக போட்டுவிடலாமே; தண்ணீர் கொடுப்பதற்கு, லைட் கொடுப்பதற்கு, கக்கூஸ் வைப்பதற்கு எல்லாம் கூடவா சட்டம் கொண்டுவர வேண்டும் என்றார்கள். ஆம். சட்டம்தான் கொண்டுவரவேண்டும். பாக்டரி ஆக்ட், செக்ஷன் 17 லைட்டிங் பற்றிச் சொல்கிறது: 18 டிரிங்கிங் வாட்டர் பற்றிச் சொல்வது: 19 லட்ரின் பற்றிச் சொல்கிறது; 20 ஸ்பிட் ரூல்ஸ் பற்றிச் சொல்கிறது. இது எல்லாம் சட்டம். எனவே சட்டத்திலே சொல்லியிருப்பதைத்தான் நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். நீங்கள் சொன்னதை எல்லாம் எக்சிகியூட்டிவ் ஆர்டரில் அல்ல, சட்டத்தில் கொண்டு வந்திருக்கிறோம்.

There should be a provision in the Parent Act.

அது சட்டத்தில் இருந்தால்தான் செயல்படுத்த முடியும். பிராசிகியூட் செய்யும்போதும்

Violation of this section of this Act,

என்று சொல்வதற்கு செக்ஷன் வேண்டும். தூக்குத் தண்டனைக்கு கிரிமினல் ப்ரொசிஜர் கோடு 302-வது செக்ஷன் என்று கருதுகிறேன். I am not an expert.



1984 அக்டோபர் 10] [திரு. எஸ். இராகவானந்தம்]

தூக்குத் தண்டனை விதிப்பதற்கும் ஒரு செக்ஷனை—ஐ.பி.சி. 302—காண்பித்துத்தான் ஒருவருக்கு தண்டனை கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இங்கே எக்சிகியூட்டிவ் ஆர்டராக இல்லாமல் சட்டத்தில் செக்ஷன் மூலமாகப் போட்டிருக்கிறோம்.

திரு. நெடுமாறன் அவர்கள் பேசும்போது இன்ஷூரன்ஸ் செய்வதைப்பற்றி இந்த அரசு அறிவித்த தொகை 5 ரூபாய்; ஒன் டைம் பேமென்டாக வாங்க வேண்டுமென்று சொன்னார்கள். அதிலிருந்து இந்த அரசு முன்பு சொன்ன கருத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். இதுபற்றி மறுபரிசீலனை செய்து, இதற்கு வேண்டிய உத்தரவு வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு கோப்பு சென்றிருக்கிறது. அவர்கள் தற்போது மருத்துவ மனையில் இருக்கிறார்கள். இருந்தாலும் அதைப் பார்த்திருப்பார்கள் என்று கருதுகிறேன்; விரைவில் அறிவிக்கப்படும்.

ஆனால் ஒன்று. விபத்துக்குள்ளான கட்டிடத் தொழிலாளர் இறந்தால் எந்த வகையிலாவது அவருக்கு பணம் கொடுக்கக்கூடிய வகையில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுகிறது என்பதை நான் உறுதிமொழியாக தெரிவித்துக் கொள்கிறேன். எப்படியாவது அவர்களுக்குந் தொகை தரப்படும்.

Workmen Compensation Act applies even to a single person.

யாருக்கும் கிடைக்காமல் போகாது, எப்படியாவது எல்லோருக்கும் கிடைக்கும். யாருக்காவது கிடைக்காமல் போய்விட்டால் என்ன செய்வது என்ற அச்சத்திலேதான் ஏற்கனவே அறிவித்திருக்கிறோம். திரு. நெடுமாறன் அவர்கள் சொன்னதைப்போல அதையும் சட்டத்திலே கொண்டு வந்து, எல்லோருக்கும் நிவாரண நிதி அளிக்கின்ற வகையிலே நாங்கள் அறிவித்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சட்டநாத கரையாளர் அவர்கள் சொன்ன கருத்தை எல்லாம் மனதிலே வைத்திருக்கிறோம். அவர்கள் 'பர்டன்' யாருக்கும் வந்துவிடக்கூடாது என்று சொன்னார்களோ என்று நான் அஞ்சுகிறேன். தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டிய சிலவற்றையாவது அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும், பிரின்சிப்பல் எம்பிளாயர், கான்ட்ராக்டர் அல்லது சப்-கான்ட்ராக்டர் போன்றவர்களுக்கு சங்கடம் இருக்கக்கூடாது என்றும் சொன்னார்களோ என்று நான் அஞ்சுகிறேன். ஆனால் ஏற்கனவே இருக்கிற சட்டப்பிரகாரம் அந்த இழப்பீடுகளை அவர்கள் தந்து வருகிறார்கள். இந்தச் சட்டத்தின் மூலம் அல்லது வேறு ஏதாவது சட்டத்தின் மூலம் அவர்களுக்கு கிடைக்காமல் போகுமானால் அதை இந்த அரசு தருவதற்கு வகை செய்கின்ற ஒரு கோப்பு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்குப் போயிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1984 அக்டோபர் 10

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் இதை ஒரு செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்று சொன்னதற்கு முதலிலேயே பதில் சொல்லிவிட்டேன். செலக்ட் கமிட்டிக்கு விட்டால் இன்னும் ஓராண்டுக்குமேல் தாமதமாகிவிடும் என்பதால் அதை நாங்கள் விரும்பவில்லை. உடனடியாக இதை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதால் செலக்ட் கமிட்டிக்கு விடவில்லை.

ஃபாக்டரி ஆக்டில் கூட இந்த ஆண்டு வேலை செய்தால் அடுத்த ஆண்டுதான் 20 நாளைக்கு ஒரு நாள் லீவ் என்று இருக்கிறது. ஆனால் இந்தச் சட்டத்தில் இந்த ஆண்டு வேலை செய்தால் இந்த ஆண்டிலேயே 20 நாளைக்கு ஒரு நாள் லீவ் என்று சொல்லியிருக்கிறோம். அதுமட்டுமல்ல, வாரத்தில் ஒரு நாள் விடுமுறை என்று சொல்லியிருக்கிறோம். வாரத்தில் ஒரு நாள் விடுமுறை என்றால் 'லீவ் வித் வேஜ்'—சம்பளத்தோடு கூடிய விடுமுறை என்று அறிவித்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல. 'ஃபாம்லி பிளானிங்' செய்கிறவர்களுக்கும் ஊதியம் விடுப்பின்போது கொடுக்க வேண்டுமென்று சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். அந்தத் திருத்தங்களை எல்லாம் நீங்கள் பார்த்திருப்பீர்கள் என்று கருதுகிறேன்.

ஒரு முக்கியமான பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் கிளப்பினார்கள். அதாவது எல்லாமே 'அஸாடுவஸ் நேச்சர்' என்பது அவருடைய கருத்து.

ஆனால் நம்மைப் பொறுத்த வரையில் 'ஹசார்டஸ்' 'நான். ஹசார்டஸ்' என்று பிரித்திருப்பது யார் யாருக்கு என்று சொல்லுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். யார் ஹசார்டஸ் என்று பிரிக்கப்பட்டுள்ளனரோ, அப்படி பிரிக்கப்படாதவர்கள் எல்லாம் நான்-ஹசார்டஸ் என்று அர்த்தம். நான் மாண்புமிகு நெடுமாறன் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். இந்த பிரிவின்படி எத்தனையோ தொழிலாளர்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தும் என்பது மட்டும் தான் இந்தச் சட்டம். ஹசார்டஸ் என்று சொன்னால், எந்த ஒரு தொழிலாளிக்கும் அது பொருந்தும். நம்முடைய ஹேமச்சந்திரன் அவர்களுக்கும் சொல்லிக்கொள்கிறேன். நான் கொடுத்திருக்கிற முதல் திருத்தத்திலே இது தான் பொருள்.

Even a single worker—if he is employed, he is entitled to have all the b:nefits of this section.

நான்-ஹசார்டஸ் என்று வரும்போது 50 என்று இருப்பதை 20 ஆக குறைப்பதாக இந்த அரசு சொல்லியிருக்கிறது. எனவே, நல்ல எண்ணத்தோடு தான் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். திருத்தங்களையெல்லாம் நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். இந்தத் திருத்தங்கள் எல்லாம் தன்மை செய்வதற்காக, கட்டாயம் லைசன்சு பெற வேண்டும்.



1984 அக்டோபர் 10] [திரு. எஸ். இராகவானந்தம்]

ரிஜிஸ்ட்ரேஷன் செய்ய வேண்டுமென்று, இன்னென்ன வேலை
கள் செய்யப் போகிறோம். அந்தந்த இடத்திலே பிளேஸ் ஆப் ஒர்க்
கிலேயே சொல்லவேண்டும். ஆங்காங்கே என்னென்ன வேலை
செய்யப்போகிறோம், எத்தனை நாட்களுக்கு செய்யப்போகி
றோம். எத்தனை தொழிலாளர்கள் செய்யப் போகிறார்கள்.
அவர்களுடைய ஊதியம் என்ன, காஸ்ட் என்ன, எப்போது முடி
யும் என்று நோட்டீஸ் போர்டு போடவேண்டும். ரிஜிஸ்டர் வைக்க
வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனை இன்ஸ்பெக்டர்
தான் முறையீடு செய்யவேண்டும். தொழிலாளி ஒன்றுமே செய்ய
முடியாது என்று பேசினார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக்
கொள்கிறேன். இன்ஸ்பெக்டர் கொடுத்த உடன் அவர்கள் நட
வடிக்கை எடுத்துக்கொள்வார்கள். நடவடிக்கை எடுத்துக்கொள்கிற
பொறுப்பு இந்தச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படுகிற அதிகாரி
களுக்கே பொருந்தும் என்ற காரணத்தினால் மாண்புமிகு உறுப்
பினர்கள் சொன்ன எல்லா கருத்துக்களுக்கும் நான் பதில்
சொல்லி விட்டேன் என்று கருதுகிறேன். இந்த அரசு கொண்டு
வந்திருக்கக்கூடிய எல்லா திருத்தங்களையும் நல்ல எண்ணத்தோடு
கொண்டு வந்திருக்கிறார்கள். எப்போதுமே தொழிலாளர்களுக்கு
என்று கொண்டுவரக்கூடிய சட்டங்களைச் சொல்லும்போது 'பெனி
பிசியல் லெஜிஸ்லேஷன்' என்று சொல்வார்கள். தொழிலாளர்
நலச் சட்டம் என்று தான் பெயர். அந்த மந்திரிக்குக் கூட தொழி
லாளர் நல அமைச்சர் என்று தான் பெயர். அந்த எண்ணத்தை
வைத்துத்தான் இந்த அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்
கிறார்கள். இந்தச் சட்டத்திற்கு விளக்கம் கொடுக்கிறபோது

The doc:rine of ben:ficial construction should be followed.

என்று சுப்ரீம் கோர்ட் சொல்லியிருக்கிறது. இரு கருத்துக்கள்
ஒரு சட்ட விளக்கத்தில் வருமேயானால், அது தொழிலாளருக்கு
சாதகமான கருத்தைத்தான் சொல்லவேண்டும்.

The doctrine of beneficial construction should be observed.

என்று சுப்ரீம் கோர்ட் சொல்லியிருக்கிற காரணத்தால், இந்தத்
திருத்தங்களை எல்லாம் நல்ல திருத்தங்கள் என்று அரசு
கொண்டு வந்திருக்கிறது. மத்திய அரசைப் பற்றி ஒன்று சொன்
னார்கள். அவர்கள் இந்தச் சட்டத்தில் வரக்கூடாது என்று
சொல்கிறார்கள். மாநில அரசு மூலம் செய்யப்படுகிற எல்லாம்
கட்டுப்படுத்தும். ஆனால் ஒரேயடியாக தப்பித்துவிடக்கூடாது
என்பதற்காகத்தான் கொண்டுவரப்படுகிறது. காண்ட்ராக்டர்கள்
மூலமாக அவர்கள் செய்வார்களேயானால், இந்தச்
சட்டம் பொருந்தும் என்றிருக்கிறது. அவர்கள் தப்பித்துப்

[திரு. எஸ். இராகவானந்தம்] [1984 அக்டோபர் 10

பேர்னாலும் விடுவதாக இல்லை என்பதாலும், இந்தத் திருத்தம் கொண்டு வந்த தைரியத்தையும், இன்சுனிட்டியையும் நீங்கள் பாராட்டவேண்டும். மத்திய அரசு இப்படிச் சொல்கிறார்களே, அப்படி விட்டுவிட்டால், இல்லை இல்லை என்று சொல்லி நாங்கள் எல்லாம் ஆலோசனை செய்து, இல்லை அவர்கள் அவர்களாகவே செய்தால் பரவாயில்லை. ஆனால் கான்ட்ராக்ட் வைத்து செய்தால் They should come within the scope of this Bill என்று, தான் அந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்து எந்த வேலையாக இருந்தாலும், அவர்கள் கான்ட்ராக்ட் மூலமாக செய்தால் இந்த சட்டம் பொருந்தும் என்று இந்தச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தங்களையும் ஏற்று, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரும்படி வேண்டிக்கொள்கிறேன். (குறுக்கீடு).

திரு. துரைமுருகன் : இந்த அவையிலே தவறான தகவல் தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பட்டீஸ்வரம் கோவிலின் கோபுரத்தைக் கட்டியது அவருடைய தாத்தா என்று சொன்னார்கள். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் இருக்கிறார்கள். பட்டீஸ்வரம் கோவில் கட்டி 100, 150 ஆண்டுகள் ஆகியிருக்கும். 150 ஆண்டுகளுக்குள்ளாக கட்டப்பட்டது. அதை என் தாத்தா கட்டினார் என்று இந்த அவைக்கு தவறான தகவலை தரலாமா? மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் எப்போது பட்டீஸ்வரம் கோவில் கட்டப்பட்டது என்பதை இப்போது தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தனிக் கேள்வி போடவும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு கட்டிட கட்டுமானப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்—பல்வகை விதித் துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 44/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.



1984 அக்டோபர் 10]

(பிற்பகல் 1-20)

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

"In clause 2,—

(i) in sub-clause (h),—

(*a*) in item (ii), in sub-item (i), *omit* the expression 'or pertaining to any such controlled industry as specified under the First Schedule to the Industries (Development and Regulation) Act, 1951 (Central Act LXV of 1951).'

(*b*) Re-number *Explanation* to the said sub-clause (h) as Explanation I and after the said Explanation I as so renumbered, *add* the following Explanation, namely:—

'*Explanation II.*—For the purpose of this clause, where an establishment referred to in items (i) to (v) above carries on any work of building construction or work of engineering construction not directly but through any contractor, then, such establishment shall be deemed to be an establishment and the provisions of this Act, shall apply to such establishment and to such contractor and to such work of building construction or work of engineering construction carried on by such contractor on behalf of such establishment';

(ii) in sub-clause (o), in item (ii), *for* the words, 'one thousand rupees' *substitute* the words 'one thousand and six hundred rupees';

(iii) in sub-clause (p),—

(*a*) in sub-clause (ii), *for* the words "carried on" *substitute* the words "carried on otherwise than through a contractor";

(*b*) in sub-clause (iii), *for* the words 'carried on' *substitute* the words 'carried on otherwise than through a contractor';

[திரு. எஸ். இராகவானந்தம்] [1984 அக்டோபர் 10

(iv) in sub- clause (q).—

(*a*) in item (i), *for* the words "carried on" *substitute* the words "carried on otherwise than through a contractor";

(*b*) in item (ii), *for* the words "carried on" *substitute* the words "carried on otherwise than through a contractor";

திரு. ஜே. ஹேமச்சந்திரன்; தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In clause 2, in sub-clause h (ii), *delete* the words "but does not include" and the sub items (i) to (v)".

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 2, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 3 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 6.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 6 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"*Re-number* clause 6 as sub-clause (1) of that clause and after sub-clause (1) as so re-numbered, *add* the following clause, namely :—

(2) No contractor shall undertake or execute any work except under or in accordance with a licence issued in that behalf under the rules made under sub-section (1)".



1984 அக்டோபர் 10]

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 6, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 7, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 8.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 8 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

திரு. இ. சட்டநாத கரையாளர்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"*For* clause 8, *substitute* the following clause, namely :—

"(8) *Building Construction Workers Welfare Board* :—

(1) The Government shall, as soon as may be, constitute a Board to be called State Building Construction Workers Welfare Board which shall be responsible for ensuring all benefits to the Building Construction Workers.

(2) The Board shall constitute such fund as may be needed; and the Government shall prescribe such rules as necessary for collecting contributions from the house builders, contractors and employers."

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

பிரிவு 8 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 9 முதல் 15 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 16.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 16 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்''

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

" *For* clause 16, *substitute* the following clause, namely :—

" 16. *Week by holidays.*—The Government may make rules providing for a day of rest with wages in every period of seven days which shall be allowed to all workers covered by this Act. "

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 16, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 17.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 17 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்''.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

" In clause 17,—

(i) *for* sub-clause (1), *substitute* the following sub-clause, namely.—

" (i) Where an adult worker works for more than nine hours in any day or for more than forty-eight hours in any week or where he is required to work on any day of rest, he shall be entitled to wages at twice his ordinary rate of wages in respect of the overtime work, and in



the case of work done on the day of rest, he shall, at his option, be entitled to twice his ordinary rate of wages or his ordinary rate of wages for such day and to avail himself of a substituted day of rest with his ordinare rate of wages on one of the thee days immediately before or after thy day on which he so works ;

(ii) in sub-clause (2), *for* the portion commencing with the words " he shall be entitled to " and ending with the words " day of rest ", *substitute* the following namely.—

" he shall, at his option, be entitled to, twice his ordinary rate of wages in respect of the work done on the day of rest or his ordinary rate of wages for such day and to avail himself of a substituted day of rest with his ordinary rate of wages on one of the three days immediately before or after the day on which he so works ".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 17 திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 18.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

'' பிரிவு 18 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும் ''.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

" *For* clause 18, *substitute* th following clause, namely :—

" 18. *Annual leave with wages.* :—Every adult worker in any establishment shall be allowed leave with wages for one day for ever twenty days of work performed by him during the calendar year. Every adolescent worker shall be allowed leave with wages for one day for every fifteen days of work performed by him during th calendar year ".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 18, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 19.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி :

"பிரிவு 19 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

மாண்புமிகு திரு. எஸ்.இராகவானந்தம் : : தலைவர் அவர் களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"In clause 19, in sub-clause (2), *omit* the proviso".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 19, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 20 முதல் 30 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 31.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 31 சட்ட முன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"In Clause 31, for the words 'one thousand rupees' *substitute* the words 'two thousand rupees'.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்றது.





பிரிவு 31, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 32 முதல் 38 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 39.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன் னுள்ள கேள்வி :

"பிரிவு 39 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"For clause 39, *substitute* the following clause, namely :—

39. Act not to apply to certain works of building construction intended for residence, if the Government declare to that effect.—Subject to such restrictions and conditions as may be prescribed, the Government may, by notification, declare that nothing contained in this Act shall apply to any work of building construction carried on by any person for the purpose of his residence or for the residence of the members of his family.

*Explanation.*—For the purpose of this section 'family' means the person and his wife or her husband and the children of the person who carries on such building construction.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

In clause 39, *add* the following words at the end "provided the value of the building does not exceed one lakh of rupees"

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களின் திருத்தம் பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 39, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 40.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 40 சட்ட முன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

திரு. ஜெ. ஹேமச்சந்திரன் : பேரவை துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"(1) In clause 40, in sub-clause (8), after the words "Central Act XXXIV of 1948)", *add* the words "The Tamil Nadu Industrial Establishments National and Festival Holidays) Act, 1958 (Tamil Nadu Act XXXIII of 1958)".

(2) In clause 40, after sub-clause (8), *insert* the following new sub-clause (9),

(9) The Government shall by notification form a Welfare Fund for the benefit of the workers as may be specified in such notification".

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வி யுற்றது.

பிரிவு 40 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.



புதிய பிரிவு 41.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"After Clause 40, the following clause shall be *inserted*, namely :—

41. *Insurance of workers.*—The Government may, by notification, direct that every employer shall take out an insurance policy in respect of all or any such classes of the workers employed by him in his establishment for such amount and for such period, as may be specified by Government in such notification so as to cover the risks of accidents, death or holiday injury or disablement or any other calamity which may arise in the course of the employment of such workers in such establishment".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 41 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"Re-number Clause 41 as Clause 42."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 42 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

அட்டவணை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"அட்டவணை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"In the Schedule,—

(i) in item (2), for the expression "high voltage" *substitute* the expression "high voltage of 430 volt and above".

(ii) for item (5), substitute the following item, namely —

"(5) Well sinking, well excavation works".

(iii) *for* items (17) and (18) *substitute* the following namely :—

"(17) Erecting heavy plant equipment".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

அட்டவணை, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 1 சட்ட முன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்."

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

'In clause 1, in sub-clause (1), *for* the expression "1983" *substitute* the expression "1984".

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

"In clause 1, in sub-clause (4) (i), *delete* the words occurring after the words engineering construction".

திருத்தம் முறைப்படி வழி மொழியப்பெற்றது.



திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைமுன்னுள்ள கேள்வி :

"முகப்புரை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்".

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

'In the enacting formula, for the expression "Thirtyfouth year", *substitute* the expression "Thirtyfith year".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

*(பிற்பகல் 1-30)*

**The Hon. Thiru S. Raghavanandam** : Sir, I move that :

"The Tamil Nadu Building and Construction Workers (Conditions of Employment and Miscellaneous Provisions) Bill, 1985 (L.A. Bill No. 44 of 1983) as amended be passed."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன் வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின், இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 11-10-1984 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 7. பேரவை முன்வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

147. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் 1980–81 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. (ஆங்கிலம்) (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு—அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41-வது பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

148. 1976–77 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மூன்றாம் ஆண்டு அறிக்கையும் சிறப்பு அம்சங்களும் (தமிழ், ஆங்கிலம்) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

149. 1977–78 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் நான்காம் ஆண்டு அறிக்கையும், சிறப்பு அம்சங்களும் (தமிழ், ஆங்கிலம்) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது):

150. 1978–79 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் ஐந்தாம் ஆண்டு அறிக்கையும், சிறப்பு அம்சங்களும் (தமிழ், ஆங்கிலம்) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

151. தமிழ்நாடு ஒழுக்கக் கண்காணிப்பு குழுவின் பதினாறாவது ஆண்டறிக்கை. (ஏப்ரல் 1981 முதல் மார்ச்சு 1982 வரை) (ஆங்கிலம்).



152. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் 1980–81 ஆம் ஆண்டிற்கான ஏழாம் ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

22. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் 1976–77 ஆம் ஆண்டிற்கான மூன்றாம் ஆண்டறிக்கையினை பேரவை முன் தாமதித்து வைப்பதற்கான காரணங்கள்.

23. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் 1977–78 ஆம் ஆண்டிற்கான நான்காம் ஆண்டறிக்கையினை பேரவை முன் தாமதித்து வைப்பதற்கான காரணங்கள்.

24. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் 1978–79 ஆம் ஆண்டிற்கான ஐந்தாம் ஆண்டறிக்கையினை பேரவை முன் தாமதித்து வைப்பதற்கான காரணங்கள்.

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

2522/ ... 2812

வெளியீடு 26-3-85] [Issued 26-3-85

16 MAY 1985

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை, அக்டோபர் 11, 1984 - தொகுதி LXVIII எண் 4

Thursday the 11th October 1984 - Volume LXVIII No 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை: ரு. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

## உள்ளடக்கம்

11—10—1984


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்—விடைகள் :** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. | 309—360 |
| **2. தகவல் கோரல் :** | |
| (அ) தஞ்சை கிருஷ்ணா டாக்கீஸ் இடிந்து விழுந்ததால் ஏற்பட்ட மரணம் .. .. | 360—361 |
| (ஆ) தமிழக முதல்வர் உடல்நலம் குறித்து அறிக்கை வைத்தல் .. .. .. | 388—389 |
| **3. ஒத்திவைப்புத் தீர்மானம் :** | |
| தஞ்சை மாவட்டத்தில் நெல்லை விற்க முடியாமல் விவசாயிகள் அவதிப்படுவது .. | 362—369 |
| **4. அறிவிப்புகள் :** | |
| (அ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை 1978–79 .. .. .. | 380 |
| (ஆ) பேரவை அலுவல் .. .. .. | 427—428 |
| **5. அரசினர் சட்ட முன்வடிவு :** | |
| சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்—கழிவு நீரகற்று (திருத்த) சட்ட முன்வடிவு, 1984 .. .. .. .. .. | 380—381 |
| **6. தனியார் அலுவல்கள் :** | |
| தனித் தீர்மானம்—மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்குதல்—தொடர்ச்சி .. | 381—388<br>389—426<br>429—432 |
| திரு. கு. ரமணி | 382—388<br>390—398 |
| திரு. குமரி அனந்தன் .. .. | 398—406 |
| திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் .. | 406—415 |
| திரு. கே. சௌந்திரராசன் .. .. | 415—426 |
| திரு. பாபு ஜனார்த்தனன் .. .. | 429—432 |
| **7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் ..** | 43 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984 அக்டோபர் 11, வியாழக்கிழமை,
புரட்டாசி 26, ரக்தாட்சி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றில் அவர்க்கு".

சோம்பலில் அகப்பட்டுச் சிறந்த முயற்சி இல்லாதவராய் வாழ்கின்றவர்களுக்குக் குடியின் பெருமை அழிந்து குற்றம் பெருகும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் வேட்டி, சேலைகள் வழங்கப்பட்ட நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் எண்ணிக்கை

41—(*வினா எண் 21381) திரு. எம். எஸ். மாணிக்கம், திரு. செ. செம்மலை, திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் எத்தனை பேர்களுக்கு வேட்டி, சேலைகள் வழங்கப்பட்டுள்ளன ?

(ஆ) தகுதியுள்ள அனைவருக்கும் வழங்கப்பட்டுவிட்டதா?

(இ) இல்லையெனில், அனைவருக்கும் வழங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் வரையில் 28,74,089 ஆண்களுக்கு வேட்டிகளும், 34,03,400 பெண்களுக்கு சேலைகளும் வழங்கப்பட்டுள்ளன. முன்பு கணக்கு எடுத்து விட்டுபோன 14,799 ஆண்களுக்கு வேட்டிகளும், 23,865 பெண்களுக்கு சேலைகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 63,16,153 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) ஆம்.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்தைப் பொறுத்தவரை இது இரு வகைகளில் நன்மை பயக்கக்கூடிய திட்டமாக இருக்கிறது. ஒன்று நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கிற வகையிலும் அதே சமயத்தில் நிலம் அற்ற விவசாய கூலிகளுக்கு உதவுகிற திட்டமாகவும் இது அமைந்து இருக்கிறது. எனவே, இந்தத் திட்டத்தை நிரந்தரமாக ஆண்டுக்கு ஒரு முறை இப்படி வழங்குவதற்கு அரசு முன்வருமா என்ற அந்த விவரத்தையும், ஒட்டுமொத்தமாக இப்போது கொடுக்கப்பட்ட இந்த வேட்டி, சேலைகளுக்கு அரசு எவ்வளவு தொகை செலவு செய்து இருக்கிறது என்ற அந்த விவரத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வறட்சி நேரத்தை ஒட்டி இருநோக்கங்கள் நிறைவேற வேண்டும் என்பதற்காக நிறைவேற்றப்பட்டது. வறட்சி நேரத்தில் வேலை வாய்ப்பு இல்லை, வருமானம் இல்லை, ஆகவே, அவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதை ஒட்டி சிலபல தனிச் சலுகைகளை மேற்கொள்ளுவதை ஒட்டி சென்ற ஆண்டு சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10 கோடி ரூபாய் அளவுக்கு கைத்தறி சேலை, வேட்டி வாங்கி வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அடிப்படையில் தான் அதுவும் நிலம் அற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்குகின்ற முறையில் நான் முதலில் சொன்னதைப் போல 63,16,153 பேருக்கு வழங்குவதற்கு முதலில் ரூ. 10 கோடி, அதற்குப் பிறகு சில கோடி ரூபாய்கள் வழங்கப்பட்டது. அதனுடைய முழு விவரம் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகிறது. இதை நிரந்தர திட்டமாக ஆக்குவதற்கு இல்லை.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேட்டி, சேலை வழங்குவது, குறிப்பாக நகராட்சிப் பகுதிகளிலுள்ள ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை என்பது உண்மையா? அதற்கான காரணம் என்ன என்பதை அறிவிக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் கிராமப்புறங்களில் இருக்கிற நிலம் அற்ற விவசாயிகள் ஏழைகளாக இருப்பவர்கள் வறுமையில் வாடுகிறார்கள் என்று அவர்களுக்கு வழங்கப்பட்டது. அதற்கு பிறகு நகராட்சி பகுதிகளில் சிலபல இடங்களில் நிலம் இருந்து அங்கே விவசாயக் கூலி வேலை செய்கின்ற தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்று அரசின் கவனத்திற்கு வந்ததற்கு பிறகு அப்போதே ஆணையை மாற்றி நகராட்சிகள்,



நகரியங்கள், மற்றும் மாநகராட்சி எல்லைகளில் வசிக்கும் நிலம் அற்ற விவசாயத் தொழிலாளர்கள் எவ்வளவு பேர் என்ற புள்ளி விவரம் சேகரித்து வேட்டி, சேலை முதலியன இல்வசமாக வழங்கும்படி 1984 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் உத்தரவு இடப்பட்டது.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 63 லட்சம் பேருக்கு வேட்டி, சேலை வழங்கப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால் தமிழகத்தினுடைய மொத்த எண்ணிக்கை 480 லட்சம் தான். அப்படி பார்த்தால் 7 பேரில் ஒருவருக்கு வேட்டி, சேலை கொடுத்து இருக்க வேண்டும். இதில் குழந்தைகள், வசதி படைத்தவர்கள் இவர்களை நீக்கிவிட்டுப் பார்த்தால் 4 பேரில் ஒருவருக்குக் கொடுத்து இருக்க வேண்டும். அப்படிக் கொடுத்ததாகத் தெரியவில்லை. எனவே, இதில் ஏதாவது தவறுகள் நடந்திருக்கின்றனவா என்பதைப் பற்றிக் கண்டறிவதற்காக உயர்மட்டக் குழு ஒன்று போடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 63 இலட்சத்துச் சில்லறை பேர்களுக்குக் கொடுக்கப்பட்டதற்கான புள்ளி விவரங்களை நான் தந்திருக்கிறேன். இது சரியாக இல்லை என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கருதுவார்களேயானால் அதற்கான காரண காரிய விளக்கங்களோடுச் சொன்னால் அதுபற்றிப் பரிசீலனை செய்யச் சொல்லலாம். அவ்வாறில்லாமல் பொத்தாம் பொதுவாகச் சொல்லிவிட்டால் அதில் எந்த விசாரணையையும் செய்ய முடியாது. எங்கேயாவது அப்படிப்பட்ட குறைபாடு இருக்கிறது என்று தெரிந்தால் அதுபற்றிக் கூறினால் அத்தகைய குறைபாடு நடந்ததா இல்லையா என்பதைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே நாம் கேட்கலாம். எல்லா மாவட்டங்களின் கணக்குகளும், மாவட்ட ஆட்சித் தலைவர், ஆங்காங்குள்ள பஞ்சாயத்து அதிகாரிகள், ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தவர்கள், மற்றவர்களின் கணக்குகளின் பேரில் கணக்கிடப்படுகிறது. அவ்வப்பொழுதுகூட விடுபட்டவைகளும் சேர்க்கப்பட்டு 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் வரையில் இந்த வறட்சிக் காலம் நீட்டிக்கப்பட்டு அதுவரையில் கொடுக்கப்பட்டது. அதோடு இது நிறுத்தப்பட்டது.

[1984 அக்டோபர் 11

திரு. கெ. சொக்கலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வேட்டி, சேலை வழங்குவது பற்றி நம்முடைய மாண்புமிகு முன்னவரவர்கள் கூறினார்கள். ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஆணையாளர்கள், மற்ற அதிகாரிகள் இந்த வேட்டி, சேலைகளை வழங்குகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால், சில ஒன்றியங்களில் ஆளுங்கட்சி அமைப்பாளர்களே முன்நின்று அந்த வேட்டி, சேலைகளை வழங்குகிறார்களே............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டு இல்லாமல் துணைக் கேள்வியைக் கேட்க வேண்டும்.

திரு. கெ. சொக்கலிங்கம் : நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. நம்முடைய முன்னவரவர்கள் அரசுப் பணத்தில் கொடுக்கப்படும் இந்த வேட்டி, சேலைகளை ஆணையாளர்களும், மற்ற அதிகாரிகளும் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் சில ஒன்றியங்களில் இப்படிப்பட்ட தவறுகள் நடக்கின்றன. இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் வட்டாட்சியர், துணை வட்டாட்சியர், ஊரக நல அதிகாரி, கிராம நல அதிகாரி முதலியவர்களின் உதவியோடு இந்தத் துணிகள் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கப் பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் மூல மாகவும் வழங்கப்பட்டிருக்கிறது ; அமைச்சர்கள் ஆங்காங்கு பல்வேறு விழாக்களில் கலந்து கொள்ளுகின்றபொழுது வழங்கப் பட்டிருக்கிறது; மாண்புமிகு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள் பலரும் பல விழாக்களில் கலந்து கொண்டு இருக்கிறார்கள். அருமைக்குரிய மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தினர்கூட நான் கலந்து கொண்ட பல்வேறு விழாக்களில் கலந்துகொண்டு வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, வழங்குவதில் ஆணையிடுவது தேர்ந்தெடுப்பது யார் என்றால் மாவட்ட ஆட்சித் தலைவர்தான் செய்கிறார். அவர்களிடத்தில் எல்லாக் கட்சிக்காரர்களும் பட்டியலைக் கொடுத்து, இவர்கள் நிலமற்ற விவசாயிகள் என்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். ஆனால் ஆணையிடுவது மாவட்ட ஆட்சித் தலைவர்தான். அவர்களுக்கு உதவி செய்வதில், திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களும் உதவி செய்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



1984 அக்டோபர் 11]

மாநில அரசு ஊழியர்களுக்குப் போனஸ் வழங்கும் திட்டம்.

42—(*வினா எண் 21897 திரு. தி. கா. நல்லப்பன், திரு. க. வே. வீராணம்பலம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய அரசு ஊழியர்களுக்குப் போனஸ் கொடுத்ததை போல், மாநில அரசு ஊழியர்களுக்கும் போனஸ் கொடுக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மத்திய அரசு ஊழியர்களுக்கு ஊக்க ஊதியம் (போனஸ்) கொடுப்பதைப் போல் மாநில அரசு ஊழியர்களுக்கும் கொடுக்கும் செயற் குறிப்பு தற்போது இல்லை.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ஊழியர்களுக்கு ஊக்க ஊதியம் கொடுப்பதைப் போல மாநில அரசு ஊழியர்களுக்குத் தற்போது கொடுப்பதாக இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். ஏற்கனவே, பல்வேறு மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற பொழுது நம்முடைய மாநிலத்திலே உள்ள அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் குறைவாக இருக்கிறது. ஆகவே, இந்த நிலையிலேயாவது பரிசீலனை செய்து அவர்களுக்கு ஊக்க ஊதியம் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசு 15 நாள் ஊதிய அளவு என்று சென்ற ஆண்டு கணக்கிட்டு ஓரளவிற்கு விதிமுறைகள், சட்ட திட்டங்கள் வைத்துத் தந்து கொண்டு வருகிறது. இந்தியாவில் உள்ள 22 மாநிலங்களிலேயும் இதைக் கடைப்பிடித்து விட்டார்கள் என்று சொல்ல முடியாது ; ஒரு சில மாநிலங்கள் கடைப் பிடித்து வருகின்றன. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலே ஊக்க போனஸ் தரவில்லையே தவிர, வேறு பல மாநிலங்கள் கடைப் பிடிக்காத வேறு சில பல சலுகைகளை வைத்திருக்கிறோம். சில வகைகளிலே சம்பளத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கலாம். இவற்றையெல்லாம் சேர்த்து சீர்படுத்தி செம்மைப்படுத்துவதற்காக ஒரு அறிக்கை கொடுக்க வேண்டுமென்பதற்காக நான்காவது ஊதியக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

[1984 அக்டோபர் 11

(முற்பகல் 9–10.)

நான்காவது ஊதியக் குழுவிலே எல்லா தரப்பினரும் தங்களுடைய கோரிக்கைகளை முழுவதுமாக எடுத்து வைத்திருக்கிறார்கள். எனவே சம்பளம், படி, சலுகைகள் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் ஒரு வரையறைப்படுத்தி அந்த ஊதியக் குழு தெரிவிக்கும் வரையில் நாம் காத்திருக்க வேண்டும். ஆகவே தான் தற்போது அது செயற் குறிப்பில் இல்லை என்று நான் குறிப்பிட்டேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே இருக்கக்கூடிய 22 மாநிலங்களில் அதாவது அனைத்து மாநிலங்களிலும் அவ்வாறு போனஸ் கொடுக்கப்படவில்லை என்றாலும் கூட கேரளா, மேற்கு வங்கம், குஜராத், ஆந்திரா மற்றும் கர்நாடகா போன்ற மாநில அரசுகள் தற்போது கொடுத்துக் கொண்டு வருகின்றன. பரிசீலிக்கின்ற முறையில் குறிப்பாக ஆந்திரா அரசு ஒரு வருடத்திற்கு 200 ரூபாய் என்றும் கர்நாடக அரசு 200 ரூபாய் என்றும், மேற்கு வங்கம் ஒரு மாதச் சம்பளம் என்றும் கொடுக்கிறார்கள். அவ்வாறு பரிசீலிக்கின்ற முறையிலாவது தமிழக அரசு ஊழியர்களுக்கும் போனஸ் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று அந்தப் புள்ளி விவரங்கள் பற்றியெல்லாம் கூட நான்காவது ஊதியக் குழுவினர் பரிசீலித்துப் பார்ப்பார்கள். சம்பளம், படி, மத்திய அரசு கொடுக்கின்ற தன்மை, விலைவாசி ஏற்றங்கள், அண்டை மாநிலங்களில் நிலைமைகள் ஆகிய அத்தனையையும் பரிசீலித்து ஒரு முடிவுக்கு வருகின்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் நான்காவது ஊதியக் குழு வைக்கப்பட்டிருக்கின்றது. இதிலே அரசு ஊழியர்கள், பணியாளர்கள், சார்புப் பணியாளர்கள் ஆகிய அத்தனை பேரும் தங்கள், தங்கள் கருத்துக்களை விளக்கமாக எடுத்து வைத்திருக்கிறார்கள். போனஸைப் பொறுத்த வரையில் சிலபல மாநிலங்கள் தந்திருக்கின்றன என்றும் சிலபல மாநிலங்கள் தரவில்லை என்றும் சொன்னார்கள். அவ்வாறு சிலபல மாநிலங்களில் தந்து சிலபல மாநிலங்களில் தராத வகையிலே கூட, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் சரண் விடுப்பில் ஊதியம், அகவிலைப்படி, நகர ஈட்டுப்படி, மலைவாழ் படி, அரசுப் பணியாளர்கள் சிறப்பு வைப்பு நிதி, ஓய்வுகாலப் பணித் திட்டம், விடுப்புப் பயணச் செலவு போன்றவற்றைக் கொடுத்து வருகிறோம். இப்படிப்பட்ட நிலைமை மற்ற மாநிலங்களில் இல்லை. மத்திய அரசில் கூட இல்லை. ஆகவே தான் இவற்றை எல்லாம் சேர்த்து ஒட்டு மொத்தமாகக் கணக்கிட வேண்டும் என்ற வகையில் அமைக்கப்பட்ட நான்காவது ஊதியக் குழுவின் அறிக்கை சிலபல திங்கள்களிலே வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்குப் பிறகும் குறைகள் இருந்து, ஏதேனும் விடுபட்டுப் போய்இருந்தால் மீண்டும் பரிசீலிக்கலாம். ஆகவேதான் தற்போது செயற் குறிப்பிலே இல்லை என்று நான் குறிப்பிட்டேன்.





திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ஊழியர்களுக்குப் போனஸ் கொடுப்பதைப் போல மாநில அரசு ஊழியர்களுக்கும் போனஸ் நிச்சயமாகத் தர வேண்டும். கடுமையாக உழைக்கின்ற மாநில அரசின் ஊழியர்களுக்கு மற்ற மாநில அரசுகள் கொடுப்பது போல் ஒரு மாதச் சம்பளம் என்ற அளவில் போனஸாகக் கொடுத்தால்தான் அவர்களுக்கு நிறைவு ஏற்படும். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது மற்ற சலுகைகள் எல்லாம் தருகிறோம் என்றும் இது குறித்து ஊதியக் குழுவின் பரிசீலனையில் இருக்கின்றது என்றும் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாதச் சம்பளம் என்ற அளவிலே அவர்களுக்கு போனஸ் கொடுத்தால்தான் அவர்களுக்கு மன நிறைவு ஏற்படும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டத் தொடரிலேயே அது குறித்த நல்ல அறிவிப்பை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மன நிறைவு என்பதற்கு ஒரு எல்லையே கிடையாது. குபேரனுக்குக் கூட மனநிறைவு இல்லை என்றுதான் சாதாரணமாகக் கதைகள் எல்லாம் சொல்கின்றன. ஆனாலும் கூட இருக்கின்ற நிலைமைகளை எல்லாம் ஆராய்ந்து பார்க்கின்றபோது மத்திய அரசு பாதிச் சம்பளம் என்று வைத்திருக்கின்றது. 1,600 ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறுபவர்களுக்கு ஊக்க போனஸ் கிடையாது. 750 ரூபாய்க்குக் கீழே சம்பளம் பெறுகின்றவர்களுக்கு பாதிச் சம்பளம் என்றும் 750-லிருந்து 1,600 ரூபாய் வரை சம்பளம் பெறுகின்றவர்களுக்கும் 750 ரூபாய் பெறுபவர்களுக்கு என்ன போனஸ் கொடுக்கப்படுகின்றதோ

அதேதான் கொடுக்கப்படும் என்ற அளவிலே ஏற்படுத்தி இருக்கிறார்கள். 1,600 ரூபாய்க்கு மேலே சம்பளம் பெறுபவர்களுக்கு போனஸ் இல்லை என்று வைத்திருக்கிறார்கள். அப்படிப் பார்த்தால் 375 ரூபாய்தான் உயர்ந்த பட்சமாக போனஸ் கொடுக்கப்பட்டு வருகின்றது. சில மாநிலங்களில் இங்கே உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னது போல 200 ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். சில மாநிலங்களில் ஒரு மாதச் சம்பளம் என்றும், சிலவற்றில் 15 நாள் சம்பளம் என்றும் போட்டு இருக்கிறார்கள். இவை எல்லாவற்றையும் சேர்த்துப் பரிசீலிக்கின்ற வகையில்தான் ஊதியக் குழு போடப்பட்டிருக்கின்றது. போனஸ் போன்றவை எல்லாம் நான்-பிளான் என்ற அடிப்படையில் தான் வரும். திட்ட வளர்ச்சியின் கீழ் வராது. அதிகமாகச் செலவு பண்ணுகின்ற வகையில் தான் வரும். எனினும் நியாயமான அடிப்படையில் பரிசீலித்து ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்றுதான் நான் குறிப்பிட்டேன்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய நாட்டில் உற்பத்தித் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத்தான் போனஸ் என்ற கொள்கை ஏற்கப்பட்டிருக்கின்றது. அதற்குப் பின்னாலே ஏற்பட்ட பொதுவான எண்ணப் போக்கினுடைய வளர்ச்சி காரணமாகத்தான் அரசு ஊழியர்களுக்கும் போனஸ் வழங்கலாம் என்ற பொதுக் கொள்கை ஏற்கப்பட்டிருக்கின்றது. முற்போக்கு சக்திகளினுடைய முயற்சியால் தான் இந்த ஏற்பாடு பல மாநிலங்களில் அமல்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே இந்தப் பிரச்சினையிலே மன நிறைவு பெறுவது என்ற பிரச்சினை எழவில்லை. அரசு ஊழியர்களை ஊக்கப்படுத்தி அபிவிருத்திப் பணிகளில் அவர்களை அதிகமாக பங்கெடுக்கச் செய்யக்கூடிய வகையில் முற்போக்கான இந்த முயற்சியை அமல் நடத்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசில் கூட முதலிலே உற்பத்தி செய்கிற பொதுவான துறையைப் பொறுத்துதான் இந்த போனஸ் கொடுக்கின்ற தன்மைகள் இருந்தன. அதற்கு பிறகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய மாதிரி, முற்போக்கான கொள்கை உடைய கட்சிகள், தொழிற் சங்கங்கள், மற்றவைகள் எல்லாம் வாதாடி, பல்வேறு வகைகளில் எடுத்துச் சொல்லி, பல்லாண்டுக் காலம் போராடியதற்குப் பிறகு, ரெயில்வே துறை, தபால் தந்தித் துறை, பாதுகாப்பு உபகேந்திரத் துறை ஆகிய



வைகளுக்குத் தருவது என்று வந்து, அதற்குப் பிறகு அரசு ஊழியர்களுக்குத் தருவது என்ற முடிவுக்குச் சென்ற ஆண்டுதான் வந்திருக்கிறார்கள். அதனை ஒட்டி வேறு சில மாநிலங்கள் தந்திருக்கின்றன. பல மாநிலங்கள் இன்னமும் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவேதான் இந்தப் பிரச்சினைகள் எல்லாமே நான்காவது ஊதியக் குழுவுக்கு விடப்பட்டு எல்லாவற்றையும் பரிசீலித்து ஒரு முடிவு எடுத்து, எந்த அளவுக்குச் சலுகைகள் வழங்கலாம், என்ன, என்ன சலுகைகள் வழங்கலாம் என்பதைப் பற்றி முடிவு செய்து, சம்பளம், படி ஆகியவற்றை நிர்ணயித்துக் கொடுத்ததற்குப் பிறகு, திட்டவட்டமான முடிவை, தெளிவான முடிவை அரசு மேற்கொள்ளும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கூறும்போது ஊதிய நிர்ணயக் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது ; அது இது சம்பந்தமாக முடிவு செய்யும் என்றும் சொன்னார்கள். அது முடிவு செய்ய வேண்டிய விஷயங்கள், நம்முடைய அரசு ஊழியர்கள், வாழ்க்கை நடத்துவதற்கு எந்த அளவு ஊதியம் கொடுத்தால், அவர்கள் செம்மையாக வாழ்க்கை நடத்த முடியும் என்பவை பற்றியெல்லாம் கணக்கிட்டு ஒரு தர வாரியாக நிர்ணயிக்க இருக்கிறார்கள். இந்த ஊக்க போனஸ் என்பது இன்றைக்குப் பல மாநிலங்களில் கொடுக்கப்பட்டு, அது சரிதான் என்று ஒத்துக் கொள்ளக்கூடிய வகையிலே மத்திய அரசு கூட கொடுக்கிறது. ஆகவே, வேறு மாநிலங்கள் எல்லாம் கொடுக்கும்போது மத்திய அரசு கூட ஒத்துக் கொண்ட கொள்கையை நம்முடைய மாநில அரசு தொழிலாளர் நலனிலே அக்கறை இல்லாததன் காரணமாக அமுல் நடத்த மறுக்கிறதா ? அந்த மாநிலங்களுக்கெல்லாம் நம் மாநிலம் பின்தங்கி இருப்பதற்கு என்ன காரணம் ? மத்திய சர்க்கார் கொடுக்கும்போது, நம் ஊழியர்களுக்கு ஊக்க போனஸ் கொடுத்து, ஊக்கம் கொடுத்து, திறமையான பணியை அவர்களிடத்திலேயிருந்து எதிர் பார்க்காமல் இருப்பது நியாயம் தானா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு, மற்றும் ஒவ்வொரு மாநிலத்தினுடைய சூழ்நிலைகள், தன்மைகள் எல்லாம் வேறு, வேறு. இப்பொழுது இந்தப் பிரச்சினைகள் வருகிற நேரத்தில் நான்காவது ஊதியக் குழுவை, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவில் அமைத்திருக்கிறோம். அதே மாதிரி ஊதியக் குழு அமைக்கிற வாய்ப்புகள் வேறு பல மாநிலங்களில் முடிந்திருக்கும். சிலவற்றில் நடுநிலையில் இருக்கும். சிலவற்றில் இனிமேல் தான் செய்ய வேண்டியிருக்கும். நமக்கு இரண்டும் ஒன்றாக வந்ததன் காரணமாக, எல்லா கோரிக்கைகளையும் ஒன்றுசேர்த்து பார்க்க வேண்டுமென்று தான் நான்காவது ஊதியக் குழுவிடத்திலே விட்டிருக்கிறோம். அதனுடைய முடிவை எதிர் பார்க்கிறோம்.

## திரைந்த ரப்பர் பாலை கிரீப்பாக மாற்றி விற்பனை செய்யும் திட்டம்.

43—(*வினா எண் 16220) திரு. டி. மணி : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரைந்த ரப்பர் பாலை கிரீப்பாக மாற்றி விற்பனை செய்தால் கிடைக்கும் விலை, திரைந்த பாலை அப்படியே உறைய வைத்து விற்பனை செய்தால் கிடைப்பதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அரசு ரப்பர் தோட்டத்தில் கிரீப்பாறை கோட்டத்தில் ஆயிரக்கணக்கான டன் திரைந்த பால் இருந்தும், அவற்றை கிரீப்பாக அடிக்கத் தேவையான இயந்திரம் இருந்தும், என்ன காரணத்தினால் திரைந்த பாலை கிரீப்பாக மாற்றாமல் அப்படியே ஏலத்தில் விடப்படுகிறது ?

(இ) இதனால் அரசுக்கு ஆண்டு தோறும் ஏற்படும் இழப்பு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ), (ஆ) மற்றும் (இ) : பொதுவாக மின்சார பற்றாக் குறையினால் தமிழ் நாட்டில் தொழில்கள் பெரும்பாலும் சென்ற ஆண்டு பாதிக்கப்பட்டன. இந்தப் பாதிப்பு அரசு ரப்பர் தோட்டத்துக்கும் பொருந்தும். கீரிப்பாறை ரப்பர் தோட்டத்தில் திரைந்த பாலை கிரீப் ஆக அடிக்கத் தற்பொழுது 2 இயந்திரங்கள் உள்ளன. மின்சார பற்றாக்குறையினாலும், இயந்திரங்களுக்கு அவ்வப்போது ஏற்படும் பழுதினாலும் கிரீப் ரப்பரை உலர வைக்கப் போதுமான சாலியிடமின்மையாலும் இந்த 2 இயந்திரங்களையும் கொண்டு இயன்ற அளவு கிரீப் ரப்பர் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. ஆனால், அதிகமாகக் கிடைக்கும் திரைந்த பாலை நீண்ட நாட்கள் சேமித்து வைத்திருந்தால் எடை குறைவு ஏற்படும். இந்த எடைக் குறைவு ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டும் பால் கெட்டுப் போகாமல் இருக்கும் பொருட்டும் இந்த இயந்திரங்களால் பயன்படுத்த முடியாத எஞ்சிய திரைந்த பால் மட்டும் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் அரசுக்கு இழப்பு எதுவும் குறிப்பாக இல்லை.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திரைந்த பாலை அப்படியே விற்பனை செய்யும்போது ரூ. 8, ரூ. 9 தான் கிடைக்கிறது. ஆனால், சிரீப் ஆக அடித்து விற்பனை செய்யும்போது ரூ. 18, ரூ. 19க்கு விற்பனை செய்யப்படுகிறது. காரணம், அப்படியே வைக்கும்போது எடை இழப்பு ஏற்படுகிறது. ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய மாதிரி அங்கே மின்சாரப் பற்றாக்குறை இருந்தாலும் கூட,



ஆயில் இயந்திரங்களை உபயோகித்து அந்தப் பணியைச் செய்
தால், அரசாங்கத்திற்கு மேலும், இலாபத்தைத் தேடித் தரக்
கூடிய வாய்ப்புள்ளது. அந்த அடிப்படையில் புதிய ஆயில் இன்
ஜின் இயந்திரங்களைப் பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலை
வர் அவர்களே, இதை எந்த அளவிற்கு இலாபகரமாகப் பயன்
படுத்தி விற்பனை செய்ய முடியுமோ அந்த அளவுக்கு முயற்சிகள்
மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக இப்படி பதப்
படுத்தி கிரீப்பாக மாற்றுவதைவிட அதை லாட்டெக்சாக மாற்று
வதாலே இன்னும் கொஞ்சம் அதிக இலாபம் கிடைக்கும் வகையில்
விற்பனை செய்ய இயலும் என்கிற அந்த அடிப்படையிலே புதிய
இயந்திரங்கள் வாங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்
கின்றன.

(முற்பகல் 9–20)

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, கடந்த மாதத்தில்
அந்த ரப்பர் தோட்டத்தில் இரண்டு இயந்திரங்கள் பழுதடைந்து
விட்டன. அது சின்ன பழுதுதான். ஆனால், அந்த பழுதை
உடனே காலாகாலத்தில் சரிசெய்யாமல் கிடப்பிலே போட்டு
விட்டதால் அந்த இயந்திரங்களை உடனடியாகப் பயன்படுத்த
முடியவில்லை. அங்கே மூன்று ஷிப்டுகள் வேலை செய்தால்
திரைந்த பாலை லாட்டக்ஸ், கிரீப்பாக மாற்றுவதற்கு சாத்தியக்
கூறுகள் இருக்கின்றன. அந்த வகையிலே செய்வதற்கும், பழு
தடைந்த இயந்திரங்களை இனிமேல் உடனடியாக பழுது பார்ப்
பதற்கும் அவசரமான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே
இதுபோன்ற நிர்வாகங்களில் அடிக்கடி ஏற்படும் குறைகளை,
இடையூறுகளை நிவர்த்தி செய்வதற்கு துறையின் பொறுப்பிலே
இருக்கிற காரணத்தால் நீண்ட காலதாமதம் ஏற்படுகிறது என்
பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து அந்த அரசு ரப்பர் தோட்
டத்தை இப்போது கழகமாக, கார்ப்பரேஷனாக மாற்றி அமைத்
திருக்கிறோம். ஆகவே, அவர்கள் இதுபோன்ற முடிவுகளை உட
னுக்குடன் எடுத்து நிறைவேற்றுவதற்கு வசதியாக இனிமேல்
அமையும். மூன்று ஷிப்டுகள் வைப்பது என்பது வருங்காலத்
தில் லாட்டக்ஸாக மாற்றுவது என்கிற முடிவை எடுக்கிற
நேரத்திலே அதற்கேற்றவாறு முடிவு மேற்கொள்ளப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசு ரப்பர் தோட்டத்திலே கிடைக்கிற பாலை நல்ல முறையில் பயன் படுத்துவதற்கு மைலார் தோட்டத்தில் ஒரு க்ரம்ப் பாக்டரி ஏற்படுத்துவதற்கு ஒரு புரோபசல் ஏற்கெனவே அரசின் பரிசீலனையில் இருந்தது. அது சம்பந்தமாக என்ன முடிவு எடுக் கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மைலார் தோட்டத்தில் அந்த '' க்ரம்ப் பாக்டரி '' அமைக்க எடுக்கப்பட்ட முடிவு பின்னாலே பரிசீலித்ததிலே அவ்வளவு இலாபகரமாக இருக்குமென்று தோன்றவில்லை. ஆகவே தான் இரண்டு லாட்டக்ஸ் மெஷின்களை பொருத்துவதிலே அதிக இலா பம் கிடைக்குமென்று முடிவெடுத்து அதற்கான இயந்திரங்களைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 20 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள இயந்திரங்களைப் பெறு வதற்கு மத்திய அரசினிடத்தில் அனுமதி கோரப்பட்டிருக்கிறது. விரைவிலே அந்த இயந்திரங்கள் அங்கே அமைக்கப்படும்.

திருச்சி மாவட்டத்திலுள்ள '' முக்கொம்பு '' சுற்றுலா தலத்தில் தேவையான அடிப்படை வசதிகள் செய்யும் திட்டம்.

44—(*வினா எண். 16275) திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி மாவட்டத்தில் உள்ள '' முக்கொம்பு '' எனும் சுற்றுலாத் தலத்தில் போதிய அடிப்படைத் தேவை யான வசதிகள் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) திருச்சி மா வட்டத்தில் உள்ள '' முக்கொம்பு '' சுற்றுலா தலத்தில் தேவை யான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தைப் போல வடாற்காடு மாவட்டத்தில் சாத்தனூர் அணை இருக்கிறது. அங்கே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற் கும் சம்பந்தம் இல்லை.



திருத்தணி, திருப்பரங்குன்றம் மற்றும் பழனியில் உள்ள ஆலயங்களின் உபரி நிதி.

45—(*வினா எண். 19772) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருத்தணி, திருப்பரங்குன்றம், பழனியில் உள்ள ஆலயங் களின் உபரி நிதி எவ்வாறு செலவிடப்பட்டு வருகிறது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : விவர அறிக்கை** அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, திருத் தணி, திருப்பரங்குன்றம், பழனி போன்ற கோவில்களில் உபரி நிதி இருக்கிறது. ஆனால், சில கோவில்களில் பூஜை நடத்தக்கூட வழியில்லாமல் இருக்கிறது. சிலபேர்கள் கோவில் நிலங்களுக்கு குத்தகை சரிவர கொடுக்காமல் கொள்ளையடித்துக் கொண்டிருக் கிறார்கள். கோவில்களின் கடைகள் குறைந்த வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன. அதற்கும் வாடகை சரிவர கட்டாமல் இருக்கிறார்கள். ஆகவே அந்தக் கடைகளை வருடா வருடம் ஏலத்தில் விடுகிற அளவில் ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர் களே, இந்தச் சொத்துக்களை வைத்துக் கொண்டிருப்பவர்கள், அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் முறையாக வாடகை, குத் தகை முதலியவற்றை தர வேண்டுமென்று அரசு விரும்புகிறது. அறநிலையத் துறையும் விரும்புகிறது. ஆனால், பல்வேறு சட் டங்களின் காரணமாக சொத்துக்களை அனுபவித்துக் கொண் டிருக்கிறவர்கள் சட்டங்களின் வழியாக தப்பித்துக் கொண்டிருக் கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட சட்டங்களுக்கு விதிவிலக்கு வேண்டுமென்று அறநிலையத் துறை, ஆலயங்களை நிர்வகிப்பவர் கள் பொதுவாக மக்களும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**433—434ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, மனிதர்களில் வேறுபாடு உண்டு. ஆனால், தெய்வங்களில் வேறுபாடு கிடையாது. சில கோவில்களுக்கு மட்டும் பக்தர்கள் அதிகமாகச் சென்று காணிக்கைகள் கொடுக்கிறார்கள். சில கோவில்களுக்கு பக்தர்கள் காணிக்கைகள் அதிகமாகக் கொடுப்பதே கிடையாது. ஆகவே, எல்லா தெய்வங்களும் ஒன்றுதான் என்று மக்களுக்குப் பிரச்சாரம் செய்கிற அளவில், அந்தந்த கிராமங்களில் இருக்கிற கோவில்களின் மகிமையை மக்களுக்கு எடுத்துக்கூறுகிற அளவிலே கிருபானந்தவாரியார் போன்ற மதப் பெரியோர்களை அந்தந்தப் பகுதிகளில் மதப் பிரச்சாரம் செய்வதற்காக அவர்களுக்கென்று ஒரு மாதச் சம்பளம் கொடுத்து, அந்த அளவில் சமய பிரச்சாரத்திற்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா ? மாண்புமிகு முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் போன்ற சமய திட்டம் கூட................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி, ஆலயங்களின் உபரி நிதி எவ்வாறு செலவிடப்பட்டு வருகிறது என்பதாகும். நீங்கள் ஒரு சொற்பொழிவே ஆற்றுகிறீர்களே.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இந்த உபரி நிதியிலிருந்து முதல் அமைச்சர் அவர்கள் சத்துணவுத் திட்டத்திற்காக பணம் கொடுக்கும்போது அதை சிலபேர்கள் எதிர்க்கிறார்களே இதற்குக் காரணம் என்ன என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, ஆலயங்களின் உபரி நிதியிலிருந்து முதல் அமைச்சர் சத்துணவு நிதிக்கு உணவு போடப்படுவதற்காக வழங்கவில்லை. சத்துணவு போடுகிற கூடங்களை நிரந்தரமான அமைப்புகளாக ஆக்க அந்த ஆலயங்களின் பேரில் கட்டுவதற்காகத்தான் இந்த நிதி சுமார் 66 இலட்சம் ரூபாய் அந்தந்த ஆலயங்களின் பெயரில் அந்தக் கூடங்கள், சமுதாயக் கூடங்கள், உணவு வழங்குகிற கூடங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று வழங்கப்பட்டிருக்கிறது. அதை பலபேர்கள் தவறாக சாப்பாடு போடுவதற்குக் கொடுக்கிறார்கள் என்று கூடக் கருதினார்கள். அதற்காக வழக்கு மன்றத்திற்குக் கூட சென்றார்கள். வழக்கு மன்றத்தில் அந்த மனு நிலுவையில் இருக்கிறது. ஆனால் அரசாங்கம் இயற்றியிருக்கிற சட்டத் திருத்தத்தின்படியும் விதிகளின்படியும் பொதுக் காரியங்களுக்காக ஆலய நிதியைப் பயன்படுத்தலாம் என்ற உரிமையோடு அதன்படி ஆலய நிதி வழங்கப்பட்டிருக்கிறது.





வழங்கப்பெற்ற அந்த சுமார் 66 இலட்சம் சொச்சம் ரூபாய்க்கு மேல் உள்ள பணத்தை அரசாங்கம் அதைப் பயன்படுத்தாமல் வங்கியில்தான் போட்டு வைத்திருக்கிறார்கள். ஆகவே, தனி நபர்கள் யாராவது இப்படிப்பட்ட கருத்தைக் கொண்டிருப்பார்களானால் அதை நாட்டு மக்களுடைய கருத்தாக நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, இந்தக் கோவில் நிதிகளிலிருந்து பல்வேறு நல்ல காரியங்களுக்கு உபயோகப்படுத்துவதாக இங்கே குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். அந்த நிதியிலிருந்து ஏழை ஆதி திராவிட மக்களுக்கு இலவசத் திருமணங்கள் பலவற்றை வேகமாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நடத்தினார்கள். அதாவது பலயிடங்களில் மதம் மாறிக்கொண்டிருந்த நேரத்தில் நடந்துவந்தன. ஆனால் சமீப காலமாக அப்படிப்பட்ட திருமணங்கள் நடப்பதில்லை. ஆகவே அது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு விரிவான அளவில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசத் திருமணங்கள் நடத்தி வைப்பதோடு அப்படிப்பட்ட திருமணங்களுக்கு முன்னால் ரூ. 750 என்று ஒதுக்கி வந்ததை ஆயிரம் ரூபாய் என்றாவது ஒதுக்கி வைத்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

அதோடு சத்துணவுத் திட்டத்திற்காக பழனிக் கோவிலிலிருந்து பத்து இலட்சம் ரூபாய் கொடுத்ததாக பத்திரிகைகளில் செய்தி பார்த்தேன். இந்தக் குறிப்பில் அது இல்லை. அது ஏன் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இந்தத் திருமணங்களைப் பொறுத்தவரையில் தொடர்ந்து நிதி வசதி இருக்கிற, அஸிஸ்டன்ட் கமிஷனர் நிர்வாக அதிகாரியாக இருக்கிற ஆலயங்களில் இருந்து நடத்தலாம் என்று பொதுவாகவே ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆயிரம் திருமணங்கள் வரையில் இதுவரையில் நடத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக புதிய ஆணைகள் எதுவும் தேவை இல்லை. எப்போது மனுக்கள், விண்ணப்பங்கள் வருகின்றனவோ அவைகளைப் பரிசீலித்து ஒரு திருமணம் அல்லது இரண்டு திருமணங்கள் என்று அவர்களே அனுமதி வழங்கலாம் என்று உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த ஆண்டு அது கொஞ்சம் குறைவாகயிருக்கிறதென்றால் மக்கள் யாரும் புதிதாக மனுக்கள் போட

வில்லையென்பதுதான் பொருளே தவிர அரசாங்கம் அல்லது அறநிலையத் துறை நிறுத்தி வைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சம்பந்தப்பட்டிருக்கிற பழனித் தொகுதியைப் பொறுத்தவரையில், திருமணங்களை பழனி ஆலயத்தில் வைத்துக்கொள்ள யாருமே அதிகமாக முன்வரவில்லை என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், ஆலயங்களில் திருமணம் செய்துகொள்கிறவர்கள் கூட சில ஆலயங்களுக்கு விரும்பி வருகிறார்கள், சில ஆலயங்களில் அப்படி திருமணம் செய்து கொள்வதை அவர்கள் சிறப்பாகக் கருதுகிறார்கள். ஆனால் என்ன காரணமோ பழனி ஆலயத்தைப் பொறுத்தவரையில் இப்படிப்பட்ட திருமணங்களுக்காக யாருமே அதிகமாக முன்வருவதில்லை. இந்த நிலைமையை அவர்கள் உணர்ந்து கொண்டால் நல்லது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சித்து அப்படிப்பட்ட மனுக்களை அனுப்பினால் உடனடியாக வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

சத்துணவுத் திட்டத்திற்கு பழனி ஆலயத்திலிருந்து எவ்வளவு ரூபாய் வழங்கினார்கள் என்பதுபற்றிய குறிப்பு இப்போது என்னுடைய கையில் இல்லை. இந்தக் கேள்விக்கு பதில் தயாரிக்கப்படுகிற நேரத்தில் அப்போது வழங்கப்படாமல் இருந்திருக்கலாம். ஆகவேதான் அந்தக் குறிப்பு இங்கே இல்லையென்று கருதுகிறேன்.

[முற்பகல் 9-30]

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அமெரிக்கா, பிரிட்டன், மற்றும் ஐரோப்பிய நாடுகளில் அங்கே வாழ்கின்ற தமிழர்கள், அவர்களாகவே நிதி திரட்டி ஆலையங்கள் அமைத்து வருகிறார்கள். அந்த ஆலயங்களுக்கு வேண்டிய விக்கிரகங்கள், மற்றும் அர்ச்சகர்கள், ஓதுவார்கள் போன்றவர்களை இங்கிருந்து அனுப்ப வேண்டியிருக்கிறது. இந்த விக்கிரகங்கள் செய்வதற்கான செலவு, மற்றும் அர்ச்சகர்கள், ஓதுவார்கள் ஆகியோர்களை அனுப்புவதற்கான செலவு ஆகியவற்றை ஆலயங்களின் உபரி நிதியிலிருந்து செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உலகத்தின் பல்வேறு நாடுகளிலே வாழ்கின்ற தமிழ் மக்கள், இப்போது ஆலயங்களை எழுப்புவதிலேயும், ஆன்மீகத் துறையிலேயும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, அதிலே மிகுந்த அக்கறை காட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஆங்காங்கே இருக்கக்கூடியவர்கள் அவர் அவர்களுடைய சொந்த முயற்சிகளினால் மிகப் பெரிய செலவில் ஆலயங்கள் எழுப்பிக் கொண்டு வருகின்றார்கள். அதற்கு பல்வேறு உதவிகளை தமிழக அரசிடமிருந்தும், அறநிலையத் துறையிடமிருந்தும்





எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த உதவிகளை
அவ்வப்போது நாம் வழங்கிக்கொண்டு வருகிறோம். பீஜி
தீவிலே இப்படி ஒரு ஆலயம் எழுப்பப்பட வேண்டுமென்பதற்
காக, ஒரு இலட்ச ரூபாய் நிதி உதவி வழங்கி, அதற்காக நாம்
இங்கிருந்து ஸ்தபதியை அங்கே அனுப்பி, வரைபடங்களை
வரைந்து கட்டிடம் கட்டுவதற்கும், அவர்கள் விரும்புகின்ற
அர்ச்சகர்களை நம் செலவில் அனுப்பி வைத்திருக்கிறோம்.
அதைப் போல, தென் ஆப்பிரிக்காவில் வாழும் தமிழர்கள்,
இசைக் கலைஞர்கள், ஓதுவார்கள், அர்ச்சகர்கள், சிற்பக்
கலைஞர்கள் ஆகியோர்களை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்
கள். அவர்களை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்
ளப்பட்டு, சிலரை அனுப்பியும் இருக்கிறோம். அதைப்போல்
மொரேஷியஸ் தீவிற்கு அனுப்பவும் முயற்சிகள் மேற்கொள்ளப்
பட்டு வருகின்றது. அமெரிக்க நாட்டிற்கும், அப்படிப்பட்ட
விக்கிரகங்கள், சிற்பிகள் ஆகியோர்களை அனுப்புவதற்கான
முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நடை
முறைகள் இப்போது இருந்து வருகின்றன. ஆனால், சமீப
காலத்திலே இது ஒரு மிகப் பெரிய அளவில் ஒரு இயக்கம்போல்
வளர்ந்து வருகிறது.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த உபரி நிதியிலிருந்து திருத்தணி, பழனி ஆண்ட
வன் திருக்கோயில்களிலிருந்து குழந்தைகள் காப்பகங்கள், அன்பு
இல்லங்கள் ஆகியவற்றை நடத்துவதாக இங்கே மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள்.
அங்கே எவ்வளவு மாணவர்கள் படிக்கிறார்கள்? அதனால்
எவ்வளவு மாணவர்கள் பயன் பெறுகிறார்கள்? இதுபோன்ற
சமுதாய சீர்திருத்தங்களை—மேலும் செய்வதற்கு பல திருக்
கோயில்களை நிதி கேட்கும்போது, அதற்கு வழங்காமல் இருப்
பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதை நிவர்த்திப்ப
தற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலை
வர் அவர்களே, இந்தப் பள்ளிகளில் எவ்வளவு மாணவர்கள்
பயிலுகிறார்கள் என்பதற்கு தனியாக கேள்வி போட்டால், விவ
ரங்களைச் சேகரித்துக் கொடுப்பதற்கு இயலும். ஆனால்,
அதைப்போன்ற வேண்டுகோள் வருகின்ற நேரத்தில், அந்த
ஆலையங்களுக்கு நிதி வசதி இருக்க வேண்டும். ஆனால், வேறு
ஆலையங்களிலிருந்து எங்களுக்கு நிதி வாங்கித் தாருங்கள்,
நாங்கள் பள்ளிகளை நடத்துகிறோம் என்றால், அது நடை
முறைக்கு சாத்தியமில்லாத ஒன்று.

[1984 அக்டோபர் 11

## இந்திய வனவிலங்குகள் பராமரிப்பு நிர்வாக கழகத்தைத் தமிழ்நாட்டில் அமைக்கும் திட்டம்

46—(*வினா எண். 20841)—திரு. பெ. சு. திருவேங்கடம் : திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய வனவிலங்குகள் பராமரிப்பு நிர்வாகக் கழகத்தைத் தமிழ்நாட்டில் அமைக்குமாறு மாநில அரசு மத்திய அரசுக்குக் கோரிக்கை வைத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மேற்குறிப்பிட்ட கழகத்தை, மேட்டுப்பாளையம் அல்லது பவானிசாகரில் அமைக்கும்படி கோரிக்கை விடுத்து, மத்திய அரசின் சுற்றுப்புறச் சுழல் துறை துணை அமைச்சர் அவர்களுக்கு நேர்முகக் கடிதம் ஒன்று 22—3—1983 அன்று அனுப்பப்பட்டது. அந்தக் கழகத்தை நிறுவுவதற்கு டேரா டூன் தேர்ந்தெடுக்கப்பட்டதாக மத்திய அரசிடமிருந்து சமீபத்தில் தகவல் வந்துள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இந்திய வன விலங்கு பராமரிப்பு நிர்வாகக் கழகத்தை பேராவூரணியிலே ஆரம்பிப்பதாக மத்திய அரசு சொன்னதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இங்கே ஆரம்பிப்பதினால் என்னென்ன விதமான நன்மைகளை மத்திய அரசு இந்த வன விலங்கு துறைக்குச் செய்ய இயலும் ? அதனால் நம் மாநிலம் என்னென்ன நன்மைகளை அடைய முடியும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்திய அரசு இப்படிப்பட்ட ஒரு கழகத்தை தொடங்கியிருக்கிறது என்ற செய்தியைக் கேட்டவுடன், தமிழக அரசின் சார்பில் நாம் இந்த வேண்டுகோளை வைத்தோம். அதற்காக 50 முதல் 100 ஏக்கர்கள் வரை நிலம் கொடுப்பதாகவும் சொன்னோம். ஆனால், அவர்கள் மொத்த சூழ்நிலையை மனதில் எடுத்துக்கொண்டு, பொதுவாக வனத் துறை சம்பந்தப்பட்ட கல்லூரிகள், பயிற்சி கூடங்கள் அனைத்தும் டேரா டூனில் இருக்கின்ற காரணத்தினால், அங்கே இந்த ஆய்வு கழகத்தை அமைத்தால் சரியாக இருக்கும் என்று கருதி, அவர்கள் அங்கே அமைத்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.



1984 அக்டோபர் 11]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசு எங்கெங்கே, எந்தெந்த இடங்களில் இப்படிப்பட்ட கழகத்தை ஆரம்பித்திருக்கிறது ? நம்முடைய மாநில அரசு தன் கோரிக்கையை ஏற்க வேண்டுமென்பதற்காக, மறுபடியும் இதை நம் அமைச்சர் அவர்கள் வற்புறுத்துவார்களா ? நம்முடைய அரசிற்கு அதற்கான தகுதி இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா முழுவதற்கும் ஒரு நிறுவனத்தை, ஒரு அமைப்பைதான் உருவாக்க வேண்டும் என்று இந்திய அரசு முடிவு எடுத்து இருக்கிறது. அந்த வகையில் அதை டேராடூனில் அமைக்க இருக்கிறார்கள். புதிதாக அதனுடைய பிரிவுகள் வேறு பகுதிகளில் அமைப்பதற்கான கருத்துக்கள் வரும்போது நம்முடைய அரசு மீண்டும் அதை வற்புறுத்தும்.

திரு. இரா. தாமரைக்கனி ; தலைவர் அவர்களே, இந்திய வன விலங்குகள் பராமரிப்பு நிர்வாகக் கழகத்தை தமிழ் நாட்டில் அமைக்கவேண்டும் என்று நாம் கேட்டுக்கொண்ட போதிலும், இந்திய சர்க்கார் அதை டேராடூனில் அமைக்க முடிவு எடுத்துள்ளது. ஆகவே, நம்முடைய குரல் மத்திய சர்க்காரின் காதிற்கு எட்டுகின்ற வகையில் சென்னையில் உள்ள மிருகக்காட்சி சாலையில் உள்ள மிருகங்களை வைத்து ஒரு ஊர்வலத்தை நடத்தி, அதன் மூலம் நம்முடைய கோரிக்கையை வலியுறுத்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஊர்வலத்தை மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்களே நடத்தி தமிழ்நாட்டிற்கு அந்தக் கழகத்தைப் பெற்றுத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் இயற்கை வனப்பில், பூரோளத்தில் மிகவும் கம்பீரமாக காட்சி அளிக்கின்ற மேற்குத் தொடர்ச்சி மலை, விந்திய மலைக்கு இப்பால் இருக்கிற பவானிசாகர், மேட்டுப்பாளையம் ஆகியவற்றைத் தவிர்த்து, வடநாட்டில் இருக்கிற டேராடூனில் இந்த வன விலங்குகள் பராமரிப்பு நிர்வாகக் கழகம் செல்லக்கூடிய நிலை வருந்தத்தக்கது என்பதை மாநில அரசு மத்திய அரசுக்கு உணர்த்த முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, ஒரு வன விலங்குச் சரணாலயத்தை ஒட்டியிருக்கிற பகுதியில் தான் இப்படிப்பட்ட அமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்பது அல்ல. பொதுவாக, இந்தியா முழுவதற்கும் ஒரு ஆராய்ச்சி நிறுவனம் அமைக்கவேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டபோது, அந்த வனத் துறை தொடர்பான ஆராய்ச்சி நிறுவனம், கல் லூரிகள், பயிற்சி நிலையங்கள் ஆகியவை டேராடூனில் இருக் கிறது என்பதால், அங்கே இத்தகைய ஆராய்ச்சி நிலையத்தை அமைக்க அவர்கள் முடிவு எடுத்து இருக்கிறார்கள். டேராடூன் என்பதும் இமயமலையை ஒட்டியிருக்கும் பகுதியில் இருக்கும் ஒரு நகரமாகும். வெள்ளைக்காரன் காலத்தில் இருந்தே அங்கே இத்தகைய அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கிற சூழ் நிலைகளை மனதில் வைத்துத்தான் இந்த முடிவை அவர்கள் எடுத்து இருக்கிறார்கள். ஆகவே, அது, டேராடூனில் அமை வதைப் பற்றிய பிரச்னை இல்லை. நாளைக்குத் தமிழ் நாட்டிற்குத் கொடுத்தால் கூட மற்ற மாநிலத்தினர் எங்களுக்கு ஏன் கொடுக்கவில்லை என்று கேட்கக்கூடும். ஆகவே, இந்தியா என்ற உணர்வோடு நாம் பார்த்தால், இந்தப் பிரச்னை வராது. நம்முடைய மாநிலத்திற்கு வந்தால், மத்திய அரசின் முதலீடு நமக்குக் கிடைக்கும் என்ற உணர்வோடுதான் அது நமக்குக் கிடைக்கவேண்டும் என்று விரும்பினோமே தவிர வேறு எந்தப் பிரச்னையும் இதிலே இல்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தொழில் துறைக்குப் பாரத ஸ்டேட் வங்கி
அளித்துள்ள கடன் தொகை.

47—(*வினா எண் 14276)—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தொழில் துறைக்குப் பாரத ஸ்டேட் வங்கி எவ்வளவு கடன் உதவி செய்துள்ளது ?

மாண்புமிகு திரு. இ. பொன்னையன் : தமிழ்நாட்டில் தொழில் துறைக்கு பாரத ஸ்டேட் வங்கி 1982 ஆம் ஆண்டில் ரூ. 55,109 இலட்சமும், 1983-ம் ஆண்டில் ரூ. 53,421 இலட்ச மும் கடனாக வழங்கி உதவியுள்ளது.



திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்திய ரீதியில் எடுத்துக்கொண்டால், மற்ற மாநிலங்களுக்கு பாரத வங்கி எந்த அளவிற்கு கடன்களை வழங்கி இருக்கிறது, அதோடு ஒப்பிட்டு பார்க்கிறபோது தமிழ்நாட்டிற்கு குறைவாக உள்ளதா, அதிகமாக உள்ளதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதுகுறித்த புள்ளி விவரம் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் அதைச் சேகரித்துக் கொடுக்க முடியும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசின் சார்பிலே இருக்கின்ற டி.ஐ.ஐ. சி. போன்ற நிதி நிறுவனங்கள் தொழில் துறைக்கு எந்த அளவிற்கு நிதி ஒதுக்கீடுகளைச் செய்திருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, டி.ஐ.ஐ.சி. நிறுவனத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு கிட்டத்தட்ட 58 கோடி ரூபாய் 1983–84 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதைப் போலவே சிப்காட் நிறுவனமும் கிட்டத்தட்ட 33 கோடி ரூபாய் 1983–84 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கியுள்ளது.

திரு. கே. ஆர். சுந்தரம் : பேர்வைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சி டி.ஐ.ஐ.சி. மற்றும் சிப்காட் போன்றவைகள் கடன் உதவி அளிப்பதுபற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார் கள். அவர்களிடத்தில் மனு செய்து 6 மாதம் ஆகியும்கூட எந்தவிதமான உதவியும் கிடைக்கவில்லை என்று சொல்லப் படுகிறது. ஆகவே, அவர்களுக்கு உடனடியாக உதவி செய்ய அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; தலைவர் அவர்களே, தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருகிறார் கள். ஒவ்வொரு மனுவும் 30 நாளைக்குள் பரிசீலிக்கப்பட்டு, கடன் அளிக்கப்பட வேண்டும் என்றும், 45 நாட்களுக்குள் அந்தக் கடன் தொகை பட்டுவாடா செய்யப்படவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. அது நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகிறது.

[1984 அக்டோபர் 11

(முற்பகல் 9-40)

திரு. க. முத்துக்கிருஷ்ணன் : தலைவரவர்களே, மத்திய அரசினுடைய வங்கிகள் மூலமாக தொழில் தொடங்குவதற்கு அளிக்கப்படுகிற கடன்களைப் பொறுத்தவரையில் மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து ஏதாவது புதிய கொள்கையை வைத்து, அதன் அடிப்படையில் எந்த எந்த தொழிலுக்கு எவ்வளவு கடன் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறதா ? இல்லை என்றால் மத்திய அரசை மாநில அரசு கலந்து, தமிழ் நாட்டில் தொழில் தொடங்குவதற்கு புதிய கொள்கை ஒன்றை வகுத்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; தலைவரவர்களே, மத்திய அரசு நேரடியாக உதவி செய்வதில்லை. ஆனால் மத்திய அரசு நடத்தும் ஐ.டி.பி.ஐ., ஐ.எஃப்.சி.ஐ., ஐ.சி.ஐ.சி.ஐ. போன்ற நிதி நிறுவனங்கள் மூலம் 'ரீ பைனான்ஸ் ஃபெசிலிட்டி' செய்யப்படுகிறது. அதிலிருந்து சிறு தொழில்களுக்கு 'டிட்கோ' நிறுவனம், நடுத்தரத் தொழில்களுக்கு 'சிப்காட்' நிறுவனமும் நிதி உதவி அளித்து வருகின்றன.

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே, தொழில் துறையில் மத்திய அரசின் பாரத ஸ்டேட் வங்கி அளிக்கும் கடன் பெரும் தொழில்களுக்கு மட்டும் உட்பட்டதா அல்லது சிறு தொழில்களுக்கும் சேர்ந்ததா ? சிறுதொழில்களுக்கும் சேர்ந்தது என்றால் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் நாட்டின் முன்னேற்றத்தை மேம்படுத்த பிரதமர் கொண்டிருக்கிற எண்ணத்திற்கு மாறாக சில வங்கிகள் மந்தமாக இந்த மாநிலத்தில் இயங்கிக் கொண்டிருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, ஸ்டேட் பாங்க் மட்டுமல்ல, நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கியாக இருந்தாலும் சிறு தொழில், நடுத்தரத் தொழில், பெரும் தொழில் ஆகிய அனைத்துக்கும் அவை கடன் கொடுக்க கூடிய வழிவகை இருக்கிறது; கொடுத்தும் வருகின்றன. ஆனால் தொழில் முனைவர்களைப் பொறுத்த வரையில், மத்திய அரசின் நிதி நிறுவனங்களான ஐ.டி.பி.ஐ., ஐ.எப்.சி.ஐ., ஐ.சி.ஐ.சி.ஐ. போன்றவை மூலம் கொடுக்கின்ற பணத்திற்கு, குறைந்த வட்டி, கூடுதல் தவணை வசதிகள் இருப்பதால், அவற்றின் மூலம் பணம் பெற முயற்சி செய்கிறார்கள். அந்த அடிப்படையில் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் எல்லாம் தாராளமாக கடன் கொடுக்க முன்வந்தால் தொழில் முனைவர்



1984 அக்டோபர் 11]

கள் எல்லா வங்கிகளிலும் கடன்பெற முன்வருவார்கள். அதற்கு, இப்போதிருக்கிற அரசின் கொள்கையை மாற்றியமைக்க வேண்டும். அது மட்டுமல்ல. தொழில் முனைவர்கள் அதிகமாக தொழில்களைத் தொடங்க இந்த வங்கிகளின் உதவியை நாடுவதாக இருந்தால் மத்திய அரசின் நிதி நிறுவனங்களும் மற்ற நிதி நிறுவனங்களும் உதவி செய்து வருகின்றன.

திரு. என். ஏ. பூங்காவனம் : தலைவரவர்களே, ஸ்டேட் பாங்கிலிருந்து தொழில் செய்வதற்கு அல்லது தொழில் தொடங்குவதற்கு கடன் கோரி விண்ணப்பித்தால் 30-லிருந்து 45 நாட்களுக்குள்ளாக பணம் தரப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். 1984 மார்ச் முடிய ஓராண்டில் நிதி கேட்டு எவ்வளவு மனுக்கள் வந்தன? எவ்வளவு கடன் கொடுத்திருக்கிறார்கள் என்ற விவரத்தை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, 45 தினங்களுக்குள் பட்டுவாடா செய்யப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டு, அது நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று சொன்னேன். மாநில அரசு நடத்தும் 'டிட்கோ', 'சிப்காட்' நிறுவனங்கள் அரசின் ஆணையை ஏற்று செயல்படுகின்றன. ஸ்டேட் பாங்கைப் பொறுத்தவரையில் அது ஒரு மத்திய அரசு நிறுவனம். நான் முதலிலே கூறியது, பாரத ஸ்டேட் வங்கி எந்த அளவுக்கு பணம் கொடுத்திருக்கிறது என்பது. பணம் கொடுப்பதற்கு அவர்கள் எவ்வளவு காலம் நிர்ணயித்திருக்கிறார்கள் என்று தெரியாது. கடன் கொடுப்பதில் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுதான் மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்ய முடியும்.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் தொழில் நடத்த இந்த வங்கி சில இலட்சக்கணக்கில் கடன் கொடுத்திருப்பதாகவும் மற்ற வங்கிகள் கோடிக்கணக்கில் கூட முதலீடு செய்திருப்பதாகவும் அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலில் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டை நவீன ஜப்பான் ஆக மாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த வங்கிகள் பல கோடி ரூபாயை கொடுத்து உதவ தமிழக அரசு முயற்சி செய்யுமா? அது மட்டுமல்ல. இந்த வங்கியின் பெயர் பாரத ஸ்டேட் வங்கி என்று இருக்கிறது. இது இந்தி, இங்கிலிஷ், தமிழ் என்ற முறையில் இருக்கிறது. இதை தமிழ் பெயராக இந்திய அரசு மாநில வங்கி என மாற்றியமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மொழிப் பிரச்சனைகளுக்குப் பதில் சொல்ல வேண்டியதில்லை.

[1984 அக்டோபர் 11

### தமிழகத்தில் நீதிமன்றங்களுக்குக் கட்டிடங்கள் கட்ட மைய அரசிடம் கோரப்பட்டுள்ள நிதியுதவி.

48—(*வினா எண் 15984)—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள நீதிமன்றக் கட்டிடங்களைக் கட்ட மாநில அரசு மைய அரசிடம் நிதியுதவி கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் நீதிமன்றங்களுக்கு கட்டிடங்கள் கட்ட எட்டாம் நிதிக் குழுவிடம் (1984-85 ஆம் ஆண்டு முதல் 1988-89 ஆம் ஆண்டு முடிய) ஐந்தாண்டு காலத்திற்கு ரூ. 1572 இலட்சம் நீதித்துறைக்கு நிதி ஒதுக்கம் செய்ய கோரியுள்ளது. ஆனால் எட்டாம் நிதிக்குழு இவ்வரசின் நீதித்துறை நிர்வாகத்தை மேம் படுத்துவதற்காக மத்திய அரசுக்கு நிதி உதவி (Financi. l Assistanc ) அளிக்க பரிந்துரை எதுவும் செய்யவில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி மன்றக் கட்டிடங்களுக்காக 8 ஆம் நிதிக் குழுவிடம் ஏறத்தாழ 15 கோடி ரூபாய் கேட்டும் கூட, ஒரு ரூபாய் கூட பரிந்துரை செய்யவில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். 20, 25 ஆண்டுகளுக்கு முன்பாக நீதி மன்றங்கள் தொடங்கப்பட்டும் கூட, அந்தக் கட்டிடங்கள் அபிவிருத்தி செய்யப்படாமல் அதே நிலையில் ஏராளமான கட்டிடங்கள் இருக்கின்றன. ஆகவே, மீண்டும் நிதிக் கமிஷனிடம் அந்த நீதிமன்றக் கட்டிடங்களுக்காக நிதி ஒதுக்குமாறு மாநில அரசு மத்திய அரசிடம் கோரியிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, 20, 25 ஆண்டு காலமாக மட்டுமல்ல, சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்தே நீதி மன்றக் கட்டிடங்களுக்காக ஒதுக்கப்படுகின்ற நிதி மிக மிகச் சொற்பமாக இருக்கின்ற காரணத்தால், குறைந்த பட்சம், ரூ. 15 கோடியை கண்டிப்பாக ஒதுக்க வேண்டுமென்று மாநில அரசு மைய அரசை வற்புறுத்தி வருகிறது. ஆனால், நிதிக் குழு பரிந்துரை செய்யவில்லை. இருந்த போதிலும் மைய அரசை வற்புறுத்தி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். Unless it is treated as core sector financial assistance, it is not possible என்ற முறையில்



1984 அக்டோபர் 11]

கணிசமான தொகையை ஒதுக்க வேண்டுமென்று மாநில அரசு மைய அரசை கேட்டோம். விஷயம் முடிவு பெறாத நிலையில், அவ்வப்போது மாநில அரசு நீதிமன்றக் கட்டிடங்களைப் பழுது பார்க்கவும், செப்பனிடவும் இயன்ற அளவிற்கு நிதி ஒதுக்கி வருகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதுமான நிதியை மைய அரசு ஒதுக்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள்.

நீதிமன்றக் கட்டிடங்களுக்காக பெறப்படும் கட்டணத் தொகை முழுவதையும், இந்த நீதிமன்றக் கட்டிடங்களுக்காகச் செலவு செய்ய மாநில அரசு முடிவு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஏற்கனவே மூல வினாவிற்குப் பதிலளிக்கும் போது இது போன்ற நீதிமன்றக் கட்டிடங்களுக்கு நிதியே ஒதுக்கப்படாத நிலையில், மாநில அரசு நீதிமன்றங்களுக்காக, பெசிலிட்டீஸ் அண்டு அமெனிட்டீஸ் என்பதற்கு ஏற்ப அவ்வப்போது நிதியை ஒதுக்கியிருக்கிறது.

திரு. கு. பா. பழனியப்பன் : மைய அரசை தமிழக அரசு வற்புறுத்தி மேலும் கட்டிடங்களுக்காக நிதி உதவி கேட்பது ஒருபுறம் இருக்கட்டும். ஏற்கனவே, ஒதுக்கப்பட்ட ரூ. 1.9 கோடியில், 1981-82ஆம் ஆண்டிற்கான கம்ப்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டில் ரூ. 76.39 இலட்சம் சரண்டெர் ஆகியிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி ஒதுக்கப்பட்ட தொகையில் கூட முழுவதுமாக செலவு செய்யப்படாமல் இருக்கிறது. இதையெல்லாம் நிவர்த்தி செய்து ஆண்டுக்காண்டு போதுமான கட்டிடங்களைக் கட்ட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அது பற்றிய தகவல் என்னிடம் இல்லை. அதை அரசு பரிசீலிக்கும். அரசு அதைப் பற்றி நடவடிக்கை எடுக்கும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இது போன்ற கோர்ட் கட்டிடங்களுக்காக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடன் பெற்று அவற்றைச் செயல் படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அரசு அதைப் பரிசீலிக்கும்.

[1984 அக்டோபர் 11

திரு. மா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கட்டிடங்கள் தேவைப்படுகின்ற அதே நேரத்தில் இருக்கிற கட்டிடங்களை பொதுப்பணித் துறை சரியாக பராமரித்து வருகிறதா என்பதை அரசு அறியுமா? ஆகவே, பொதுப்பணித் துறை மூலம் கட்டிடங்களை ரிப்பேர் செய்து, அதற்கு வேண்டிய தளவாடங்களை சப்ளை செய்வதற்கும் அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நிதித் தட்டுப்பாடு தான் அதற்குக் காரணம் என்பதை ஏற்கனவேயே எடுத்துச் சொன்னேன். இருக்கிற நிதியைப் பயன்படுத்தி எவ்வளவு செம்மையாகபணக் குறைவாக இருந்தாலும் அந்த அளவிற்கு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது, எடுத்து வரும்.

திருச்சி மாவட்ட நீதிமன்றக் கட்டிடத்தில் வழக்கறிஞர்களுக்காக தனி அறைகள் கட்டித்தரும் திட்டம்.

49—(*வினா எண் 17795)—திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்ட நீதிமன்றக் கட்டிடத்தில் வழக்கறிஞர்களுக்காகத் தனி அறைகள் கட்டித்தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9.50)

திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரமானது மிகத் தொன்மை வாய்ந்த நகரம். அங்கே ஏறக்குறைய 500 வழக்கறிஞர்கள் பணியாற்றுகிறார்கள். அங்கே தமிழகத்திலே பிரசித்தி பெற்ற வழக்கறிஞர்கள் பலர் வாழ்கிறார்கள். அவர்களுடைய நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், அரசு வழக்கறிஞர்களுக்கென்று தனியாக அறைகள் கட்டித்தர முன்வருமா? அது எப்போது நிறைவேற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்?



1984 அக்டோபர் 11]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்திலிருந்து இது குறித்து அறிக்கையை அரசு எதிர்பார்க்கிறது. அது வந்தவுடன், அதை ஆய்ந்து தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட நீதிமன்றக் கட்டிடங்கள் - பல ஆயிரக் கணக்கான ரூபாயில் கட்டப்படுகின்ற கட்டிடங்களுக்கும், ஆர்கிடெக்ட், அல்லது பொறியாளர்கள் போன்றவர்கள் தான் டிசைன் செய்கிறார்கள்.

நீதிமன்றக் கட்டிடங்கள் எப்படியிருக்க வேண்டும் என்பதைப் பற்றி சில நார்ம்ஸ்கள் இருக்கின்றன. இந்த நார்ம்சைப் பற்றி ஆர்க்கிடெக்டுக்களோ, அல்லது பொறியாளர்களோ, அக்கறைப் படவில்லை என்று சொல்லப்படுகிறது. இதன் காரணமாக கோர்ட் ஹால் எப்படி இருக்க வேண்டும், எவ்வளவு ஸ்பேஸ் இருக்க வேண்டும். வழக்கறிஞர்கள் வாதாடுவதற்கு வசதியாக எவ்வளவு இடம் இருக்க வேண்டும், என்பது போன்ற நார்ம்ஸ்கள் பின்பற்றப்படவில்லை. இதன் அடிப்படையிலே திருநெல்வேலியிலே சில தாவாக்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அத்தோடு புதிதாகக் கட்டப்பட்ட சில கட்டிடங்கள் இதன் காரணமாக திறக்கப்படாமல் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே, இந்த நார்ம்சை ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவிற்கு அந்த ஆர்க்கிடெக்டுகள் அல்லது பொறியாளர்கள் அறிவுறுத்தப் படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, இது சரியான தகவல் அல்ல. காரணம் நீதிமன்றத்தைப் பொறுத்த வரைக்கும், நீதிமன்றத்தில் இருக்கிற நீதிபதி அமருகிற இடம் சற்று உயரமாக இருக்க வேண்டும் என்ற முறையில் தான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக திண்டுக்கல்லிலே செஷன்ஸ் கோர்ட்டுக்கு அனுமதி அளிக்கிறபோது, அந்த விதிமுறைகளை மாற்றி, இப்போது அந்த அடிப்படையிலேதான் தற்போது விதிகள் பின்பற்றப்பட்டு வருகிறது. எந்த நீதிமன்றமும் இதன் காரணமாக திறக்கப்படாத நிலையில் இல்லை.

[1984 அக்டோபர் 11

### உசிலம்பட்டியிலுள்ள உட்கோட்ட நடுவர் நீதிமன்றக் கட்டிடம்.

50—(*வினா எண் 18293) திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டியில் உள்ள Sub-Divisional Magistrate கோர்ட் கட்டிடம், போதுமான வெளிச்சமும், காற்றோட்டமும் இல்லாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், போதுமான வெளிச்சமும், காற்றோட்டமும் பெற எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னென்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) உசிலம்பட்டி உட்கோட்ட நடுவர் நீதிமன்றக் கட்டிடத்தில் ஜன்னல்களைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள வெயில் தடுப்புகளை (Cement Shades) இடித்து போதுமான வெளிச்சமும் காற்றோட்ட வசதியும் கிடைக்குமாறு செய்யும், பழுது பார்க்கும் பணியினை உடனடியாக மேற்கொள்ளுமாறு உயர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி குறித்த திட்டம் மற்றும் மதிப்பீடு சென்னை உயர்நீதி மன்றத்திடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்து திட்டம் மற்றும் மதிப்பீடு பெறப்பட்ட உடனே அரசின் நிதி நிலைக்கேற்ப நிர்வாக ஒப்புதல் அளிக்கப்படும்.

### கோவை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி

51—(*வினா எண் 12111) திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கத் தனியார் மருத்துவமனையான கோவிந்தசாமி நாயுடு மருத்துவமனை (கே. ஜி. ஆஸ்பத்திரி)க்கு மாணவர்களை அனுப்பிவைக்கும்படி மருத்துவ இலாகாவிலிருந்து ஆலோசனை கூறப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவ்வித பயிற்சிக்காக வசதிகள் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இல்லையா?

(இ) அங்கு என்ன பயிற்சி அளிக்கப்படுகிறது?



1984 அக்டோபர் 11]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ''டயாலிஸிஸ்'' பயிற்சி அளிக்க வசதி இல்லாதிருந்த காரணத்தால் அதற்குரிய கருவியை வாங்க ஏற்கனவே அரசு ஆணை வெளியிட்டுள்ளது. விரைவில் இப்பயிற்சி அங்கு அளிக்கப்படும்.

(இ) பயிற்சி எதுவும் இப்போது அளிக்கப்படவில்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி போட்டு இரண்டு வருடத்திற்கு மேல் ஆகியிருக்கும் என்று நினைக்கிறேன். அதற்குப்பிறகு இப்போது இந்தக் கேள்வி வந்திருக்கிறது. இது ஒரு பரிதாபகரமான நிலை. இதைப் பற்றி தலைவர் அவர்களின் மூலமாகத்தான் நான் கேட்க வேண்டிய நிலை வந்திருக்கிறது. (குறுக்கீடு). இப்போது இருக்கிற நிலையிலே வந்திருப்பதை பற்றி நான் சந்தோஷப் படுகிறேன். அரசாங்க மருத்துவமனையிலே டாக்டர்களுக்காக படிக்கிற மாணவர்களுக்கு இந்த 'டயாலிஸிஸ்' பயிற்சி கொடுக்கக்கூடிய ஆர்ட்டிபிஷியல் கிட்னி மெஷின் இல்லை என்பது அமைச்சருக்கே தெரியும். நான் ஒன்றல்ல, இரண்டுக்கும் மேற்பட்ட மேமொரண்டங்களை இதுசம்பந்தமாக சப்மிட் பண்ணியிருக்கிறேன். இதைப்பற்றி இதே அவையிலும் பேசியிருக்கிறேன். அது ரொம்ப விலை உயர்ந்த மெஷினும் இல்லை. அந்த மெஷினை வாங்கி வைக்காததினுடைய விளைவாக பக்கத்தில் இருக்கக்கூடிய கே. ஜி. ஆஸ்பத்திரிக்கு மாணவர்களைக் கூட்டிக்கொண்டு போய் படிப்புச் சொல்லிக் கொடுக்கக்கூடிய நிலைமை வந்திருக்கிறது. மருத்துவமனையிலே இந்தக் கருவியில்லை. இது சம்பந்தமாக டி. எம். ஈ. அவர்கள் ஒரு உத்தரவு போட்டு, அங்கே இருக்கின்றவர்கள், அதை எதிர்த்து அரசுக்குத் தெரிவித்திருப்பது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மருத்துவக்கல்லூரிகளிலும் இந்த இயந்திரம் உடனடியாக பொருத்துவதற்கு கஷ்டமாகயிருக்கிறது. நிதி நிலைமையைப் பொறுத்துத் தான் அந்த வேலையைச் செய்யவேண்டியிருக்கிறது. நம்முடைய இந்தியாவில் 106 மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. இந்த 106 கல்லூரிகளிலே ஏறக்குறைய 20, அல்லது 30 கல்லூரிகளில்தான் இந்த இயந்திரங்கள் இருக்கின்றன. தமிழகத்தில் இப்போதுள்ள 8 கல்லூரிகளில், 7 கல்லூரிகளில் இதைப் பொருத்த ஏற்பாடு செய்திருக்கிறோம். ஏற்கனவே ஜெனரல் ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, ராஜாஜி மருத்துவமனை, மற்றும் ஸ்டான்லி மருத்துவமனையிலே இருக்கிறது. இப்போது கோயம்புத்தூரிலும், தஞ்சா

ஊரிலும், மதுரை ராஜாஜி மருத்துவமனையில் இன்னொன்றும் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் ஒன்றும் ஸ்டான்லி மருத்துவ மனையில் ஒன்றும் வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. எல்லா இடங்களிலேயும் இதைப்போன்ற வசதி களைச் செய்து கொடுப்பது என்பது சாத்தியமான விஷய மில்லை. பாரதப் பிரதமர் அவர்கள் கூட, ஒரு கான்பரன் சிலே பேசும்போது All the instuments cannot be duplicated or triplicated in all the hospitals. என்று சொல்லியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் நாம் இப்பொழுது என்ன செய்திருக் கிறோம் என்றால்—உலகத்திலே பல இடங்களிலே வழக்கமாகச் செய்யக்கூடியதுதான் இது—ஒரு இடத்திலேயிருந்து இன்னொரு இடத்திற்கு வாங்கிக் கொள்வார்கள். அதே மாதிரி ஒரு இடத்திலே ஒரு கருவி இருக்கிறது என்றால், அந்த இடத்தி னுடைய கருவியினை மற்றவர்களும் பயன்படுத்திக் கொள்ள லாம். அந்த வகையிலே இந்த டயாலிஸிஸ் இயந்திரத்தையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று நான் சொன்னேன்.

அதிலும் கூட எம். பி.பி.எஸ். படிக்கக் கூடிய மாணவர் களுக்கு ஸ்டேச்சுடரி சிலபஸ்ஸிலே இது கிடையாது. ஆனா லும் அவர்களும் இதைக் கற்றுக் கொண்டால் நன்றாக இருக்கும் என்று, மற்றொர் இடத்திலே இருப்பதை பெற்று கற்றுக் கொள்ளச் சொன்னேன். கேன்சர் இன்ஸ்டிடியூட்டிலே இருக்கிறது, அதை வாங்கி பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று நான் தான் சொன்னேன். ஆனால் அதற்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது மாதிரி ஒரு எதிர்ப்பு வந்தது. அப்படி எதிர்ப்பு வந்ததால் அது தேவையில்லை என்று கைவிடப் பட்டது. ஆனாலும் என்னுடைய எண்ணம், கற்றுக் கொள்வதற்கு என்ன வாய்ப்புக் கிடைத்தாலும் அதைக் கற்றுக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவருடைய கடமை. ஏனென்றால் கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு என்று சொல்வார்கள். அது உங்கள் அனைவருக்கும் தெரியும். அந்த வகையிலேதான் அதைக் கற்றுக் கொள்ள லாம் என்று சொன்னேனே தவிர வேறு அல்ல. இப்பொழுது அந்த இயந்திரம் இன்னும் பெறப்படவில்லை; அது பெறப்பட்டதற் குப் பிறகு கோவையில் உடனடியாக வகுப்புகள் துவங்கப் படும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்தப் பயிற்ச்சியை கற்றுக் கொள்ள வேண்டும் என்பது கட்டாய மான ஒரு நிலை அல்ல என்று நமது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியானால் எம்.பி.பி.எஸ்., பயிற்சி பெறக்கூடிய மாணவர்களுக்கு டையலஸிஸ் சம்பந்தமான பயிற்சி, அதாவது லைசன்ஸ்கள் இல்லையா? அவர்களுக்கு அந்தப் பயிற்சியை கொடுக்க வேண்டியதில்லையா? அப்படி யானால் தற்போது இருக்கக் கூடிய காலேஜ்களிலே இப்பயிற்சி





யைப் பெறவேண்டிய மாணவர்கள் என்ன செய்வார்கள். இந்தப் பயிற்சியை பெறாததினால் இந்தியன் மெடிகல் கவுன்சிலின் சார்பாக அவர்களுகடைய பெயர் அன்ரோல் ஆகாதா? அப்படி ஒரு சூழ்நிலை ஏற்படும் என்ற நிலை இருந்தால் உடனடியாக எல்லா மருத்துவக் கல்லூரிகளிலும், சென்னையில் இருக்கக் கூடிய கல்லூரியிலும், தஞ்சாவூரிலே இருக்கிற கல்லூரியிலும்; இப்போது ஒரு கல்லூரி கோவையிலே வந்தது, 3. 4 மாவட்டங்களுக்கும் மொத்தமாக சேர்த்து; இப்படிப்பட்ட மருத்துவப் படிப்பு பெறும் எல்லாக் கல்லூரி களிலும் தேவையான குறைந்தபட்ச கருவிகள், இயந்திரங்கள் எல்லாவற்றையும் அமைப்பதற்கு, அரசாங்கம் நிதி நிலைமை யை இதற்குக் காரணமாகச் சொல்லாமல், நிறைவேற்ற முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே அன்டர்-கிராஜுவெட் ஸ்டடி போஸ்ட் கிராஜுவேட் ஸ்டடி என்று இருக்கிறது. போஸ்ட் கிராஜுவேட் ஸ்டடியைப் பொறுத்தவரையில், அதிலும் சூப்பர் ஸ்பெஷலிஸ்ட் என்று இருக்கிறது. நெப் ராலஜி பிரிவில் இருக்கிறது. போஸ்ட் கிராஜுவேட் ஸ்டடி யில் ஜெனரல் சர்ஜரி வரும். போஸ்ட் கிராஜுவேட் ஸ்டடிக க்கு நிச்சயமாக எப்படி இந்த டையலஸிஸ் கருவியைப் பயன் படுத்துவது என்று தெரிந்து கொள்வது அவசியம். கோவை யிலே படிப்படியாக போஸ்ட் கிராஜுவேட் ஸ்டடியையும் கொண்டு வருவதாக திட்டம் வைத்திருக்கிறோம் ஆனால் இதே வழக்கத்தை அனுசரித்து, படிப்படியாக எல்லா இடங்களிலும் இதைத் கொண்டு வருவது என்பது முடியாது. கொண்டு வரக்கூடிய வழக்கம் உலகத்திலேயே எந்த இடத்திலும் கிடையாது. ஆகவே, கோவையைப் பொறுத்த வரையில், படிப்படியாக நிதிநிலையைப் பொறுத்துத்தான் நாம் செய்ய முடியும். இப்போழுது அவசர அவசியமாக அதைக்கொண்டு வர வேண்டும் என்றுதான் ஆணையிட்டிருக் கிறோம். எல்லாக் கல்லூரிகளிலும் அதை ஆரம்பிக்க இருக் கிறீர்களா என்று கேட்டார்கள். எல்லா இடங்களிலும் இல்லை என்றாலும். சென்னையிலே கீழ்ப்பாக்க மருத்துவக் கல்லூரியிலே ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

[1984 அக்டோபர் 11

நேற்றுகூட அங்கே ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அதற்காக சென்றிருந்தேன். அப்பொழுது கூட இதை நான் வெளியிடவில்லை காரணம் இன்றைக்கு இங்கே கேள்வி வருகிறது என்று எனக்குத் தெரியும். இந்த அவையில் சொல்வதற்கு முன் அங்கே சொன்னால். மாண்புமிகு உறுப்பினர்கள் யாராவது உரிமைப் பிரச்சினை எழுப்பக் கூடும் என்று அங்குள்ளவர்களிடம் கூட அதை முன்கூட்டியே சொல்லக்கூடாது என்று சொன்னேன். நெப்ராலஜி டிபார்ட்மென்டுக்கு தேவைப்பட்டாலோ, அல்லது எங்கெங்கே இன்டென்சிவ் கேர் யூனிட்டுக்குக் தேவைப்படுகிறதோ அங்கேயெல்லாம் முடிந்தவரையில் இதை ஆரம்பித்துக் கொண்டு வருகிறோம். விடுபட்டு போன ஒரே ஒரு இடம் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி என்பதையும், அதையும் சேர்க்க வேண்டும் என்று சொல்லி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### திருவிடை மருதூர் அரசு மருத்துவமனை.

52(*—வினா எண். 17142) : திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவிடைமருதூர் அரசு மருத்துவமனையில் ஐந்து ஆண்டு காலத்திற்கு மேலாக மகப்பேறு வார்டும், பிணப்பரிசோதனைக் கட்டிடமும் பழுதடைந்து மூடி வைக்கப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடன் செப்பனிடப்படுமா?

(இ) மேற்படி மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவு, குழந்தைகள் பிரிவு, எலும்பு முறிவுப்பிரிவு, இரத்தப் பரிசோதனைக் கூடம் ஆகியவை துவக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : : (அ) இம் மருத்துவ மனையில் உள்ள மகப்பேறு வார்டு எந்தநேரமும் மூடிவைக்கப்படவில்லை. 26–3–1979ல் பிணப்பரிசோதனை அறை செப்பனிடப் பொதுப் பணித்துறைக்கு கொடுக்கப்பட்டது. பிறகு அவ்வறை செப்பனிடப்பட்டு 30–11—1983 முதல் செயல்பட்டுவருகிறது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

(இ) தேவைப்படும்போது உரியநேரத்தில் ஆலோசிக்கலாம்.



1984 அக்டோபர் 11]

(முற்பகல் 10–00.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி
யுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, இந்த அரசு
மருத்துவ மனை மகப்பேறு பிரிவும் பிணப் பரிசோதனைப் பிரி
வும் 5 ஆண்டுகளுக்கு மேலாக பழுதடைந்து செயல்படாமல்
மூடிக்கிடந்தது. அந்த வேலைக்கு எப்போது டெண்டர் விடப்
பட்டது? எந்தத் தேதியில் வேலை முடிவடைந்தது? அதனு
டைய மதிப்பீட்டுத் தொகை என்ன? காலதாமதமாக முடிக்கப்
பட்டதால் அந்த ஒப்பந்தக்காரர் மீது என்ன நடவடிக்கை எடுக்
கப்பட்டது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்
களே, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை இலாகாவைப்
பொறுத்தவரையில் இதிலே இப்படி தாமதம் ஏற்பட்டிருக்கிற
காரணத்தினாலே உடனடியாக அந்த பொறியியல் துறை
அதிகாரி, சம்பந்தப்பட்ட அதிகாரி மீது நடவடிக்கை எடுத்துக்
கொள்ள வேண்டுமென்று பரிந்துரை செய்து இருக்கிறது. அந்த
குறிப்புகள் எல்லாம் வந்தால் அந்த விவரங்களைச் சொல்வ
தற்கு நன்றாக இருக்கும். கடுமையான நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, திருவிடை
மருதூர் தாலுகா தலைமையிடத்திலுள்ள இந்த மருத்துவ
மனையில் ஆயிரம் நோயாளிகள் ஓ. பி. யாக வருகிறார்கள்.
எனவே அதனுடைய முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு
அங்கே இ. என். டி. பிரிவு, எலும்பு முறிவு சிகிச்சை பிரிவு,
குழந்தைகள் சிகிச்சை பிரிவு ஆகியவை உடனடியாக அமைக்க
அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே,
The sanctioned bedstrength of this Hospital is 16 average
number of out-patients treated per day 473 average number of
in-patients treated per day is 16
16 படுக்கைகள் 16படுக்கைகளாக அதே அளவிலே இருக்கின்றன.
விரிவுபடுத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். விரிவுபடுத்து
வதற்கு முன்பாக நாம் ஒரு திட்டமிட்டு இருக்கிறோம். மாவட்ட
மருத்துவ மனைகளிலே 300 படுக்கைகளுக்கு மேலாக விரிவு
படுத்த வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறோம். அதே மாதிரி
யாக தாலுகா மருத்துவ மனைகளிலே படுக்கைகளின் எண்
ணிக்கையை அதிகப்படுத்தவும் திட்டமிட்டிருக்கிறோம். அந்
தத் திட்டத்திற்குட்பட்டு இது இருக்குமானால் நாம் அதை
ஆராய்ந்து எடுத்துக் கொள்ளலாம்.

[1984 அக்டோபர் 11

அரசு மருத்துவ மனைகளில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்கள்.

53(* — வினா எண். 18722) திரு. சி. வெல்பிரகாசம் : திரு. கே. எம். தங்கமணி திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்கள் தனியாக மருத்துவம் பார்க்கத் தடை விதிக்கப் படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயலாக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) மருத்துவ அலுவலர்களுள் சில பிரிவினர் மருத்துவ ஆலோசனை ( Consultattion Practice ) வழங்குவதற்கு மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் எவ்வகையிலும் தனியாகத் தொழில் நடத்த அனுமதிக்கப்படவில்லை. அரசு மருத்துவ அலுவலர்கள் அனைவரும் தனியே தொழில் புரிவதை முழுமையாகத் தடைசெய்வது பற்றிய செயற்குறிப்பு அரசின் தீவிர ஆய்வில் உள்ளது.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளிலே வேலை செய்கின்ற மருத்துவர்கள் தனியார் மருத்துவ மனைகளிலே வேலைசெய்வதை தடைசெய்யும் யோசனை பரிசிலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கன்சல்டேஷன் பிராக்டிஸ் மட்டும் செய்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றும் சொன்னார்கள். சென்னையிலே பெரிய மருத்துவமனைகளிலே வேலை செய்கின்ற டாக்டர்கள் தனியார் மருத்துவமனைகளிலே பணிசெய்கிறார்கள். அதன் காரணத்தினால் அவர்கள் அரசாங்க மருத்துவ மனைகளுக்கு வருகிற நோயாளிகளை தங்களுடைய மருத்துவ மனைக்கோ அல்லது தாங்கள் பணியாற்றுகின்ற மருத்துவ மனைக்கோ அழைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். எனவே ஆந்திர மாநிலத்திலே இருப்பதைப்போல் அரசு மருத்துவ மனைகளிலே பணிபுரிகின்றவர்கள் தனியார் மருத்துவ மனைகளிலே பணிபுரிய தடை விதிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் சட்ட சிக்கல்கள் இருக்கின்றன, என்பதற்காக பிற மாநிலங்களில் — எங்கெங்கு இப்படிப்பட்ட முடிவை எடுத்திருக்கிறார்கள், இப்படிப்பட்ட ஆணையைப் பிறப்பித்து இருக்கிறார்கள் என்பதை நாம் கேட்டறிந்து — கேட்டபொழுது, The Government of Uttar Pradesh issued orders banning private practice with





effect from 1st March 1978 என்று தெரிவித்திருக்கிறார்கள். 1-3-1978 அன்று அந்த உத்திரவை பிரைவேட் பிராக்டிசை தடைசெய்து உத்திரப் பிரதேசத்திலே போட்டு இருக்கிறார்கள். அதை எதிர்த்து உத்திரப் பிரதேச கவர்ன்மென்ட் டாக்டர்கள் எல்லாம் ரிட் போட்டு ஹைகோர்ட்டிற்கு சென்றார்கள். அதற்குப் பிறகு உத்திரப் பிரதேச மாநிலத்துடன் தொடர்பு கொண்டு என்ன நிலைமை என்று கேட்டபோது 30-4-82 அன்று — அந்த ஆணையை தடைசெய்ய வேண்டுமென்ற அந்த ஆணையை எதிர்த்து போட்ட ரிட் மனு தள்ளுபடி செய்யப் பட்டது. அந்த அரசாங்க ஆணை நிற்கும் என்று சொல்லிவிட்டார்கள். கோர்ட் சாதகமாக உத்திரவு போட்டிருந்தாலும்கூட அரசு அந்த ஆணையை கைவிட்டுவிட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். காரணம் அவர்கள் அதனால் பல பாதிப்புகள் ஏற்பட்டன என்று சொன்னார்கள். இப்படி உத்திரவு போட்ட ஒரு மாநிலம் நமக்கு அதைத் தெரிவித்திருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபற்றி கவனத்தில் எடுத்துக் கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி அரசு மருத்துவ மனையில் மருத்துவர்களாக பணிபுரிபவர்கள் தனியாக மருத்துவமனை ஏற்படுத்த அதிலே கவனம் செலுத்தவதால் அரசு மருத்துவ மனைகளில் இருக்கிற மருந்து, ஊசி போன்றவைகளை அவர்கள் தவறான முறையில் எடுத்துச் செல்லக்கூடிய வாய்ப்பு பெறுகிறார்கள் என்பதும் அதேசமயத்தில் அவர்கள் நோயாளிகளை தன்னுடைய சொந்த மருத்துவ மனைக்கு அழைக்கின்ற ஒரு கேடான திட்டத்தை உருவாக்குகிறார்கள் என்பதையும் கவனத்தில் கொண்டு அரசு அதை மீண்டும் பரிசீலித்து தடை விதிக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு தான் நாளைய தினம் நாம் இங்கே அதற்கான மசோதாவை கொண்டு வந்து அதை விவாதிக்க இருக்கிறோம். கடுமையான தண்டனை விதிக்க வேண்

டும் என்ற முறையில் சட்டத்தை கொண்டு வர இருக்கிறோம் நாளைய தினம் அதை விவாதிக்க இருக்கிறோம். இன்னொரு நிலையும் இருக்கிறது. அகில இந்திய நல்வாழ்வுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்கள். அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. சுருக்கமாக இருக்கிறது; அதை படிக்கிறேன்.

It is desirable for the States to take steps to phase out the system of private practice by medical personnel in Government service, providing at the same time for payment of appropriate compensatory non-practising allowance. The States would require to carefully review the existing situation, with special reference to the availability and dispersal of private practitioners and take timely decision in regard to this vital issue.

என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்த தீர்மானம் நம்முடைய மாநில அரசின் பரிசீலனையில் இருக்கிறது

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு எந்த தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்களும் தனியாக தொழில் செய்வது இல்லை. ஆனால் மக்கள் வரிப் பணத்தில் படித்து மருந்து மருத்துவராக பட்டம் பெறக்கூடிய டாக்டர்கள் மட்டுமே தனியாக தொழில் செய்கின்ற காரணத்தால் அரசு மருத்துவ மனைகளில் தங்களுக்கு இடப்பட்டு இருக்கிற பணியை தொடர்ந்து செய்ய முடியாத ஒரு நிலை இருக்கிறது. இப்படி சட்டத்தால் அவர்களுக்கு இடம் இருக்கிற காரணத்தால் அவர்கள் தனியாக தொழில் செய்யக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே சட்டத்தை திருத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய ரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்ன மாதிரி சட்டத்தை திருத்த வேண்டும். கோர்ட் ஆணையை நாம் மதிக்க வேண்டும். அவை எல்லாம் இருக்கிற காரணத்தால் இந்தப் பிரச்சினை சிக்கலாக இருக்கிறது. ஆகவே நான் தொடர்ச்சியாக சொல்லவேண்டும என்றால் இந்தத் தீர்மானம் ஏற்கனவே மத்திய அரசால் அகில இந்திய நல்வாழ்வுத் துறை அமைச்சர் 6-ஆவது மாநாட்டில் National Health Policy நான் முன்பு சொன்னேனே அதை நாம் ஏற்றுக்கொண்டு அதற்



காக 8-வது நிதிக் கமிஷன் அதற்காக எவ்வளவு நஷ்டஈடு தொகை தரவேண்டும் என்று பிரைவேட் பிராக்டிஸிலிருந்து மருத்துவர்களை நீக்குவதற்கு உத்திரவு போட்டால் அதற்காக எவ்வளவு தொகை அரசு கொடுக்க வேண்டும் என்ற பிரச்சினை வருகின்ற நேரத்தில் எவ்வளவு தொகை செலவு ஆகும் என்று மத்திய அரசு நம்மிடத்தில் கேட்டு இருக்கிறார்கள். அதையும் கொடுப்பதற்கு யோசனை செய்து இருக்கிறார்கள். ஆகவே எவ்வளவு தொகை செலவாகும் என்பதற்காக தி ஹெல்த் பாலிசி அதை மட்டும் நான் படித்து விடுகிறேன்.—

(Joint Conference of Central Council of Health and Central Family Welfare Council)

"The National Health Policy statement."

The Eighth Finance Commission may be approached for financial assistance in this regard.

அதற்காக நாம் எவ்வளவுதொகை சரி கட்டுவதற்கு நான்-பிராக்டீஸ் அலவன்ஸுக்கு எவ்வளவு தொகை செலவாகும் என்பதற்காக அதை நீங்கள் பார்த்துச் சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் நாம் பார்த்து 8-ஆவது நிதிக் கமிஷனுக்கு கொடுக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த முறையே நாம் கடைப்பிடித்துக் கொண்டு இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-10.)

திரு. கு. முத்துக்கிருஷ்ணன்: தலைவரவர்களே, இராணுவத்தில் பணியாற்றச் செல்லுகின்ற நேரத்தில் இருபதாண்டுகள் பணியாற்ற வேண்டும் அல்லது பத்தாண்டுகள் பணியாற்ற வேண்டுமென்று முதலிலேயே எழுதி வாங்கிவிடுகிறார்கள். அதைப் போல எம்.பி.பி.எஸ். தேறியவுடன் அரசு மருத்துவமனைகளில் வேலைக்குச் சேர்க்கின்ற பொழுதே இருபது வருடங்களுக்காவது இதிலே மட்டும் பணியாற்ற வேண்டுமென்ற உத்தரவை அரசு கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரர்களே, அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், யாராவது பணியாற்ற விரும்பவில்லை, என்றாலும்கூட நிறைய அன் எம்ப்ளாய்ட் கிராஜிவேட்ஸ் இருப்பதால், ஒருவர் பணியாற்றவில்லை என்றால் அந்த வேலையை வேலையில்லாத டாக்டர்களுக்குக் கொடுப்பதற்குச் சௌகரியமாக இருக்கும். அந்த வகையில் விரும்பி வருகின்றவர்களுக்கு நல்ல வாய்ப்பு தருவதை நாம் கெடுத்துவிட வேண்டாமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1984 அக்டோபர் 11

மதுரை மாநகராட்சி சுகாதாரப் பிரிவுக்கு ஊழியர்களை நியமனம் செய்வதற்கான அரசின் அனுமதி.

54 —*(வினா எண். 23072) —திரு. என். பழனிவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சியின் சுகாதாரப் பிரிவுக்கு 350 ஊழியர்கள் நியமிக்க அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எப்போது அனுமதி வழங்கும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம். 362 ஊழியர்களை நியமனம் செய்ய அனுமதி கோரப்பட்டது.

(ஆ) 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மற்றும் 1983-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திலும், 362 சுகாதார சிற்றூழியர்களை நியமனம் செய்து கொள்ள அரசு, மதுரை மாநகராட்சிக்கு அனுமதி வழங்கியுள்ளது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதுரை மாநகராட்சின் சுகாதாரப் பிரிவில் 350 ஊழியர்கள் நியமிக்க கோரி கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பு கேட்ட கேள்வி இது, இப்பொழுது வந்திருக்கிறது. இப்பொழுது கூட நான் தகவல் கேட்டதிலே இன்றைக்கு அந்த மதுரை மாநகராட்சி மிகப் பெரிய அளவிற்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. புதிதாகப் பல கிராமங்கள், குறிப்பாக மாடக்குளம், பழவந்தாங்கல், அச்சம்பட்டு போன்ற பகுதிகள் மாநகராட்சியோடு இணைக்கப்பட்டுள்ளது. அதனால் சுகாதாரப் பிரிவு ஊழியர்கள் தேவையான அளவிற்கு இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, மேற்கொண்டு தேவையான அளவிற்கு நியமிப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஜி.ஓ. எம்.எஸ். நம்பர் 715-இல் 1980-இல் Workers under phased programme அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டு 100 போஸ்டுகள் — அதாவது 100 இடங்கள் சானிட்டரி ஒர்க்கர்ஸ் சேங்க்ஷன் செய்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு 16—12—1983 அன்று இன்னொரு ஆணை பிறப்பித்து 262 போஸ்டுகள் சேங்க்ஷன் செய்திருக்கிறது. அதற்குப் பிறகு 1983-84 ஆம் ஆண்டு இன்னும் கூடுதலாக 100 சானிட்டரி ஒர்க்கர்ஸ் நியமிக்க ஆணை பிறப்பித்து இருக்கிறோம். அது மட்டுமல்ல, 1984-85 ஆம் ஆண்டு 80 சானிட்டரி ஒர்க்கர்களை எடுக்க ஆணை பிறப்பித்திருக்கிறோம் அட்வான்லாக, இன்னும் 82 பேர்களை நியமிக்க வேண்டுமென்று 1985-86-இல் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற முறையில் பேஸ்ட் புரோகிராமாக அமைத்திருக்கிறோம்.



1984 அக்டோபர் 11]

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவரவர்களே புதிதாக சில நூறு பேர்களை நியமித்ததற்கான பட்டியலை மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே வாசித்தார்கள். இன்றைக்கு மாநகராட்சியினுடைய சுகாதாரக்கேடு எப்படி உள்ளது என்பது மதுரையில் நேரடியாகத் தெருக்களில் நடந்து செல்பவர்களுக்குத் தெரியும். டவுன் ஹால் பகுதியில் சென்றால் சாக்கடைகள் பிறிட்டு ரோடுகளில் எல்லாம் தண்ணீர் தேங்கி ஒரே நாற்றமாக இருக்கிறது. . .

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே நான் ஒரு விளக்கத்தைச் சொல்லிவிடுகிறேன். நம்முடைய டிபார்ட்மென்ட் Appointment of sanitary workers comes under Health Department. For other points, I will not have the reply.

சானிட்டரி ஒர்க்கர்ஸைப் பொறுத்தவரையில் நியமிப்பது, எங்கள் துறையின் கீழ் வரும்.

There is clear demarcation of jurisdiction of areas.

இந்த எல்லைக்குள்ளே கேட்டால் நான் பதில் சொல்வதற்கு சௌகரியமாக இருக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். சானிடரி ஒர்க்கர்ஸ் பற்றிய பூரா விவரங்களையும் டிஸ்கஸ் செய்ய ஆரம்பித்தால் நாம் ஒன்றும் செய்ய முடியாது.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அவருடைய துறைக்கு உட்பட்ட கேள்வியைக் கேட்கும்படியாகக் கூறுகிறார்கள். நான் சொல்வது, அங்கேயுள்ள சுகாதாரப் பிரச்னைகளைப் பற்றிச் சொல்வதற்கு யார் யாரிடத்தில், எந்த எந்தத் துறையிலே இருக்கிறது என்பது பொது மக்களுக்குத் தெரியாது. எனவே, எங்களைப் போன்றவர்களிடத்திலே இதைத் தான் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது மக்களுக்குத் தெரியாது என்பது உண்மை. ஆனால் நாம் அதையெல்லாம் தெரிந்துகொண்டு யாரிடத்திலே கேட்க வேண்டுமோ அவர்களிடத்திலே கேட்க வேண்டும்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, நகராட்சியாக இருந்த பொழுது எவ்வளவு பேர்கள் சுகாதாரப் பிரிவிலே இருந்தார்களோ அதைவிடச் சிறிதளவு வேண்டுமானால் அபிவிருத்தி இருக்கலாம் ; ஆனால் மாநகராட்சி என்ற அந்தஸ்துக்கு வருகின்ற பொழுது அந்த நகரத்தை எப்படி வைத்துக்கொள்ள வேண்டுமோ அந்த அளவிற்கு சுகாதாரப் பிரிவு ஊழியர்கள் இல்லை. அந்த அளவிற்கு அவர்களை நியமிப்பதற்கு அரசு உடனடியாக உத்தரவிட வேண்டும். அப்படி உத்தரவிடுவார்களா என்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[1984 அக்டோபர் 11

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சுகாதாரத் துறை
யின் மூலமாக நியமிக்கின்ற சானிட்டரி ஒர்க்கர்ஸ் என்பவர்களின்
எண்ணிக்கை போதாது என்பதில் யாருக்கும் ருத்து வேறுபாடு
இல்லை ஆனால். இருக்கின்ற பிரசினை என்னவென்றால்
நிதிநிலைமைக்கேற்ப நாம் பணியாற்ற வேண்டி இருக்கின்றது
அந்த நிதிநிலைமைக்கு அப்பாற்பட்டு கூடுதலாக ஒருவரைக்கூட
போட முடியாது. போடவும கூடாது என்று வற்புறுத்துகின்ற
நிலைமை இருப்பது இயற்கை. அப்படித்தான் செய்ய வேண்டி
இருக்கின்றது. இருக்கின்ற நிதிநிலைமைக்கேற்ப எவ்வள
வேகமாக நமமால் செய்ய முடியுமோ அந்த அளவுககுச் செய்திருக்
கிறாம். எவ்வளவு கூடுதலாக நியமிக்க முடியுமோ அவ்வளவு
கூடுதலாகநியமித்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் அவர்களின்
எண்ணிக்கை கூடுதலாக வேண்டும் என்பது அரசாங்கத்தி
னுடைய எண்ணமும்தான். அதிலே எந்த விதமான கருத்து
வேறுபாடும் இல்லை. அதற்காகத் தான் முயற்சிக்கிறோம்.
அப்படி முயற்சிக்கின்றபோது நிதிநிலைமைகளுக்காக மாநகராட்
சியிலே இன்னும் கொஞ்சம் கூடுதலாக வரிபோட வேண்டிய
நிலைமை ஏற்பட்டு வரி போடுகின்றபோது அதற்கு எதிர்ப்புகள்
வரும். எதிர்க்கட்சிகள் வேண்டாம் என்று கூறுவதன் அடிப்
படையில் கூடுதலாக வரி போடுவதைக் கைவிட வேண்டிய
நிலைமை வரும்.

இதை எல்லாம் மனதில் கொண்டுதான் நிர்வாகத்தை
நடத்த வேண்டி இருக்கின்றது. வெஸ்டர்ட் ஸ்டான்டர்ட்
என்பதை எடுத்துப்பார்த்தால் எவ்வளவு டாக்டர்ஸ் வேண்டும்,
எவ்வளவு நர்ஸஸ் வேண்டும் என்பதற்கெல்லாம் ஒரு பேரா
மீட்டர் இருக்கின்றது. அதன்படி நம்மால் நியமிக்க முடிய
வில்லை. காரணம் என்னவென்றால் ஜனத்தொகைப் பெருக்கம்
தான். எனவே ஜனத்தொகைப் பெருக்கத்தை ஞாபகத்தில்
வைத்துக்கொண்டால் பிரச்சனைகளை ஓரளவுக்குச் சமாளிக்க
முடியும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
அவர்கள் இதைப் பொறுத்தவரையில் உள்ளாட்சித்துறை அமைச்
சரிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வி என்று சொன்னார்கள்.
ஆனால் மக்களின் நல்வாழ்விலே அக்கறை உள்ள இலாக்காவின்
பொறுப்பிலே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
இருக்கிறார்கள். மக்கள் நல்வாழ்வு என்றால் சுகாதாரத்தோடு
நகரம் இருக்க வேண்டும். 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்து
தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகம் நீக்கப்பட்ட நிலையில் தனி
அதிகாரிகளின் கீழ் தான் மாநகராட்சியாக இருந்தாலும், நக
ராட்சியாக இருந்தாலும் இருந்து வருகின்றன. இந்தப்
பத்தாண்டுக் காலமாக இவற்றில் எல்லாம் துப்புரவுத் தொழி,



1984 அக்டோபர் 11] [திரு. சோ. அழகர்சாமி]

லாளர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படவே இல்லை. ஆனால்
மக்களுடைய எண்ணிக்கை இரண்டு மடங்காக உயர்ந்தும கூட
பல நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் துப்புரவுத் தொழி
லாளர்களைப் பொறுத்த வரையில் முன்பிருந்த அதே
எண்ணிக்கையில்தான் இருக்கிறார்கள். மக்கள் தொகை அதிக
ரித்தும் கூட துப்புரவுத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிக
மாக ஆகவில்லை. இதனைச் செய்யவேண்டிய பொறுப்பு
உள்ளாட்சித் துறை அமைச்சருடையது என்றாலும் கூட மாண்பு
மிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அந்த
ஊழியர்களை உடனடியாக நியமிக்க வேண்டும் என்ற ஒரு
சரியான, கண்டிப்பான நிலைமை குறித்து அந்த அமைச்சரிடத்
திலே சொல்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே; மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அமைச்சர் இன்னொரு
அமைச்சருக்குச் சொல்ல வேண்டும் என்ற பிரச்சினை இப்போது
வரவில்லை. சானிட்டரி ஒர்க்கர்ஸ் என்பவர்கள் என்னுடைய
எல்லைக்குள்ளே வருகிறார்கள். நாம் நியமித்து அவர்களிடத்
திலே ஒப்படைத்து விடுகிறோம். இது கூட்டுப் பொறுப்புத்தான்.
அதிலே சந்தேகம் இல்லை. ஆனால் இன்னும் கூடுதலாக
வேண்டும் என்று கேட்டதற்காகத்தான் நான் சொன்னேன்.
இந்த மூன்றாண்டு காலத்திலே பார்க்கின்றபோது நாம் எவ்வளவு
அதிகமாக உயர்த்த முடியுமோ அவ்வளவு அதிகமாக ஆட்களை
நியமித்திருக்கிறோம் என்பதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்
கள் பாராட்டுவார்கள் என்று பார்த்தேன். இவ்வளவு அதிகமாக
நாம் நியமித்து இருக்கிறோம் என்று சொல்கிறபோது இது எந்த
நேரத்திலும் நடத்தப்பட முடியாத ஒன்று. எனவே அதற்காகப்
பாராட்டுவார்கள் என்று நினைத்தேன்.

இன்னொரு பிரச்சினையை எழுப்பினார்கள். மக்கள்
தொகையைப் பற்றிச் சொன்னார்கள். மக்கள் தொகை பிரச்
சினைதான் இத்தனைக்கும் காரணமாக இருக்கின்ற மிக முக்கிய
மான பிரச்சினையாகும். அந்த மக்கள் தொகைப் பெருக்கத்
தைக் கட்டுப்படுத்துவதில் தமிழகம் எந்த அளவுக்கு முன்னேற்றத்
தில் இருக்கின்றது என்பதைப் பார்க்கவேண்டும். மக்கள்
தொகைப் பெருக்கத்தைக் குறைப்பதில் பெரிய அளவில் முன்
னேற்றம் இல்லை என்றாலும் கூட பிற மாநிலங்களோடு
ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது நாம் நல்ல வகையில் முன்னேறி
இருக்கிறோம். இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாராட்டு
வார்கள் என்று நினைக்கிறேன்.

[1984 அக்டோபர் 11

தோல் தொழில் கழிவுநீர் அகற்ற அமைக்கப்பட்ட குழு.

(55)—* வினா எண். 19178-அ—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு சுற்றுப்புறத் தூய்மைக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தோல் தொழில் கழிவுநீர் அகற்ற அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை அரசுக்குக் கிடைத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : ஆம்.

திரு. ஏ. எம். சேதுராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, தோல் தொழில் கழிவுநீர் அகற்ற அமைக்கப்பட்ட குழு எந்த ஆண்டு அமைக்கப்பட்டது ? அந்தக் குழுவிலே பங்குபெற்ற உறுப்பினர்கள் எத்தனை பேர் ? குழு எடுத்த முடிவின்படி அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

(முற்பகல் 10–20)

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவு நீரைச் சுத்திகரிக்க வழிவகைகள் வகுக்கவும் ஏற்கனவே சுத்திகரிப்பு நிலையத்தை ஏற்படுத்தியுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரின் உயிர் இரசாயன உயிரகத் தேவை பி.ஓ.டி.க்கான அளவை நிர்ணயிக்கவும் அரசு தனது 17–2–1982-ஆம் நாளைய அரசாணை 301-ஆம் எண்ணில் ஒரு குழுவைத் தோற்றுவித்தது. இக்குழு இப்பிரச்னை குறித்து இதுவரையில் பல்லாவரம், பம்மல் ஆகிய இடங்களிலுள்ள தொழிற்சாலைகளைப் பார்வையிட்டு 1983-ஆம் ஆண்டு சனவரி திங்களில் தனது அறிக்கையினை அரசுக்குச் சமர்ப்பித்தது. இக் குழுவின் அறிக்கையை அரசு ஆராய்ந்து 12–11–1984-ஆம் நாளிட்ட அரசு ஆணை நிலை எண். 7-ல்—இக்குழுவின் பரிந்துரைகளின் மீது—ஆணை பிறப்பித்துள்ளது. 14 பேர்கள் கொண்ட இக்குழு.

திரு ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகிற கழிவு நீர் இராணிப்பேட்டை அருகிலே இருக்கிற பாலாற்றிலும், மற்றும் வாணியம்பாடி அருகிலே இருக்கிற பாலாற்றிலும். மற்றும் இருக்கிற பூமிக்கடியில் ஊற்று எடுக்கிற நீருடன் கலந்து விவசாயத்தைப் பாதிப்பதை அரசு அறியுமா ? அதே சமயத்திலே இந்தச் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு தொழில் அதிபர்கள் எத்தனை பேர்கள் உரிமம் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் அல்லது சட்டதிட்டத்திற்கு உட்படாத அதிபர்கள் மீது எடுத்த நடவடிக்கை என்ன என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராணிப்பேட்டை, ஆம்பூர் ஆகிய ஊர்களில் மட்டும் தோல் பதனிடும் தொழிற்சாலை இல்லை. தமிழகத்திலே பரவலாக 470 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதிலே நமது வாரியத்திடம் ஏறக்குறைய 350 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மட்டும்தான் பதிவு செய்துகொண்டிருக்கின்றன. இதிலே வாரியத்திலே பதிவு செய்த தொழிற்சாலைகளுக்கு ஒரு வருட தவணை கொடுத்து கழிவு நீரைச் சுத்திகரிப்பதற்கான அந்த பிளான்டுகளைப் போட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அந்த உரிமம் பெறாத, வாரியத்திலே ஒப்புதல் பெறாத தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மீது இப்பொழுது கிரிமினல் நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியை வாரியம் எடுத்துக் கொண்டு வருகிறது இந்த ஓராண்டுக் காலத்திற்குள்ளாக தொழிற்சாலைகள் கழிவுநீரை சுத்திகரிப்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். எடுத்துக் கொண்டிருக்கிற தொழிற்சாலைகளுக்கு வாரியம் பரிவு காட்டும், அனுதாபம் காட்டும். எந்தவித முயற்சியுமே எடுக்காவிட்டால் அந்தத் தொழிற்சாலைகளை மூடுவதற்கான முயற்சியையும் வாரியம் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கழிவு நீரை அகற்றுவதற்கு ஏற்பாடு செய்யாத டானரி முதலாளிகள் வெளி வருகின்ற கழிவு நீரை நிலத்திலே போகின்ற தண்ணீரோடு கலந்து விடுகிறார்கள். அதனால் குடி தண்ணீர் கெடுவதோடு மட்டும் அல்லாமல் விளைகின்ற பூமியும் இன்னும் பல்லாண்டுக் காலத்திற்கு விளைவும் திறனற்று, தரம் கெட்ட விளைநிலமாக மாறிவிடும். ஆகவே, பயிர் பாதுகாப்புக்கு வேண்டிய நிலத்தைப் பாதுகாப்பது பற்றியும் அந்தக் குழுவிலே பரிசிலனை செய்வதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறதா எனவும் அந்தக் குழு செய்த பரிந்துரையை ஏற்காத முதலாளிகள் மீது கிரிமினல் வழக்கு போடுவதாகச் சொன்னார்கள். அது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில் அவர்களுடைய லைசன்சை ரத்து செய்து அவர்கள் டானரியை நடத்த விடாமல் செய்வதற்கும் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன், எங்களிடத்திலே உரிமம் பெற்றவர்களுக்கு ஒரு காலவரையை கொடுத்திருக்கிறோம். இதற்கு முன்பு 20, 30 ஆண்டுக் காலமாகவே இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் தமிழ் நாட்டிலே இருந்து வந்திருக்கின்றன. அவை அரசை ஏமாற்றிக் கொண்டே வந்திருக்கின்றன. ஆனால் இந்த வாரியத்தை, அதைப் போல் ஏமாற்றி விடலாம் என்று தோல் பதனிடும்

தொழிற்சாலை முதலாளிகள் எண்ணுவார்களானால், அவர்கள் கண்டிப்பாக ஏமாற்றப்படுவார்கள், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே பயிரிடுகிற நிலங்களை அதிகமாகப் பாதிக்கக் கூடியது தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளி வருகின்ற கழிவுநீர். நான் இந்த அவையில் எதிர்கட்சிக்கு வந்த நாளிலிருந்து, ஆளுங்கட்சியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்ற காலத்திலிருந்து ஒவ்வொரு செஷனிலும் கேள்வி கேட்பேன், கால் அட்டென்ஷன் கொடுப்பேன். அமைச்சர்கள் அதே பதிலைத்தான் சொல்கிறார்கள். நாங்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம். நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று தான் சொல்கிறார்கள். ஜூனியர் விகடனில் கூட இது குறித்து எழுதியிருக்கிறார்கள். அங்கே குடிதண்ணீரே பாதிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணை வினாக்களை சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. துரைமுருகன் : குடிதண்ணீர் பாதிக்கப்பட்டிருக்கிறதால் உடனடியாக பரிகாரம் காண அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே ஒரு தேதியைக் குறிப்பிட்டு, அந்தத் தேதிக்குள் எப்ளுவண்ட் கட்ட முடியாதவர்களுக்கெல்லாம் லைசென்ஸ் ரத்து செய்யப்படும் என்று அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலுள்ள மொத்த தோல் பதனிடும் தொழிற்சாலைகள் 470. அதில் வடார்க்காடு மாவட்டத்தில் 270 தொழிற்சாலைகள் இருக்கின்றன என்பது இந்த வாரியத்திற்கு தெரியும். இந்த வாரியம் 12-11-1983-லிருந்து 6 மாதக்காலம் அவர்களுக்கு தவணை கொடுத்து ஒப்புதல் பெறுவதற்கான முயற்சி எடுத்திருக்கிறது. அந்தத் தவணைக் காலம் 31-5-1984 ஆம் தேதியோடு முடிவடைந்திருக்கிறது. இதில் ஏறக்குறைய 350 பேர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஓராண்டு காலம் தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் ஏற்கனவே தெரியப்படுத்தியிருக்கிறேன். அந்த ஓராண்டு காலத்திற்குள்ளாக எந்த ஒரு முயற்சியாவது எடுத்திருப்பார்களானால் அரசு அவர்களுக்கு அனுதாபம் காட்டும். அப்படியில்லாமல் எந்த முயற்சியும் எடுக்காமல் இருந்தால் அந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலை கண்டிப்பாக மூடப்படும். அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மீண்டும் சொல்லிக் கொள்கிறேன்.



1982-83 ஆம் ஆண்டு கிராமப்புற வீட்டுவசதி சங்கம் வீடுகட்ட வழங்கிய கடன் தொகை.

56 —(*வினா எண். 16986) திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1982-83-ம் ஆண்டு கிராமப்புற வீட்டுவசதிச் சங்கம் வீடுகட்ட கடனாகக் கொடுத்த தொகை எவ்வளவு ?

(ஆ) தொடர்ந்து இந்தச் சங்கத்தின் மூலம் கடன் வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : (அ) 1982-83ஆம் ஆண்டு கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் வட்ட/கோட்ட அளவிலான கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் உறுப்பினர்களுக்கு வீடுகட்ட ரூ. 913.94 இலட்சம் பட்டுவாடா செய்தன.

(ஆ) ஆம்.

திரு. மா. சின்னராசு : தலைவர் அவர்களே, பெரும்பாலும் கூலித் தொழிலாளர்களும், ஆதி திராவிட பெருமக்களும் தான் இந்தக் கிராமப்புற வீட்டுவசதி சங்கத்தின் மூலமாக வீடுகளைக் கட்டுவதற்காக கடன் பெறுகிறார்கள். அவர்களுடைய தேவைகளுக்கேற்ப தாலுக்கா சங்கங்களுக்கு நிதி ஒதுக்கப் பெறுவதில்லை. இந்த நிதி மத்திய அரசினுடைய 'ஹட்கோ' நிறுவனத்திலிருந்து பெறுவதாக அறிகிறேன். ஆகவே கூடுதலாக நிதி பெற்று இந்தக் கிராமப்புற வீட்டுவசதி சங்கங்களுக்கு அவர்களின் தேவைகளுக்கேற்ப வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, 1978-79 ஆம் ஆண்டில் 10 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்காக திட்டமிடப்பட்டு அது 1979-80ஆம் ஆண்டில் 20 ஆயிரமாக உயர்த்தப்பட்டு, இன்றைக்கு 1983-84ஆம் ஆண்டில் 40 ஆயிரம் வீடுகள் என்ற அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை ஏற்றுக்கொண்டு எவ்வளவு அதிகமாக வழங்க முடியுமோ, அவ்வளவு அதிகமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மா. சின்னராசு : தலைவர் அவர்களே, 1979-80ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தின் கீழ் 3,500 ரூபாய் மட்டும் கடனாக கொடுக்கப்பட்டது. அதில் கடன் பெற்ற பல்லாயிரக் கணக்கானவர்கள் தங்களுடைய வீடுகளைக் கட்டமுடியாமல் அந்த வீடுகள் பாதியில் நிற்கின்றன. அவைகள் இப்போது அழிந்து விடும் நிலையில் இருக்கின்றன

என்பதால் இப்போது மற்றவர்களுக்கு கொடுப்பதைப் போல 6,000 ரூபாய் என்ற அளவில் அனுமதித்து மீதியிருக்கும் 2,500 ரூபாயை வழங்கி, அவர்கள் தங்களுடைய வீடுகளை பழுது பார்த்துக் கொள்ள அரசு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் ஆர் இராதா: தலைவர் அவர்களே, முதலில் அளிக்கப்பட்டிருக்கின்ற வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதுதான் இருக்கிற நிலை. அதிலே வீடுகள் கட்டாமல் இருக்கிறார்கள் என்று சொன்னால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், கட்டாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். வீடுகளை பழுது பார்ப்பதற்கு கடன் வழங்குவது என்பது புதிய பிரச்சினை. அதைத் தனியாகத்தான் கவனிக்க வேண்டும்.

### திருவான்மியூரிலும், வேளச்சேரியிலும் குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகள் கட்டும் திட்டம்.

57—(*வினா எண்) 18336 திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவான்மியூரிலும், வேளச்சேரியிலும் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் ?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : (அ) மற்றும் (ஆ). திருவான்மியூரில் உள்ள 15 குடிசைப் பகுதிகளில், 6 குடிசைப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் அக்டோபர் 1983-ல் முடிக்கப் பட்டு விட்டன. திருவான்மியூரில் உள்ள மற்ற குடிசைப் பகுதி களிலும் வேளச்சேரியில் உள்ள ஏழு குடிசைப் பகுதிகளிலும் இப் பணி 1984–85ஆம் ஆண்டு தொடங்கப்படும். வீடுகள் கட்டும் திட்டம ஏதும் இல்லை.

(முற்பகல் 10–30)

திரு. பம்மல் நல்லதம்பி : தலைவர் அவர்களே, திருவான்மியூர் வேளச்சேரி பகுதியில் திடீர் நகர் என்ற குடிசைப் பகுதி ஆண்டு தோறும் மழை காலங்களில் மிதந்து கொண்டு இருப்பதால், குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலமாக முதலில் உடனடியாக அங்கே வீடுகள் கட்டித்தர அரசு முன் வருமா ?



மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, அந்தப் பகுதி வெள்ளப்பகுதி, அந்த வெள்ளப் பகுதியில் தாழ்வான இடத்தில் போய் குடிசைப் போட்டு விட்டார்கள். அது ஏற்கனவே வெள்ளப்பகுதி என அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இருந்தாலும் அங்கே குடிசைகள் போடப்பட்டு இருப்பதால் அந்த ஏழை மக்களை அங்கே இருந்து அப்புறப்படுத்துவதைவிட, அவர்களுக்கு அங்கே வீடுகள் கட்டிக் கொடுப்பதை விட, அந்தப் பகுதியில் இருக்கும் குடிசைகளுக்கு மேம்பாட்டு திட்டத்தின்கீழ் அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. பம்மல் நல்லதம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக அங்கே வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவேண்டும் என்று நான் கேட்பதன் நோக்கம், ஆண்டுதோறும் மழை பெய்கிற போது, அந்த மக்கள் பாதிக்கப்படுகின்றபோது, அரசாங்கம் அவர்களுக்கு நிவாரணம் கொடுத்துக்கொண்டே இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு இடத்தை மாற்றியாவது வீடுகளைக் கட்டித் தர அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பம்மல் நல்லத்தம்பி அவர்கள் தெரிவித்த யோசனை பாராட்டுக்குரியதாகும். ஆனால் குடிசையில் வாழ்கிற மக்கள் அந்த இடத்தை விட்டு வேறு இடத்திற்குப் போக விரும்புவது இல்லை. அதே இடத்தில்தான் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். மாற்று இடத்தில் வீடுகள் கட்டிக் கொடுக்கலாம் என்பதற்கான முயற்சியை திரு. பமமல் நல்லதம்பி எடுத்தால் அவருக்குத் துணையாக நான் இருக்கிறேன்.

### சென்னைப் பட்டினப்பாக்கம் அரசு ஊழியர்கள் குடியிருப்புகளில் கழிவுநீர்க் குழாய்களைப் புதுப்பிக்கும் திட்டம்

58—(*வினா எண். 20739) : திரு. சி. கணேசன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைப் பட்டினப்பாக்கம் அரசு ஊழியர்கள் குடியிருப்புகளில் கழிவுநீர்க் குழாய்களைப் புதுப்பிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : (அ) ஆம்.

(ஆ) இவ்வேலைகளுக்காக ரூபாய் 3,06,300 க்கான ஒரு மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதல் வழங்கி வேலை நடைபெறும் நிலையில் உள்ளது.

[1984 அக்டோபர் 11

### பனைப் பொருட்களைப் பயன்படுத்திப் பொருட்கள் செய்யும் பயிற்சி நிலையங்கள்.

59—(*வினா எண். 12140) திரு. செ. செம்மலை : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பனைப் பொருள்களைப் பயன்படுத்திப் பொருட்கள் செய்யப் பயிற்சி நிலையங்கள் தற்போது எங்கெங்கு இயங்கி வருகின்றன?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தென் மாநிலங்களுக்காக, பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் நிதி உதவியுடன் கதர் வாரியத்தின் கீழ், மண்டல பனைப் பொருள் பயிற்சி நிலையம் ஒன்று தென்னாற்காடு மாவட்டம் கடலூரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிலையத்தில் பனைப் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேற்படி பயிற்சி நிலையத்தைத் தவிர மாநிலத்தில் வேறு எந்த இடத்திலும் நிலையான பயிற்சி நிலையம் இல்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பயிற்சி நிலையத்தில் மொத்தம் எத்தனை பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு, வடாற்காடு, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பனை பயிற்சி தொழில் மையங்களில் சுமார் 1,934 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பயிற்சி நிலையங்கள் புதிதாக ஏதாவது ஆரம்பிக்கப்படவிருக்கிறதா ? அப்படி ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுத்து இருந்தால், எந்தெந்த இடங்களில் இப்படிப் பட்ட பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்படவிருக்கிறது என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 7 மாவட்டங்களில் ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது. வடாற்காடு மாவட்டத்திலே மங்களூர், மாமண்டூரிலும், தென்னாற்காடு மாவட்டத்தில் மாங்குடியிலும், திருச்சி மாவட்டத்தில் மாயலூரிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் இனாம்தப்பதியிலும் அந்தோணிபுரத்திலும், மதுரை மாவட்டத்தில் கோவிலூரிலும், சேலம் மாவட்டத்தில் ஜலகண்டபுரத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் கிணத்துக்கடவிலும் ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது.



1984 அக்டோபர் 11]

திரு. குமரி அனந்தன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் பனைபொருள் பயிற்சி நிலையங்கள் இருப் பதாகவும், ஆயிரக்கணக்கானவர்கள் பயிற்சி பெறுவதாகவும் மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பனை பொருள்களில் ஒன்று ' நுங்கு ' என்பது. இன்றைக்கு அது இந்தி யாவின் பல பகுதிகளிலுள்ள மக்களின் கண்ணுக்குத் தெரியாத கிடைக்காத ஒன்றாக இருக்கிறது. இந்த நுங்கைப் பதப்படுத்தி இந்தியாவின் பல பகுதிகளுக்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்ப பயிற்சி அளிக்கப்படுகிறதா ? பனங்கொட்டையிலிருந்து வெட்டி எடுக்கப்படுகிற ' தவண் ' என்ற பொருளையும் பதப்படுத்தி, மற்ற இடங்களுக்கு அனுப்ப பயிற்சி கொடுக்கப்படுகிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: தலைவரவர் களே, மூலக்கேள்வி ' பனைப் பொருள்களைப் பயன்படுத்திப் பொருட்கள் செய்யப் பயிற்சி நிலையங்கள் தற்போது எங் கெங்கு இயங்கி வருகின்றன ' என்பது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி அதை ஒட்டியதாக இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : தலைவரவர்களே, இப்படிப்பட்ட பனைபொருள் பயிற்சி நிலையம் ஒன்றை என்னுடைய நெல்லை மாவட்டத்தில் தொழில் துறையில் புறக்கணிக்கப்பட்டிருக்கிற கடயநல்லூர் பகுதியில் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: தலைவர் வர்களே, பனைபொருள் பயிற்சி நிலையம் ஆரம்பிக்க அந்தப் பகுதியில் புனை மரங்கள் அதிகமாக இருக்க வேண்டும். அந்த பஞ்சாயத்து யூனியனுக்கு ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின்கீழ் பணம் ஒதுக்கீடு செய்திருந்தால் பனைபொருள் பயிற்சி நிலையம் அங்கே ஆரம்பிக்க வசதியாக இருக்கும். அதைப்போன்று மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் கூறும் பகுதியில் பனைமரங்கள் அதிக மாக இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுபற்றி எழுதிக் கொடுத்தால் அரசு அதன்மீது பரிசீலனை செய்து, தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. டி மணி : தலைவரவர்களே, 1982-83 மற்றும் 1983-84 ஆம் நிதி ஆண்டுகளில் பனைபொருள்கள் உற்பத்தி செய்கிற கன்னியாகுமரி மாவட்டத்தில் அதங்கோடு என்ற இடத் தில் ஒரு பயிற்சி நிலையம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது அறிவித்த இடம் வேறாக இருப்பதால், இந்த நிதியாண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு பனைபொருள் பயிற்சி நிலையம் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: தலைவரவர்களே, அதுபற்றிய விவரம் தற்போது என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்று, அதிகாரிகளிடம் கூறி, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் செயல்படும் மாவட்டங்கள்.

60 (*வினா எண் 22505)—திரு. க. பாரமலை : மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை (Fish farmers Development Agncy. தமிழ் நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் செயல்படுகிறது?

(ஆ) இத்திட்டத்தின் கீழ் மீன் வளர்க்க எத்தனை குளங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன ?

(இ) மீன் வளர்க்கும் உரிமம் எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது ?

(ஈ) இதில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. கலைமணி : (அ) மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் தமிழ்நாட்டில் தஞ்சாவூர், திருச்சிராப்புள்ளி, மதுரை, தருமபுரி, தென்னாற்காடு, திருநெல்வேலி, செங்கற்பட்டு, கன்னியாகுமரி, வட ஆற்காடு, புதுக்கோட்டை மற்றும் பெரியார் ஆகிய பதினொரு மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) இத்திட்டத்தின்கீழ் மீன்வளர்க்க 2,402 குளங்கள் தேர்ந்தெடுக்கப்டட்டுள்ளன.

(இ) மீன்வளர்க்கும் உரிமை 2,630 பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

(ஈ) ஆம்.

திரு. வ. சத்தியமூர்த்தி : தலைவரவர்களே, மீன் வளர்க்கும் உரிமைக்கு அனுமதி வழங்கும்போது, அவர்களை ஊக்குவிக்கும் வகையில் அரசு மானியம் வழங்குகிறதா ? எந்த எந்த வகை மீன் வளர்க்க அரசு ஊக்கமளிக்கிறது ? இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆண்டு முழுவதும் நீர் இருக்கக்கூடிய குட்டைகளில் மீன் வளர்ப்புப் பணி விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. க. கலைமணி : தலைவரவர்களே, மீன் வளர்ப்புப் பணியை மேம்படுத்தும்பொருட்டு கட்லா, ரோகா, சாதா கெண்டை, வெள்ளிக்கெண்டை போன்ற மீன் இனங்களுக்கு இந்தத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிற கடன் தொகையில் 25 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது.

(முற்பகல் 10-40.)

திரு. உ. சுப்பிரமணியன் : எப்.எம்.டீ.ஏ. தஞ்சாவூரில் பல நீர்நிலைகளில், பல இடங்களில் நல்ல முறையிலே மீன் வளர்க்கப்படுவதை நாம் நேரில் அறிந்தோம். அதிகமான குளங்குட்டைகள், கண்மாய்களையும், நீர்நிலைகளையும் உடைய இராமநாதபுரம் மாவட்டம் சேர்க்கப்படாமல் இருக்கிறது. அதைச் சேர்ப்பதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா ?

மாண்புமிகு திரு. க. கலைமணி : இராமநாதபுரம் மாவட்டத்தில், நீர் நிலைகளும், தொடர்ந்து மீன் வளர்ப்பதற்குரிய அளவிலே, அதிகமான அளவிலே நீர்நிலைகள் எப்போதும் இருக்கின்ற நிலை இருக்குமானால், அதைப் பரிசீலித்து, ஆவன செய்யப்படும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜப்பானிலே நிர் நிலைகள் இருக்கின்ற வயல்களிலே கூட மீன்களை வளர்க்கின்றார்கள். அதைப்போல தண்ணீர் வசதி அதிகமாக இருக்கின்ற, விவசாயம் செய்கின்ற இடங்களில் விரைவாக வளர்கின்ற மீன் குஞ்சுகளை கொடுத்து, விவசாயிகள் பலன் அடையும் வகையில், வயல்களிலே மீன் வளர்க்கின்ற திட்டத்தை அரசாங்கம் கொண்டுவருமா ?

மாண்புமிகு திரு. க. கலைமணி : இப்போது இருக்கின்ற நீர் நிலைகளில், குளங்கள், குட்டைகளில் மீன் வளர்ப்பை நாம் மேற்கொண்டு இருக்கிறோம். இது தொடர்ந்து இப்போது வெற்றிகரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற யோசனையையும் பரிசீலித்து, அது நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு ஏற்றதாக இருக்குமானால், அதைச் செய்யலாம்.

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவர் அவர்களே, ....(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மீன் சாப்பிடுபவர்கள் தான் கேட்க வேண்டும் என்று இல்லை. மீன் சாப்பிடாதவர்களும் மீன் வளர்ப்பைப் பற்றிக் கேட்கலாம். மீன் வளர்ப்பது வேறு, சாப்பிடுவது வேறு.

டாக்டர் கே. சௌரிராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, குளங்கள் 2,400-ஐ மட்டும் தேர்ந்தெடுத்துவிட்டால் போதாது. உரிமங்களை வழங்கிவிட்டால் மாத்திரம் போதாது. Much more importan: is the d v lopment of fish farm.

எத்தனை ஃபிஷ் பார்ம் அரசாங்கம் உருவாக்கியிருக்கிறது? அதன் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட குளங்களுக்கு, தேர்ந்தெடுக்கப் பட்ட மீன் வளர்ப்போருக்கு எவ்வளவு ஃபிஷ் லிங்ஸ் சப்ளை செய்யப் பட்டது.

மாண்புமிகு திரு. க. கலைமணி : இந்த மீன் வளர்ப்பு மேம் பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொண்டிருக்கும் குளங்களி லும், மீன் வளர்ப்போருக்கும் அரசு மூலம் தான் மீன்குஞ்சுகள் தரப்படுகிறது. நவீன முறையிலும் அதிக அளவிலும் உற்பத்தி செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்தத் திட்டம் செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் — விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) தஞ்சை கிருஷ்ணா டாக்கீஸ் இடிந்து விழுந்ததால் ஏற்பட்ட மரணம்.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1–10–1984 அன்று தஞ்சையிலே கிருஷ்ணா டாக்கீஸ் இடிந்து விழுந்ததன் காரணமாக 14 பேர் இறந்தும் ....(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபோன்ற பிரச்சினை களை திடீரென்று எழுப்பக் கூடாது ; முன்னறிவிப்புக் கொடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானமாகவோ, கவன ஈர்ப்புத் தீர்மான மாகவோ கொண்டுவாருங்கள். (குறுக்கீடுகள்).

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக ஒரு மிக முக்கியமான பிரச்சினை குறித்து அரசிடமிருந்து தகவல் அறிய விரும்புகிறேன். நமது மத்திய சர்க்காரிலிருந்து மாநில அரசுக்கு ஒரு கடிதம் எழுதப் பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்னறிவிப்பின்றி இது போன்ற பிரச்சினைகளை எழுப்பக் கூடாது.

திரு. அ. ரகுமான்கான் : நான் இப்பிரச்சினையை எழுப்பக் கூடாதா ? நீங்கள் என்னைத் தவிர்க்க விரும்புகிறீர்கள்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களைத் தவிர்க்க விரும்பவில்லை. திடீரென்று மத்திய சர்க்கார், மாநில சர்க்கார், வெளி நாட்டு சர்க்கார் என்றெல்லாம் சொல்கிறீர்கள். முன்னறி விப்பின்றி இதுபோன்ற பிரச்சினைகளை எழுப்பினால் எப்படி அரசிடம் இருந்து பதில் கிடைக்கும் ?

திரு. அ. ரகுமான்கான்: கேள்வி நேரம் முடிந்தவுடன் உறுப் பினர்கள் சில தகவல்களைப் பற்றி கேள்வி கேட்பது வழக்கம். (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முக்கியமான பிரச்சினை யாக இருந்தால், கட்சித்தலைவர்கள் மூலமாகத்தான் எழுப்ப முடியும். உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து அவையில் கேட்டதற்கு அனுமதிக்கப்பெறுவதில்லை.

திரு. அ. ரகுமான்கான்: என்னைப் பேச அனுமதியுங்கள். நான் சொல்வது சரியில்லை என்றால், தாங்கள் நீக்கிவிடலாம். நான் நேற்று எதுவும் கேட்கவில்லை. இன்றைக்குத்தான் கேட் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று கேட்கவில்லை என்பதற்காக இன்று உங்கள் உரிமைகளை எஸ்டாப்ளிஷ் பண் ணுவது மாதிரி பேசுவது நல்லதல்ல.

கேள்வி நேரமே இன்று 10-45 மணி வரையில் போய்விட்டது. ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றையும் இன்று எடுத்துக்கொள்ள இருக்கிறோம். அடுத்து தனியார் தீர்மானத்தின்மீது பேசு வதற்காக எட்டு உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: கேள்வி நேரம் முடிந்தவுடன் முக் கியமான பிரச்சினை எதையும் உறுப்பினர்கள் எழுப்பக்கூடாதா? தயவுசெய்து என்னை அனுமதியுங்கள் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முக்கிய பிரச்சினை ஏதாவது இருந்தால் அதனை உங்கள் கட்சித் தலைவர் மூல மாக அவையில் எழுப்புங்கள். எவ்வித முன்னறிவிப்புமின்றி ‘மத்திய சர்க்கார், மாநில சர்க்காருக்கு கடிதம் எழுதியிருக் கிறது’ என்று திடீர் என்று கேட்க ஆரம்பித்தால், எப்படி பதில் வரும்? நாளைக்கு நீங்களே அமைச்சர் வரிசையில் இருந் தாலும் எப்படிப் பதில் சொல்வீர்கள்? (குறுக்கீடு).

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, நேற்று கட்டிடப் பணியாளர்களைப்பற்றிய சட்டம் இந்த அவையில் நிறைவேறியது. இன்றைக்கு பல்லாயிரக்கணக்கான........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பிரச்சினை நேற்றே முடிந்துவிட்டது.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### தஞ்சை மாவட்டத்தில் நெல்லை விற்க முடியாமல் விவசாயிகள் அவதிப்படுவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் இரெ. இராசமாணிக்கம், பொ. உத்திராபதி, தி. ள. நல்லப்பன், என். ஏ. பூங்காவனம், கி. அய்யாறு வாண்டையார், ந. சிவஞானம், எஸ். இராசாராமன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், எம். செல்லமுத்து, ரா. உமாநாத் மற்றும் என். வரதராஜன் ஆகியோர்'' ''தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள நெல்லை விவசாயிகள் விற்க முடியாமல் அவதிப்படுவதால் அப்பகுதி விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50.)

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவையினுடைய தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் கஷ்டப்பட்டுஉற்பத்தி செய்த நெல்லை விற்க முடியாமல் அவதிப்படுவது வேதனையாக இருக்கிறது. அதை அரசாங்கத்தினுடைய .கவனத்திற்குக் கொண்டு வந்து சுட்டிக் காட்டுவதற்காக நான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சார்பாக, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அவையிலே எழுப்பியிருக்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் தற்போது தொடர்ந்து பெய்துக் கொண்டிருக்கிற பெருமழையின் காரணமாக அறுவடைக்குத் தயாராக இருந்த நெல்லில் பெரும் பகுதி அழிந்து விட்டது. சில பகுதிகளில் புகையான் நோய் பயிர்களுக்கு ஏற்பட்டு விவசாயிகள் ஏராளமாக நஷ்டம் அடைந்துக் கொண்டிருக்கிறார்கள். தற்போது இந்த மழையின் மூலமாகவும், புகையான் நோய் மூலமாகவும் விவசாயிகளுக்கு 28 கோடி ரூபாய் வரையில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என பத்திரிகையில் செய்திகள் வருகின்றன. இவ்வளவு நஷ்டம் அடைந்து வரும் விவசாயிகளுக்கு தேவையான உதவிகளை அரசு செய்ய வேண்டியது அதனுடைய கடமையாகும். ஆனால் அரசு அதைச் செய்ய தவறி விட்டது என்பதை நான் அரசினுடைய கவனத்திற்கு சுட்டிக் காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.





(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை.)

தற்போது தஞ்சை மாவட்டத்தில் சில இடங்களில் அரசு கொள்முதல் நிலையம் மூலமாக, விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லை கொள்முதல் செய்து வருகிறார்கள். எல்லாக் கிராமங்களிலும் கொள்முதல் நிலையங்களை உடனடியாக திறந்தாக வேண்டும். காரணம் குறுவை நெல்லை அறுவை செய்தவுடன் விற்பனை செய்ய வேண்டும். அப்படி உடனடியாக விற்பனை செய்யத் தவறினால் மறு நாள் அந்தக் குறுவை நெல் முளைத்து, அது வீணாகிவிடக் கூடிய நிலை ஏற்படும் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும். அந்த வகையில் விவசாயிகள் அறுவடை செய்தவுடன் அந்த நெல்லை கொள்முதல் செய்வதற்கு தேவையான ஏற்பாடுகளை அரசு செய்தாக வேண்டும். குறுவை நெல்லை, அதுவும் மழை பெய்து வரும் இந்த நேரத்தில் அறுவடை செய்தவுடன் காய வைப்பது என்பது இயலாத காரியம் விவசாயிகளுக்கு. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் காய வைப்பதற்கு இப்போது இடமே கிடையாது. அப்படி இட வசதி இல்லாத காரணத்தாலே அந்த நெல் எவ்வளவு ஈரமாக இருந்தாலும் அரசாங்கம் உடனடியாக கொள் முதல் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு குறுவையைப் பொறுத்த வரையில், நெல்லை விவசாயிகள் அறுவடை செய்தவுடன் மறுநாள் போர் அடித்து, வைக்கோலைப் பிரித்து மாடுகளுக்கு தீவனம் ஆக்க வேண்டும். உடனடியாக வயலையும் உழுது அடுத்த 10 தினங்களுக்குள்ளாக இரண்டாம் போக விளைச்சலுக்கு ஏற்பாடுகளும் செய்தாக வேண்டும். இவ்வளவு மழை பெய்துக் கொண்டிருக்கும் காலத்தில் இது இவ்வளவு சிரமம்? இவ்வளவு கஷ்டத்திற்குள்ளாகிக் கொண்டிருக்கும் விவசாயிகள், அறுவடை செய்த நெல்லை காய வைப்பதற்கு இடம் இல்லாமல் அவதிப்படுவதை உணர்ந்து, நெல் எவ்வளவு ஈரமாக இருந்தாலும்.. ........(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் 10 பேர்கள் பேச வேண்டியிருக்கிறது. இப்படி பேசிக் கொண்டே போனால் இன்றைக்குப் பூராவும் இந்த ஒத்திவைப்புப் பிரச்னை தான்.

[1984 அக்டோபர் 11]

திரு. இரெ. இராசமாணிக்கம் : மிக முக்கியமான பிரச்னை சொல்லிவிட்டு முடித்துவிடுகிறேன்.

ஆகவே, எவ்வளவு ஈரமாக இருந்தாலும் அரசு கொள்முதல் நிலையம் மூலமாக அவ்வளவு நெல்லையும் உடனடியாக கொள்முதல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் தற்போது அரசு 22 சதவீதம் ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்வதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். ஆனால் அறுவடை செய்யப்படுகிற நெல் 25 சதவீதத்திலிருந்து 27 சதவீதம் வரையில் ஈரப்பசை உள்ளதாக இருக்கிறது. ஆகையினால் 25 சதவீதம் வரையிலாவது ஈரப்பசை இருந்தாலும்கொள்முதல் செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு சாதாரணமாக நெல்லை கொள்முதல் செய்கிறபோது ஒரு குவிண்டாலுக்கு 2 ரூபாயை, தரக்குறைவு என்று காரணம் வைத்து பிடித்தம் செய்வது வழக்கத்தில் இருந்து வருகிறது. அதைக் கண்டிப்பாக குறுவை நெல்லுக்கு செய்யக்கூடாது என்று நான் இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன். அது மட்டும் அல்லாமல் இதுவரையில், ஒரு குவிண்டாலுக்கு 18 சதவீதம் மாய்ச்சர் இருந்தால் அந்த நெல்லுக்கு, கிரேட் கட் என்ற வகையில் மட்டும் 2 ரூபாய் பிடித்தம் செய்து கொடுத்து வந்தார்கள். தற்போது 20 சதவீதத்திற்கு மாய்ஸ்ச்சர் இருந்தால் 2 ரூபாய் கிரேட் கட்-உடன், அதிகப்படியான ஈரப்பசைக்காக 3.15 காசு சேர்த்து, ரூ. 5.15 காசு குறைத்துக் கொடுக்கிறார்கள். அதே நேரத்தில் 22 சதவீதம் மாய்ஸ்ச்சர் இருக்குமானால், கிரேட் கட் 2 ரூபாயுடன், மாய்ஸ்ச்சருக்காக 6.15 காசும் சேர்த்து, ஆக மொத்தம் 8.15 காசைப் பிடித்துக் கொண்டு இப்பொழுது கொடுக்கப்படுகிறது. இது நியாயமான நிலை அல்ல .

இவ்வளவு கஷ்டங்களுக்கு இடையில் உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்ய வேண்டும். ஆகவே மத்திய சர்க்கார் கொடுக்கக்கூடிய விலையைச்



1984 அக்டோபர் 11] [திரு. இரெ. இராசமாணிக்கம்]

சேர்த்து சாதாரண ரகமாக இருந்தால் 175 ரூபாயும், நடுத்தர நெல்லாக இருந்தால் 180 ரூபாயும், சன்ன ரகமாக இருந்தால் 185 ரூபாயும் வழங்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 50 சதவீத லெவி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் மூன்றில் ஒரு பங்கு லெவி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த பாரபட்சம் ஏன்? தஞ்சை மாவட்ட விவசாயிகள் மட்டும் என்ன பாவம் செய்தார்கள் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். ஆகவே தஞ்சைமாவட்டத்திலே 50 சதவீதம் லெவி என்பதை மாற்றி 25 சதவீதமாகக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு குவிண்டாலுக்கு 15 ரூபாய் அதிகமாக வழங்கப்படும் என்றும் உரம் பூச்சி மருந்து போன்ற பொருட்களாக அது வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அது சிறு விவசாயிகளுக்குக் கிடைக்க நியாயமில்லை. எனவே அந்தப் பணத்தைச் சேர்த்து விவசாயிகளுக்குப் பணமாகக் கொடுப்பதற்கு உடனடியாக உத்திரவிடவேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் எல்லாக் கிராமங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உடனடியாகக் கொள்முதல் செய்யப்பட்டது. எவ்வளவு ஈரமாக இருந்தாலும் கொள்முதல் செய்தார்கள். ஈர நெல்லை உலர்த்துவதற்காக திராவிட முன்னேற்ற கழக ஆட்சிக் காலத்திலே நெல் உலர்த்தும் ஆலைகள் பயன்படுத்தப்பட்டன. அந்த ஆலைகள் எல்லாம் இன்று மூடிக் கிடக்கின்றன. அவைகளை இப்போது மீண்டும் இயங்க வைக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. இரெ. இராசமாணிக்கம்] [1984 அக்டோபர் 11

நெல்லை உடனடியாக வேறு மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வதற்காக அரசாங்கத்தின் மூலமாக லாரிகள் அப்போது வாங்கிப் பயன்படுத்தப்பட்டன. அந்த லாரிகள் இன்று என்ன செய்து கொண்டிருக்கின்றன என்று தெரியவில்லை. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நெல்லை எடுத்துச் செல்வதற்கு லாரிகள் கிடைக்கவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்லி இருக்கிறார். ஆகவே லாரிகளை அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : போதும் அமருங்கள் திரு. உத்திராபதி.

திரு. இரெ. இராசமாணிக்கம் : * * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: முடித்து விடுகிறேன். களத்து மேட்டிலே நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும். நடமாடும் கொள்முதல் நிலையங்கள் மூலமாக களத்து மேட்டிலே கொள்முதல் செய்ய வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு நட்டம் ஏற்படாமல் இருக்க லெவி 25 சதவீதம் கொள்முதல் என்று அறிவிக்க வேண்டும்; நியாயமான விலை வழங்க வேண்டும் என்று கேட்டு இவைகளையெல்லாம் விவாதிப்பதற்காக இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் சொள்கிறேன்.

*திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் குறுவை நெல் பெரும் அளவு தேங்கி இருப்பது பற்றி விவாதிக்க ஒத்திவைப்பு தீர்மானத்தின் மீது பேச விரும்புகிறேன்.

*மாண்புமிகு பேரவை துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1984 அக்டோபர் 11]

(முற்பகல் 11-00)

சென்ற ஆண்டு தஞ்சை மாவட்டம் கடுமையான மழையாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு பாலைவனமாக மாறியது அரசுக்கு நன்கு தெரியும். தெரிந்து இருந்தும் கூட அந்த விவசாயிகளுக்கு அரசு எந்த உதவியும் செய்யாத இந்த சூழ்நிலையில் இந்த ஆண்டு ஜூன் மாதம் தண்ணீர் வந்த உடன் விவசாயிகள் இந்த ஆண்டாகிலும் போன ஆண்டு ஏற்பட்ட சேதாரத்தில் இருந்து மீளலாம் என்று எண்ணி விவசாயத்தில் ஈடுபட்டார்கள். அப்படி ஈடுபட்ட நேரத்தில் விவசாயிகளுக்கு தமிழக அரசு கூட்டுறவு கடன் கொடுப்பதில் மிகவும் பின் தங்கினார்கள். கொடுப்பதற்கு உலக வங்கியை கை காட்டினார்கள். அப்படி சில பகுதிகளில் விவசாயிகளுக்கு கொடுத்தாலும் அவர்களுக்கு உரத்தை மட்டும் கொடுத்து பணத்தை பழைய கணக்குக்கு வரவு வைத்துக் கொண்டார்கள். இந்த அளவுக்கு துன்பத்திற்கு ஆளாக்கப்பட்ட விவசாயிகள் இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் 4½ இலட்சம் ஏக்கர்களில் குறுவை விவசாயம் செய்தார்கள். இந்த குறுவை பயிர் செய்வதற்கு பல்வேறு வர்த்தகர்களிடம் இருந்து அதிகமான வட்டிக்கு வாங்கி நல்லவிதமாக விவசாயம் செய்தார்கள். ஆனால் விவசாயம் செய்த நெல் இந்த நல்ல மாதிரி அறுவடைக்கு வரக்கூடிய நேரத்தில் தொடர்ச்சியாக கடுமையான மழை பொழிந்து, புகையான் பூச்சி அடித்து பெரும் பகுதி பாதிக்கப்பட்டது. இந்த சூழ்நிலையில் விவசாயிகளுக்கு தொடர்ச்சியாக நெல்லுக்கு விலை கிடைக்க குவிண்டாலுக்கு ரூ. 200 கிடைக்க வேண்டும் என்று போராடுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் போன ஆண்டு தமிழக அரசு குவிண்டாலுக்கு ரூ. 35 கூடுதலாக கொடுத்து முழு நெல்லை கொள்முதல் செய்தார்கள். இப்போது எல்லா பொருட்களின் விலையும் ஏறி விட்டன. ஆனால் விவசாயி உற்பத்தி செய்யக் கூடிய நெல்லுக்கு தமிழக அரசு ஏன் பாரபட்சமாக இருந்து இந்த ஆண்டு விலையைக் குறைத்துக் கொள்முதல் செய்வதற்கு அறிவித்து இருக்கிறது. இதை கேட்டால் மத்திய அரசு நெல் விலையை உயர்த்தவில்லை, பணம் கொடுக்க மறுக்கிறார்கள். இதனால் எங்களால் முடியவில்லை என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட அடிக்கடி சொல்லி வருகிறார்கள். மத்திய

அரசுக்கு விவசாயிகளைப் பற்றி கவலை கிடையாது. அவர்களுக்கு தேர்தல் வரும்போது மக்களிடத்தில் எப்படியும் வாக்குகள் பெற்றுவிடலாம் என்பது தான். அவர்கள் தமிழக மக்கள் நம்பி இருக்கக் கூடிய தஞ்சை மாவட்டம் நல்ல முறையில் முன்னேறுவதற்கு நிதி உதவி கொடுப்பதற்கு தயாராக இல்லை.

இந்த நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் கலெக்டர் ஒரு நாளைக்கு 8 ஆயிரம் டன் கொள்முதல் செய்தால் 70 சதம் நெல் வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 60 ஆயிரம் டன் தான் கொள்முதல் செய்ததாக கலெக்டர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். ஆனால் 4½ இலட்சம் ஏக்கர் குறுவை சாகுபடி செய்து இருக்கிறார்கள். 450 நேரடி கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டதாக அறிவித்து இருக்கிறார்கள். ஆனால் 60 ஆயிரம் டன் தான் இதுவரையிலும் நெல் கொள்முதல் என்று சொன்னால் இன்னும் எந்த அளவுக்கு நெல் தேங்கியிருக்கிறது என்பதை இதிலிருந்து உதாரணமாக நீங்கள் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் நெல்லுக்கு விலை சென்ற ஆண்டு கொடுத்ததை விட இந்த ஆண்டு 15 ரூபாய் அதிகமாக கொடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். இந்த 15 ரூபாய் அரசு கொள்முதலுக்கு நெல் போடுபவர்களுக்குத்தான் கொடுக்கப்படும். இந்த 15 ரூபாய்க்கு உரமும், பூச்சி மருந்தும் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அரசு சென்ற ஆண்டு ஒரே கொள்கையைத்தான் வைத்து இருந்தார்கள். ஆனால் இந்த ஆண்டு விவசாய கொள்கையில் 2 கொள்கையை கடைப்பிடித்து இருக்கிறார்கள். ஒரு பக்கம் அரசு கொள்முதல் செய்கிறது. இன்னொரு பக்கத்தில் வியாபாரிகள் கொள்முதல் செய்யலாம் என்று இன்றைக்கு வியாபாரிகளுக்குவாய்ப்பு அளித்தாலும் விவசாயிகள் முழுமையான நெல்லை கொள்முதல் நிலையத்திற்கு கொண்டு வர முடியாத ஒரு கஷ்டம் இருக்கிறது. காரணம் விவசாய காலத்தில் விவசாயிகளுக்கு முழுமையான கடன் கிடைக்காததால் அவர்கள் தனியாரிடத்திலிருந்து கடன் பெற்று விவசாயம் செய்து இருக்கிறார்கள். நெல் வியாபாரிகளிடமிருந்தும் கடன் பெற்று விவசாயம் செய்து இருக்கிறார்கள். ஆகவே இப்படி கடன் கொடுத்தவர்களுக்கு நெல் கொடுக்க வேண்டும் என்பதால் முழு நெல்லும் அரசின் கொள்முதலுக்கு வருவதற்கு சூழ்நிலை கிடையாது.

எனவே நான் கேட்டுக் கொள்ளுவது எல்லா விலையும் ஏறி இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் விவசாயிகள் கடுமையாக உழைத்து நெல் உற்பத்தி செய்து இருக்கிறார்கள். அதற்கு குவிண்டாலுக்கு 200 ரூபாய் கொடுக்காவிட்டாலும் போன ஆண்டு கொடுத்த மாதிரி குவிண்டாலுக்கு 35 ரூபாய் எல்லா விவசாயிகளுக்கும் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.





அதேபோல் நெல் வைப்பதற்கு இடம் இல்லை என்று இன்றைக்கு கோயில்களை தேடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அரசு கட்டிடங்கள் நிறைய கட்டி செயல்படாமல் இருக்கின்றது. அதே போல் திருத்துறைப்பூண்டியில் கூட மார்க்கெட்டிங் கமிட்டிக்கு சொந்தமான 5, 6 கட்டிடங்கள் கட்டி சும்மா இருக்கின்றன. அந்தக் கட்டிடங்களை எல்லாம் காலத்தோடு எடுத்து இந்த நெல்லை உலர வைக்க வேண்டும். வரக் கூடிய நெல்லை முழுமையாக எடுக்க வேண்டும். இப்போது சொல்கிறார்கள், முழுமையான நெல்லையும் கொள்முதல் செய்வதாக. நான் நேரில் சென்று பார்த்து இருக்கிறேன். பல இடங்களில் சாக்கு இருக்கிறது, பணம் இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் பெரும் பகுதிகளில் 4 ஆண்டு, 5 ஆண்டு காலம் வேலை செய்த பணியாளர்களை நீக்கிவிட்டு இந்த ஆண்டு புதிதாக போடுவதால் அந்த ஊழியர்கள் நெல்லை கொள்முதல் செய்வதில் தேக்கம் ஏற்படுகிறது. இதனால் சகலவிதமான விவசாயிகளும் ஒரு நெருக்கடியான நிலைக்கு ஆளாக்கப்பட்டு கடுமையான மழையாலும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். 25 சதவீதம் ஈரப்பசை உள்ள நெல்லையும் கொள்முதல் செய்ய வேண்டும் என்று சொல்லி இந்தச் சூழ்நிலையில், அவசியம் கண்டிப்பாக நெல் விலையைக் குவிண்டாலுக்கு 35 ரூபாயாவது அதிகமாகக் கொடுப்பதற்கு அமைச்சரவர்கள் இப்பொழுது வாக்குறுதி கொடுக்க வேண்டும். தேங்கியுள்ள நெல் அனைத்தையும் கொள்முதல் செய்ய வேண்டும். இப்பொழுது வரக்கூடிய நெல்லைத் திருப்பி அனுப்புகிறார்கள். பூரா நெல்லையும் 25 சதவீதம் ஈரப்பசை வரையில் எடுக்க வேண்டும். அதில் கட் செய்யாமல் முழுப் பணத்தையும் கொடுக்க வேண்டும். இதில் இரட்டைக் கொள்கை இல்லாமல் ஒரே கொள்கையைக் கடைப்பிடித்து, பூரா நெல்லையும் கொள்முதல் செய்ய வேண்டும். இதுபற்றி எல்லாம் விவாதிப்பதற்காக சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். இராசாராமன் : பேரவையினுடைய துணை தலைவரவர்களே, தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்குகின்ற தஞ்சை மாவட்டத்தில் கடந்த பத்து நாட்களாக விடாது மழை பெய்த காரணத்தினால் ஏறத்தாழ நான்கு இலட்சம்

[[திரு. எஸ். இராசாராமன்] [1984 அக்டோபர் 11

ஏக்கர்களுக்கு மேல் உள்ள நிலங்களில் பயிர்கள் மூழ்கி இருப்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். இப்படி உள்ள 4 இலட்சம் ஏக்கர்களில் சாகுபடி செய்த நெல்லில் அரசு பெரும் பகுதியைக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று நினைக்கிறேன். அப்படிக் கொள்முதல் செய்ய வேண்டிய நெல்லை எல்லாம், அரசு நிர்ணயித்திருக்கின்ற கொள்முதல் நிலையங்களின் வாயிலாகத்தான் கொள்முதல் செய்ய வேண்டும். ஏறத்தாழ தஞ்சை மாவட்டத்திலே 400 கொள்முதல் நிலையங்கள் இந்த ஆண்டு திறக்கப்பட்டதாகத் தெரிகிறது. சென்ற ஆண்டில் 600-க்கும் மேற்பட்ட கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருந்து இந்த ஆண்டு குறைவாகக் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டதன் நோக்கம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை.

நீரிலே மூழ்கியுள்ள நெல்லை உடனடியாக விலைக்கு எடுத்துக் கொள்வதன் வாயிலாக, விவசாயிகளின் துயரைத் துடைக்கின்ற எண்ணத்தில் அரசு உடனடியாக 600-க்கும் மேற்பட்ட கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், போனஸாக இந்த ஆண்டு 15 ரூபாய் கொடுப்பதாக அரசு அறிவித்து இருக்கிறது. அமைச்சரவர்கள் தஞ்சை மாவட்டத்திலேயிருந்து இந்த அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் உரமாகக் கொடுப்பதாகவும், பூச்சி மருந்தாகக் கொடுப்பதாகவும் கூறினார்கள். அதற்காக நான் அமைச்சரவர்களுக்கும், அரசுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருகிறேன்.

இருந்தாலும் கூட சென்ற ஆண்டு கொள்முதல் செய்யப்பட்ட நெல்லுக்கு 35 ரூபாய் போனசாகக் கொடுத்தார்கள். அந்த 35 ரூபாயையாவது இந்த ஆண்டும் கொடுக்க வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்திலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் சென்ற ஆண்டு



1984 அக்டோபர் 11] [திரு. எஸ். இராசாராமன்]

கொடுத்த 35 ரூபாயைவிட அதிகமாகக் கூட்டிக் கொடுக்காவிட்டாலும் கூட அந்த 35 ரூபாயையாவது கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை எடுத்துச் செல்வதற்கு சென்டருக்குச் சரியாக லாரிகள் வருவதில்லை. அரசு அதிகாரிகள் உடனடியாக லாரிகளை அனுப்பாத காரணத்தினால் கொள்முதல் செய்யப்படுகின்ற பல்வேறு நிலையங்களிலே, நெல்லை இரண்டொரு தினங்களுக்கு வைத்துக் கொள்வதற்கு இடமில்லாத காரணத்தினால், கொள்முதல் செய்வதற்கு ஏற்றுக்கொள்ள முடியாது என்றெல்லாம் கூறுகிறார்கள்.

அதோடுமட்டுமல்ல, 25 சதவீதம் ஈரம் இருக்கின்ற நெல்லைக் கொள்முதல் செய்கிறார்கள். அதற்கும் மேலே இருக்கின்ற நெல்லை சென்டரிலே கொள்முதல் செய்யாத நிலை ஏற்பட்டு இருக்கிறது. அதன் காரணமாக, தனியாரிடத்திலே, மில் முதலாளிகளிடத்திலே சென்றால், அவர்கள் 70 ரூபாய் என்று ஒரு மூட்டையை வாங்குகின்ற அவல நிலை இருப்பதால் விவசாயிகள் துன்புறுகிறார்கள். விவசாயப் பெருங்குடி மக்கள் அந்த நெல்லை விற்றுத்தான் மீண்டும் தாளடிப் பயிரைச் சாகுபடி செய்ய வேண்டிய நிலையிலே இருக்கிறார்கள் என்பதும் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். காரணம், அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், தஞ்சை மாவட்டத்திலே உள்ள விவசாயிகளைப் பற்றி நன்றாக உணர்ந்தவர்கள். எனவே, 25 சதவீதத்திற்கும் மேலே ஈரமாக இருக்கின்ற நெல்லையும் கொள்முதல் செய்ய வேண்டும்; 35 ரூபாய் போனசாகக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

18 சதவீதம் ஈரப்பசை என்று சொல்லி 2 ரூபாய் பிடித்தம் செய்துகொள்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை நீக்குகின்ற வகையில் அறிவிக்க வேண்டும். இதுபோன்ற பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளை இதுசம்பந்தப்பட்ட வகையில் விவாதிக்கவேண்டி இருப்பதால் இந்த அவையின் இதர அலுவல்களை எல்லாம் ஒத்திவைத்துவிட்டு இது குறித்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். செல்லமுத்து :— மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலும், காவிரி பாய்
கின்ற திருச்சி, தென்னாற்காடு போன்ற மாவட்டங்களிலும்
தொடர்ந்து மழை பெய்து வருகின்றது. இப்படிப்பட்ட நிலைமை
யில் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லையெல்லாம்
கொள்முதல் நிலையங்கள் நேரடியாகக் கொள்முதல்
செய்யாததன் காரணத்தால் விவசாயிகள் எல்லாம் தத்தளித்
துக் கொண்டிருக்கிறார்கள். மேலும்; திறக்கப்பட்ட கொள்
முதல் நிலையங்கள் போதுமானதாகக் கூட இல்லை. திறக்கப்
பட்டிருக்கின்ற கொள்முதல் நிலையங்களுக்குச் சென்றாலும் கூட
பணம் இல்லை என்று சொல்கிறார்கள். அல்லது சாக்கு இல்லை
என்று சொல்கிறார்கள். ஒருபுறத்திலே தனியார் வியாபாரி
களைக் கொள்முதல் செய்யவிட்டுவிட்டு, அரசு கொள்முதல்
நிலையங்களிலே சாக்கு இல்லை என்றும், ஈரப்பதம் என்றும்
சொல்லி கொள்முதல் செய்ய மறுக்கிறார்கள். இதன் காரணத்
தால் விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லை எல்லாம் தனி
யார் வியாபாரிகளிடம் தள்ளிவிடக்கூடிய ஒரு போக்கு தஞ்சை
மாவட்டத்தில் இருக்கின்றது.

சென்ற நான்கைந்து ஆண்டுகளாக வறட்சியாலும், வெள்ளத்
தாலும் தஞ்சை மாவட்டம் மிகப் பெரிய பாதிப்பிற்கு ஆளாகியி
ருக்கக்கூடிய நிலைமையில் சென்ற ஆண்டு கொடுத்த விலையைக்
கூட இந்த ஆண்டு கொடுக்காமல் மத்திய அரசு சொன்னது
என்று காரணம் காட்டி விலையைக் குறைத்திருக்கிறார்கள். இந்த
விலைக்குறைப்பின் மூலம் விவசாயிகள் மிகப் பெரிய தொல்லைக்கு
ஆளாகி இருக்கிறார்கள். சமீபத்திலே மாண்புமிகு உணவுத்துறை
அமைச்சர் அவர்கள் 15 ரூபாய் அதிகப்படுத்திக் கொடுக்கப்
போகிறோம் என்றும், நேரடியாகக் கொள்முதல் நிலையங்களிலே
நெல்லைக் கொடுக்கின்றபோது அதற்கான கூப்பன் தருவ
தாகவும் சொன்னார்கள். இதன் காரணத்தால் கொள்முதல்
நிலையங்களில் நேரடியாகக் கொடுக்க முடியாமல் வியாபாரி
களிடம் கொடுக்கக்கூடிய சிறு விவசாயிகளுக்கு அந்த 15 ரூபாய்
கூட கிடைக்காது. மேலும் அது கூப்பனாக இல்லாமல் வியா
பாரிகளிடம் கொடுத்தாலும், கொள்முதல் நிலையங்களிலே
கொடுத்தாலும் அனைத்து விவசாயிகளுக்கும் அந்தக் கூடுதல்
தொகையான 15 ரூபாய் கிடைக்கக்கூடிய அளவுக்கு ஒரு ஏற்
பாட்டைச் செய்யவேண்டும்.





சென்ற ஆண்டு கொடுத்த அந்த 35 ரூபாய் இந்த ஆண்டும்
அவர்களுக்குக் கிடைக்குமாறு ஏற்பாடு செய்யவேண்டும். தஞ்சை
மாவட்டத்திலே கொள்முதல் நிலையங்கள் போதுமான அள
வுக்கு இல்லை. சென்ற காலங்களிலே கூட்டுறவு சொசைட்டி
மூலமாகக் கொள்முதல் செய்தார்கள். ஆனால்
இப்போது கூட்டுறவு சொசைட்டி மூலம் கொள்முதல்
செய்யக்கூடாது என்று சொல்லி அவர்கள் மறுத்துவிட்டார்கள்.
இதனால் வியாபாரிகள் இஷ்டப்பட்ட முறையிலே கொள்முதல்
செய்வதற்குத்தான் வழிவகை செய்வதாக இருக்கின்றது.

மழை பெய்துகொண்டிருக்கின்ற நிலைமையில் கொள்முதல்
நிலையங்களில் சரியாகக் கொள்முதல் செய்யப்படுவதில்லை.
இப்படிப்பட்ட நிலைமையில் தீபாவளி வேறு நெருங்கிக்கொண்
டிருக்கின்றது. எனவே விவசாயிகள் நெல்லை எப்படியாவது
விற்றாகவேண்டும் என்ற நிலைமையில் இருப்பதால் வியாபாரி
கள் தங்கள் இஷ்டப்படி கொள்முதல் செய்கின்ற சூழ்நிலை
உருவாகி இருக்கின்றது. எனவே விவசாயிகளுக்கு உதவி செய்யக்
கூடிய முறையில் இந்தக் கொள்முதல் நிலையங்களில் ஏற்பாடுகள்
இல்லை. எனவே அரசாங்கமே எல்லா நெல்லையும் கொள்
முதல் செய்யக்கூடிய அளவுக்கு ஏராளமான கொள்முதல் நிலை
யங்களைத் திறந்து கொடுத்து நெல்லுக்கு உடனுக்குடன் பணம்
கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். மேலும் 18 சதவீதம்
ஈரப்பதம் 22 சதவீதம் ஈரப்பதம் என்றெல்லாம் சொல்லி
விலையைக் குறைத்துக் கொடுக்கின்ற நிலைமையைப் போக்க
வேண்டும்.

விவசாயிகள் உற்பத்தி செய்த அனைத்து நெல்லையும் அர
சாங்கமே கொள்முதல் செய்யக்கூடிய வகையில் ஏற்பாடு செய்ய
வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இது குறித்து இன்னும் பல்
வேறு விஷயங்களை விவாதிக்க வேண்டியிருப்பதால் இந்த அவை
யின் இதர அலுவல்களை ஒத்திவைத்துவிட்டு இது குறித்து விவா
திக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு சட்டப்
பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு இயக்கங்களைச்
சேர்ந்த 4 மாண்புமிகு உறுப்பினர்கள் தஞ்சை மாவட்
டத்தில் நெல் கொள்முதல் செய்கின்ற முறை சரியல்லவென்றும்
நெல்லுக்குச் சென்ற ஆண்டைப் போல குவிண்டாலுக்கு ரூ.
35 உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்றும், அங்கே, விளைகின்ற
நெல்லை அரசாங்கமே வாங்கவேண்டுமென்றும் வாங்குகின்ற
நெல்லை விரைவாக வெளி மாவட்டங்களுக்கு அனுப்ப வேண்டு
மென்றும், இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யாததனால்
அங்கு விவசாயிகளுக்குச் சொல்லொணா துயரங்கள் ஏற்பட்
டிருக்கின்றன என்பதையும் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

இங்கு நான் கூற விரும்புவது எல்லாம் நம்முடைய மரியாதைக்குரிய காங்கிரஸ் (இ) யைச் சேர்ந்த திரு. இராசாராமன் அவர்கள் கூறுகின்ற நேரத்தில் நான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் விவசாயிகளுடைய இன்னல்களை, இடுக்கண்களை நன்கு அறிவேன், எனவே அப்படிப்பட்ட காரியத்திற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்றும் கூறினார்கள். நான் அவர்களுக்குக் கூறிக் கொள்வதெல்லாம் நான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன் மட்டும் அல்ல; வயலிலே இறங்கி வேலை செய்யக்கூடிய ஒரு உண்மையான விவசாயி என்பதையும் இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, மாண்புமிகு புரட்சித் தலைவருடைய அரசு உண்மையான விவசாயிகளுடைய நலனைப் பேணிக் காக்கின்ற விவசாய அரசு என்பதை இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். கடந்த காலத்திலே இயற்கையின் சீற்றத்தால் விவசாயிகள் சிரமத்திற்கு ஆட்படுகின்ற நேரத்தில் இந்த அரசு பல்வேறு துறைகளின் மூலமாக விவசாயிகளை ஊக்குவிக்கின்ற வகையிலே நல்ல பல காரியங்களைச் செய்து விவசாயிகள் விவசாயத்தில் உற்சாகமாக ஈடுபடுகின்ற வகையில் நடவடிக்கைகளை எடுத்தது என்பதை நன்கு அறியவேண்டும். அந்த வகையில்தான் சென்ற ஆண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவர் கடந்த இரண்டு ஆண்டுக்காலமாக தொடர்ந்து கடுமையான வறட்சி இருந்தது என்ற காரணத்தினால் விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 35 அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, இந்த அரசு ஏகபோக நெல் கொள்முதல் முறையை அறிவித்து, குவிண்டாலுக்கு ரூ. 35 ஊக்க விலையாக கொடுத்தது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். அந்த அடிப்படையில் சென்ற 1983-84 ஆம் ஆண்டு இந்த அரசு 4.01 இலட்சம் டன் அரிசிக்குரிய அதாவது, 6,01,500 இலட்சம் டன் நெல்லைக் கிட்டத்தட்ட ரூ. 21.05 கோடி அதிக விலை கொடுத்து வாங்கியது. அதிக விலை கொடுத்து வாங்கியதால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஏற்படும் நட்டத்தை மாநில அரசினுடைய பொறுப்பிலேயே அந்தப் பணத்தை அந்த வாணிபக் கழகத்திற்கு இந்த அரசு கொடுத்திருக்கிறது என்பதையும் அப்படி நெல் வாங்குகின்ற முறையை மத்திய அரசு மறுத்ததன் காரணமாக ரிசர்வ் வங்கி நமக்குக் கடன் கொடுக்க முன் வராமல் ஆட்சேபனை தெரிவித்தது என்பதையும், அதற்குப் பிறகு நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களும் சம்பந்தப்பட்ட அதிகாரி பெருமக்களும் மத்திய அரசையும் ரிசர்வ் வங்கியையும் அணுகி பல்வேறு முறைகள் சென்று நிலைமைகளை எடுத்துக் கூறி அதற்குப் பிறகு மத்திய அரசு அனுமதி அளித்தது என்பதையும் அப்படி வாங்கப்பட்ட நெல்லுக்கு மத்திய அரசினுடைய நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்த தேசியக் கொள்



கையை மீறி இந்த அரசு ரூ. 35 கொடுத்ததன் காரணமாக, இந்த அரசு 12.5 விழுக்காடு வட்டி கொடுக்கவேண்டிய நிலைமை 18 சதவிதமாக ரிசர்வ் வங்கி உயர்த்தியது என்பதையும் அதனால் ரூ 3.95 கோடி இந்த அரசுக்கு வாணிபக் கழகத்தில் நட்டம் ஏற்பட்டது என்பதையும் ஒட்டுமொத்தமாகச் சென்ற ஆண்டு கிட்டத்தட்ட ரூ. 25 கோடி வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளை நல்லமுறையில் ஊக்குவிக்க வேண்டுமென்பதற்காக இந்த அரசு சொந்தப் பொறுப்பிலிருந்து செலவழித்திருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையிலே அரசு சென்ற ஆண்டு ரூ. 35 ஒரு குவிண்டாலுக்கும் கொடுத்தது இந்த ஆண்டு ஏன் கொடுக்கக் கூடாது என்பதை இங்கே கேட்டார்கள். அதற்கு நான் விடையளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டு விவசாயிகளுக்கு அந்த வகையிலே கொடுக்க வேண்டுமென்ற நல்லெண்ணம் இருந்தாலும்கூட சென்ற ஆண்டு மைய அரசும் ரிசர்வ் வங்கியும் அறுதியிட்டுக் கூறியிருக்கின்றன. நீங்கள் மைய அரசு நிர்ணயிக்கிற விலைக்குக் கட்டுப்பட வேண்டும். நீங்கள் மீறி நெல் விலையை உயர்த்திக் கொடுப்பீர்களானால் நெல்லை வாங்குவதற்கு ரிசர்வ் வங்கி கடன் கொடுக்க முடியாது என்று அறுதியிட்டுக் கூறி இருக்கிறது.

(முற்பகல் 11-20.)

தமிழகத்தில் நெல் வாங்குவதற்கு கிட்டத்தட்ட 110 கோடி ரூபாய் நமக்கு தேவைப்படுகிறது. அதனை மத்திய அரசு அனுமதித்திருக்கிறது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். எனவே அந்தவகையில் இந்த அரசு சட்டத்தினை நன்கு ஆராய்ந்து சென்ற ஆண்டு மத்திய அரசின் கடிதப்போக்குவரத்தில் உள்ள அவர்களின் அறிவுரையை ஏற்று, இந்த ஆண்டு சென்ற ஆண்டைப் போல குவிண்டாலுக்கு 35 ரூபாய் கொடுத்தால் 110 கோடி ரூபாய் நமக்கு நெல் வாங்குவதற்கு கிடைக்காது என்பதால் நம்முடைய விவசாய பெருமக்கள் சிரமத்திற்கு ஆளாகக் கூடாது என்ற அடிப்படையில், இந்த ஆண்டு சென்ற ஆண்டைப்போல 35 ரூபாய் குவிண்டாலுக்கு கொடுக்க முடியவில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் இராசமாணிக்கம் அவர்கள் சொல்கிற நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் அடைமழை காரணமாக குறுவை நெல் தண்ணீரில் மூழ்கியிருக்கிறது என்று சொன்னார்கள். நானும் தஞ்சை மாவட்டத்தில் சமீபத்தில் சுற்றுப் பயணம் செய்து பார்த்து வந்திருக்கிறேன். அப்படிப்பட்ட நிலைமை அங்கே இருப்பதாக எனக்குத் தெரியவில்லை, மழை பெய்கிற நேரத்தில் வயலில் தண்ணீர் இருக்கத் தான் செய்யும் என்பது அவர்களுக்கும் தெரியும். காரணம், அவரும் ஒரு விவசாயி. ஆகவே தஞ்சை மாவட்டத்தில் பயிர்கள் தண்ணீரில் மூழ்கியிருக்கும் நிலைமை இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக ஒன்றைச் சொன்னார்கள். நெல் கொள்முதல் இன்றைக்கு 50 விழுக்காடு என்ற முறையில் அரசும் தனியார் வியாபாரிகளும் லெவி செய்கிற இரட்டை முறை இருப்பது என்பது தஞ்சை காவிரி டெல்டா பகுதிக்கு மட்டும் தான் பொருந்துமா ? திருநெல்வேலி மாவட்டத்தில் 33–1/3 விழுக்காடு தான் கொடுக்கிறார்கள்; ஏன் தஞ்சை மாவட்டத்திற்கு அதைக் கொண்டு வரக் கூடாது என்று கேட்டார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் உயர்நீதிமன்றத்திற்கு வந்த வழக்கு ஒன்றில் தீர்ப்புக்கூறும்போது 33–1/3 விழுக்காடு லெவி போதும் என்று தீர்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அந்தத் தீர்ப்பை மாற்றுவதற்கு நீதிமன்றத்தைக் கேட்டுக்கொண்டு போடப்பட்டுள்ள வழக்கு இந்த வாரம் அல்லது அடுத்த வாரம் வரவிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் இராசமாணிக்கம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு 50 விழுக்காடு என்ற முறை இருப்பதற்கு காரணம் ஒரு மாதத்திற்கு பொது விநியோகத்திற்கும், சத்துணவுத் திட்டத்திற்கும் சேர்த்து $1\frac{1}{4}$ இலட்சம் டன் அரிசி தேவையென்பதையும், இந்த ஆண்டிற்கு 15 இலட்சம் டன் ஒட்டுமொத்தமாக தேவையென்பதையும், அந்த 15 லட்சம் டன்னில் 3 லட்சம் டன்னை மாதம் ஒன்றிற்கு 25 ஆயிரம் டன் வீதமாக மத்திய அரசு நமக்கு கொடுக்கிறது. மீதமுள்ள 12 லட்சம் டன்னை நம்முடைய தமிழகத்தில் நெல்லை வாங்கி, அதிலேயிருந்து அரிசி எடுத்து பொது விநியோகத்திற்கும், சத்துணவுத் திட்டத்திற்கும் கொடுக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இதனை உணர்ந்து இந்த அரசு இந்த ஆண்டு 50 விழுக்காடு என்ற இரட்டை முறையை வைத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் சொன்னார்கள். இன்றைக்கு நெல்லில் தேக்கம் இருக்கிறது என்றார்கள். நெல் வாங்க நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தாலும்கூட ஆட்கள் இல்லை, சாக்கு இல்லை, இரண்டுமிருந்தால், பணம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் எனக்கு இதுவரையில் கிடைத்த தகவலின்படி அப்படியில்லை. இன்று காலையில்கூட மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினேன். அவர்கள்கூட அப்படிப்பட்ட சூழ்நிலையைச் சொல்லவில்லை. திரு. இராசமாணிக்கம் அவர்கள் சொல்கிறபோது ஏதோ அரசு கொள்முதல் செய்வதற்கு நேரடியாக நிலையங்கள் திறக்கப்பட்டிருப்பதைப் போல சொன்னார்கள். நான் அதற்காக ஒரு புள்ளிவிவரத்தை இங்கே கூற கடமைப்பட்டிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் 500 நேரடி அரசு கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகள் அதிக அளவில் வீட்டில் நெல் வந்து எடுக்க வேண்டுமென்பதற்கு 12 நடமாடும் நேரடி கொள்முதல் நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன [illegible]





தெரிவித்துக் கொள்கிறேன். 100 லெவி கொள்முதல் நிலையங்கள் தஞ்சை மாவட்டத்தில் திறக்கப்பட்டிருக்கின்றன. திருச்சி மாவட்டத்தில் 26 நேரடி அரசு கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. 17 லெவி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்தில் 26 அரசு நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன.

12 லெவி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. தென்னாற்காடு மாவட்டத்தில் 30 அரசு நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. 18 லெவி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு இருக்கின்றன. காவிரி டெல்டா பகுதியில் மொத்தமாக 576 அரசு நேரடி கொள்முதல் நிலையங்களும், 147 லெவி கொள்முதல் நிலையங்களும், 12 நடமாடும் நேரடி கொள்முதல் நிலையங்களும் இன்றைய தினம் இயங்கிக் கொண்டு இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் செல்லமுத்து அவர்கள் பேசுகின்ற நேரத்தில் இரட்டைக் கொள்கை தேவையில்லை என்று சொன்னார்கள். அவர்களே ஒப்புக்கொண்டார்கள். இன்று அரசாங்கத்தில் வாங்கப்படும் நெல்லைப் பாதுகாப்பதற்கும், வியாபாரிகள் கொடுக்கும் 50 விழுக்காடு நெல்லைப் பாதுகாப்பதற்கும் போதிய கிட்டங்கி வசதி இல்லை என்று சொன்னார்கள். நாம் எடுத்த எடுப்பிலேயே எண்ணுகிற அளவிற்கு எல்லாவற்றையும் செய்துவிட முடியாது. உறுப்பினர் அவர்கள் என்ன நினைக்கிறார்களோ அதேயேதான் இந்த அரசாங்கமும் செய்ய நினைக்கிறது. ஆனால் காலப்போக்கில் ஒரு முறையான திட்டத்தின் அடிப்படையில்தான் அதைச் செய்ய முடியும். அது உங்களுக்கும் தெரியும். ஆகவே, இருக்கின்ற சூழ்நிலைக்கு ஏற்ப இந்த அரசாங்கமும் நீங்கள் சொல்கிற முற்போக்கான கொள்கைகளை செயல்படுத்த, காலப்போக்கில் முறையாக அவற்றைச் செய்யக் காத்து இருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

அரசின் நேரடி கொள்முதல் நிலையத்திற்குக் கொண்டு வந்து கொடுக்கும் விவசாயிகளுக்கு மட்டும்தான் 15 ரூ. கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அப்படி அல்ல. அரசு நேரடி கொள்முதல் நிலையத்திற்கு கொண்டு வந்து கொடுப்பவர்களுக்கு கூப்பன் கொடுக்கப்படுகிறது. அதை அவர்கள் நம்முடைய கூட்டுறவு சங்கத்திற்கு எடுத்துச்சென்று கொடுத்தால், அவர்கள அந்தத் தொகைக்கு ஏற்ற வகையில் உரங்களைக் கொடுப்பார்கள். இந்த நடைமுறையை ஏன் கொண்டு வந்தோம் என்று சொன்னால், கடந்த காலத்தில் வறட்சியால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களுடைய கைப்பணத்தைச் செலவு செய்து சம்பா, தாளடி பயிர்களைச் செய்தார்கள். ஆகவே,

[திரு. தா. வீராசாமி] [1984 அக்டோபர் 11

அவர்களிடத்தில் இவற்றை வாங்க சக்தி இருக்காது என்பதால் இந்த முறையைக் கொண்டு வந்து இருக்கிறது. ஆகவே, ஊக்க மானியமாக இந்த முறையை வேளாண்மைத் துறைமூலமாக இந்த அரசு செய்கிறது.

இப்படி செய்கிறபோது மாண்புமிகு உறுப்பினர் செல்லமுத்து அவர்களுக்கு ஒரு அச்சம் ஏற்பட்டு இருக்கிறது என்று கருதுகி றேன். அதாவது இந்த அரசு 15 ரூபாயை நேரடியாக கொள் முதல் செய்கிற நிலையங்களில் தான் கொடுக்கிறது என்று சொல்கிறார்கள். வியாபாரிகளிடத்தில் நெல்லைக் கொடுப்பவர் களுக்கும் இந்தத் தொகை உண்டு. அவர்களும் வாங்கிக் கொள் ளலாம். அதை வியாபரிகள் கொடுக்க மறுத்தால் இந்த நிலை யங்களுக்கு அவர்கள் கொண்டு வந்து கொடுத்து விடலாம். சிலர் அந்த வியாபாரிகளிடத்தில் வாங்கியிருக்கிற கடனுக்கு பயந்து கொண்டு அவர்களிடத்தில் தான் கொடுக்க வேண்டும் என்று போய்விட்டால் நாம் என்ன செய்வது ? வியாபாரிகள் கொடுக்க மறுத்தால் இந்த நிலையங்களுக்கு அவர்கள் கொண்டு வந்து கொடுக்கலாம். விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும் அவர் களுக்கு உதவி செய்யவேண்டும் என்கிற வகையில்தான் நாம் இந்த முறையைக் கொண்டு வந்து இருக்கிறோம். மேலும் வியாபாரிகளிடத்தில் இதைக்கொண்டு விற்கும் பழக்கத்தைக் குறைக்க வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன அத்தனை கருத்துக்களுக்கும் நான் பதில் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) வியாபாரிகள் நெல்லை வாங்கிக்கொண்டு போய்விடுகிறார்கள் என்று சொன் னால், அவர்களிடத்திலும் விவசாயிகள் இந்தத் தொகையைக் கேட்கலாம்.

விவசாயிகளுக்கு இந்த முறையை நாங்கள் நல்ல முறையில் பிரச்சாரம் செய்து இருக்கிறோம். ஒவ்வொரு ஊரிலும் ரெவின்யூ துறை மூலமாக தண்டோரா போடச் சொல்லியிருக்கி றோம். சினிமா அரங்குகளில் ஸ்லைடு போட்டு இதை விளம் பரப்படுத்துகிறோம். மக்களுக்கு இந்த முறை விளம்பரப் படுத்தப்பட வேண்டும் என்று பல்வேறு முயற்சிகளை நாம் மேற் கொண்டு இருக்கிறோம். விவசாயிகள் வியாபாரிகளிடத்தில் ஏமாந்து விடக்கூடாது என்பதற்கு பல நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு இருக்கிறோம். எங்காவது விவசாயிகள் ஏமாற் றப்பட்டு விட்டார்கள் என்று சொன்னால் அது குறித்து நட வடிக்கை எடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்ததுபோல் தஞ்சை மாவட் டத்தில் எந்தவிதமான பதட்ட நிலையும் இல்லை. அது அவர் களுக்கும் தெரியும் என்று நான் நினைக்கிறேன்.



1984 அக்டோபர் 11] (திரு. தா. வீராசாமி)

(முற்பகல் 11—30.)

இருந்தாலும் நீங்கள் சொல்ல வேண்டுமென்ற முறைக்காகச் சொல்லியிருக்கிறீர்கள். எங்களை எச்சரிக்கைப்படுத்த, எங் களை உற்சாகப்படுத்த, மேலும் நல்லமுறையில் காரியங்கள் செய்ய வேண்டும் என்பதற்காகச் சொல்லியிருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் நீங்கள் கூறியதுபோல அங்கே நிலைமை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அங்கே திறக்கப்பட்டிருக்கிற அரசு கொள்முதல் நிலையங் களின் எண்ணிக்கை சூழ்நிலைக்கு ஏற்ப மாறும். அதிகம் தேவை என்றால் உடனே தேவையான இடங்களில் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும். தேவை என்றால் திறக்கப்படும் ; நெல் வாங்கப் படும் ; தேவை இல்லை என்றால் மூடப்படும். இதிலே எந்த விதமான கட்டுப்பாடும் இல்லை என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். இவ்வளவுதான் திறக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை ; நியதி இல்லை ; சட்டம் இல்லை.. சிரமத்தைக் குறைக்க தேவைக்கு ஏற்ப, நெல் கிடைக்கின்ற இடங்களில், நேரடியாக எவ்வளவு கொள்முதல் நிலையங்கள் தேவையோ அவ்வளவு திறக்கப்படும். அங்கே சிரமம் இல்லாமல் விவசாயிகள் பணம் பெற இந்த அரசு ஏற்பாடு செய்யும்.

மத்திய அரசினுடைய மறுப்பு இருக்கின்ற காரணத்தால் இந்த ஆண்டு இதற்குமேல் விலையை உயர்த்திக் கொடுக்க முடி யாத சூழ்நிலை இருக்கிறது. அதை மீறி உயர்த்திக் கொடுத் தால் 110 கோடி ரூபாயை தமிழக அரசுக்குக் கொடுக்க மத்திய அரசும் ரிசர்வ் வங்கியும் மறுக்கின்றன. அதனால் நீங்கள் எண்ணியபடி நாங்கள் கொடுக்க முடியவில்லை. இன்னும் சொல்லப்போனால் ஒரு குவிண்டாலுக்கு ரூ. 175.50 கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு இந்த அரசு கடிதம் எழுதியிருக்கிறது. உங்களைவிட விவசாயிகளிடம் எங்களுக்கும் இந்த அரசுக்கும் அதிக அக்கறை உண்டு. என்வே அவர்களுக்கு வேண்டியதை வேண்டிய நேரத்தில் செய்வோம். இப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியது போன்ற நிலைமைகள் அங்கே இல்லை என்று கூறி இதற்குமேலும் இது பற்றி விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 4. அறிவிப்புகள்.

### (அ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை 1978-79.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1978-79 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கையை பேரவைக்கு அளிப்பதற்கு ஆளுநர் அவர்கள் 1984 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12-ம் நாள் வெள்ளிக்கிழமையை குறித்துள்ளார்கள்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவு.

### சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று (திருத்த) சட்ட முன்வடிவு 1984.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" 1984 ஆம் ஆண்டு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

திரு. கு. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று (திருத்த) சட்ட முன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் எதிர்க்க கடமைப் பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகரின் எல்லாப் பகுதிகளிலும் இந்த வாரியம் மிகவும் மோசமாகச் செயல்படுகிறது. கடந்த 1978 ஆம் ஆண்டு முதல் சென்னை மாநகராட்சியினுடைய இந்தத் துறை பிரிக்கப்பட்டு இன்றையதினம் இவ்வளவு அவல நிலையில் இந்தத்துறை மக்களுக்கு சேவை செய்ய முடியாமல் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இன்றையதினம் குடிநீருடன் சாக்கடை நீரும் கலந்து, மக்கள் அந்த கலப்படமான தண்ணீரை குடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வாரியம் அமைக்கப்பட்டபோது இதிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான நடவடிக்கைகளைச் செய்ய மேலதிகாரிகள் நவீன முறையில் பயிற்சி பெற்றுவர வேண்டுமென்று, அவர்கள் மேல்நாடுகளுக்கு அனுப்பப்பட்டார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகளை மட்டும் நியமித்துவிட்டால் இந்த வாரியம் சீரடைந்துவிடாது. இந்தத் துறையிலே படித்த பொறியியல் வல்லுநர்களை இந்த வாரியத்தின் தலைவராக நியமித்து, வாரியம் ஆற்றினால் தான் நல்ல முறையில் இது செயல்படும், மக்களுக்குப் பயன்படும் என்பதைத் தெரிவித்து, இந்த சட்ட முன்வடிவை எதிர்க்கிறேன்.





(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆர்.டீ.எல்.ஏ. செகரட்டரி என்று இதுவரையில் இருந்தது. அவர் தான் போர்டிலே சேர்மன் ஆகவும் எக்ஸ்-அபிஸியோ-ஆகவும் இருந்தார். இப்போது அது இரண்டாகப் பிரிக்கப்பட்டு, முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன் அண்டு வாட்டர் சப்ளை என்று ஒரு செகரட்டரி வந்துவிட்டார். அவர்தான் தலைவராக இருப்பார் என்பதற்கான அட்மினிஸ்ட்ரேட்டிங் திருத்தம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஏ. சி. சண்முகம்) : பேரவை முன்னுள்ள கேள்வி—

" 1984 ஆம்ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஏ. சி. சண்முகம்) : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

## 6. தனியார் அலுவல்கள்

### தனித்தீர்மானம்—மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்குதல் *—(தொடர்ச்சி)

திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று தனியார் தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகளுக்கான நாள். இன்று இங்கே விவாதிக்கப்படுகிற இந்த தீர்மானத்திலே நான் ஏற்கனவே பேசி ஒரு பகுதியோடு நிறுத்தப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானம் 31—7—1980 அன்று முன்மொழியப்பட்டு, 4 வருடங்கள், 2 மாதங்களைத் தாண்டிவிட்டது. இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையை மாற்ற வேண்டியது மிக மிக அவசியம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஏ. சி. சண்முகம்) : பேசுபவர்கள் சீக்கிரமாக முடித்தால் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிவிடலாம்.

---

* 31—7—1980 ஆம் நாளன்று முன்மொழியப்பட்ட தீர்மானத்தின் மீதான விவாதத் தொடர்ச்சி.

[1984 அக்டோபர் 11

திரு. கு. ரமணி : நான் சொன்னதை எனக்கே திருப்பிச் சொல்வது நல்லதல்ல. நான் சொல்வது ஒவ்வொரு வாரமும் தனி நபர் தீரமானத்திற்கான நாட்கள் திட்டவட்டமாக அனுசரிக்கப்படாத காரணத்தால் ஏற்பட்டிருக்கக் கூடிய நிலை இது என்பது தான். பார்லிமெண்டில் அந்த நிலை இல்லை. நான் அதை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டு மென்பதற்காகத்தான் இதைச் சொன்னேன். குறை கூறுவதற் காக அல்ல. நான் போன தடவை பேசும்போது விரிவான முறையிலே சிலபல விஷயங்களை முன் வைத்தேன். அரசியல் சட்டத்திலே மாற்றப்படவேண்டிய, திருத்தப்படவேண்டிய, கைவிடப்பட வேண்டிய ஷரத்துக்கள் என்னென்ன என்பதை வரிசை கிரமமாக நான் எடுத்துச் சொன்னேன். இந்திய நாட்டிலே இருக்கும்படியான பல்வேறு அரசியல் கட்சிகள் ஒன்றாகச் சேர்ந்து ஸ்ரீநகரிலே நடத்திய மாநாட்டில், அரசியல் சட்டத்தில் எப்படி ஒரு பரிபூர்ண பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கிடைப்பதற்கான பல்வேறு மாற்றங்களை அந்த அரசியல் சட்டத்திற்குள்ளே கொண்டுவரவேண்டுமென்று ஒரு நல்ல விரிவான தீர்மானத்தை உருவாக்கி இருந்தார்கள். அதிலிருந்த பல்வேறு அம்சங்களை நான் எடுத்துச் சொன்னேன். அதற்குப் பிறகும் இந்த மாதிரி இருக்கக் கூடிய ஒரு கோரிக்கை இன்றைக்கு அனைத்து மாநில அரசுகளிடமிருந்து உருவாகிக் கொண்டு வருகிறது. மத்தியிலே ஆளுகின்ற கட்சியைச் சார்ந்த வர்கள் ஆட்சி புரிகின்ற மாநிலத்திலே இருந்து கூட தங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுத்தால் பரவாயில்லை என்று அவர்கள் பகுதியிலிருந்துகூட வருகிறது. எதிர்க்கட்சிகள் ஆளுகின்ற பல் வேறு மாநிலங்களிலிருந்து இதற்கான பல திட்டங்கள் உருவாக்கப் பட்டு, இன்றைக்கு அது நாடு தழுவிய ஒரு பெரும் பிரச்னையாகி அதன்பேரில் நடவடிக்கை எடுக்கவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டு, மத்திய அரசு சர்க்காரியா கமிஷனை நியமித்தது. இந்த மத்திய-மாநில உறவுகளைப் பரிசீலனை செய்வதற்கான ஒரு கமிஷனாக அது நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கமிஷனுடைய வேலை யும், அதனுடைய நடவடிக்கையும் எப்படி காலம் தள்ளி, இழுத்துக்கொண்டே போய்க்கொண்டிருக்கிறது என்பது கவனத் திற்குரிய விஷயமாகும். அந்தக் கமிஷனை நியமிக்கவேண்டிய ஒரு நிர்பந்தமான நிலைமை மத்திய சர்க்காருக்கு ஏற்பட்டு

(முற்பகல் 11-40).

விட்டது. அப்படிப்பட்ட சூழ்நிலையும் நிர்பந்தமும் நாட்டிலே உள்ள மாநில அரசாங்கங்களிடையேயிருந்து தங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையிலே எழுந்துள்ள பேரியக்கமும், ஜனங்களுடைய வேண்டுகோளும், அப்படிப்பட்ட சூழ்நிலையை உண்டாக்கியிருக்கிறது.



1984 அக்டோபர் 11] [திரு. கு. ரமணி]

இன்று நான் சொல்லக்கூடிய சில முக்கியமான விஷயங்கள் உண்டு. இன்னும் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு விஷயங் களைப் பற்றி எடுத்து முன்வைக்கப் போகிறார்கள். நான் சொல்லக்கூடிய விஷயம் என்னவென்றால், இந்த நாட்டிலே தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டும் என்பதில் மத்திய அரசாங்கத்தைவிட மாநில அரசாங்கங்களுக்கு முழு அக்கறை இருக்கிறது. ஆனால் மாநில அரசாங்கங்கள் தொழில் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை எடுப்பதில் எப்படிப் பட்ட முறைகள் இருக்கிறது என்றால் அவர்களுடைய கழுத்தை நெறிக்கும்படியான நிலைமைதான் இருக்கிறது. தொழில் வளர்ச்சிக்கு இடம் விடாத போக்கைத்தான் மத்திய அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது, என்பது தத்ரூபமான நிகழ்ச்சி யாகும். இது நம் எல்லோருக்கும் முன்னாலே நடைபெற்றுக் கொண்டு வரக்கூடிய விஷயமாகும்.

1951-ஆம் ஆண்டு மத்திய சர்க்காரால் நிறைவேற்றப்பட்டது இன்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் அன்ட் ரெகுலேசன் ஆக்ட், அந்தச் சட்டத்தின் கீழ் பல்வேறு தொழில்கள் எப்படி வளர்க்கப் படலாம் என்ற பொதுவான கட்டுப்பாடுகள், மற்றும் தொழில் வளர்ச்சிக்கு சாதகமான அம்சங்களைக் கொண்டு வருவதற்காக உருவாக்கப்பட்ட சட்டம். ஆனால் அந்தச் சட்டத்தின் படி மத்திய சர்க்கார் எல்லா தொழில்களையும் தங்களுடைய சொத் தாக மாற்றிக் கொண்டு வருகிறது. தேசியமயமாக்கப்படக் கூடாது என்பதல்ல பிரச்சனை. தேசியமயமாக்கப்பட வேண்டும்தான். ஆனால் தனி நபர்கள், தனி முதலாளிகள், ஏகபோக முதலாளிகள், பெரும் முதலாளிகள், அப்படிப்பட்டவர் களுடைய கோரிக்கைகளை நாம் நிராகரிக்கிறோம். எதிர்க்கி றோம். அவைகள் எல்லாம் அரசு தொழில்களாக வரவேண்டும், இறுதியாக சமுதாயத்தினுடைய பொருளாதாரத்தை மக்கள் தான் நிர்ணயிக்க வேண்டும். அந்த மக்களின் உண்மையான பிரதிநிதிகள், அந்தத் தொழில்களின் மீது செல்வாக்கும், பிடிப் பும், ஆதிக்கமும், பெற்று அரசாட்சி செய்யவேண்டும். அப்படிப் பட்ட ஒரு ஜனநாயக அமைப்பை நாம் எதிர்பார்க்கிறோம். நாம் அதற்காகத்தான் போராடுகிறோம். ஆனால் இந்தத் தொழில்களிலே மாநில அரசாங்கங்களுக்கு எந்தவிதமான பிடிப் பும் இல்லாமல் செய்து, அத்தனையையும் மத்திய சர்க்கார் தன்னுடைய கையிலே அதிகாரத்தை குவித்துக்கொண்டிருக்கும் படியான நிலை ஏற்பட்டால் என்ன ஏற்படும் என்பதை இன்றைக்கு நாடு அனுபவித்துக் கொண்டிருக்கிறது. இதே அகில இந்திய அண்ணா தி. மு. கழகம் எத்தனையோ தொழில்களுக்கு விண்ணப்பம் போட்டும்கூட, அந்தத் தொழில்களுக்கு அனுமதி கிடைக்காமல் என்ன நெருக்கடிகளில் அவர்கள் சிக்கிக்கொண்டி ருக்கிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் நாம் பல தடவைகள்

இந்த அவையிலே பேசியிருக்கிறோம். இப்போது கூட யாழ்புமிகு
உணவு அமைச்சர் அவர்கள் தஞ்சையிலே நெல் கொள்முதல்
பற்றிச் சொல்லும்போது, எங்களுக்கு கொள்முதலுக்காக பணம்
வேண்டியிருக்கிறது. அந்தப் பணத்தைக் கொடுக்க மாட்டார்கள்.
அவர்கள் நிர்ணயித்த, '' அக்ரிகல்சுரல் பிரைசஸ் கமிஷன் ''
நிர்ணயித்த விலையை நாம் கொடுக்கவில்லை என்றால், எங்
களுக்குப் பணம் தரமாட்டார்கள், என்று குறிப்பிட்டார்கள்.
இதற்கு அர்த்தம் என்ன ? இங்கே ஆளுகின்ற அரசாங்கம்,
இங்கேயிருக்கின்ற விவசாயிகளுக்கு, அவர்கள் உற்பத்தி செய்த
பண்டங்களுக்கு நியாயமான விலை, குறைந்தபட்சம் கொடுப்ப
தற்கு, ஒரு போனசோ, அதிக விலை கொடுத்துப் பெறுவதற்கோ
இந்த அரசாங்கத்தால் முடியவில்லை. அதை இந்த மாநில
அரசாங்கம் செய்ய முடியாது. அப்படிப்பட்ட நிலை. ஆகவே
தான் சொல்கிறோம். இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் ரெகு
லேசன் ஆக்ட் 1951-ல் தொழில் வளர்ச்சிக்காக நிறைவேற்றப்
பட்ட சட்டமாக இருந்தாலும், மத்திய சர்க்கார் தங்களுடைய
கையில் மேலும் மேலும் அதிகாரத்தை குவித்துக் கொண்டு,
தொழில்கள் மீது அவர்கள் ஒருவிதமான பிடிப்பை உருவாக்கி
காரியத்தைச் செய்துக்கொண்டு வருகிறார்கள். அது மாநிலங்
களுடைய அதிகாரத்தை சிரழித்து, அதிகாரமற்ற பொம்மை
அரசுகளாக ஆக்குவதற்காகத்தான் அந்தச் சட்டம் இன்றைக்குப்
பயன்படுத்தப்படுகிறது. இதற்கு நான் பல உதாரணங்களைச்
சொல்ல முடியும். போக்குவரத்து, மின்சாரம், சுரங்கங்கள்,
கப்பல் போக்குவரத்து, ரெயில்வே, விமானம், பஞ்சாலைகளில்
கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு, சிமென்ட், எண்ணெய்,
பேப்பர், இன்னும் இம்போர்ட் எக்ஸ்போர்ட் வர்த்தகம்,
பேங்கிங், இன்ஷூரன்ஸ் போன்ற இப்படிப்பட்ட தொழில்களின்
மீது ஏதோ ஒருவிதத்தில் மத்திய சர்க்கார் தங்களுடைய பிடிப்
பைச் செலுத்திக்கொண்டு வருகிறார்கள். இவைகளிலே சில
வற்றை, அகில இந்திய ரீதியிலே திட்டம் போட்டு நடத்த
வேண்டிய, ரெயில்வே, போன்ற சில தொழில்கள் இருக்கின்றன.
அதேமாதிரி வெளிநாட்டோடு தொடர்புடைய வர்த்தகம்
போன்றவைகள் மத்திய அரசாங்கத்தால் நடத்தப்படவேண்டி
யவை. ஆனால் மாநில அரசாங்கம் நடத்தும் தொழில்கள்
சம்பந்தப்பட்ட வரையிலும் அநேக தொழில்களை மாநில அர
சாங்கங்கள் தங்களுடைய பிடிக்குள் கொண்டு வந்து செய்வ
தற்கு அவர்களுக்கு உரிமை இருக்க வேண்டும். இல்லாவிட்டால்,
அவர்கள் மாநிலத்திலே அரசாங்கத்தை நடத்த முடியாது.
அவர்களுடைய நிதி நிலைமையையும் காப்பாற்றிக் கொள்ள
முடியாது. மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியையும் காப்பாற்ற
முடியாது. மக்களின் முன்னால் அவர்கள் அம்பலப்படுத்தப்பட்டு
நிற்கின்ற நிலைமைதான் ஏற்படும். அல்லது அவர்கள் மத்திய
சர்க்காருக்கு கையாளாக நின்றால், அவர்கள் மாநிலங்களிலே,
அரசாட்சியை நடத்த முடியும் என்ற ஒரு நிலைதான்
இன்றையத்தினம் நாட்டிலே நிலவி வருகிறது.





அடுத்து, மீடியம் இன்டஸ்ட்ரீஸ் அண்டு லார்ஜ் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ் என்று சொல்லப்படுகிற நடுத்தர மற்றும் பெரும் தொழில்கள் சம்பந்தமாக எல்லாவித அதிகாரங்களையும் அவர்கள் தங்கள் கையிலே முழுமையாக வைத்துக் கொண்டிருப்பதோடு, மேலும் மேலும் அதை அறிமுகப்படுத்திக் கொண்டே வருகிறார்கள். அதை ஒவ்வொரு மாநில அரசாங்கமும் உணர வேண்டும். இந்த மாநில அரசும் உணர்ந்துக் கொள்ள வேண்டும். அவர்களோடு சினேகமாகப் போய் ஏதோ பிரச்சினைகளை சமாளித்து விடலாம் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. இன்று இருக்கின்ற நெருக்கடி நிலையில் உங்களால் அப்படி சமாளித்துவிட முடியாது. அதுதான் உண்மை. இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த நடுத்தரமான மற்றும் பெரும் தொழில்களிலே மத்திய சர்க்காருடைய அதிகாரம் கிட்டத்தட்ட 74 சதவீதம் ஆகும். அந்த அளவுக்கு அவர்களுடைய ஆதிக்கம் அந்த தொழிற்சாலைகளிலே ஏதோ ஒரு வகையில் இருக்கிறது. அதிலிருந்து வரக் கூடிய வருமானம், வேறு மற்ற வழிகளிலே எல்லாம் அவர்கள் அந்த அதிகாரங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதே போல சுங்கவரி—எக்ஸைஸ் டியூட்டியைப் பொறுத்த வரையில் அதிலே, 40 சதவீதம் வரையில் மாநிலங்களுக்கு அவர்கள் ஒதுக்கித் தருகிறார்கள். 60 சதவீதத்தை அவர்கள் கையிலே எடுத்துக் கொள்கிறார்கள். இதனால், இந்த வகையில் அதிகமான பண ஒதுக்கீடு வேண்டும் என்று நிதிக் கமிஷனை நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதிலே பல வியாபார விஷயங்கள் நடைபெறுகின்றன. மாநிலங்களிலிருந்து வரக் கூடிய சுங்க வரியில், நியாயமாக மாநில சர்க்காருக்கு பெரும் பகுதி போக வேண்டிய சுங்க வரியில், 60 சதவீதத்தை மத்திய சர்க்கார் எடுத்துக் கொள்கிறது. நம்முடைய மாநிலங்களிலிருந்து தான் நிதிக் கமிஷனுக்குத் தேவையான பணத்தில் பெரும் பகுதி, சுங்க வரியாக திரட்டப்பட்டு போய்க் கொண்டிருக்கிறது என்பதை மாநில சர்க்கார்கள் உணர்ந்து, அதில் அதிகப் பங்கு வேண்டும் என்று நிர்ப்பந்திக்கிற நிலைமை தற்போது நாட்டில் அதிகமாகி வருகிறது.

அதனால் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், எக்ஸைஸ் டியூட்டியை அதிகம் போடுவதை நிறுத்திவிட்டு, மத்திய சர்க்கார் துறையிலே இருக்கும்படியான—கவர்மென்ட் ஆப் இந்தியாவினுடைய செக்டார்களுக்கு, கம்பெனிகளுக்கு, அந்தத் துறையிலே இருக்கும்படியான தொழில்களிலே உற்பத்தியாகின்ற பொருள்களுக்கு விலையை ஏற்றி, அதனுடைய வருமானம் பூராவுமாக, மத்திய சர்க்காருக்கே போகும்படியாகச் செய்து வருகிறார்கள். உதாரணமாக, பெட்ரோல், டீசல் முதலியவற்றில் அவர்கள் விலையை ஏற்றியிருக்கிறார்கள்.

[திரு. கு. ரமணி] [1984 அக்டோபர் 11

இன்றைக்கு குருட் ஆயில் உற்பத்தி, நம்முடைய நாட்டிலே கடலுக்கு அடியிலே இருக்கும்படியாக இடங்களிலேயிருந்தும், மற்ற இடங்களிலிருந்தும் பெருகிக் கொண்டிருக்கிறது என்று செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. அப்படி வருவது நல்லதுதான். அதன் மூலம் பல்வேறு வகையிலான தொழில் பெருகும். அன்னிய நாட்டுக்கு இதற்காக நம்முடைய பணத்தைக் கொட்டி அழுவதைவிட, அது நம்முடைய நாட்டிலேயே உற்பத்தி ஆவது நல்லது. ஆனால், இவ்வளவு அதிகமாக அது உற்பத்தி ஆனாலும் கூட, பெட்ரோலுக்கும், டீசலுக்கும் மண்ணெண் ணெய்க்கும் மற்ற லூப்ரிகேட்டிங் ஆயில்களுக்கும், மத்திய அரசு விலையை ஏற்றிக் கொண்டேயிருக்கிறது. அப்படி இந்தப் பொருள்களுடைய விலை ஏறினால் என்ன ஆகும்? நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களே சொன்னார்கள். இதன் மூலம் போக்குவரத்து கழகங்களுக்கு செலவு ஜாஸ்தியா கிறது, அதனால் நாங்கள் போக்குவரத்து கட்டணங்களை உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது என்று. இப்படி இதன் விளைவுகள் தொடர்ந்துக் கொண்டே வரும். இப்படி பலவிதமான முக்கிய இனங்களை அவர்கள் தங்கள் கையிலே பிடித்து வைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே, எக்ஸைஸ் டியூட்டியை ஏற்றி வாங்குவதற்குப் பதி லாக, இப்படிச் செய்கிறார்கள். எக்ஸைஸ் டியூட்டியை ஏற்றி னால், அதன் மூலமாக முதலாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். அந்தத் தனி முதலாளிகள் அவர்களுக்கு நிரம்பவும் வேண்டியவர் கள். அந்த முதலாளிகளின் உற்பத்தியை பாதித்தால் அவர்கள் எதிர்க்கிறார்கள். ஆகவே, எக்ஸைஸ் டியூட்டியை உயர்த்துவதை நிறுத்திவிட்டு, அதற்குப் பதிலாக, எல்லாப் பொருள்களுக்கும் விலையை ஏற்றி, கார்டு, கவர்களிலிருந்து, பல வகையான பொருள்களுக்கும் விலையை ஏற்றி, பல ஆயிரம் கோடி ரூபாய் களை அவர்கள் கொண்டு போகிறார்கள். அதிலேயிருந்து ஒரு காசு கூட உங்களுக்கு பங்கு கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட நிலைமை இன்று நாட்டிலேயிருக்கின்றது.

அதோடு மட்டுமல்ல, அதற்கு மேலும் சர்-சார்ஜ் போடு கிறார்கள். எக்ஸைஸ் டியூட்டியை உயர்த்தினால், 40 பெர் செண்ட் ஒதுக்கீட்டிலேயே மாநிலங்களுக்கு அதிகமாகக் கிடைத்து விடும். ஆகவே, இப்போது கிடைப்பதற்கு மேலே கிடைக்காமல் இருப்பதற்காக, சர்-சார்ஜ் விதித்தால் அதையும் அவர்களே எடுத் துக் கொண்டு போய்விடலாம் என்ற நிலைமையை ஏற்படுத்தி வருகிறார்கள். இப்படி பணத்தை, நிதி வசதியை ஜாஸ்தியாக்க அவர்கள் இஷ்டப்படி, இந்த ஆதிக்கத்தையும், இந்த பிடிப்பை யும், ஜாஸ்தியாக்கிக் கொண்டே போகிறார்கள். மாநிலங்களுக்கு இருக்கும்படியான நிதி வசதிகளைக் குறைத்து, மாநிலங்களுக்கு இருக்கும்படியான ஆதிக்கத்தையும், அதிகாரத் தையும் நசுக்கிக் கொண்டே போகிறார்கள். இதை நீங்கள்



1984 அக்டோபர் 11] [திரு. கு. ரமணி]

புரிந்து கொள்ள வேண்டும். இது ஜனநாயகத்தை உண்மையி
லேயே கீழே தள்ளி புதைத்து விடுகின்ற ஏற்பாடு. இதை நீங்கள்
புரிந்துக் கொள்ள வேண்டும். மாநில சுய ஆட்சி, மாநிலங்
களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று பேசினால் மட்டும்,
இது நடைமுறையில் தீர்ந்துவிடக் கூடிய பிரச்சினை அல்ல
என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

[முற்பகல் 11-50]

நம்முடைய நாட்டிலே நாம் பார்க்கிறோம்.
இன்றைக்கு விலைவாசி ஏற்றம். இன்றைக்கு எந்தத்
அதுதான் பயங்கரமான போட்டாலும், காஸ்ட் எஸ்கலேஷன், வந்துக்
திட்டத்தைப் இருக்கும். நேற்றைக்கு குடிநீர் சம்பந்தமாக
கொண்டே திட்டம் பற்றி மாண்புமிகு தொழிலாளர் நலத்
கும்பகோணம் அமைச்சர் அவர்கள் சொல்லும்போது எஸ்கலேஷன் வரும்
துறை சொன்னார்கள். என்ன காரணம், விலைவாசியேற்றம்
என்று விலைவாசி ஏற்றத்தின் விளைவினால்தானே
தானே அது. செலவு ஜாஸ்தியாகப் போகிறது. செலவு செய்யா
திட்டத்தின் திட்டத்தை நிறைவேற்ற முடியாது. அது பயங்கரமான
மல் நாம் இன்றைக்கு இருக்கிறது. இன்றைக்கு பெரும்
நிலைமையாக மக்களைச் சுரண்டும் முதலாளிகள் இந்த விலைவாசி
அளவுக்கு ஒரு ஆயுதமாக வைத்துக் கொண்டு இருக்கிறார்கள்.
யேற்றத்தை பிரதம மந்திரி அவர்களே சொல்கிறார்கள், முதலா
நம்முடைய நாடுகளில் தான் விலைவாசி ஏற்றம் ஏற்படுகிறது.
ளித்துவ நாடுகளில் ஏற்படுவதில்லை, உலக முதலாளித்துவத்
சோஷலிச பொருளாதாரத்திலே ஏற்படுகிற ஒரு நெருக்கடி,
தின் காரணமாக பகுதியாக இருக்கிற இந்தியாவிலேயும் வரத்தானே
அதனுடைய அதனால் இங்கேயும் பாதிக்கப்படுகிற நிலைமை
செய்யும்.
ஏற்படுகிறது.

இன்னும் தூக்கிவிடக்கூடிய, ஏற்றிவிடக்கூடிய
இதை டெபிசிட் பைனான்ஸ் என்ற முறையிலே 1,500
முறையிலேதான் கோடிக்கு 2.500 கோடிக்கு மத்திய சர்க்கார்
கோடிக்கு 2,000 பற்றாக்குறை, என்ற நிலைமை ஏற்படுகிறது.
பட்ஜெட்டிலே, எவ்வளவு பற்றாக்குறை ஏற்பட்டது அந்த
இந்த வருடமும் என்று நீங்கள் எல்லாம் பார்த்திருப்பீர்கள்.
பட்ஜெட்டிலே போட்டு பணம் வாங்கினால் ஜனங்களிடத்திலே
அவர்கள் வரிப் எதிர்ப்பு கிளம்பிவிடும் என்பதால் வரியை ஓரளவுக்குப்
பெரும் ஸ்டேட் செக்டாரிலே உற்பத்தி செய்யப்படுகிற
போட்டுவிட்டு, விலையை ஓரளவிற்கு ஏற்று அதன் மூலமாக
பொருட்களின் தவிர அதற்குப் பிறகு நோட்டடிப்பு என்ற நிலைக்கு
பெறுவதைத் நோட்டு அடிக்கிறார்கள். ஆனால் அந்தக் காரியத்தை
வந்து மாநிலங்கள் செய்யமுடியாது. அகவே என்ன செய்ய வேண்டி
மாநிலங்கள் என்றால், பட்ஜெட்டிலே இங்கேயும் பற்றாக்குறை
இருக்கிறது ஏற்படுகிறது, நோட்டு அடிக்கமுடியாது, சத்துணவுத்
நிலைமை

திட்டத்திற்கு பணம் வேண்டும், எங்கேயிருந்து பணம் வரும்? விவசாயிகளுக்கு நெல்விலையை உயர்த்திக் கொடுக்கமுடியாது. பணம் இல்லாத நிலையில் பற்றாக்குறை ஏற்படுகிறபோது, கூண்டிலே சிக்கிய பெருச்சாளிகளாக மாநில அரசுகளை அவர்கள் ஆக்கிவிடுகிறார்கள். இந்த நிலையில் மத்திய சர்க்கார் எங்கே நிதியை குவித்து வைத்து இருக்கிறதோ அதிலே இருக்கிறதைக் கேட்பதுதான் ஒரே வழி. அதுதான் ஓவர் டிராப்ட் வாங்குதல். ரிசர்வ் வங்கியிலிருந்து மாநிலங்கள் தங்களுடைய பற்றாக்குறை நிலைமைகளைச் சமாளிப்பதற்காக ஓவர் டிராப்ட் வாங்குகிறார்கள். அப்படி வாங்கவில்லையென்றால் மாநிலங்கள் போட்டிருக்கிற திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற முடியாது.

## 2. தகவல் கோரல் —(தொடர்ச்சி)

### (ஆ) தமிழக முதல்வர் உடல்நலம் குறித்து அறிக்கை வைத்தல்

திரு. துரைமுருகன் : ஒரு முக்கியமான பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இந்த மாமன்றத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய உடல்நிலைபற்றி இந்த அரசு நித்தம் நித்தம் ஒரு அறிக்கையை வைப்பது என்று—மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வைப்பார்கள் என்று—சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஏ. சி. சண்முகம்) : நித்தம் நித்தம் அல்ல, தேவைப்படும்போதுதான்.

திரு. துரைமுருகன் : இன்றைக்கு மணி 12-ஐ நெருங்கிக் கொண்டு இருக்கிறது. ஆனால் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அறிக்கை வைக்கவில்லை. இங்கே அவை முன்னவர் அவர்களும் இருக்கிறார்கள். இங்கே லாபியிலே என்ன பேசிக்கொள்கிறார்கள் என்றால் முதலமைச்சர் 18 ஆம் தேதி அமெரிக்காவிற்கு சிகிச்சைக்காகச் செல்வதாகக் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கிறதா அல்லது என்ன நிலைமை என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் ஏதாவது கேட்க வேண்டும் என்பதற்காகக் கேட்டிருக்கிறார்கள்.

THIRU DURAIMURUGAN : I am sorry it is not like that. An assurance that a statement will be placed, has been given. With good intention I am asking.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
மாற்றுத் தலைவர் அவர்களே, ஏன் என்றால், தினம் தினம்
அறிக்கை வைக்கப்படும் என்று சொல்லவில்லை. அவசியப்
பட்டபொழுது எல்லாம் இந்த அவைக்கு இருக்கிற நிலைமையை
தெரிவிக்கலாம் என்று. நேற்று என்ன நிலை தெரிவிக்கப்
பட்டதோ அதே நிலையில் அவர்கள் உற்சாகமாக இருக்கி
றார்கள் என்றும், பேசிக்கொண்டு இருக்கிறார்கள் என்றும்,
ஏற்கனவே இருந்த சளி, இருமல், மூச்சு திணறல் நீங்கி
விட்டன என்றும் சிறுநீர் பை பொறுத்தவரையிலும் டாக்டர்கள்
குழுவினால் ஆராய்ந்து கொண்டு இருக்கிறார்கள்,. ஆராய்ந்து
பரிசோதனை முடிந்த பிறகு தக்க நடவடிக்கைகள் எடுப்பார்கள்
என்ற அளவிலே இருக்கிறது. வேறு எந்த முடிவும் எடுக்கப்பட
வில்லை. டாக்டர்கள் குழுவினர் தான் நமக்கு யோசனை
சொல்ல வேண்டும், என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்
என்று. அது எங்கே எடுப்பது, எப்படி எடுப்பது, என்பது
எல்லாம் அவர்கள் சொன்னதற்கு பிறகுதான் வரவேண்டுமே
தவிர வேறு விதமான எந்த செய்தியும் வரவில்லை என்பதை
மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் இந்த அவைக்கும் தெரி
வித்துக்கொள்கிறேன்.

## தனித் தீர்மானம்—மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்குதல் —தொடர்ச்சி

மாண்புமிகு மாற்று தலைவர் (திரு. ஏ. சி. சண்முகம்) : நீங்கள் முடித்து விடுங்கள்.

திரு. கு. ரமணி : நீங்கள் இப்படி விரட்டினால் எப்படி?

மாண்புமிகு மாற்று தலைவர் (திரு. ஏ. சி. சண்முகம்) : முன்பு நீங்கள் 45 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். இப்போது 20 நிமிடங்கள் ஆகிவிட்டது. கொஞ்சம் சீக்கிரம் முடித்து விட்டால் நல்லது. இன்னும் 5 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். பிறகு தீர்மானம் கொண்டு வந்த திரு. உமாநாத் இருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையை இன்றே பேசி முடித்து விடுவார்களானால் அடுத்து இந்த தனி நபர் தீர்மானம் வருகின்ற நாள் அன்று நான் பேசி அதற்கு பிறகு மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் பதில் உரை தருவதாக சொல்லியிருக்கிறார்கள். இன்றே முடித்துவிடலாம் என்று நான் சொன்னதற்கு அவர்கள் வெளியூர் செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணமாக அடுத்த வாரம் முடித்துவிடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு ஏற்றவாறு மாண்புமிகு உறுப்

பினர்கள் சுருங்கச் சொல்லி தெளிய வைத்தல் என்ற அழகு முறையை கையாண்டு இன்றே முடித்து விடுவார்களானால், அடுத்த வாரம் எனக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத்துக்கு மட்டும் நேரத்தை ஒதுக்கித் தந்தால் இந்தப் பிரச்சினையில் ஒரு முடிவுக்கு வந்து விடலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்த கருத்தில் நின்று எந்த அளவுக்கு முடிக்க முடியுமோ அந்த அளவுக்கு இன்றைக்கு முடித்துவிடலாம். விவாதத்தை இன்று முடித்து அந்த அளவுக்கு போகலாம். இந்த மாநிலங்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டால் அவர்கள் நோட் அடிக்கவோ மற்ற காரியங்களை செய்யவோ அவர்கள் செய்ய முடியாது. ஆகவே அவர்கள் ரிசர்வு வங்கியிலிருந்து ஓவர் டிராப்ட் வாங்குவது ஒன்று தான் வழி. அந்த ஓவர் டிராப்ட் வாங்குவதைத்தான் மத்திய அரசு மிரட்டிக் கொண்டிருக்கிறது. இதே அவையில் நமது முதலமைச்சர் ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிடும்போது சொன்னார்கள். எங்களை பிளாக் லிஸ்ட்டில் போடுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறார்கள் என்று. அப்படி பிளாக் லிஸ்ட்டு ஆகக் கூடாது என்று மாநிலங்கள் நினைத்தால் அவைகள் மத்திய அரசு சொல்வதை கேட்பதைத் தவிர வேறு வழி இல்லை. அவர்களை கெஞ்சி கேட்டு ஏதாவது கிடைத்தால் தான் உண்டு என்று இல்லாமல் தங்களுக்கு இருக்கும்படியான உரிமைப்படி, நியாயப்படி, குறைந்தபட்ச தேவைப்படி அவர்கள் நிதியை பெற முடியாது. மத்திய அரசு பிடிப்பு அந்த அளவுக்கு இழுக்கப்பட்டு இருக்கிறது. இந்த பொருளாதார வினியோகத்தில் நாம் தெளிவாக பார்க்கவேண்டும். அடுத்து இன்னொரு அபாயகரமான விஷயம், இந்த வருடத்தில் நடந்து இருக்கிறது. அது என்ன என்றால் நிதி கமிஷனை நிறுவினார்கள் 1984 ஆம் ஆண்டு. அந்த நிதி கமிஷன் மாநிலங்களுக்கு, மத்திய அரசினுடைய நிதியை, குவிந்து இருக்கிற நிதியை, எவ்வாறு பங்கு போட்டுக்கொடுக்கவேண்டும் என்பதையும் ஏற்கனவே இருக்கக்கூடிய பங்கீட்டினை இன்னும் அதிகப்படுத்திக் கொடுப்பதற்கும் அவர்கள் கோரிக்கையை பெற்று நியாயம், அநியாயங்களை பரிசீலித்து அவர்கள் முடிவு செய்து கொடுக்கவேண்டும். அவ்வாறு நிதி கமிஷன் பரிசீலனை செய்து தன்னுடைய முடிவு கொடுத்து இருக்கிறார்கள். அந்த முடிவை இந்த வருடம் அமுலாக்குவது இல்லை என்று மத்திய அரசு சொல்லி விட்டார்கள். அவர்கள் பார்த்து சொல்லிவிட வேண்டியது. அப்படி என்றால் இந்த நிதி கமிஷன் எதற்கு?. இந்த நிதி கமிஷனுடைய முடிவுப்படி நான் நினைக்கிறேன், இந்த அரசுக்கு கூட கிட்டத்தட்ட 350—400 கோடி ரூபாய் வரை வரும் என்று இருக்கிறது. மேற்கு வங்க அரசுக்கு 350 கோடி ரூபாய்க்கு மேல் பணம் வரும். இப்படி மாநிலங்களுக்குக் கிடைக்கவேண்டிய





பணத்தை ஒரு வருடத்திற்கு கொடுப்பதற்கு இல்லை, அமுலாக்க முடியாது என்று மத்திய அரசு சொன்னால் அது என்ன நிலை? மாநில மைய உறவுகள் அது என்ன உறவுகள்? நான் சொல்வதை நீ கேட்கவேண்டியது, பொருளாதாரத்தில் உன் கழுத்தை நான் நெறிப்பேன், அதற்கு உட்பட்டு நீ நிற்க வேண்டும் என்ற நிலை தானே அது. ஆகவே மத்திய மாநில உறவுகள் இன்றைக்கு ஒரு சீரான ஜனநாயக அடிப்படையில் இல்லை என்பதற்கு இது எல்லாம் நமக்கு முன்னால் நிற்கிற உதாரணங்கள். தத்துரூபமான காட்சிகள். அந்த முறையில் நிதி கமிஷனுடைய நிலைமையும் இன்றைக்கு வெளிவந்திருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம்.

இன்னும் சிறு தொழில்கள் நமக்கு விட்டு இருக்கிறார்கள். அந்த சிறு தொழில்களின் நிலைமை என்ன ? அதற்கு ஏராளமான கடன் கொடுக்கவேண்டும். இந்த கடன் கொடுக்கவேண்டும் என்றால் மாநில அரசுகளிடம் பணம் இல்லை. அப்போது அந்தப் பணத்தை மத்திய அரசு ஏற்கவேண்டும் அல்லது அவர்கள் வங்கிகள் ஏற்கவேண்டும். ஏன் என்றால் பெரும்பாலான வங்கிகள் எல்லாம் அவர்களுடைய கண்டிரோலில் தான் இருக்கின்றன. பெரிய நிதி ஸ்தாபனங்கள் எல்லாம் மத்திய அரசின் கையில் தான் இருக்கின்றன. கடன் பெற்று சிறு தொழில்கள் வளர்க்கக்கூடாது, மிகப்பெரிய கஷ்டமான நிலை. இப்படி பொருளாதார துறையில் இப்படி கொடிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி அதுவும் மாநிலங்களில் மாற்று அரசுகள் இருந்தால் குறி வைத்து தாக்கி இந்தப் பணத்தை கொடுக்காமல் தடுத்து அந்த அரசுகளை திக்கு முக்காடச் செய்து மக்களிடத்தில் கெட்ட பெயரை வாங்கி அந்த அரசுகளை வீழ்த்துவதுற்கு இது பயன்படுகிறது. அந்த நிலை தான் இன்றைக்கு நடக்கிறது. இதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அதனால்தான் நான் என்ன சொல்கிறேன் என்றால் மைய மாநில அரசுகள் உறவுகள் என்று சொல்வதில் மாநிலங்களுக்கு கிடைக்கவேண்டிய அதிகமான அதிகாரங்கள் எந்த அளவுக்கு ஜனநாயக முறையில் அதிகப்படியான அதிகாரம் நேரடியாக மக்கள் மீது பிடிப்பு வைத்துக்கொண்டு ஆட்சி நடத்துகின்ற மாநிலங்களுக்கு அந்த அதிகாரங்கள் வரவேண்டும்,

[திரு. கு. ரமணி] [1984 அக்டோபர் 11
(நண்பகல் 12–00)

இதற்கெல்லாம் சேர்த்து இருக்கும்படியான ஒரு ஃபெடரல் செட் அப் தான் மத்திய அரசே தவிர வேறல்ல. ஆனால் பொம்மை மாதிரியான நிலைமையை ஏற்படுத்தி மற்ற மாநில அரசுகளை எல்லாம் அதாவது ஃபெடரலிசம் என்பதைத் தூக்கி எறிந்துவிட்டுப் போகும்படியான ஒரு போக்குத்தான் அத்தாரிட்டேரியன் ட்ரெண்ட் என்பதாகும். அதிகாரங்களை எல்லாம் எந்த அளவுக்கு தன்னிடத்திலே ஈர்த்து குவித்துக்கொண்டு அதற்கு மேலே உட்கார்ந்துகொண்டு இருக்கவேண்டும் என்ற நிலைமையின் இறுதியாகத்தான் ஜனாதிபதி முறை ஆட்சி என்பது வருகின்றது. அதுதான் அமெரிக்காவிலே ரீகன் வைத்துக்கொண்டிருக்கின்ற, அப்படிப்பட்ட முறைக்குக் கொண்டு செல்வதாகும். அதைத்தான் நாம் எதிர்க்கிறோம். கடுமையாக எதிர்க்கிறோம். நிச்சயமாக அந்த நிலையை இந்திய மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். இது எங்கே போய் முடியும் என்பது தெரியும். எனவே இதற்கு சாத்தியமே இல்லை. ஆனால் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை, ஒரு வளர்ச்சி இந்திய நாட்டிலே ஏற்பட்டாகிவிட்டது. அதன் காரணத்தால் வாய் மூடி மௌனியாக இருந்த மாநிலங்கள் கூட இன்றைக்கு எதிர்த்துக் கேட்பது என்ற நிலைமைக்கு வந்திருக்கின்றது. எனவே மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்பதில் உயிர்நாடி பிரச்னை அடங்கி இருக்கின்றது. அது இல்லாதவகையில் ஜனநாயகம் பற்றியும், அரசியல் சட்டம் பற்றியும், அரசியல் சட்டம் தந்திருக்கும்படியான உரிமைகள் பற்றியும பேசுவதும் அர்த்தம் இல்லாமல் போகின்றது.

கடைசியாக எல்லாம் சேர்த்து ஒரு சர்வாதிகாரத்தை நோக்கி போகின்ற போக்காகத்தான் அது அமைகின்றது. 1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31ஆம் தேதி இந்தத் தீர்மானம் ப்ரேரேபிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டபோது என்ன சூழ்நிலை இருந்ததோ அதே நிலைதான் இன்றைக்கும் இருக்கின்றது. இன்றைக்கு அந்தமாதிரி சூழ்நிலை ரொம்ப பக்கத்தில் வந்தாகிவிட்டது. பல மாநிலங்களில் பல்வேறு கட்சிகளின் ஆட்சிகள் முன்பு கவிழ்க்கப்பட்டன. அதுபோல்



1984 அக்டோபர் 11] [திரு. கு. ரமணி]
இப்போதும் நடைபெற்று வருகின்றது. கேரளாவிலே இருந்த
எதிர்க்கட்சி ஆட்சி கவிழ்க்கப்பட்டு தற்போது ஒரு கூட்டணி
ஆட்சி என்ற அளவுக்குக் கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருக்
கின்றது. அதாவது மத்திய அரசிலே எந்தக்கட்சி இருக்கின்றதோ
அந்தக் கட்சி சேர்ந்த ஒரு கூட்டணி ஆட்சி என்ற அளவிற்கு
வந்து நிற்கின்றது. இப்படிப்பட்ட காரணங்களால் பல்வேறு
மாநிலங்களில் கொந்தளிப்பு என்பது வளர்ந்துகொண்டிருக்
கின்றது. அதை அடக்குவதற்கான போக்குத்தான் வளர்
கிறதே தவிர நியாயமான முறையில் அதிகாரத்தைப் பகிர்ந்
தளிப்போம் என்ற போக்கு இல்லை. இதுதான் ரீசன்ட் டெவலப்
மென்ட். அண்மைக்காலத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் இந்த
வளர்ச்சியைத்தான் எடுத்துக் காட்டுகின்றன.

மேலும் ஒன்றிரண்டு விஷயங்களைச் சொல்லி நான் சுருக்க
மாக முடித்துக்கொள்ளப் போகிறேன். காங்கிரஸ் கட்சியின்
ஆட்சியாக இருந்தாலும், மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின்
ஆட்சியாக இருந்தாலும், ஜனதா கட்சியாக இருந்தாலும் எந்தக்
கட்சியாக இருந்தாலும் அதாவது Irrespective of the Party politics
என்ற வகையில் எந்தக் கட்சியின் ஆட்சியாக இருந்தாலும்,
தங்களுக்கு சரியில்லை என்று படுகின்றபோது அந்த சர்க்காரைப்
கவிழ்ப்பது என்பதுதான் அவர்களுடைய நடைமுறையாக
இருக்கின்றது. காங்கிரஸ் கட்சியின் ஆட்சியையே கவிழ்த்திருக்
கிறார்கள் சிக்கிம்மில். அதாவது 30பேர் இருக்கின்ற சட்டசபையில்
18 பேர்களை வைத்திருக்கக்கூடிய முதலமைச்சர் காங்கிரஸ்
கட்சியைச் சேர்ந்தவர். இதை நான் காங்கிரஸ் கட்சியைப்
பற்றிக் குறை சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்ல
வில்லை. ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன். இப்படி
மெஜாரிட்டியாக ஒருவர் இருக்கின்ற நிலைமையில் மைனாரிட்டி
யாக இருப்பவரைப் பிடித்து முதலமைச்சராக ஆக்கினார்கள்.
அவர் சட்டமன்றத்தைக் கூட்டவேண்டும் என்றும் சொல்லி
யாகிவிட்டது. ஆனால் சட்டமன்றத்தைக் கூட்டுவதற்கு
முன்னதாகவே அந்த அமைச்சர் ராஜினாமா செய்கிறார். அங்கே
ஜனாதிபதி ஆட்சி வருகின்றது. 356-வது செக்ஷன்படி
கான்ஸ்டிட்யூஷனல் ப்ரேக் டவுன் வருமேயானால் அதாவது
ஒரு மாநில சர்க்காரினுடைய ஆட்சி உடைந்து போகுமேயானால்,
அப்போதுதானே ஜனாதிபதி ரிப்போர்ட் கேட்டு கவர்னர் மூலமாக
அந்த ஆட்சியை டிஸ்மிஸ் செய்யக்கூடிய நடவடிக்கையை எடுக்க
லாம் என்று இருக்கின்றது. இதிலே கான்ஸ்டிட்யூஷனல் பிரேக்
டவுன் எங்கே வந்தது? என்ன செய்தார்கள்? கடைசியாக மெஜா
ரிட்டியாக இருக்கின்ற ஆளை ஏதோ காரணம் சொல்லி டிஸ்மிஸ்
பண்ணி வெளியே அனுப்பிவிட்டு பின்னர் நியமிக்கப்பட்ட முத
லமைச்சரால் சட்டசபையைக் கூட்டவே முடியாத நிலைமையில்
ஜனாதிபதி ஆட்சி அங்கே வந்தது.

[திரு. கு. ரமணி] [1984 அக்டோபர் 11

அதேமாதிரிதான் காஷ்மீரில் பரூக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக் கட்சியின் ஆட்சி நடந்தது. அக்கட்சி 46 சீட்டை வைத்திருக்கக்கூடிய கட்சி. அக்கட்சியிலிருந்து 12 பேர் வெளியே போகிறார்கள். 76 பேர் இருக்கக்கூடிய அந்த காஷ்மீர் சட்ட சபையில் உள்ள 12 பேர் இருக்கின்ற ஒரு கட்சியின் தலைவரைக் கூப்பிட்டு ஆளுநர் அவர்கள் அரசு அமைக்கச் சொல்கிறார். என்ன ஜனநாயகம்? 26 எம்.எல் ஏக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். 26 பிளஸ் 12 சேர்ந்தால் 38. அடுத்து யாரோ, ஒரு சுயேச்சை, என்னமோ அவர்களோடு சேருவார்கள். ஆகவே எங்களுக்கு மெஜாரிட்டி என்று சொன்னார்கள். இதுதான் கவர்னருக்கு சாட்டிஸ்பேக்ஷன். எப்படி கவர்னருக்கு சாட்டிஸ்பேக்ஷன் கிடைக்கும்? இது உண்மையான போனபைட் சாட்டிஸ்பேக்ஷன்தானா? கவர்னருடைய அதிகாரங்களைப் பற்றி மற்றவர்கள் கேள்விக் கேட்கக் கூடாது. ஆனால் சட்டமன்றங்களில் பொலிடிக்கல் — அரசியல் சபையிலே—பேசும்பொழுது நாம் எடுத்துச் சொல்ல வேண்டி இருக்கிறது. ஏனென்றால் நமக்கும் இந்த நிலைமை இருக்கிறது அல்லவா? அங்கே நடந்தது என்ன? இன்றைக்கும் என்ன சொல்கிறார்கள்? காங்கிரஸ் கட்சியும் தேசிய மாநாடும் சேர்ந்து கோயலிஷன் கவர்ன்மென்ட் என்று சொல்லலாம்; ஆனால் ஏன் சொல்ல மறுக்கிறார்கள்? இல்லை காங்கிரஸ் கட்சி அரசாட்சி என்று சொல்லலாம். 25 பேர்கள் காங்கிரஸ் உறுப்பினர்களை வைத்து, முதலமைச்சரை வைத்து நடத்துகிறார்கள். அதுவும் அல்லாமல் அது தேசிய மாநாடு அரசாங்கம்தான், அது அவர்கள் குடும்ப விவகாரம் என்று சொல்கிறார்கள். என்ன குடும்ப விவகாரம்? காங்கிரஸ் உறுப்பினர்கள் 26 பேர்களும் பின்னால் இருந்து கையைத் தூக்குவதால் குடும்ப விவகாரமாக இருக்க முடியாது. அது எப்படி உருவாக்கப்பட்டது என்பது நமக்குத் தெரியும். அதுதான் காஷ்மீர்.

அதைவிடப் பயங்கரமானது, இப்பொழுது கடைசியில், ஆந்திராவில் வந்தது. 201 உறுப்பினர்கள் கொண்டது தெலுங்கு தேச கட்சி. (மணியடிக்கப்பெற்றது) நீங்கள் தயவுசெய்து மணி அடிக்காதீர்கள். இது எங்கள் நாள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு ஏ. கே. சண்முகம்): ஏற்கனவே 45 நிமிடங்கள் பேசி இருக்கிறீர்கள். இப்பொழுது 25 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். ஆகவே, 1 மணி 10 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். இன்னும் 5 பேர்கள் பேச வேண்டியிருக்கிறது. ஆகவே, சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. கு. ரமணி : அன்றைக்கே முடித்திருந்தால் இன்னும் ½ மணி நேரம் கூட எடுத்து முடித்து விட்டிருப்பேன். ஆனால், இப்பொழுது பேசுவதால், நானே முடித்து விடுகிறேன்.



1984 அக்டோபர் 11] [திரு. கு. ரமணி]

ஆந்திராவிலே தெலுங்கு தேசக்கட்சியிலே 201 பேர்கள் இருந்தார்கள். முதலமைச்சர் நோயாளியாக வெளிநாட்டுக்குப் போயிருக்கிறார். கான்ஸ்டிட்யூஷனல் பிரேக் டவுன் அல்ல; முதலமைச்சருடைய ஹெல்த்தால் பிரேக் டவுன் ஆகியிருக்கிறது. அதை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், இது அல்லவா தேர்ட் ரேட் மெத்தட்; படுமோசமான நடவடிக்கை அல்லவா? அங்கேயிருக்கிற அந்தக் கட்சிக்குள்ளே இருக்கிற சில டிசிடன்ட்லை நன்றாகத் தொட்டுப் பார்த்து மத்திய அரசிலே ஆளுங்கட்சியினுடைய ஆட்கள் வேலை செய்து, எங்களுக்கு 90 பேர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால், என்.டி.ஆருக்குப் பின்னால் 144 பேர்கள் இருந்து, எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த 19 பேர்களும் இருந்து, சென்னா ரெட்டி கட்சியில் இருந்த 2 பேர்களும் சேர்ந்து, 165 பேர்கள் மெஜாரிட்டி இருந்தார்கள். 294 பேர்கள் இருக்கிற அசெம்பிளியில் 165 பேர்கள் இருக்கக்கூடிய கட்சியினுடைய முதலமைச்சர் டிஸ்மிஸ் பண்ணப்படுகிறார். யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே. இதை ஆளுங்கட்சியான உங்களுக்கு நான் தாழ்மையோடு சொல்லிக்கொள்கிறேன். அந்த மணி ஓசை இன்றைக்கு உங்கள் காதில் ஒலிக்கவில்லை. ஆந்திர மக்கள் சும்மா விடவில்லை. அங்கு என்ன கான்ஸ்டிட்யூஷனல் பிரேக் டவுன் என்று நீங்கள் பாருங்கள். இது கான்ஸ்டிட்யூஷனல் பிரேக் டவுன் அல்ல.

திரு. ஆர். தியாகராசன் : மாற்றுத் தலைவர் அவர்களே, எங்கோ நடந்ததைப் பற்றிப் பேசுகிறார். எங்கோ நடந்ததைப் பற்றி அவர்கள் கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்ல அவர்கள் இங்கு இல்லை. நேராகப் பார்த்த மாதிரி பேசுகிறார்.

திரு. கு. ரமணி : நான் உறுப்பினரைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சிக்காரர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்கவில்லை. இந்தியாவிலே நடந்த நிகழ்ச்சிகள், பல்வேறு கட்சிகளுடைய பாத்திரங்களைப் பற்றி, நான் பொலிட்டிக்கலாகத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதற்கு எனக்கு உரிமையிருக்கிறது. நான் யாரையும் குற்றஞ்சாட்டிச் சொல்லவில்லை. உறுப்பினர்களைப் பற்றிச் சொல்லவில்லை. இந்த மாதிரி நடந்ததற்குப் பிறகு என்.டி.ஆரும், அவரது ஆதரவு எம்.எல். ஏக்களும் ராஜ்பவனுக்குச் சென்று காத்திருக்கிறார்கள். உங்களுக்கு நேரடியாக என்னுடைய ஆதரவைக் காட்டுகிறேன் என்று பலத்தைக் காட்டுகிறார். ஜனாதிபதியிடம் காட்டியாயிற்று. ஆனால் அவர்களுக்கு இடம் கொடுக்காமல் மைனாரிட்டி ஆளைக் கொண்டு அவருக்குப் பதவி ஏற்புப் பிரமாணம் அங்கே நடத்தினார்கள். அப்பொழுது அங்கே என்ன நடந்தது என்பது நமக்குத் தெரியும். அந்த முதலமைச்சரையும், மற்ற அமைச்சர்களையும் கைது செய்து ஜெயிலில் கொண்டு போய் அடைக்கிறார்கள். போலிசையும் இராணுவத்தையும் அப்படிப்பட்ட நடவடிக்கையிலே ஈடுபடுத்தியிருக்கி

[திரு. கு. ரமணி] [1984 அக்டோபர் 11

றார்கள். மெஜாரிட்டி இருக்கிற அரசாங்கத்தினுடைய அமைச்சர்
களையும் கைது செய்து கொண்டு போக உபயோகப்படுத்தினால்
என்ன நடக்கும் இந்த நாட்டிலே? இதே இராணுவமும் போலீசும்
நாளைக்கு நினைக்க மாட்டார்களா? நம்முடைய உதவி இல்லா
மல் அரசாங்கம் நடத்த முடியாது, அவர்கள் போகிற போக்கிலே.
நாமே ஏன் அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொள்ளக் கூடாது
என்று இராணுவமும் போலீசும் நினைத்தால் என்ன ஆகும்?

(பிற்பகல் 12-10)

இந்த நாட்டிலே இராணுவ ஆட்சி தானே ஏற்படும்? அப்படிப்பட்ட
வழிகளை திறந்துவிடுகிற பேரபாயம் நாட்டிற்கு ஏற்படும் என்று
நாங்கள் சொல்வதற்கு காரணம் அது தான். இது அங்கே நடந்
தது. அவர்கள் ஜெயிலுக்குப் கொண்டு போகப்பட்டார்கள்,
ஆனால் கடைசியாக முடிக்கக்கூடிய சக்தி யாரிடம் இருந்தது?
ஜனங்கள் கையில் தான் இருக்கிறது. லட்சக்கணக்காண மக்கள்
தெருவிற்கு வந்தார்கள். தங்களுடைய சக்தியை நிரூபித்துக்
காட்டினார்கள். கடைசியாக மத்திய சர்க்கார் பின்வாங்க
வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் குறிப்பிட்ட ஒரு மாதக்
காலம் அவர்களுக்குடைம் கொடுத்தார்கள். நீ குதிரை வியாபாரம்
நடத்திக் கொள் எத்தனை எம்.எல்.ஏக்களை விலைக்கு வாங்க
முடியுமோ வாங்கிக்கொள் என்று காலம் கொடுத்தார்கள்.
பூசணிக்காய் கத்தரிக்காய் வாங்குவதைப் போல எம்.எல்.ஏக்களை
வாங்குவதற்கு டைம் கொடுத்தார்கள். ஆனால் அந்த டைமிற்குள்
அசெம்பிளியைக் கூட்டி மெஜாரிட்டியை நிரூபிக்க முடியவில்லை.
அந்த முறையில் கடைசியாக அவர்கள் நியமித்த அந்த அமைச்
சரவையை டிஸ்மிஸ் பண்ண வேண்டியிருந்தது.
கடைசியாக திரு. இராமாராவ் அவர்கள் தன்னுடைய
மெஜாரிட்டியை நிரூபித்து ஆட்சிக்கு வந்தார்கள் இது கடைசி
யில் ஆந்திராவில் ஏற்பட்ட நிலைமை. அப்படிப்பட்ட நிலைமை
தான் நாட்டில் வளர்ந்து வருகிறது. அரசியல் சட்டத்தின்
பெயரைச் சொல்லி, 356-வது செக்ஷனை கவர்னர்கள்
எப்படியெல்லாம் பயன்படுத்துகிறார்கள்? அதுதானே பாண்டிச்
சேரியில் நடந்தது. திராவிட முன்னேற்றக்கழக அரசாங்கம்
மற்ற கட்சிகளோடு சேர்ந்து மெஜாரிட்டியாக இருந்தபோது
அவர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டு இன்று வரையிலும் அங்கே
தேர்தல் இல்லாமல் அரசு நடந்துக் கொண்டிருக்கிறது. இந்தச்
சூழ்நிலை நான் நாட்டில் வளர்கிறது.

திரு. மா. சின்னராசு: மாற்றுத் தலைவர் அவர்களே, எல்லா
விவகாரங்களுக்கும் அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவு
தான் காரணம் என்று தன்னுடைய முடிவான கருத்தாக உறுப்
பினர் அவர்கள் சொல்கிறார்கள். இந்த 356-வது பிரிவை
அரசியல் சட்டத்திலிருந்து நீக்கவேண்டுமென்பது அண்ணா திரா
விட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து வற்புறுத்தி வரும்
கொள்கை. இதை ஏற்றுக்கொள்ளாத மற்ற கட்சிகளோடு



984 அக்டோபர் 11] [திரு. மா. சின்னராசு]

தாங்கள் உறவு கொள்வதில்லை அல்லது உறவு கொள்ள மாட்
டோம் என்ற முடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எடுக்
குமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி: மாற்றுத் தலைவர் அவர்களே, மரி
யாதைக்குரிய சின்னராசு அவர்கள் ஞாபகமறதியாக சொல்
கிறார் என்று நினைக்கிறேன். இந்த 356-வது செக்ஷன்
மட்டுமல்ல, எத்தனை செக்ஷன்களை பரிபூரணமாக எடுத்து
விட வேண்டும். எத்தனை செக்ஷன்களை மாற்றவேண்டு
மென்று மெமோரண்டாவை முதலில் மத்திய அரசின் முன்னால்
வைத்தது எங்களுடைய கட்சியின் பொதுச்செயலாளர் தோழர்
நம்பூத்திரிபாத்; அரசாங்கம் என்ற முறையிலே தோழர் ஜோதி
பாசு. நாங்கள் 356-வது பிரிவை எடுத்துவிட வேண்டுமென்று
தான் சொல்கிறோம். இதை நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா?
இதில் முடிவிற்கு வரவேண்டியவர்கள் நீங்கள்தான். அதை
ஒப்புக்கொள்ளாதவர்கள் இப்போது ஆளுகிற மத்திய அர
சாங்கம். அவர்களோடு நீங்கள் சிநேகிதமாக இருந்து எப்படி
எடுப்பீர்கள்? உங்கள் பக்கத்திலே தான் பிரச்னை
இருக்கிறது? எங்களுக்கு அதில் பிரச்சினை இல்லை.
இந்த நிமிஷமே 356-வது செக்ஷனை எடுத்துவிட
வேண்டுமென்று தீர்மானம் போடலாமே!

ஆகவே எல்லாவற்றிற்கும் காரணம் 356-வது செக்ஷன்
மட்டுமல்ல. நான் இங்கே சொன்னது எல்லாம்
356-வது செக்ஷன் தானா? (குறுக்கீடு) உங்கள் பக்கத்
திலிருந்து தான் தலையீடுகள் வருகின்றன. நான் அத்தனை
பேருக்கும் பதில் சொல்ல தயாராக இருக்கிறேன். ஆகவே
எல்லாவற்றிற்கும் 356-வது செக்ஷன்தான் காரணம்
என்பதல்ல. கான்ஸ்ட்டிடியூஷனல் பிரேக் டவுன் என்ற ஒரு
போர்வையில் எப்படி ஆளுநர்கள் மைனாரிட்டியாக இருக்கிற
கட்சியை அதிகாரத்திற்கு கொண்டு வர, அல்லது தங்களுக்கு
விருப்பமுள்ள கட்சியை அதிகாரத்திற்குக் கொண்டு வர, ஜன
நாயக முறைகளில் ஆட்சி வேண்டுமென்று சொல்கிற எதிர்க்
கட்சிகளை ஒதுக்கி அதை உபயோகப்படுத்துகிறார்கள் என்
பதைத் தான் சொல்கிறேன். இதைத் தவிர பொருளாதாரத்
தைப் பற்றி நான் சொல்லவில்லையா? அதிலே உங்களுக்கு ஆட்
சேபனை இல்லையா? நீங்களும் ஓவர்டிராப்ட் வாங்கினால்
கருங்காலி சர்க்கார் என்று தான் சொல்வார்கள். ஆகவே
அதிலே உங்களுக்கு பாயின்ட் கிடைக்காது. அப்படிப்பட்ட
சூழ்நிலை நாட்டிலே இருப்பதால், மத்திய மாநில உறவுகள்
பொறுத்தவரையில் இந்த அவையில் தோழர் உமாநாத் அவர்கள்
பிரேரேபித்திருக்கிற இந்தத் தீர்மானத்தை ஆளும்கட்சி உள்
பட நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து நிறைவேற்றி அனுப்ப
வேண்டும்.

[திரு. கு. ரமணி] [1984 அக்டோபர் 11

அதுமட்டுமல்ல, ஜனங்கள் மத்தியில் இதைப் பாப்புலரைஸ்
செய்ய வேண்டும். ஒரு அரசாங்கமோ அல்லது சட்டசபையில்
இருக்கிற சில மந்திரிகளோ சேர்ந்து இந்தப் பிரச்னைக்கு முடிவு
காண முடியாது. அதற்கு ஆந்திரா ஒரு உதாரணம். மக்கள்
மத்தியில் அந்த உணர்வைத் தூண்டவேண்டும். மக்கள்
உணர்வை பரப்ப வேண்டும். இப்போது சர்வாதிகாரப் போக்கு
மத்திய அரசின் பக்கம் போய்க்கொண்டிருப்பதால் அதைத்
தடுப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கின்ற வகையில் இந்தத்
தீர்மானத்தை இந்த அவை ஏகமனதாக நிறைவேற்றுவதற்கு
இங்குள்ள அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டு
முடித்துக்கொள்கிறேன்.

*திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, தனி நபர் தீர்மானமாக மாண்புமிகு உறுப்பினர்
உமாநாத் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தின்
சாரம், இந்திய நாடு முழுமையாக வளரவேண்டும் என்றாலும்.
மாநிலங்கள் வளமாக வாழவேண்டும் என்றாலும், இப்போது
மாநிலங்களுக்கு இருக்கும் அதிகாரங்கள் போதுமானதாக
இல்லை, ஆகவே அவைகளை அதிகப்படுத்த வேண்டும் என்றும்.
அதற்காக இந்திய தலைமை அமைச்சர் அவர்கள் அனைத்து
முதலமைச்சர்களையும் யூனியன் பிரதேசங்களை ஆண்டு கொண்
டிருப்பவர்களையும் அழைத்துப் பேசவேண்டும் என்பதாகும்.
அந்த வகையிலே, அந்தக் கருத்தை ஆதரித்து காந்தி காமராஜ்
தேசிய காங்கிரஸ் சார்பிலே பேசுவதற்கு நான் எழுந்து நிற்
கிறேன்.

மக்களாட்சி வந்துவிடுமானால் அதிகாரப் பரவல் முறை
ஏற்பட்டுவிடும் என்பதுதான் அரசியல் அமைப்புச் சட்டத்தை
உருவாக்கியவர்களின் கனவாக இருந்திருக்க முடியும். விடு
தலைப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கூட சின்னஞ்
சிறு கிராமத்தில் இருக்கும் மக்களைத் தட்டி எழுப்பி இந்த
நாட்டை அடிமைத்தளையாக வைத்துக் கொண்டிருக்கிற வெள்
ளை ஏகாபதிபத்தியத்தை வெளியேற்ற பாடுபட்டபோது அதி
காரங்கள் யாரோ ஒருவர் கையில் குவிந்துவிடக்கூடாது என்று
தான் எண்ணியிருக்க முடியும். குவிந்துவிடவேண்டுமென்று நிச்
சயமாக எண்ணியிருக்க மாட்டார்கள். அந்த அடிப்படையில்
தான் விடுதலைப் போராட்டத்தில் தங்களுடைய வியர்வை
யையும், கண்ணீரையும், செந்நீரையும் மட்டும் அல்லாமல், தங்
களையே தியாகம் செய்து கொள்ளும் நிலையில் காஷ்மீர் முதல்
கன்னியாகுமரி வரை உள்ள மக்கள் திரண்டு எழுந்தபோது
இந்த நாட்டின் அதிகாரம் அத்தனை பேருக்கும் உரியதாக
அமையவேண்டும் என்ற முறையில்தான் எண்ணியிருப்பார்கள்.
ஆனால், இப்போது ஒருவரிடத்தில் குவிந்து விட்டதால் தான்
ஒரு சிக்கல் விளைந்தது என்பதை நாம் பார்த்தோம். மத்திய
அரசிடம் இருக்கும் அதிகாரங்களைப் பிரித்து விட்டால்தான்



1984 அக்டோபர் 11] [திரு. குமரி அனந்தன்]

ஒரு மாநிலம் செம்மையாக வாழ முடியும் என்று நினைப்பவர்கள்
இரண்டு விதமான கருத்துக்களைப் பரப்பிக்கொண்டு இருப்
பதைப் பார்க்கிறோம்.

அந்த இரண்டு விதமான கருத்துக்கள் எப்படி பரப்பப்படுகிறது
என்று சொன்னால், மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் பிரித்துக்
கொடுத்து விட்டால் மத்திய அரசாங்கம் வலுவாக இருக்க முடி
யாது என்று சொல்கிறார்கள். பிரித்துக்கொடுக்காவிட்டால்
அதைச் சர்வாதிகாரம் என்று சொல்கிறார்கள். இப்படி இரண்டு
வித கருத்துக்கள் நாட்டிலே உலவுகின்றன. இதை மனதிலே
கொண்டு தான் பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் ஒரு
முறை மத்திய அரசாங்கத்தின் பிரதம அமைச்சருக்கு ஒரு
வேண்டுகோள் விடுத்தார். அதிகாரம் பரவலாக்கப்படவேண்டும்
என்று சொல்கிறார்களே அது எந்தெந்த வகையிலே அளிக்கப்பட
வேண்டும், எந்தெந்தத் துறையிலே அளிக்கப்படவேண்டும் என்று
விரும்புகிறார்கள் என்பதை பாரதப் பிரதமர் நேரடியாகத்
தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக மாநிலங்களின்
முதலமைச்சர்களையும், யூனியன் பிரதேசங்களை ஆளுகின்ற
வர்களையும் அழைத்து அவர்களுடைய கருத்துக்களைத் தெரிந்து
அதற்கு ஏற்ப ஒரு முடிவுக்கு வருவது நல்லது என்று பெரும்
தலைவர் காமராஜர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உலக மக்
களுக்கும் அறிவித்தார்கள். அவர்கள் எந்த வகையில், எந்த
அளவிற்கு பாரதப் பிரதமர் அவர்களை கேட்டுக்கொண்டார்
களோ, பாரதப் பிரதமர் அவர்கள் மாநில முதலமைச்சர்களை
அழைத்துப் பேசவேண்டும் என்று கருத்துக்களைத் தெரிவித்
தார்களோ அந்தக் கருத்தின் பிரதிபலிப்பாக இன்றைக்கு இந்
தத் தீர்மானம் இருப்பதால், இதனை ஆதரித்து நான் என்
னுடைய கருத்தை இந்த அவையிலே தெரிவிக்க விரும்புகிறேன்.

நாம் இன்றைக்கு பின்பற்றி வரும் சில மரபுகளைப் பார்க்
கிறபோது அரசியல் அமைப்புச் சட்டத்திலே இருக்கும் சில
ஷரத்துக்களில் உள்ள ஓட்டைகளை வைத்துக்கொண்டு, அதி
காரத்தை சிலர் தங்கள் கையிலே எடுத்துக்கொண்டு மக்களை
மிரட்டி, பயமுறுத்திக்கொண்டு இருக்கிறார்கள். அதனால் என்ன
ஆபத்து ஏற்பட்டது என்பதை நாம் அறிவோம். அண்மையில்
கூட சபாநாயகர்கள் எல்லாம் ஒன்று கூடி ஒரு முடிவு எடுத்
தார்கள். ஒரு அரசாங்கத்தை நடத்துவதற்கு உரிய பெரும்
பான்மை ஒருவருக்கு இருக்கிறதா இல்லையா என்பதை முடிவு
செய்யவேண்டிய இடம் சட்டமன்றம். அந்த உரிமை வேறு
யாருக்கும் இருக்கக்கூடாது. ஆனால், மரபு எப்படி இருக்கிறது
என்றால், கவர்னராக இருக்கிற ஒருவர் யாருக்கு பெரும்பான்மை
இருக்கிறது என்பதற்கு தான் மட்டும் 'சாடிஸ்பை' ஆகிவிட்
டால் போதும், அவருக்கு இருக்கிற டிஸ்கிரிஷனரி அதிகாரத்
தை வைத்து இன்னாருக்கு பெரும்பான்மை இருக்கிறது, இன்

னாருக்கு இலலை என்று முடிவு எடுத்து விடலாம். அப்படி எடுக்கப்
பட்ட முடிவின் காரணமாக ஏற்பட்டகிளர்ச்சிகள், உள்ளக்கு
குமுறல்கள் ஆகியவற்றை நாம் பார்த்தோம்.

(பிற்பகல் 12-20)

இதிலிருந்து 356 என்று சொல்லுகின்ற அந்தப் பிரிவு எந்த
எந்த வகையிலே கத்திபோல் இருந்துகொண்டு சில நேரங்களிலே
கழுத்தை அறுப்பதும், தேவைப்படுகிற நேரத்திலே காலிலே
தைத்த முள்ளை எடுப்பதற்குப் பயன்பட வேண்டிய கத்தி
உயிரையே பறிக்கின்ற அளவுக்கு, அறுக்கின்ற தொழிலைச் செய்
கின்ற கத்தியாக இருப்பதை இன்றையதினம் நாம் பார்க்கிறோம்.
இவைகளுக்கு எல்லாம் ஒரு பாதுகாப்பைத் தேடுவது எப்படி
என்பதற்காக சர்க்காரியா கமிஷன் என்று ஒன்றைப் போட்டு,
ஒட்டு மொத்தத்திலே மத்திய மாநில அரசு உறவுகள் எப்படி
இருக்க வேண்டும் என்பதை ஆராய்வதற்காகப் போடப்பட்டிருத்
தாலும்—அது எந்த நோக்கத்திற்காகப் போடப்பட்டது என்பது
பற்றிய விவாதத்திற்கு எல்லாம் நான் போகவில்லை—போடப்
பட்டிருக்கிற நேரத்திலே ஒரு நீதிபதியாக இருந்த பெருமக
னார் 109 கேள்விகள் அடங்கிய ஒரு பட்டியலை அனுப்புகிறார்.
அனுப்புகிறவர் பெருமக்களுக்கு அனுப்புகிறார்;
மாணவர்களுக்கு அல்ல. ஆளும் பொறுப்பில் இருக்கிற
முதலமைச்சர்களுக்கு அனுப்புகிறார்; ஏற்கெனவே ஆளுகின்ற
பொறுப்பிலே இருந்து அனுபவப்பட்ட முன்னாள் முதலமைச்சர்
களுக்கும் அனுப்புகிறார். அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் உங்
களுடைய கருத்துக்களைச் சொல்லுங்கள் என்று 109 வினாக்கள்
அடங்கிய பட்டியலை அனுப்பி வைக்கிறார்.

அனுப்பிவைத்துவிட்டு; பின்னாலே அவர் சொல்கிறார்,
'நாலே நாலு முன்னாள் அமைச்சர்களும் (எஃபியூ அதர்ஸ்)
மற்றவர்களில் சிலரும் மட்டுமே கருத்துச் சொல்லியிருக்கிறார்கள்;
மற்றவர்கள் எல்லாம் கருத்து கூட சொல்லவில்லை என்று
சொல்லுகின்ற அளவுக்கு இருக்கிறது. ஆக, மிகப்பெரிய
வர்கள் கூட இந்த மிகப்பெரிய பிரச்சனையை அலட்சியமாக
எண்ணுகிறார்கள் என்று பார்க்கிறபோது நாமும் அந்த நிலை
மைக்குப் போய்விடாமல் இந்த மன்றத்திலே விவாதித்து ஒரு
நல்ல முடிவுக்கு வருவதன் மூலம் நாட்டு மக்களுடைய உள்ளங்
களிலே இந்த உறவு பற்றிய பரிசீலனையை எழுப்புவதற்கு ஒரு
வாய்ப்பினை அமைத்துக் கொடுத்தவர்களாவோம்.

இப்படி பார்க்கும் போது, சின்ன சின்ன காரியங்களிலே கூட
மத்திய அரசு தலையிடுவது போன்ற உணர்வு ஒரு மாநில அரசுக்கு
வந்தால் இந்திய ஒருமைப்பாடு பற்றி அவர்கள் வினாக்குறி
எழுப்புவார்கள். உதாரணத்திற்காகச் சொல்கிறேன். காடு
சம்பந்தப்பட்டவை இரண்டுக்கும் என்று இருக்கிறது. அதாவது
கன்கரன்ட் லிஸ்டில் இருப்பவை மாநில மத்திய அரசுகளுக்குச்





சொந்தமானவை என்று வந்துவிடுகின்ற காரணத்தினாலே, நீல
கிரி மாவட்டம் போன்ற இடங்களில் ஒரு குடிதண்ணீர் தொட்டி
கட்டுவதற்கு கூட, அதற்கு எந்தப் பாதை வழியாகக் குழாய்
போட்டு கொண்டுவர வேண்டுமோ அல்லது குடிநீர் தொட்டியி
லிருந்து பெரிய குழாயில் தண்ணீரைக் கொண்டுவர வேண்டுமோ
அந்த இடத்திலே தோண்டுவதற்கு அனுமதி கேட்டு பல மாதங்
கள் காத்திருக்க வேண்டியதிருக்கிறது மாநில அரசு. ஆக குடி
நீருக்கு ஏங்கிக்கிடக்கிற மக்கள் ஒரு பக்கம். அந்த காட்டு வழியாக
குழாய் வரவேண்டும் என்பதற்காக மத்திய அரசினுடைய அனு
மதியைப் பெற மாநில அரசு காத்துக்கிடக்கிறது மறுபக்கம் என்று
சொல்லுகிறபோது மக்களுக்கு யார், யார்மீது கோபம் வரும்?
அங்கே இருக்கிற விவரம் புரியாதவர்களுக்கு மாநில அரசு மீதும்
விவரம் புரிந்தவர்களுக்கு மத்திய அரசு மீதும் கோபம் வரும்.
அப்படியானால் மத்திய அரசும் மாநில அரசும் இதற்கு ஒரு முடிவு
கட்ட வேண்டாமா? மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்வ
தற்கு ரெட் டேப்பிசம் என்று சொல்லுகின்ற குறுக்கே கிடக்கிற
காகிதக் கோப்புகள் அவர்களுடைய காரியத்தைக் கெடுக்க
லாமா? என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டுமா வேண்டாமா?

இன்னொரு இடத்திலே பார்த்தால், மத்திய அரசிலே இருக்
கிற அமைச்சர் ஒருவர் பேசினார். காட்டிலாகா அதிகாரிகள்
யாராவது இந்த இந்த வகையிலே நடந்துகொள்ளவில்லை என்
றால் நாங்களே நேரடியாக நடவடிக்கை எடுப்போம் என்று
பேசியிருக்கிறார். நாங்களே நேரடியாக நடவடிக்கை எடுப்
போம் என்று மத்திய அரசு சொன்னால் மாநில அரசின் நிலைமை
என்ன? மாநில அரசு 'குளோரிஃபைடு முனிசிபாலிட்டி' மாதிரி
இருந்துகொண்டிருப்பதா? அதனுடைய அதிகாரம் என்ன? தன்னு
டைய அதிகாரிகளைத் தண்டிப்பதற்கு இன்னொரு அரசாங்கம்
முன்வந்தால் அந்த அதிகாரிகள் இந்த மாநில அரசுக்கு கட்டுப்
பட்டு, உட்பட்டு இருப்பார்களா அல்லது தண்டிக்கும் அதிகாரம்
படைத்தவர்களுக்கு பயந்து அவர்கள் என்ன சொல்கிறார்கள்
என்று கேட்டுக்கொண்டிருப்பார்களா? ஆக, இதை எல்லாம்
பார்க்கும்போது சின்ன சின்ன காரியங்களில் கூட மத்திய அரசு
தலையிடுகிறது என்ற ஒரு உணர்வு ஏற்படும்போது [illegible] மாநில
அரசுக்கு ஒரு கொந்தளிப்பு, ஒரு உள்ளக் குமுறல் [illegible]
கேட்க வேண்டுமா இல்லையா ?

ஒரு மாநில அரசினுடைய எண்ணம் என்ன என்று தெரியாமல்
மத்திய அரசு முடிவுகளை எடுக்கிற நேரத்தில் அந்த மாநில,
மக்கள், அந்த மாநில மக்களைச் சேர்ந்த இன மக்கள் அவர்கள்
எங்கெங்கோ வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் எப்படி எப்படி
நடத்தப்படுகிறார்கள் என்பதற்குச் சான்று கச்சத்தீவு. இலங்கை-
இந்திய ஒப்பந்தம், ஸ்ரீமாவோ பண்டாரநாயகா ஒப்பந்தம்
போன்றவை எல்லாம் தமிழ் மக்களுடைய உணர்வு, தமிழ் மாநில
மக்களுடைய உணர்வு, தமிழ் மாநிலத்தில் வாழ்ந்து கொண்டிருக்

136274 600 008

கிற மக்களுடைய உணர்வு, இவைகளை எல்லாம் கணக்கிலே
எடுத்து, கணித்துப்பார்த்துதான் செய்யப்பட்டதா? இந்த முடிவு
களை எப்படி எடுத்தார்கள்? வெளியுறவு என்று ஒன்றை வைத்துக்
கொண்டு, மத்திய அரசின் கையிலே அதிகாரம் இருப்பதால்,
நாமே அந்த முடிவைச் செய்யலாம் என்கின்ற முடிவுக்கு வந்தார்
களா?

கச்சத்தீவைப் பிரித்துக் கொடுத்தது இந்த மாநில அரசி
னுடைய எல்லைக்கு ஆபத்தாகும். கச்சத்தீவு இராமநாதபுரம்
ஜமீனுக்கு உட்பட்டது என்று நமக்கு குறிப்புகள் எல்லாம் சொல்
கின்ற நேரத்தில் ஆண்டுகொண்டிருக்கிற அமைச்சரவையை—அது
எந்த அமைச்சரவையாக இருந்தாலும் சரி—மக்களால் தேர்ந்
தெடுக்கப்பட்டு ஆண்டு கொண்டிருக்கிற அமைச்சரவை இருக்கிற
நேரத்தில் அந்த அமைச்சரவைக்குத் தெரியாமல் எடுத்துக்
கொடுத்த காரணத்தால் மத்திய அரசு தன்னுடைய அதிகாரத்
தைப் பயன்படுத்திக்கொண்ட காரணத்தால் இன்றைக்கு நம்மு
டைய நாட்டு எல்லைக்கே பேரபாயம் ஏற்பட்டிருக்கிறது. ஆக
வெளியுறவு என்று இருந்தாலும் இப்படிப்பட்ட காரியங்களில்
முடிவு எடுக்கின்ற அதிகாரம் மாநில அரசுக்குத் தெரிந்து எடுக்க
வேண்டுமேயன்றி, மத்திய அரசு தன் போக்கில் எடுக்க வேண்டிய
தில்லை. மாநில அரசுக்கு தெரிவிக்க வேண்டிய கடப்பாடு இல்லை
என்பதால், 'நோ ஆப்ஜெக்ஷன்' என்கிற காரணத்திற்காக அதைத்
தூக்கிக் கொடுத்ததற்குப் பிறகு இன்றைக்கு அங்கே இன்னொரு
வன் உட்கார்ந்துகொண்டு, படைப்பயிற்சி கொடுத்துக்கொண்டு
தமிழனுடைய மார்பை நோக்கி துப்பாக்கியை நீட்டிக் கொண்டி
ருக்கிறான். இப்படிப்பட்ட காரியங்கள் எல்லாம் நடந்து வரு
கின்றன.

ஆக, மத்திய மாநில அரசு என்று வருகிறபோது மத்திய அரசு
சக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டுமென்றால் கூட இந்த சக்திக்
காக வேண்டி ஆக்கபூர்வமான புத்தியைக் கொடுப்பது மாநில
அரசாக இருக்கிற அளவுக்கு உறவுகள் இருக்க வேண்டாமா?
இந்த உறவுகள் இருந்திருக்குமானால் இந்த துன்பங்கள் வந்திருக்
காது அல்லவா? இன்னின்ன காரியங்களுக்குப் பயன்படுத்தக்
கூடாது என்ற ஒரு ஷரத்தையாவது அப்போது சேர்த்திருந்தால்
இந்த மாநில அரசினுடைய, இந்த மாநில மக்களுடைய உணர்வை
யாவது அது பிரதிபலிப்பதாக இருக்கும் அல்லவா?
இவைகளினால் ஏற்பட்ட துயரங்களையெல்லாம் இப்போது
சிந்தித்துப் பார்க்கிற நேரத்தில் மீண்டும் ஒரு முறை இந்த மத்திய
மாநில அரசு உறவுகளை அங்கே சிர்தூக்கிப் பார்க்கவேண்டியிருக்
கிறது. ஃபைனான்சியல் ரிலேஷன்ஷிப் என்று சொல்வதைப்
பார்த்தால், அவர்களுக்கு சகல அதிகாரமும் இருக்கிறது. இங்கே
உழுபவன் இங்கே இருக்கிற உழவனாக இருப்பான். பாடுபடுபவன்
இங்கே உள்ள பாட்டாளியாக இருப்பான். அவனுடைய விளை





பொருள்களுக்கு விலை நிர்ணயிக்கிற உரிமை, அந்தப் பகுதியில்
இருக்கிற மண்ணுக்கும், அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கும்,
அந்தப் பகுதியில் உள்ள மக்களுடைய உழைப்புக்கும் ஏற்பவை
அல்ல. நெல்லினுடைய விலையை அங்கு இருக்கிறவர்கள் மட்டுமே
நிர்ணயிக்கிறபோது என்ன ஆபத்து வருகிறது? வெள்ளைக்காரர்
காலத்திலே நாம் சொல்வோமே, "ஊரான் ஊரான்
தோட்டத்திலே ஒத்தன் போட்டான் வெள்ளரிக்காய், காசுக்கு
இரண்டு விற்கச் சொல்லி காகிதம் போட்டான் வெள்ளைக்காரன்'
என்று—அதைப் போல் இங்கே இருக்கிற சூழ்நிலைகளை
மொத்தத்தில் கணக்கில் கொள்ளாமல்—நம்முடைய உணவுத்
துறை அமைச்சர் கூட இன்று பேசுகிறபோது சொன்னார்—இங்கு
இருக்கிற விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கு ரூ. 175.5
கொடுக்கவேண்டுமென்று நாங்கள் விரும்பி கேட்டுக்கொண்டிருக்கி
றோம். ஆக ஒத்துக்கொள்வார்களா? அல்லது ஒத்துக்கொண்டி
ருக்கிறார்களா? நெல்லுக்குஇப்படி விலையைநிர்ணயிக்
கிறார்கள். சரி.

நெய்வேலியிலிருந்து ஒரு தகவல் வருகிறது நமக்கு. நெய்
வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் மத்திய அரசாங்கத்தைச் சார்ந்
தது. மத்திய அரசாங்கத்தைச் சார்ந்த தாண்டன் பெருமகனார்
சொல்கிறார் ரூ. 78 கோடி தமிழக அரசாங்கம் மின்சாரத் துறை
யிலே எங்களுக்கு பாக்கி வைத்திருக்கிறது என்று. மின்சாரத்தை
நாங்கள் கொடுத்த காரணத்தினால் ரூ. 78 கோடி பாக்கி இருக்கிற
என்று. எப்படி இவ்வளவு பாக்கி? 1955-லே நெய்வேலி நிலக்கரி
சுரங்கம் தோண்டுகின்ற நேரத்தில், இங்கே தோண்டி எடுக்கின்ற
நிலக்கரியை விற்பனை செய்கின்றபோது அதிலிருந்து வருகின்ற
அந்த விற்பனையில் 10 சதவீதத்தை உரிமமாக, ராயல்டியாக,
தமிழ் மண்ணிலிருந்து வெட்டி எடுக்கின்ற காரணத்தாலே, தமி
ழக அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள்.
இலட்சக்கணக்கான டன்கள் வெட்டி எடுக்கப்பட்டு விட்டதே,
இன்று ஒரு காசு கூட ராயல்டியாக வாங்கவில்லையே, உரிமம்
வாங்கவில்லையே? ஆகவே பேச்சு வார்த்தைகள் நடந்ததிலே தமி
ழக அரசிற்கு வர வேண்டிய அந்த உரிமத்தை வாங்காது இருப்ப
தற்கு என்ன காரணம்? சரி அதைக் கொடுக்காமல் இருந்துவிட்டு,
எங்களுக்கு ரூ. 78 கோடி பாக்கி இருக்கிறது என்று மத்திய அர
சாங்கம் சொன்னால், மாநில அரசாங்கத்தையும் இந்தியாவின்
ஒரு பகுதியாகத் தானே கருத வேண்டும்.

சரி இன்னொன்றையும் வைப்போம். இந்த மின்சாரத்திற்கு
இவ்வளவு கட்டணம் வருவதற்கு என்ன காரணம்? தூத்துக்குடி
சென்னையில் எண்ணூர் அனல் மின் நிலையங்கள் அதிகமான செல
விட்டு உற்பத்தி செய்கின்றன என்றால் நிலக்கரி உற்பத்தியாகின்ற
இடத்திலே ஒரு டன்னுக்கு ரூ. 250. அதை தூத்துக்குடிக்குக்
கொண்டுவருவதற்கு ஆகும் செலவு ரூ. 375. டிரான்ஸ்போர்ட்டிங்
சார்ஜ் ரூ. 375. ஆக நான் ஒரு சின்ன வேண்டுகோளை விடுகிறேன்.

[திரு. குமரி அனந்தன்] [1984 அக்டோபர் 11

மத்திய அரசாங்கத்திடம் அதிகாரம் இருக்கின்ற காரணத்தாலே
சிமென்ட் விலையை நிர்ணயித்து, இந்தியா முழுவதும் சிமெண்டி
னுடைய விலை இதுதான் என்று சொல்கிறார்கள். மத்திய அர
சாங்கத்தின் கையிலே அதிகாரம் இருக்கிற காரணத்தாலே இரும்பு
விலையை நிர்ணயித்து இந்தியா முழுவதும் இரும்பினுடைய விலை
இதுதான் என்று நிர்ணயிக்கிறது. நான் கேட்கிறேன். நிலக்கரி
விலையை நிர்ணயித்து, இந்தியா முழுவதும் இதுதான் விலை
என்று சொல்லிவிட்டால், ஒரு மாநிலத்திற்கு மட்டும் போக்கு
வரத்துக்காக செலவு அதிகம் கொடுக்க வேண்டிவராதல்லவா?
ஆகவே உங்களுக்கு விருப்பமான பொருளுக்கு மட்டும் மத்திய
அரசாங்கத்தின் விலை நிர்ணயம் வைத்துக்கொண்டு, மற்றவை
களுக்கு விருப்பம் போல் விட்டு விட்டால் ஒரு ஒழுங்காக, ஒரு
வரன்முறையாக இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது.

அதேபோல்தான் முன்னாலே பேசிய பெருமக்கள் இங்கே
சுட்டிக்காட்டினார்கள். சுங்க வரியைப் பொறுத்தவரையில், வரி
யிலே இவ்வளவு என்று மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்கிறது
ஒரு மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தினுடைய சார்பிலே
அல்லது மத்திய அரசாங்கத்திற்காக வசூலிக்கின்ற வரியிலே 29
சதவீதத்தை வைத்துக்கொண்டு மீதத்தை எல்லாம் கொடுத்து
விடுகிறது. நான் மொத்தமாகச் சொல்கிறேன். மத்திய அரசாங்
கத்தின் சார்பிலே வசூலிக்கின்ற வரிகள் அத்தனையும் வசூலித்து
முடித்துவிட்டு, அந்த மொத்த தொகையில் 29 சதவீதத்தை
வைத்துக்கொண்டு மீதியை எல்லாம் மத்திய அரசாங்கத்திற்கு
கொடுத்து விடுகிறது. ஆக வரியிலே 29 சதவீதம். ஆனால் செல
வில் மாநில அரசாங்கத்திற்கு 51 விழுக்காடு ஏற்பட்டிருக்கிறது.
வரவிலே 29 சதவீதத்தை மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்ள,
செலவிலே மட்டும் 51 சதவீதத்தை மாநில அரசாங்கம் ஏற்றுக்
கொள்ள வேண்டுமென்று சொல்கிறபோது தேவையான மீதப்
பணத்திற்கு மத்திய அரசாங்கத்திடம் கை கட்டி நிற்கவேண்டிய
நிலை உருவாகிறது. அப்படி உருவாகுகின்றபோது, இங்கேயிருக்

(பிற்பகல் 12-30)

கின்ற சிலருக்கு மனம் தேம்புகிறது, மனம் ஏங்குகிறது. என்ன இது
இந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு நாம் தொண்டு செய்ய
வேண்டும் என்று நினைக்கிறபோது, அந்த நேரத்திலே அந்தப்
பக்கமே கைநீட்டவேண்டிய நிலையிலே இருக்கிறதே என்றும்
நினைக்கிறார்கள் இந்தச் சூழ்நிலையை மாற்றியமைப்பது எப்படி
என்பதற்கு, இந்த மத்திய மாநில உறவுகளை பரிசீலிக்க
வேண்டும் என்பதோடு, மாநிலத்திற்கு அதிக அதிகாரம் தேவைப்
படுகிறது என்பதையும் நாம் உணரவேண்டும். சில இடங்களிலே
நாம் பார்க்கிறோம். திறமையானவர்கள் தண்டிக்கப்படு
கிறார்கள். திறமையாக காரியம் நடைபெற்றுக்கொண்டிருக்
கிறது என்று சொன்னால், மேலும் மேலும் உனக்குத் தொழில்



1984 அக்டோபர் 11] [திரு. குமரி அனந்தன்]

எதற்கு என்று கேட்கிறார்கள். மேலும் மேலும் தொழில்
உனக்கு எதற்கு என்று கேட்கிறபோது, இவனுக்கு மனச்சங்
கடம் ஏற்படுகிறது. உதாரணமாக ஊட்டியிலே போட்டோ
பிலிம் தொழிற்சாலை இருக்கிறது. அதை விரிவாக்கம் செய்ய
வேண்டும் என்று சொன்னால் ஏற்கனவே அங்கே Know How
இருக்கிறது, அனுபவப்பட்டவர்கள் இருக்கிறார்கள். நல்ல
சீதோஷ்ண நிலை ஊட்டியில் இருக்கிறது. அந்தத் தொழிற்
சாலையை விஸ்தரிக்கின்றபோது, சில கோடி ரூபாயில் பல
கோடி ரூபாய் மதிப்புள்ள மூலதனத்தை அங்கே கொண்டு வந்து
விடலாம். உற்பத்தியை அங்கே கொண்டுவந்துவிடலாம். ஆனால்
அதே நேரத்தில் என்ன செய்கிறார்கள். இன்னொரு இடம், பின்
தங்கியிருக்கிறது என்ற காரணத்தால், அது அங்கே கொண்டு
போகப்படுகிற நேரத்திலே இங்கே திறமை தண்டிக்கப்படு
கிறது. ஆற்றல் தண்டிக்கப்படுகிறது. இந்தத் திறமையும்
ஆற்றலும் தண்டிக்கப்படுகிற நேரத்தில், மாநிலத்தில் இருப்ப
வர்கள் என்ன நினைக்கிறார்கள். நம்முடைய திறமைக்குக்
கிடைத்த பரிசா இது என்று. மத்திய அரசாங்கம் இப்படிச்
செய்யலாமா என்று சொல்கிறபோது ஒரு பொருமல் ஏற்படு
கிறது. இந்தப் பொருமல் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான்--
பஞ்சாப் போன்ற இடம் இருக்கிறது என்று வையுங்கள், அந்த
பஞ்சாபிலே உற்பத்தி அதிகம். மேலும் மேலும் உற்பத்தி செய்
வதற்கு வழிவகை செய்து கொண்டே போகிறோம் என்று வையுங்
கள். மேலும் மேலும் வளம் கொழித்துக் கொண்டே போகிறது
என்று வையுங்கள், அவர்களும் என்ன நினைக்க வேண்டும்.
இந்தியாவிலே நாமும் ஒரு பகுதி. நாம் உற்பத்தி செய்ததை
வைத்து என் மக்கள் நன்றாக வாழ்ந்ததற்குப்பிறகு இந்தியத்
திருநாட்டுக்கு பொதுவாக ஆக்குவேன் என்று எண்ணாமல்,
இவ்வளவு தூரத்திற்கு நான் வந்துவிட்டேன், இவ்வளவு
செழித்து, சிறந்துவிட்டேன். நான் எதற்கு இனிமேல் மத்திய
அரசாங்கத்திற்கு கட்டுப்படுவது என்று ஒரு மாநில அரசாங்கம்
நினைத்தாலும், இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து. அதனாலே
நான் வளர்ந்துவிட்டேன். கட்டுப்படமாட்டேன் என்ற
எண்ணத்தை ஊட்டுகின்ற அளவிற்கு ஒரு மாநில அரசாங்கம்
போய்விடக்கூடாது. நாம் இங்கேயிருந்தால் வளரவே முடியாது
போலும் என்ற எண்ணத்திற்குப் போய், இந்திய ஒருமைப்பாட்
டிற்கு விரோதமான சிந்தனை வந்துவிடக்கூடாது. இந்த
இரண்டுக்கும் இடையிலே நமக்கு என்னென்ன அதிகாரம் தேவை,
அந்த அதிகாரத்தை எப்படிப் பரவலாக்குவது? பரவலாக்கு
வதற்குள்ள சூழ்நிலையை எப்படி உருவாக்குவது என்பதற்காக
மாநிலங்களுடைய முதலமைச்சர்களையும், யூனியன் பிரதே
சத்தை ஆண்டுகொண்டு இருப்பவர்களையும் அழைத்து பிரதமர்
அவர்கள் பேசி, இந்த இரண்டையும் பேலன்ஸ் செய்கின்ற
வகையில், இந்திய ஒருமைப்பாட்டுக்கு குந்தகமே இல்லாமல்
அந்தந்த மாநிலங்களுடைய வளர்ச்சிக்குத் தடையில்லாமல்—அங்
கங்கள் நன்றாக இருந்தால்தான் தங்கநிகர் உடம்பு நன்றாக

[திரு. குமரி அனந்தன்] [1984 அக்டோபர் 11

இருக்கும் என்பதை மறந்துவிடாமல், ஒவ்வொரு அங்கமும் அதற்
கேற்ப வளர்ச்சி பெற்று, செழித்து, அதற்கேற்ற வலுவோடு
இருந்தால்தான் முழு உடம்பு வலிவோடு இருப்பதைப்போல,—
மாநிலங்கள் செழுமையாகவும், செழிப்பாகவும், வளமாகவும்
வலிவாகவும் இருந்தால்தான் மத்திய அரசு பலமாக இருக்க
முடியும் என்று சொல்கிற சிந்தனையின் அடிப்படையிலே, இந்த
உறவை நிர்ணயிப்பதற்காக எல்லா மாநிலங்களுடைய
முதலமைச்சர்களையும், யூனியன் பிரதேசத்தை ஆளுகின்றவர்
களையும் அழைத்து, பாரதப் பிரதமர் அவர்கள் பேசவேண்டும்
என்று வலியுறுத்துகின்ற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, வலி
யுறுத்தி காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பிலே என்
கருத்தை முடித்து அமைகிறேன்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, இந்த தனி நபர் தீர்மானத்தின் மீது நான்
சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பி
லே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் இந்தத் தீர்மானத்தின் மீது பேசிய கனம்
அங்கத்தினர்கள், மத்திய அரசாங்கம் அதிகமான அதிகாரங்
களைக் குவித்து வைத்திருக்கிறது, ஆகையினாலே ஒன்றுமே
செய்ய முடியவில்லை என்று எல்லாம் சொன்னார்கள். தொழில்
துறையில் வளர்ச்சி இல்லை. கல்வித்துறையில் வளர்ச்சி இல்லை,
குடிநீர்ப்பிரச்சனையில் வளர்ச்சியில்லை என்றெல்லாம் சொன்
னார்கள். இந்த மாநில—மத்திய உறவுகள் பற்றிப் பேசும்
போது, இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் மத்திய அரசு எப்
படி இருக்கவேண்டும் என்பது நம் எல்லோருக்கும் தெரிந்த
உண்மை. இன்றைக்கு நாட்டிலே இருக்கக்கூடிய நிலைமை
என்ன? இன்றைக்கு நாட்டிலே இருக்கக்கூடிய சூழ்நிலை என்ன?
இந்தச் சூழ்நிலையில் மத்திய அரசு எவ்வளவு பலம் பொருந்
தியதாக இருக்க வேண்டும் என்பதையெல்லாம் நாம் அனைவரும்
உணர்ந்திருக்கிறோம். மத்திய அரசு பலமாக இருந்தால்தான்
இந்த நாடு மீண்டும் சின்னாப்பின்னமாக்கப் படாமல், சிதறிக்கப்
படாமல்—அன்றைக்கு 500, 600 சுதேசி மன்னர்கள் இருந்த
போது வெள்ளைக்காரன் நம்மை அடிமைப்படுத்தி நாம் எப்
படி அடக்கப்பட்டு ஒரு வார்த்தை கூட எதிர்த்துப் பேச முடி
யாமல் எந்தவித கல்வியறிவும் இல்லாமல் எப்படி இருந்தோமோ
அப்படி மீண்டும் ஆக்கப்படாமல்—இருக்க முடியும். சுதந்
திரத்தின் பலனை சிறப்பாக நமக்கு உருவாக்கிக் கொடுக்க,
மக்களுடைய வளர்ச்சியிலே ஆக்கமும், ஊக்கமும் தேடித் தரக்
கூடியதுதான் மத்திய அரசு. அது பலமாக இருக்க வேண்டி
யது மிக மிக அவசியம்.



1984 அக்டோபர் 11] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

எத்தனையோ மாநிலச் சட்டமன்றங்களை கவிழ்த்ததாக
இங்கே சொன்னார்கள். காங்கிரஸ் அங்கத்தினர்கள் அதிகமாக
இருந்தாலும் கூட கவிழ்த்துவிடுகிறார்கள் என்று சொன்னார்கள்.
காஷ்மீரைப் பற்றிச் சொன்னார்கள். ஆந்திராவைப் பற்றிச்
சொன்னார்கள். சிக்கிம் பற்றியெல்லாம் கூடப் பேசினார்கள்.
எந்த அரசையும் ஒழித்து விட வேண்டும் என்ற எண்ணம் மத்
திய அரசுக்கு இல்லை. அவர்கள், அவர்களுக்குள்ளாகவே தக
ராறு செய்துக் கொண்டு, அவர்களுக்குள்ளாகவே சண்டை
போட்டுக் கொண்டு, அந்தக் கட்சியிலேயிருந்து வெளியே வரு
கிறார்கள். அப்படி தங்களுடைய கட்சியிலேயிருந்து வெளியே
வருகிறபோது, அங்கேயிருக்கின்ற மத்தியிலே ஆளுகின்ற கட்சி
யாக இருக்கின்ற காங்கிரஸ்காரர்கள், அதைப் பார்த்துக்
கொண்டே சும்மா பார்த்துக்கொண்டே, அதை அரசியலாகப்
பயன்படுத்திக் கொள்ளாமல், கையைக் கட்டிக் கொண்டிருக்
கிற நிலைமை இருந்தால், அது எந்த அரசியல்வாதியும் ஏற்
றுக் கொள்ள முடியாத ஒரு நிலைமையாகும்.

ஆகையினால்தான் எங்கேயெல்லாம் குழப்பங்கள்
வருகிறதோ, சங்கடங்கள் ஏற்படுகிறதோ, மக்களுக்கு இன்னல்
கள் வருகின்றதோ அந்த இடங்களிலேதான், அந்த நேரத்திலே
தான், அந்த அரசாங்கத்தைக் கலைக்க கூடிய ஒரு சூழ்நிலை
ஏற்பட்டுக் கொண்டிருக்கிறதே தவிர வேறல்ல. இன்றைக்கு
அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள 356 வது செக்ஷனை கண்
டிப்பாக மாற்ற வேண்டும், அல்லது அறவே நீக்க வேண்டும்
என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். சில பேர் அப்படிச்
சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் சொல்லவில்லை. அன்
றும் சொல்லவில்லை, இன்றும் சொல்லவில்லை. ஏனென்றால்
அந்த செக்ஷன் இருந்தேயாகவேண்டும்.

காரணம், பிந்தரன்வாலா போன்றவர்கள் மதத்தை வைத்து,
மதத்தின் பெயரால், இந்த நாட்டுக்கே, இந்த நாட்டின் சுதந்
திரத்திற்கே ஆபத்து தேடி தரக் கூடிய நிலைமையை உரு
வாக்கி, பாகிஸ்தானில், இருந்து ஆயுதங்களை வரவழைத்து,
துப்பாக்கிகளை வரவழைத்து, அதுவும் பொற்கோயில் என்று
நாமெல்லாம் புகழ்ந்து போற்றக்கூடிய ஒரு புனித தலமான
கோவிலுக்குள்ளேயே, இந்த நாட்டை காட்டிக் கொடுக்கக் கூடிய
ஒரு நிலைமையை ஏற்படுத்துகிறார்கள் என்றால், அந்தச் சூழ்
நிலையில் சற்றுக் கவனக் குறைவாகக் கூட மத்திய அரசு இருந்
திருக்குமானால், நிச்சயமாக என்ன நடந்திருக்கும் என்பதை
மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் சற்று சிந்தித்துப் பார்க்க
வேண்டும்.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1984 அக்டோபர் 11].

இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் நாட்டிலே யாரையும் அடக்க
முடியாத நிலைமை வந்து விடுமானால், நாட்டிலே அராஜக
சூழ்நிலை ஏற்பட்டு விடுமானால், எங்கே பார்த்தாலும் கொலை,
ரத்தம் என்று ஏற்பட்டு, பழைய காலத்திலேயிருந்த மாதிரி,
மகாத்மா காந்தியடிகள் இருந்த காலத்தில், கல்கத்தாவிலே
நடந்த கோரக் கொலை சம்பவம் மாதிரி நாடு முழுவதும் ஏற்
பட்டால், அதைக் கட்டுப்படுத்துவதற்கு வழிதான் என்ன? எப்
படிக் கட்டுப்படுத்த முடியும்? சட்டசபையைக் கூட்டி,
பார்லியமெண்டைக் கூட்டி, அங்கே தீர்மானம் போட்டு,
எலலோருடைய ஆலோசனைகளையும் கேட்டு, அதற்குப்
பிறகு, கவர்னருடைய ஆட்சியையோ அல்லது ராஷ்டிரபதி
ஆட்சியையோ பிரகடனப்படுத்த வேண்டும் என்றால், அதற்
குள்ளாக, அந்தப் பகுதி மக்கள், தங்கள் உயிரோடு அனைத்
தையும் விடுவதைத் தவிர வேறு வழி இல்லை. அந்தக் காரணத்
தினால்தான், இந்த அரசியல் சட்டத்திலே 356-வது செக்ஷனை
வைத்து, எங்கே குழப்பங்கள் நடந்தாலும், எங்கே கொலை
கொள்ளை நடந்தாலும், மாநில அரசு அதை அடக்க முடி
யாத சூழ்நிலை வருமேயானால், அந்தச் சூழ்நிலையில்தான்,
மத்திய அரசு இந்தச் செக்ஷனை பிரயோகம் செய்து, சம்பந்தப்
பட்ட அரசாங்கத்தைக் கலைக்கக் கூடிய ஒரு நிலைமை இருக்
கிறது என்பதை நாம் அனைவரும் ஒத்துக் கொள்ளத்தான்
வேண்டும்.

பிறகு சொல்கிறார்கள், தொழில் துறையில் இங்கே வளமே
இல்லையே என்று. நம்முடைய தமிழக அரசுக்கும், மத்
திய அரசுக்கும் இருக்கிற உறவைப் பொறுத்த வரையில் மைய
அரசோடு அவர்கள் கை கொடுத்து, கரம் கொடுத்து, ஒற்று
மையோடு நின்று எங்களின் பிரச்னைகளைத் தீருங்கள் என்று
கேட்கிறார்கள். அப்படிக் கேட்டால் படிப்படியாக கிடைக்
கும்.

அதேபோல பிளானிங் கமிஷனுக்கு, காங்கிரஸ் அல்லாத
மாநிலங்களில் உள்ள 4 முதல்வர்களை அழைத்தார்கள், நம்
முடைய பாரதப் பிரதமர் அவர்கள். எனக்கு முன்பு பேசிய
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல், எந்த
நிலையிலே நம்முடைய ஒப்பற்றத் தலைவர், ஏழை பங்காளர்,
கர்ம வீரர் காமராஜ் அவர்கள் நினைத்தார்களோ, அந்த நிலை
யிலே, அவருடைய கனவை நினைவாக்குகின்ற அளவிலே, எதிர்க்
கட்சியிலே இருந்து ஆளக்கூடியவர்களாக இருந்தாலும் கூட
அவர்களுக்கு பெருமதிப்பு கொடுத்து, அழைத்துப் பேசி, உங்
களுக்கு எவ்வளவு பணம் வேண்டும்? உங்களுக்கு என்னென்ன
காரியங்கள் நிறைவேற்றித் தரவேண்டும்? உங்களுக்கு தொழில்
துறைக்கு பணம் வேண்டுமா அல்லது மற்றைய துறைகளுக்கு
பணம் வேண்டுமா என்பதையெல்லாம் கேட்பதற்காகத்தான்
அழைத்துப் பேசினார்கள். ஆனால் அங்கே ஆந்திர முதல்வர்
அவர்கள் வெளிநடப்பு செய்தார்கள். வெளிநடப்புச் செய்



[1984 அக்டோபர் 11] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

தது மாத்திரம் அல்ல, அந்தக் கொள்கைக்கே முரணாக நடந்
துக் கொண்டார்கள். அவர்களைக் கூட அதற்காக கலைக்க
வில்லை. அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த அதாவது
தெலுங்கு தேசக் கட்சியைச் சேர்ந்த 58 பேர். 56 பேர் அவருடைய
தலைமையை விட்டு வெளியேறியிருக்கிறார்கள். வெளியே
வந்து, உங்களோடு நாங்கள் இருக்க முடியாது. தனியாக எங்
களுக்கு அரசு அமைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கி
றார்கள்.

அப்படி அவர்களே, அவர்களுக்கு விரோதமாக வருகிற
போதுதான், எதிர்ப்பாக வருகிறபோதுதான், அங்கேயிருக்கிற
ஒரு பிரதான அரசியல் கட்சி அதைப் பார்த்துக் கொண்டு
சும்மா கைகட்டியிருக்க முடியாது என்ற நிலையில்—அதுவும்
ஒரு பெரும்பான்மையான அளவில் 56 பேர்க்ளுக்கு மேல் அந்
தக் கட்சியை விட்டு வருகிறார்கள், என்றால், அதை வைத்து
அரசியல் நடத்துவதற்கு ஒரு மாற்று முறை ஏதாவது செய்தாக
வேண்டும் என்ற நிலையில் அங்குள்ள காங்கிரஸ் கட்சிக்காரர்கள்,
மௌனமாக இருக்க முடியாது என்ற சூழ்நிலையில், அங்குள்ள
மக்களுக்கு மாற்று அரசு அமைப்பதற்காக, ஒப்பற்ற தலைவர்
பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கு எடுத்துச் சொல்லி,
அங்கே மாற்று அரசை அமைக்க வழி வகை செய்துக் கொடுத்
தார்கள்.

(பிற்பகல் 12–40.)

திரு. தி. கா. நல்லப்பன் : பிரதமர் தெரியாது என்று
சொன்னார்கள். ஆகவே உறுப்பினர் தவறான தகவலைக்
கொடுக்கிறார்களா ?

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தெரியாது என்று சொன்
னாலும் கூட கவர்னர் அதிகாரத்தைப் பயன்படுத்தக்கூடாது
என்று அவர்கள் சொன்னார்கள், அவர்களுக்கு ஓரளவுக்கு
தெரிந்தபிறகு திரு. ராமாராவ் அவர்களையே அழைத்து உங்
களுக்கு மெஜாரிட்டி இருந்தால் அமைத்துக் கொள்ளுங்கள் என்று
சொன்னார்கள். இன்றைக்கு நாம் எவ்வளவோ ஜனநாயகம்
பேசுகிறோம். ஆனால் அன்றைக்கு ஜனதா அரசாங்கத்தில்
என்ன நடந்தது ?

இந்த நாட்டிற்கு ஒரு சமயத்தில் பெரிய செல்வ சீமானின்
மகனான நேருஜி அலகாபாத் ஜெயிலிலிருந்து வெளியே வருகி
றார் வெளியே வந்து ஒரு பல்கலைக் கழகத்திலே பேசிவிட்டு
அவர் வீட்டிற்கு வருகிறார். அவருக்கு மனைவி காபி கொடுக்கி
றார், காபிக்கு சர்க்கரை போதவில்லை என்று அவர் சொல்கி
றார், கமலா நேரு சர்க்கரையை எடுக்க உள்ளே போகிறார்.
உள்ளே போனவுடனே போலீஸ் விலங்கு மாட்டி மீண்டும் ஜெயி

ஒருக்கு நேருவை அழைத்துச் சென்று விட்டார்கள். அப்படி தங்களுடைய சொத்து, சுகம் அவ்வளவையும் விட்டு அர்ப்பணம் செய்துவிட்டு நேரு அவர்களுடைய புதல்வி, உலகமெல்லாம் இன் றைக்குப் போற்றிப் புகழும் உத்தமத் தலைவி, திருமதி இந்திரா காந்தி அவர்கள் இருக்கிறார்கள். நான்கூட சற்று விலகி இருந் தேன், அந்த சமயத்திலேகூட நான் ஒரு இடத்திலும் அவரைப் பற்றி குறைவாக, தப்பாகப் பேசியதே கிடையாது. சிக்மகளூர் தேர்தலுக்கு நான் போய் இருந்தேன். அங்கே ஒரு முன்னாள் அமைச்சர் ஒருவர் பேசினார். இந்திரா காந்திக்கு நீங்கள் போடுகிற ஓட்டு எல்லாம் பாழ், அப்படியே ஓட்டுப் போட்டு நீங்கள் அவரை ஜெயிக்க வைத்தாலும் கூட ஒரு நாள் கூட நாங்கள் பாராளுமன்றத்திலே அவரை உட்கார வைக்கமாட் டோம் என்று சொன்னார். அதுவா ஜனநாயகம்? அதுவா மக்களுக்கு பாதுகாப்புத் தரக்கூடிய அரசு? அப்படிப்பட்ட அரசாங்கம் எல்லாம் மத்தியிலே இருந்தது. அவர்கள் என்ன செய்தார்கள்? நாட்டிலே உள்ள செல்வம் அவ்வளவையும் சின்னாபின்னமாக்கி சீரழித்து விட்டு மீண்டும் இந்திரா காந்தியை இந்த நாட்டிற்குத் தலைவியாக உருவாக்குகிற நிலை மையை கொடுத்தார்கள் மாற்றுக் கட்சியினைச் சேர்ந்தவர் கள்.

மத்திய மாநில உறவும் நம்முடைய மாநில அரசும்தான் இன்றைக்கு உள்ள பிரச்சினை. தமிழக அரசு இன்றைக்கு முறையாக மத்திய அரசை அணுகுகிறார்கள். இன்ன இன்ன காரியங்கள் எங்களுக்கு வேண்டும், நாங்கள் தொழில் துறையில் முன்னேற வேண்டும் என்றும் பணம் கொடுங்கள் என்றும் விவ சாயத் துறையில் முன்னேற பணம் கொடுங்கள் என்றும் நல்ல முறையிலே அணுகிறார்கள். அவ்வாறு அவர்கள் பணியாற்றும் நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள் என்றால் நாம் அதைப் பெருமையோடு ஏற்றுக்கொள்கிறோம்.

ஏதோ அவ்வளவும் மத்திய அரசாங்கத்திற்குப் போகிறது, போகிறது என்று சொல்கிறார்களே, அன்றைக்கு திருச்சிக்கு அரு கிலே பெல் நிறுவனத்தை மத்திய அரசாங்கம் நிறுவியது, இன் றைக்கு அதனால் 10 ஆயிரம் பேர்கள் அங்கே வேலை செய்கி றார்களே, அவர்கள் எல்லாம் யார்? ஆந்திராவிலிருந்து வந்தவர் களா? டெல்லியிலிருந்து வந்தவர்களா? உத்திரப் பிரதேசத்தி லிருந்து வந்தவர்களா? அங்கே இருக்கிறவர்கள் எல்லாம் அந்தப் பகுதியிலே உள்ள மக்கள்தான், நிரந்தரமாக அவர்களுக்கு அங்கே பணி கிடைத்திருக்கிறது.

திரு. கே. சௌந்திரராசன்: அந்த நிறுவனத்திற்கு நிலம் கொடுத்தவர்களுக்கே இன்னும் வேலை கிடைக்கவில்லை என்ற குறையும் அந்த மக்களிடத்திலே ஏராளமாக இருக்கிறது,





திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: வேறு எந்த மாநில
மக்களுக்கும் வேலை கொடுக்கவில்லை, வேறு எந்த மாநில மக்
களுக்காவது கொடுத்தால் கண்டிக்க வேண்டிய விஷயந்தான்,
ஆனால் தமிழ்நாட்டு மக்களுக்குத்தான் வேலை கொடுத்தி
ருக்கிறார்கள். அந்த பெல் நிறுவனம் இன்றைக்கு மத்திய
அரசின் கையில் இருப்பதால் தான் 4,500 கோடி ரூபாய்க்கு
வெளிநாடுகளிலிருந்து இன்றைக்கு ஆர்டர் கிடைத்திருக்கிறது.
அது இன்றைக்கு எவ்வளவு வளர்ந்திருக்கிறது.

ஆகவே தொழில் துறையை அவர்களே எடுத்துக்கொண்டு
அதன் மூலமாக தொழில்களைப் பெருக்குவதற்கு வாய்ப்பை
எடுத்துக்கொண்டால் சாலச்சிறந்ததாக இருக்கும்.

மின்சார உற்பத்தியிலே மதுரை ஜில்லாவிலே சமயநல்லூர்
பக்கத்திலே மின்சாரம் உற்பத்தி செய்யும் ஒரு நிலையம்
இருந்தது. 14 மெகாவாட் உற்பத்தி செய்தது. அது நம்
முடைய கையிலே இருந்த காரணத்தினால் என்ன ஆயிற்று?
அந்த 14 மெகாவாட் இன்றைக்கு இருக்குமானால் மதுரை
நகரத்திற்கு அது சரியாகப் போய் இருக்கும். ஆனால் அதை
முன்னாலே இருந்த அரசாங்கம் விற்று வேறுவிதமான நிலை
யில் அசிங்கப்படுத்தக்கூடிய நிலைமை ஏற்படுத்தப்பட்டது. நெய்
வேலியில் முதல் அனல் மின் நிலையம், இரண்டாவது அனல் மின்
நிலையம், மூன்றாவது அனல் மின்நிலையம் ஆகியவை சேர்ந்து
3,500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய நிலை
மையை மத்திய அரசுதான் ஏற்படுத்தியிருக்கிறது. இந்த நிலைமை
யில் மத்திய அரசை குறை சொல்லிக் கொண்டே இருப்போமா
னால், ஹவ் டு அப்ரோச் என்பது தெரியாமல், ஏதோ மாற்றுக்
கட்சியைச் சேர்ந்தவர்கள் வந்திருக்கிறார்கள், அவர்கள்
தோளோடு தோள்சேர்ந்து நல்ல திட்டங்களுக்கு
இவ்வளவு பணம் கொடுங்கள் என்று கேட்க வேண்டுமே தவிர
அப்படியில்லாமல் எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்கள் முட்டுக்
கட்டை போடக்கூடிய அளவுக்கு நடந்துகொண்டால் நம்மு
டைய நாடும் சமுதாயமும் முன்னேற்றத்தை எட்டாமல் ஈழே
போகக் கூடிய நிலைமைதான் ஏற்படும். இரண்டாவது அனு
மின் நிலையத்திற்குக் கூட 482.42 கோடி ரூபாய் ஒதுக்கி
யிருப்பதாக இன்றைக்குப் பத்திரிகையிலே வந்திருக்கிறது.
இவ்வளவு பணம் மத்திய அரசுதானே ஒதுக்கியது. நம் மாநில
அரசு அவ்வளவு பணம் செலவழிக்காவிட்டாலும் கூட மத்திய
அரசு செலவு செய்து அந்தத் துறையில் மின்சாரம் உற்
பத்திச் செய்து நம்முடைய மாநிலத்திற்கும் பிற மாநிலங்களுக்கும்
கொடுப்பதற்கு ஒரு வழி வகை செய்யுமானால் தொழில் துறை
யில் எப்படி முன்னுக்கு வர வேண்டும், எப்படி இந்த நாட்டை
உயர்த்த வேண்டும் என்ற காரியங்களை ஆற்ற வேண்டும். இன்
றைக்கு உதவி ஜனாதிபதியாக இருக்கக்கூடிய நம்முடைய மதிப்
பிற்குரிய திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இருந்த காலத்தில்

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1984 அக்டோபர் 11

அன்றைக்கு தமிழ்நாடு தொழில் துறையில் 3ஆவது இடத்தில்
இருந்தது. இன்றைக்கு 10ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டு
இருக்கிறோம். அதற்கு எல்லாம் காரணம் என்ன ? அரசியல்
வாதிகள்தான். அரசியல்வாதிகளாகிய நாம் ஒழுங்காக
நடந்து கொண்டால் அரசியல்வாதிகள் மத்திய அரசை அணுகி
நமக்கு என்ன என்ன செலவுகள், என்று எடுத்துச் சொல்லி
அதற்கு பணம் வாங்கி காரியத்தை ஆற்றினால் இந்த
அமைச்சரவையில் இருப்பவர்களாலேயே நாம் முதலிடத்தை
பிடிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். ஆனால் அதற்கு மாறாக
நாம் எதையோ சொல்லி நம் நாட்டினுடைய முன்னேற்றத்தை
கெடுக்கக்கூடிய அளவில் நடந்து கொள்வோமானால் அது சரி
யாகாது, நியாயமாகாது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் தான் தண்ணீர் பிரச்சினை கூட, என்னைக்
கேட்டால் தண்ணீர் பிரச்சினை கூட மைய அரசின் பொறுப்பில்
தான் இருக்க வேண்டும். அப்படி மைய அரசின் பொறுப்பில்
இருந்தால் தான் நல்லது. இன்றைக்கு காவிரி பிரச்சினையில்
நாம் தண்ணீர் கேட்கிறோம். அவர்கள் விட முடியாது என்று
தகராறு செய்துகொண்டு இருக்கிறார்கள். அதோடு கங்கை-
காவேரி இணைப்பு திட்டத்திற்கு இன்றைக்கு அவர்களுடைய
பொறுப்பில் இருந்தால் நிச்சயமாக அவர்கள் அதை செய்து
தான் தீரவேண்டும். அதில் உங்களுடைய முறை, நீங்கள்
அணுகுகிற முறை மாண்புமிகு முதலமைச்சர் நடத்தை சிறப்பாக
இருக்கிற காரணத்தால், நம்முடைய அமைச்சருடைய நடத்தை
சிறப்பாக இருக்கிற காரணத்தால் அதை கூட நம்முடைய பாரத
பிரதமர் தள்ளிவிடாமல் அந்த இணைப்பிற்கு அவர்கள் நமகு
பாதுகாப்பு கொடுத்து பணம் ஒதுக்கியிருப்பார்கள் என்பதை நான்
இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களை மறு
படியும் அது இது என்று சொல்லிக்கொண்டு இருக்காமல் நாம்
அவருடைய கரத்தை பலப்படுத்தி நமக்கு இன்னும் பல சலுகை
களை இன்னும் சில அதிகாரங்கள் கேட்கலாம் அது வேண்டாம்
என்று சொல்லவில்லை. அப்படி அதிகாரங்களை கேட்டால்
கூட அவருடைய நிலைமையை பார்த்து நம்முடைய மாநிலத்
திற்கு என்ன என்ன வேண்டும் என்பதில் நாம் சற்று கண்ணும்
கருத்துமாக இருக்க வேண்டும். இன்றைக்கு பலவிதமான என்.
ஆர். ஈ. பி. திட்டம், செல்ப் சபிஸியன்ஸி திட்டம், பெண்
களுக்கான திட்டம் இன்னும் பல துறைகளுக்கு நாம் ஒதுக்கக்
கூடிய பணத்திலிருந்து அவர்கள் அதிகப்படியான பணத்தை நமக்
குத் தருகிறார்கள். நாம் என். ஆர் ஈ பி. திட்டத்தில் 50
ஆயிரம் ரூபாய்க்கு ஒரு திட்டம் போட்டால் அதிலே பாதி
பணத்தை மத்திய அரசு கொடுக்கிறது. செல்ப் சபிசியன்ஸி
திட்டத்திலும் பாதி பணத்தை மத்திய அரசு கொடுக்கிறது.
அதேபோல் குழந்தைகள் நலம் பெண்கள் நலத்திற்கு பாதிக்கு
மேற்பட்ட தொகையை அவர்கள் கொடுக்கிறார்கள். இன்னும்



1984 அக்டோபர் 11] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

சில திட்டங்களில் முழுமையாகக் கூட மத்திய அரசு கொடுக்கி
றது. ஆகையால் அவர்களை அணுகி நாம் பணம் வாங்குவதில்
சற்று கவனம் செலுத்த வேண்டுமே தவிர....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்திய பிரதமர்
இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் முன் வந்து அதிகாரங்
களையும் உரிமைகளையும் நமக்குத்தந்தால் வாங்கிக்
கொள்ளலாமே·

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி அம்மையார்
அவர்கள் பேசும்போது என். ஆர். ஈ. பி. திட்டத்திற்கு மத்திய
அரசு நிதி கொடுக்கிறது என்று சொன்னார்கள். ஒத்துக்கொள்கி
றேன். ஆனால் தன்னிறைவுத் திட்டத்திற்கு மத்திய அரசு
நிதி கொடுக்கிறது என்று சொல்கிறார்கள். அது அல்ல. தன்
னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரை முழுக்க முழுக்க நம்
முடைய மாநில அரசிலிருந்து தான் செய்யப்படுகின்ற ஒரு திட்ட
மாக இருக்கிறது என்பதை நான் அவர்களுக்கு எடுத்துக் கூற
ஆசைப்படுகிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அக்கா பொன்னம்மா
அவர்கள் பேசும்போது நமது மாநிலம் வந்து இன்றைக்கு
தொழில் துறையில் 3ஆவது இடத்திலிருந்து 10-வது இடத்திற்கு
போய்விட்டது என்று சொன்னார்கள். அதற்கு காரணம் இந்த
மாநிலத்தை இப்போது ஆண்டு கொண்டிருக்கிற அரசாங்கம்தான்
என்பதை உறுப்பினர்கள் அவர்கள் அறிவிக்கிறார்களா ?

(பிற்பகல் 12—50)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு மாற்றுத்
தலைவரவர்களே, மாநில அரசுகள் மத்திய அரசிடம் முறைப்
படி அணுகி நிவர்த்தி செய்து கொள்ள வேண்டுமென்ற முறை
யில்தான் நான் சொல்கிறேன். அவ்வாறு கேட்டு மத்திய அரசு
அதைச் செய்வதற்கு வழி விட வேண்டும். ஆனால் அவ்வாறு
செய்ய விடாமல் நாம் தடுக்கிறோம். இப்படியே பேசிக்
கொண்டே இருக்கிறோம். நாமெல்லாம் ஜனநாயக முறைப்
படி வந்திருக்கிறோம். மக்களின் பிரதிநிதிகளாக வந்திருக்கி
றோம். அதில் யார் மெஜாரிட்டியாக வந்திருக்கிறார்களோ
அவர்கள் அரசை அமைக்கிறார்கள். அந்த அரசு மத்திய அர
சாங்கத்தை அணுக வேண்டும். மத்திய அரசினிடத்திலேயிருந்து
எப்படிப் பணத்தைக் கறக்க வேண்டும் என்ற பாடத்தைக் கற்றுக்
கொள்ள வேண்டும். அப்படிக் கற்றுக் கொள்ளவில்லை என்
றால் அதற்கு விமோசனம் கிடையாது. (குறுக்கீடு) கல்லை
விட்டு எரிவது, நெருப்பை வைத்துக் கொளுத்துவது என்று இருந்

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1984 அக்டோபர் 1]

தால் அது எப்படிச் சரியாக இருக்க முடியும்? எந்த முறையில்
செய்ய வேண்டும் என்பது குறித்து நம்முடைய முதல்வரவர்கள்
நன்றாகப் பாடம் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்; நிச்சயமாக
அவர்கள் வாங்குவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கி
றது.

மத்திய அரசினிடத்திலே அதிக அதிகாரங்கள் குவிந்திருக்கின்
றன என்று அங்கத்தினர்கள் சிலர் சொன்னார்கள். அப்படிக்
குவிந்திருப்பதால்தான் ஓரளவிற்கு நல்லபடியாக நடந்து
கொண்டிருக்கிறது. அன்றைக்கு ஜனதா அரசாங்கத்தில் நடந்த
கொடுமைகளும், அக்கிரமங்களும் என்றைக்காவது காங்கிரஸ்
ஆட்சியில் முப்பதாண்டுக் காலத்திலே எங்கேயாவது நடந்தி
ருக்கிறதா? அவ்வாறு நடந்திருப்பதாக யாராவது சொல்ல
முடியுமா? கோழி முட்டை திருடினார்கள் என்று கேஸ் போட்
டார்கள். என்னை அம்மாதிரி கேசில் போட்டால் விட்டுவிட
லாம். ஒருவேளை நான் பல அட்டூழியங்கள் கூட செய்திருக்க
லாம். ஆனால் பெரிய பாரம்பரியத்திலே வந்தவர், நேருஜி
யின் மகள், மோதிலாலின் பேத்தி, உலகம் போற்றும் உத்தமி,
அவர்கள் மீது கோழி முட்டை திருடினார் என்று கேஸ் போட்
டார்கள் என்று சொன்னால், அவர்கள் இன்றைக்கு ஜனநாயகம்
பற்றிப் பேசுகிறார்கள் என்று சொன்னால் அதை எங்களால்
புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே, மாநில அரசு, மத்திய
அரசை அணுகி இன்னும் எத்தனை அதிகாரங்களை வேண்டு
மானாலும் பெற்றுக் கொள்ளட்டும். என்னைக் கேட்டால்,
போலீசைக் கூட—இன்னும் சொல்லப்போனால் தண்ணீர் மின்
சாரம் கூட அவர்கள் பொறுப்பில் இருந்தால் நல்லது. கர்
நாடகத்திற்கும், மகாராஷ்டிரத்திற்கும் உள்ள நிலப் பிரச்னை
களைத் தீர்த்திருப்பார்கள். கடலும், கப்பலும் எங்களுக்கு
வேண்டும், சுங்க வரியில் 40 சதவிதம் இங்கேயும், 60 சதவிதம்
அங்கேயும் போகிறதே என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம்...

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்
வர்களே, அம்மையார் அவர்கள், மாநில அரசே வேண்டாம்,
மத்திய அரசு மட்டும் இருந்தால் போதும் என்று சொல்வதைப்
போல அவர்களுடைய பேச்சு இருக்கிறது. கிருஷ்ணா நதித்
திட்டத்தைப் பொறுத்தவரையில் என். டி. ஆர். அவர்கள்—
பக்கத்து மாநிலங்கள் ஒத்துழைத்த காரணத்தினால் பிரதமரும்
கலந்து கொள்ள வேண்டிய அவசியம் இருந்தது. கர்நாடகத்தி
லிருந்து காவிரி நீர் இதுவரையில் வராமல் இருப்பதால் எவ்வளவு
சங்கடங்கள் இருக்கின்றன என்பதை நாம் அறிவோம். இந்த
அடிப்படையில் ஏதோ ஒன்றைச் சொல்வது என்பதைவிட, அவர்
ள் எதைச் சொல்ல வருகிறார்கள் என்பதைத் தெளிவாகச்
சால்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.



1984 அக்டோபர் 11]

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு மாற்றுத்
தலைவரவர்களே, அருமைத் தம்பி சமரசம் அவர்கள் நன்கு
புரிந்து கொண்டிருப்பார்கள். நான் கொஞ்சம் படித்தவள்.
ஆனால் அவர்கள் நன்றாகப் புரிந்து கொள்வார்கள் என்று
நினைக்கிறேன். அப்படிப்பட்ட தம்பியே, புரிந்து கொள்ள
வில்லை என்றால் என்ன செய்வது?

நான் சொல்வது, இது எல்லாம் அவர்கள் பொறுப்பிலே
இருந்தால் சிறு தகராறுகள் கூட எழாமல் பார்த்துக்கொள்
வதற்கான வாய்ப்பு இருக்கிறது. அப்படியில்லாமல் கப்பலும்
வேண்டும், தண்ணீரும் நம்முடைய அதிகாரத்திற்கு வர
வேண்டும் என்று கேட்டால் இது நடக்குமா? ஏரோப்பிளேன்
நம்முடைய பொறுப்பிலே இருக்க வேண்டுமென்று நினைத்தால்
அது நடக்குமா? அதிகப் பணத்தையும், அதிகாரங்களையும்
வேண்டுமானால் கேட்கலாமே தவிர, அதை விட்டு விட்டு இதை
யெல்லாம் கேட்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

ஒரு சின்ன டிஸ்ப்யூட், அதாவது மகாராஷ்டிராவிற்கும்
கர்நாடகத்திற்கும் இடையில் பல முறை பேசியும் நிலத் தகரா
றைத் தீர்க்க முடியவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை வரக்
கூடாது. ஆகவே, இ வகளெல்லாம் மத்திய அரசிடம்
இருப்பதே சாலச் சிறந்ததாக இருக்கும். எந்த அளவிற்கு
அவர்களிடத்திலேயிருந்து வாங்குகிறார்களோ — முன்னவரவர்
கள் சொன்னதைப் போல, அந்த அளவிற்கு வாங்கி ஆட்சி
நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை
இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு மாற்றுத் தலைவு
ரவர்களே, 1980-வது ஆண்டு ஜூலை மாதம் கொண்டுவரப்
பட்ட 'தனி நபர் தீர்மானத்தை — மாநிலங்களுக்கு அதிக
அதிகாரம் வேண்டுமென்று கூறப்படும் ஒரு தீர்மானத்தை
யொட்டி ஏறத்தாழ இந்த ஆட்சி தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு
கொண்டு வரப்பட்ட ஒரு தீர்மானம், முடியும் கட்டத்திலே
இன்றைக்கு இநத தீர்மானம் மீண்டும் இங்கே கொண்டு வரப்
பட்டிருக்கிறது. நான் இங்கே குறிப்பிட விரும்புவதெல்லாம்
இந்தக் கடந்த நான்காண்டுக் காலமாகக் கிடப்பிலே போடப்பட்டு,
தூசுதட்டி மீண்டும் அது எழுந்து நடமாடுகின்ற சூழ்நிலை
உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய சூழ்நிலையில் வரப்
போகும் தேர்தலைக் கருதி இதை மீண்டும் நடமாட விட்டிருக்
கிறார்களோ என்ற அச்சம் இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்
களுக்கு மட்டுமல்ல, நாட்டிலே இருக்கின்ற மக்களுக்கும் பரவ
லாக இருக்கிறது.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்கின்ற சூழ்நிலை கடந்த பல ஆண்டுக்காலம் நாட்டு மக்களிடத்திலே எழுந்து, இந்த நாட்டிலே இருக்கின்ற அத்தனை அரசியல் கட்சிகளும் அதற்கான முழக்கங்களை இட்டு தங்களுடைய தேர்தல் பிரகடனங்களிலே அவற்றை எல்லாம் எடுத்துச் சொல்லி, கடைசியாக இந்தத் தீர்மானம் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களால் கொண்டு வரப்பட்டு நான்காண்டுகளுக்குப் பின்னாலே இன்றையதினம் இந்தச் சட்டமன்றம் முடிகின்ற சூழ்நிலையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொன்னால் நான் உங்களிடத்திலே மெத்தப் பணிவோடு ஒன்றை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த நாட்டிலே இருக்கின்ற மக்கள் எல்லாம் இந்தத் தீர்மானத்தின் மீது மிகுந்த அக்கறையோடு இருக்கிறார்கள். ஆனால் நீங்கள் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றப் போகிறீர்களா அல்லது இப்படிப் பேசியே காலத்தைத் தள்ளிவிட்டு இந்தச் சட்டமன்றம் முடிந்ததற்குப் பின்னாலே இதை விட்டுவிடப் போகிறீர்களா என்ற அளவுககு நாட்டிலே ஐயப்பாடு இருக்கின்றது. ஏனென்றால் இந்தச் சர்க்காருக்கு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் நம்பிக்கை இல்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். இது ஒன்றும் 1980-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டு கிடப்பிலே போடப்பட்டு இடையிலே எடுக்காமலேயே இருக்கின்ற பிரச்சினை அல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அவையிலே நீண்ட நாட்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களும் இருந்து பார்த்துக் கொண்டிருக்கின்ற நிலைமையில்தான் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றது. இது அரசு தீர்மானம் அல்ல. தனியார் தீர்மானம். ஒரே நாளிலே இன்றைக்கே வேண்டுமானாலும் கூட சட்ட முன்வடிவு மாதிரி எல்லோருக்கும் ஐந்தைந்து நிமிடங்கள் கொடுத்து, பேசி முடித்து விடலாம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்களே மூன்று நாட்கள் பேசுவதற்கு நாம் அனுமதித்தோம். இதைப்பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் ஒவ்வொரு உறுப்பினரும் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தி வருகிறோம். ஒவ்வொரு தனி நபர் நாளிலேயும் இதை எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் மானியக் கோரிக்கைகளை விவாதிக்கின்றபோதும், பட்ஜெட் சமயத்திலும் நான் — அஃபியஷில் டே என்பது கிடையாது. அதற்குப் பிறகு வருகின்ற கூட்ட நாட்களிலேதான் தனி நபர் நாள் என்பது உண்டு. ஆனால் தனி நபர் நாள் என்று எப்போதெல்லாம் எடுத்துக்கொண்டோமோ அந்த நாட்களை எல்லாம் இதற்கு பயன்படுத்தி வந்திருக்கிறோம். இதிலே எல்லா கட்சிகளைச் சேர்ந்தவர்களும் விரிவாகவும் பேசி இருக்கிறார்கள் ; விளக்கமாகவும் பேசி இருக்கிறார்கள் ; தெளிவாகவும் பேசி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்திரராசன் அவர்களும் அந்தப் பக்கத்திலே போய் உட்கார்ந்த பிறகாவது





அவர் விரிவாகப் பேசுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைக்கட்டுமே என்று கருதி இவ்வளவு நாட்கள் கழித்து வந்ததற்காகவும் அவர்கள் மகிழ்ச்சி கொள்வார்கள் என்று கருதுகிறேன். எனவே இந்தப் பிரச்சினையைப் பற்றி மட்டும் பேசுவதுதான் நல்லது. நாங்கள் பல தடவை சொல்லியிருக்கிறோம். மாநில சுயாட்சியைப் பொறுத்த வரையில் ஆளும் கட்சிக்கு எவ்வளவு அக்கறையும் ஆர்வமும் உண்டு என்பதைப் பல வகைகளிலும் விரிவாகவும் விளக்கமாகவும் பேசி இருக்கிறோம்.

ஆனால் ஆளும் கட்சியை ஒதுக்கிவிட்டு, இவர்கள் மாநில சுயாட்சிக்கு விரோதமாக இருக்கிறார்கள் என்று தெரிவித்து விட்டு எந்த மாநில சுயாட்சியை யாரால் வாங்க முடியும்? எனவே இருக்கின்ற அத்தனைபேரும் சேர்ந்து இந்தக் கருத்திலே ஒன்றாக இருக்கிறோம் என்ற உணர்வை வெளியிடுகின்ற வகையில் ஒரு உணர்வை எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து சொல்லுகின்ற வகையில் உதவி செய்தால் தான் நல்லதே தவிர, பிரித்துப் பிரித்து வைத்து நான் உன்னைச் சந்தேகிக்கிறேன், நீ சரியாக இல்லை, நீ சரியாக இல்லை என்று சொன்னால் அது சரியாக இருக்காது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாநில சுயாட்சிக்கான காரண, காரிய விளக்கங்களைச் சொல்லி மத்திய அரசு, மாநில அரசு என்பனவற்றைப் பொறுத்த வரையில் இருக்கின்ற நிலைமைகளைப் பற்றி மற்ற உறுப்பினர்கள் எல்லாம் சொல்கின்ற அளவுக்கு வந்தால் நல்லது. மாச்சரியங்களை நாம் தனியாக வைத்துக்கொள்ளலாம்.

திரு. கே. சௌந்திரராஜன் : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கு நன்றி, நான் பேசுகின்ற வகையில் சூழ்நிலை உருவாக வேண்டும் என்பதற்காக அவர்கள் பொறுத்திருந்தார்கள் என்ற உணர்வை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால் இந்தத் தீர்மானத்தைத் தயவு செய்து உடனடியாக நிறைவேற்றி மக்களுடைய எண்ணத்தை மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லி, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் பெறவேண்டும். மாநில சர்க்கார் ஒரு நகராட்சி போன்ற அளவுக்கு ஆகின்ற சூழ்நிலைகள் ஏற்பட்டு வருகின்ற நிலைமையில் மாநில சர்க்கார் சுயமரியாதை உணர்வோடும், தனியான உணர்வோடும் பங்கு பெறுகின்ற வகையில் நடைமுறை வருகின்ற அளவுக்கு ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும் என்று இங்கே இருக்கின்ற மாண்புமிகு ஆளும் கட்சி உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

(திரு. கே. சௌந்திரராசன்) [1984 அக்டோபர் 11

இந்தியாவைப் பொறுத்த வரையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு முன்னால் இந்தியா என்ற ஒரு நாடே கிடையாது என்பதும், அது இன்றையதினம் ஒரு மிகப்பெரிய துணைக்கண்டமாகத்தான் இருக்கின்றது என்பதும் பற்றி இங்கே மட்டுமல்ல, பாராளுமன்றத்திலேயும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தியா பல்வேறு மொழிகளைக் கொண்ட பல்வேறு இனங்களைக் கொண்ட ஒரு நாடு என்பதும், இதில் இருக்கின்ற அத்தனை பேரும் இணைந்திருப்பதும், அல்லது ஒருமுகமாக இருப்பது என்பதைப் பொறுத்தவரையில் இப்போது எந்த அளவிற்குச் சூழ்நிலை இருக்கின்றது என்பதை நாம் அறிவோம். இப்படிப் பட்ட நிலைமையிலிருந்து இந்தியாவைக் காப்பாற்ற வேண்டும் என்றால் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குவதன் மூலமாக, அவரவர்களுடைய பிரச்சினைகளை அவரவர்கள் தீர்த்துக்கொள்வதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குவதன் மூலமாகத்தான் இந்தியாவை ஒருமுகப்படுத்த முடியும்; ஒற்றுமைப் படுத்த முடியும் என்ற உணர்வை வெளிப்படுத்துகின்ற வகையில் இந்தத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன்.

(பிற்பகல் 1-00)

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் கடைசிக் காலத்திலே, அவருடைய இறுதிக் கடிதத்திலே கூட எழுதியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்திலே முதல்வராக இருந்த நேரத்தில் 3 முக்கியமான தீர்மானங்களை இந்தச் சட்டமன்றத்திலே நிறைவேற்றியிருக்கிறார்கள். 3 தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டு அவர்கள் எழுதுகிற கடைசி கடிதத்திலே மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்கள்., தம்பி உனக்கு வேலை நிரம்ப இருக்கிறது, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும், நம்மிடத்திலே சட்டமன்றத்திலே வலு இருந்தாலும் நாட்டு மக்களை அதற்குப் பக்குவப்படுத்த வேண்டுமென்கிற வகையிலே அறிஞர் அண்ணா அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அண்ணாவின் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கிற நாம் இதற்கென எந்த வகையிலே முயற்சியினை மேற்கொண்டிருக்கிறோம் என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1984 அக்டோபர் 11) (திரு. கே. சௌந்திரராசன்)

இன்றையதினம் எனக்கு முன்னாலே பேசிய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் மாண்புமிகு பொன்னம்மாள் அவர்கள் குறிப்பிட்டார்கள்., அத்தனை அதிகாரங்களையும் அங்கே டெல்லியிடம் கொடுத்து விட்டால் நாம் மகிழ்ச்சியோடு இருக்கலாம் என்கிற வகையிலே. காவல் துறையைக் கொடுத்து விட வேண்டும் தண்ணீரைக் கொடுத்த விட வேண்டும், கல்வியைக் கொடுத்து விட வேண்டும் மின்சாரத்தைக் கொடுத்து விட வேண்டும் என்றார். இப்படி ஒவ்வொன்றாகக் கொடுத்து விட்டால் மிச்சம் எதை வைத்துக் கொண்டு இந்த ஆட்சியை நடத்துவது அல்லது எதை வைத்துக் கொண்டு இந்தச் சர்க்கரை நடத்துவது என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அந்த அம்மையார் கருது கிறார் என்று என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. இன்று மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்பதே ஏதோ மாநில சர்க்கார்கள் அதிக அதிகாரம் பெற்று, மத்திய சர்க்கார் அதிகாரம் இல்லாத ஒரு சர்க்காராக மாற வேண்டு மென்ற எண்ணத்தினாலே அல்ல. மாநில சர்க்கார்கள் வலிவோடு இருந்தால்தான் மத்திய சர்க்கார் வலிவோடு இருக்க முடியும். அஸ்திவாரம் வலுவோடு இருந்தால்தான் மேலே இருக்கிற கட்டிடம் வலுவோடு இருக்க முடியும். அந்த வகையிலே இந்த நாட்டிலே இருக்கிற ஜனநாயக சக்திகளுக்கு அச்சாணியாக இருப்பது மாநில சர்க்கார்கள்தான். அந்தச் சர்க்கார்கள் உறுதியான சர்க்காராக இருந்தால்தான், திறமையான சர்க்காராக இருந்தால்தான் ஆட்சி செலுத்துவதிலே நேர்மையான சர்க்காராக இருக்கிற அளவுக்கு சூழ்நிலைகள் இருந்தால்தான் இன்றையதினம் நாட்டு மக்களுக்கு அது பயன் படக் கூடிய .சர்க்காராக இருக்க முடியும். அதை விட்டுவிட்டு அவர்களிடத்திலே இருக்கிற அதிகாரங்கள் அத்தனையையும் எடுத்துக் கொண்டு விட்டு நமது சர்க்கார் இயங்க வேண்டுமென்று சொன்னால் அது எந்த வகையிலே பொருத்தமாக இருக்கும் என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்திய அரசியல் நிர்ணய சபை கூடி இந்திய அரசியலமைப்பு சட்டம் உருவானதற்குப் பின்னாலே எத்தனை முறை அந்தஅரசியல் சட்டத்திலே திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன? மெல்ல, மெல்ல மாநிலங்களுக்கு இருக்கிற அதிகாரங்களை எப்படி மைய அரசு கபளீகரம் செய்திருக்கிறது என்பதையும் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் மட்டும் அல்ல, அதற்கு முன்னாலே 1974-லே, இதே மாமன்றத்திலே மாநில சுயாட்சித் தீர்மானம் வந்த நேரத்திலே பேசியிருக்கிறார்கள் பல்வேறு முறைகளிலே பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன என்றாலும் டெல்லியிலே இருக்கிற அரசு இன்றையதினம் கேளாக் காதினராக, ஏதோ மாநில சர்க்கார் தீர்மானம் போடட்டும், அதனாலே, கவலை இல்லையென்ற அளவுக்குத் தன்னை வலுப் படுத்திக் கொண்டு, மாநில சர்க்கார்களை பலவீனப்படுத்து

வதிலேதான் இருக்கிறது. மக்களுக்கு மக்களுடைய உணர்வுகளுக்கு நியாயமான முறையிலே மரியாதை கொடுத்து, மத்திய சர்க்கார் மாநில சர்க்கார்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொள்கிறார்களா என்று கேட்டால் நிச்சயமாகக் கிடையாது. இன்னும் சொல்லப் போனால் மத்தியப் பேரரசு, இந்த நாட்டிலே ஜனநாயகத்தினுடைய அடிப்படையிலே மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளைக் கொஞ்சம்கூட தயவுதாட்சண்யமின்றி நிர்தாட்சண்யமாக 70 முறை கலைத்திருக்கிறார்கள் என்பதை வெட்கத்தோடு நாம் ஒப்புக் கொண்டாக வேண்டும். காரணம் நாடாளுமன்றம் மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாலே உருவாக்கப்படுகிறது. அதைப் போலத்தான் சட்ட மன்றமும் மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாலே உருவாக்கப்படுகிறது. அப்படி இருந்தும், தேவையான அளவுக்கு சட்ட மன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை ஒரு ஆட்சிக்கு இருந்தும், பல முறை சட்டமன்றங்கள் கலைக்கப்பட்டிருக்கின்றன. இதற்குப் பல்வேறு எடுத்துக் காட்டுக்களை கொடுக்க முடியும். அண்மையிலே பக்கத்து மாநிலத்திலே கூடப் பார்த்தோம். இந்தத் தமிழ்நாட்டிற்குக் காவிரியிலிருந்து நீர் கிடைப்பதிலே பல்வேறு பிரச்னைகள் இருந்தாலும் எப்படியாவது கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் வரவேண்டுமென்று முனைந்து செயல்பட்டபோது தண்ணீரைத் தருகிறேன் என்று சொன்ன மதிப்பிற்குரிய ஆந்திரத்தினுடைய முதல்வர் என்.டி.ஆர். அவர்கள் ஆட்சி வலுவான ஆட்சியாக இருந்தது. அந்த ஆட்சியிலே தேவைக்கு மேலாக உறுப்பினர்கள் இருந்தார்கள். இருந்தும் டெல்லி சர்க்காராலே அனுப்பப்பட்ட ஒரு கவர்னர் ராம் லால் என்கிறவர் அந்த ஆட்சியைக் கொஞ்சம்கூட எண்ணிப் பார்க்காமல், நியாய உணர்வுக்குக் கட்டுப்பாடமல், அதுவும் மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி என்று எண்ணிப் பார்க்காமல், தயவுதாட்சண்யமின்றி, நிர்தாட்சண்யமாக அந்த ஆட்சியை எப்படிக் கலைத்தார்கள் என்பதை நாட்டிலே இருக்கிற மக்கள் தெளிவாக அறிவார்கள். அதற்குப் பின்னாலே அங்கே எப்படிப்பட்டச் சம்பவங்கள் நடைபெற்றன என்பதை பார்த்து மக்கள் ஆர்த்தெழுந்தார்கள். இன்னும் சொல்லப் போனால், மனிதத்தன்மை கூட இல்லாமல் அன்றையதினம் ஆந்திரத்தினுடைய முதல்வர் அமெரிக்காவுக்குச் சென்று இருதய சிகிச்சையை முடித்துக் கொண்டு தாயகம் வந்த உடனே, 30 மணிநேரத்திற்குள்ளே ஆட்சியைக் கலைத்திருக்கிறார்கள். எப்படிப்பட்ட சூழ்நிலை ? சாதாரணமாக சராசரி மனிதன் கூட ஒருவர் நோயாளியாக இருக்கிறார் என்றால் அவரைப் பற்றி பேசுவதைக் குறைத்துக் கொள்கிறான். ஒருவருக்கு நோய் இருக்கிறதென்றால் அவரைப் பற்றி பரிதாபப்படுகிறான், அனுதாபப்படுகிறான், இவைகளையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு, கொஞ்சம் கூட இருதயமில்லாமல், இருதய ஆபரேஷன் செய்துக் கொண்டு வந்த என். டி. இராமராவ் அவர்கள் ஆட்சியை, அவரிடம் பலமிருந்தாலும் கூட, அங்கேயொரு எட்டப்பனை உருவாக்கி அந்த ஆட்சியை கலைத்திருக்கிறார்கள் என்றால்,





இதற்கு மத்திய அரசினுடைய சட்டம் பயன்படுகிறதென்று சொன்னால் நிலைமையை எண்ணிப் பார்க்கவேண்டும் (குறுக்கீடு) நான் அங்கேயிருக்கிற எட்டப்பனைப் பற்றி குறிப்பிடுகிறேன் இங்கே இருப்பவர்களைப் பற்றி நான் சொல்லவில்லை. அங்கே பாஸ்கரராவ் என்று புதிய எட்டப்பனை உருவாக்கி அந்த ஆட்சியைக் கலைத்தார்கள். கலைத்ததற்குப் பின்னாலே இந்தியாவிலே இருக்கிற அத்தனை எதிர்க்கட்சிகளும் ஒன்றாக இணைந்து மிகப் பெரிய போராட்டம் மக்களால் துவக்கப்பட்டு, ஆந்திராவிலிருந்து காஷ்மீர் வரையில் சென்று அந்தப் போராட்டத்தை நடத்தி, இறுதியில் அந்தச் சர்க்கார் மக்களுடைய தீர்ப்பிற்கு தலைவணங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

திருமதி டி. யசோதா: மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே பேசுகிற போது ஆந்திராவில் இருக்கிற எட்டப்பனைப் பற்றி குறிப்பிடுகிறேன். இங்கே இருக்கிற எட்டப்பர்களைப்பற்றி குறிப்பிடவில்லை என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்த எட்டப்பர்கள் யார் என்று சபைக்கு தெளிவுபடுத்தினால் நன்றாக இருக்கும்.

திரு கே. சௌந்திரராசன் : சந்தர்ப்பம் வருகிறபோது அம்மையார் அவர்களுக்கு தெளிவுபடுத்துவோம்.

டாக்டர் கே. சமரசம் : மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே பேசுகின்றபோது மத்திய, மாநில அரசுகளைப் பற்றி, என். டி. ஆர். பற்றியெல்லாம் பேசினார்கள். நல்ல தகவல்களைச் சொன்னார்கள். கையெழுத்துப் போட்டு எம். எல். ஏக்கள் இங்கே இருக்கிறோம். கையெழுத்துப் போட்ட பிறகு அந்தப் பக்கம் போய் விடுகிறோம்; திரும்பவும் இந்தப் பக்கம் வருகிறோம். அங்கே நடந்தது சட்டமன்ற உறுப்பினர்களுக்குள் ஏற்பட்ட விவகாரம்: அதில் மத்திய அரசு தலையிடுகின்ற நிலையில்லை என்ற அளவிற்கு நிலைமை வந்திருக்கிறது. ஆகவே அதையெல்லாம் இங்கே பேசவேண்டிய அவசியமில்லையென்றே கருதுகிறேன்.

[1984 அக்டோபர்

திரு சே. சௌந்திரராசன் : சமரசம் அவர்கள் பேசியதை இங்கே இருப்பவர்கள் கூட ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். நான் குறிப்பிட விரும்பியது, அங்கேயிருந்த ராம்லால் டெல்லியின் ஏஜண்ட். அதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். டெல்லியின் கண்ணசைவு இல்லாமல் அங்கே எதுவும் நடக்காது. இன்றையதினம் இதில் ராம்லாலை பலி கொடுத்துவிட்டார்கள். நான் குறிப்பிட விரும்புவது அவர்கள் அதிகாரத்தை துஷ்பிர யோகம் செய்தார்கள். தேர்ந்தெடுத்த மக்களை உதாசீனம் படுத்துகிறார்கள் என்பதைத் தான் குறிப்பிட்டேன். அதுதான் இன்றையதினம் நான் எடுத்துக் கொள்கிற பிரச்சினையே தவிர, வேறல்ல. 1980ஆம் ஆண்டில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை கொஞ்சம் கூட தயவு தாட்சண்யம் இல்லாமல் நிர்தாட்சண்யமாய் தூக்கி எறிந்தார்கள். நாமும் போராட்டங் கள் நடத்திப் பார்த்தோம். ஆனால் அங்கேயுள்ள மக்கள் சுய மரியாதை உணர்வு உள்ளவர்கள். அவர்கள் கடைசிவரையில் குரல் கொடுத்து, வெற்றி பெற்று, இன்றையதினம் அங்கே என். டி. ஆர். அவர்களின் ஆட்சி நடைபெறுகிறது. இன்றையத் தினம் அந்த நிலையை அங்கே உருவாக்கியிருக்கிறார்கள் என் பதை தான் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

திரு. இல. பலராமன் : மாற்றுத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசு கின்றபோது, ஆந்திர மக்களுக்கு சுயமரியாதை உணர்வு இருக்கிற தென்றும், தமிழக மக்களுக்கு சுயமரியாதை உணர்வில்லை யென்பதைப் போல சொன்னார்கள். அது உறுப்பினர் அவர் களுடைய கருத்தா, அல்லது அவர்களுடைய கட்சியின் கருத்தா என்பதை அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லோரும் சுயமரியாதை உணர்வு உளளவர்கள்தான். உறுப்பினர் அப்படி யெல்லாம் பேசக் கூடாது.



984 அக்டோபர் 11]

திரு. கே. சௌந்திரராசன்: துணைத் தலைவர் அவர்களே,
ல்எலோருக்கும் அந்த உணர்வு இருக்கவேண்டுமென்று தான்
விரும்புகிறேன். இன்றையதினம் காஷ்மீரில் பார்த்தோம்.
எந்தவிதமான காரணமும் இல்லாமல் 12 உறுப்பினர்கள் மாறி
னார்கள் என்ற தவறான ஒரு காரணத்தை வைத்து முதல்வராக
இருந்த பரூக் அப்துல்லாவை ஆட்சியிலிருந்து மாற்றினார்கள்.
இன்னொரு சம்பவத்தையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.
1969-ல் டெல்லியில் என்ன நடந்தது ? அங்கே காங்கிரஸ் பிளவு
பட்ட நேரத்தில், இந்திராகாந்தி அம்மையாருடைய ஆட்சி
பலவீனப்பட்ட நேரத்தில், பல்வேறு எதிர்க்கட்சிகளுடைய
ஆதரவைப் பெற்று அங்கே ஆட்சி நடத்தவில்லையா ? அவர்களுக்
கென்றால் ஒரு நிலைமை, காஷ்மீரிலே உள்ள பரூக் அப்துல்லா
என்றால் வேறொரு நிலைமையா ? அதைத்தான் நாம் எண்ணிப்
பார்க்க வேண்டும். அதிகாரத்தை கையில் வைத்துக் கொண்டிருக்
கிறவர்கள் எந்த அளவிற்கு தங்களுடைய திறமையை, ஆசை
யைப் பயன்படுத்தி இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுகிறார்கள்
என்பதை எண்ணிப் பார்க்கவேண்டுமென்று குறிப்பிட விரும்பு
கிறேன்.

(பிற்பகல் 1.10)

இந்த நேரத்தில் இன்னொரு கருத்தையும் நான் சொல்ல
விரும்புகிறேன். பக்கத்திலே இருக்கும் ஆந்திராவில் ராமாராவ்
ஆட்சி கலைக்கப்பட்ட நேரத்தில் இந்தியாவில் இருக்கிற
அத்தனை எதிர்க்கட்சிகளும் குரல் கொடுத்தார்கள். சாதாரண
மாக கிராமத்தில் நாம் பார்த்து இருக்கலாம். பக்கத்து வீட்டிலே
ஏதேனும் அசம்பாவிதம் நடந்து விட்டால் அக்கம்பக்கத்தில்
உள்ளவர்கள் குரல் கொடுப்பார்கள். அதைத் தடுத்து நிறுத்து
வார்கள். மிகவும் கோழையாக இருப்பவன் கூட, வன்முறை
நடப்பதைப் பார்த்துவிட்டால், கதவைச் சாத்திக்கொண்டாவது
குரல் கொடுப்பான். ஆனால் பக்கத்தில் உள்ள ஆந்திராவில் ஒரு
ஜனநாயகப் படுகொலை நடந்து இருக்கிற நேரத்தில் அதைப்
பற்றி நம்முடைய மாநில அரசு ஒரு தெளிவான கருத்தைத்
தெரிவிக்காமல் இருந்து விட்டது. (குறுக்கீடுகள்)

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சௌந்திரராஜன் அவர்கள் ஆந்திர அரசைக் கலைத்தபோது இங்கேயுள்ள ஆளும் கட்சி மௌனமாக இருந்தது என்று குற்றம் சாட்டினார்கள். தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த ஆந்திர அரசு கலைப்பைப் பற்றிச் சொல்கிறபோது, எங்கள் ஆட்சியைக் கலைத்தபோது நான் எந்த உணர்வில் இருந்தேனோ, அதே உணர்வைத்தான் ஆந்திர ஆட்சி கலைக்கப்பட்டபோதும் கொள்கிறேன் என்று சொன்னார்கள். இதை விட ஒரு வார்த்தை தமிழ் அகராதியில் இருக்க முடியாது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் செளந்திரராஜன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல உணர்வோடுதான் சொல்கிறாரா என்ற அச்சம் எனக்கு ஏற்படுகிறது. ஒரு விஷயத்தை எப்படிச் சொல்ல வேண்டுமோ அப்படிச் சொல்லவேண்டும். ஒரு ஜனநாயகப் படுகொலை நடைபெற்று இருக்கிறது. அதைக் கண்டிக்க வேண்டிய எதிர்க்கட்சிகள் எல்லாம் அதைக் கண்டித்து இருக்கிறபோது, எதிர்க்கட்சி ஆட்சி என்று இருக்கிற நம்முடைய மாநில அரசு அதைக் கண்டிக்கவேண்டாமா? நம்முடைய தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் ஆந்திராவில் நடைபெற்ற எதிர்க்கட்சித் தலைவர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசியிருக்கிறார்கள். ஆனால், அதற்குப் பின்னாலே என்ன காரணத்தாலோ கல்கத்தாவில் நடந்த மாநாட்டில் கலந்து கொள்ள போகவில்லை. அந்த அளவிற்கு டெல்லிக்குப் பணிந்து செல்கிற நிலைமை ஏதோ ஒரு காரணத்தால் வந்து விட்டது. அது எதனால் என்று எனக்குப் புரியவில்லை. ஏதோ ஒரு காரணத்தால் டெல்லிக்குச் சலாம் போடும் நிலைமை இருக்கிறது. டெல்லியைத் தட்டிக் கேட்கிற சூழ்நிலை இல்லை.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நேரத்தில் டெல்லியைப் பார்த்துக் கேட்டார்கள். சேதுசமுத்திரத் திட்டமும், சேலம் உருக்காலைத் திட்டமும் வரவில்லையென்றால், ஆளும்கட்சியில் இருக்கும் நாங்கள் எழுச்சி நாள் கொண்டாடுவோம் என்கிற அளவுக்குக் குரல் கொடுத்தார்கள். அப்படிப்பட்ட அண்ணா வழியில் வந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் நீங்கள் பக்கத்திலே உள்ள மாநிலத்தில் ஒரு பயங்கரமான ஜனநாயகப் படுகொலை மேற்கொள்ளப்பட்டு மிருகபலத்தை வைத்துக் கொண்டிருந்த ராமாராவ் முதலமைச்சர் பதவியிலிருந்து தூக்கி எறியப்படுகிறார் என்று சொன்னால் அதைக் கண்டிக்கிற அளவிற்கு நீங்கள் முன்வரவில்லை. பக்கத்திலே இருக்கிற மாநிலத்தவரை தம்பி என்று அழைக்கின்ற அளவிற்கு உள்ள நிலையில் அங்குள்ள ஆட்சி கலைக்கப்பட்ட நேரத்தில் கண்டித்துக் குரல் கொடுக்க முடியவில்லையே என்ன காரணம்? (குறுக்கீடுகள்).



டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு உறுப்பினர் ஒரு கருத்தை எப்படிச் சொல்ல வேண்டுமோ அப்படிச் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். ஒரு கருத்தைப் பற்றி ஒவ்வொருவர் ஒவ்வொரு மாதிரிதான் சொல்வார்கள். அது அவரவர்களுடைய பழக்கம். ஒருவனைப் பார்த்து ' நீ செத்துப் போய் விடுவாய் ' என்று ஒருவர் சொல்லலாம். அதே கருத்தை மற்றொருவர், ' நீ அவரைவிட அதிக நாள் வாழமாட்டாய் என்று சொல்லலாம்........

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் சௌந்திரராஜன் அவர்கள் தன்னுடைய எண்ணத்தை, கருத்தை, வெளிப்படுத்தியிருக்கிறார்கள். நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்த கருத்துக்கு மாண்புமிகு ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் மகிழ்ச்சியையும் தெரிவித்து, நன்றியையும் தெரிவித்து, தன்னுடைய ஆதரவையும் தெரிவித்ததற்குப் பிறகு திரு. சௌந்திரராஜன் என்ன சொன்னால் நமக்கென்ன? ராமாராவ் கருத்து என்ன என்பதுதான் நமக்கு முக்கியம்.

திரு கே. சௌந்திரராசன் : சௌந்திரராசன் தமிழக மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கிறேன். இன்று காலையில் கூடப் பார்த்தோம். கேள்வி நேரத்தில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் வனவிலங்கு ஆராய்ச்சி நிலையம் குறித்த வினாவிற்கு விடையளிக்கையில் டேராடூனில் அந்த ஆராய்ச்சி நிலையம் அமைய இருக்கிறது என்று மிக வினயத்தோடு சொன்னார்கள். இன்றைய தினம் ஆளுங்கட்சிக்கேற்பட்டிருக்கிற நிலைமை என்னவென்று சொன்னால் டெல்லியை தட்டிக்கேட்பதற்கு தங்களுடைய உரிமையைக் கேட்பதற்கு தயக்கம் காட்டுவதாக இருக்கிறது. என்ன காரணம் என்பதை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. (குறுக்கீடுகள்)

அதைப்போன்று இன்றையதினம் நெல்லுக்கு விலை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்றால் டெல்லியிலே இருப்பவர்கள் விடமாட்டேன் என்கிறார்கள் என்று இங்கே சொல்லுகின்ற சூழ்நிலை இருக்கிறது. மக்களுக்கு எந்தவிதமான நன்மை செய்ய வேண்டுமென்றாலும் டெல்லிக்கு மனுப் போடவேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தால் இந்த ஆட்சி எப்படி நடக்கும்? மாநிலங்கள் எப்படி சுயேச்சையாக இயங்க முடியும்?

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்பதுதான் இந்த நாட்டிலே இருக்கிற மக்கள் அத்தனை பேர்களுடைய ஒருமித்த கருத்தாக இருக்கிறது. ஆகையால் இந்தத் தீர்மானத்தை விரைவிலேயே நிறைவேற்ற வேண்டும்.

அதே நேரத்தில் இங்கே அம்மையார் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். அவர்கள் திருச்சி பெல் நிறுவனத்தில் வந்து பார்த்தால் தெரியும். அப்படிப்பட்ட நிறுவனங்கள் எதை எடுத்துக்கொண்டாலும் அங்கே வெளி மாநிலத்தவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே உள்ளவர்களுக்கு இடமில்லை. பெல் நிறுவனத்திலே வெளிமாநிலத்தவர் ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்பது அம்மையார் அவர்களுக்கும் தெரியாது என்று கருதுகிறேன்.

அதைப்போலவே புகளூர் பேப்பர் மில்லிலும் இருக்கிறது. தமிழ் நாட்டிலுள்ளவர்கள் அங்கே பாதி அளவுக்குக்கூட இல்லை. வெளி மாநிலங்களிலுள்ளவர்களை அங்கே கொண்டு வந்து வேலைக்கு வைத்திருக்கிறார்கள். நெய்வேலியை எடுத்துக் கொண்டாலும் அப்படித்தான் இருக்கிறது. நெய்வேலி நிறுவனத்திற்கு நிலம் கொடுத்தவர்களுக்குக்கூட அங்கே வேலை கிடைக்க வழியில்லை. அதைப்போன்று பெல் நிறுவனத்திற்கு பலர் நிலம் கொடுத்திருக்கிறார்கள். தங்கள் நிலத்தைக் கொடுத்து, அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கூட வேலை கொடுக்கவில்லை. ஆனால் வெளி மாநிலத்தவர்களுக்கு வேலை கிடைக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: துணைத் தலைவரவர்களே, நான் சொல்வது, ஒரு தொழிற்சாலை ஆரம்பித்தால் அதில் தமிழ்நாட்டு மக்கள்தான் பெரும்பாலும் நியமிக்கப்படுகிறார்கள். எஞ்ஜினீயர்கள் போன்ற தொழில் நுட்ப வல்லுநர்கள் வேண்டுமானால் பிற மாநிலங்களிலிருந்து வந்திருக்காலாம். தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் ஒன்றிரண்டு பேர் ஆக்சிடென்டாக வந்திருக்கலாம். ஆனால் முழுவதும் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பதை அழுத்தந்திருத்தமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. சௌந்திரராசன் : 3, 4 மாதங்களுக்கு முன்னால் ஒரு கேள்வி வந்தபோது கூட பெல் நிறுவனத்திற்கு நிலம் கொடுத்தவர்களுக்கு எல்லாம் வேலை கொடுக்க முடியவில்லை என்று பதில் தரப்பட்டிருக்கிறது இந்த மன்றத்திலே. அந்த வகையிலேதான் நிலைமை இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, இன்றையதினம் விவாதிக்கப்படுகிற மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்கிற இந்தத் தீர்மானத்தை * * * வரவேற்று என்னுடைய உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் இறுதியில் குறிப்பிட்ட வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 11–10–1984-ம் தேதியன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவின்படி சட்டமன்றப் பேரவையின் அலுவல்கள் பற்றிய திருத்திய நிகழ்ச்சி நிரலின் விவரம் :

| | | |
|---|---|---|
| 12–10–1984 (வெள்ளிக்கிழமை) | . | 1. 1984–85-ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல்.<br>2. 1978–79-ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவைக்கு அளித்தல்.<br>3. அரசினர் சட்ட முன்வடிவுகள்—ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும்.<br>பேரவை மாலையிலும் கூடும். |
| 13–10–1984 (சனிக்கிழமை) | " | அரசினர் சட்ட முன்வடிவுகள்—ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். |
| 14–10–1984 (ஞாயிற்றுக்கிழமை) | " | விடுமுறை. |
| 15–10–1984 (திங்கட்கிழமை) | " | 1. 1984–85-ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையின் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.<br>2. மேற்படி நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல்.<br>3. 1978–79-ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.<br>4. மேற்படி நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல்.<br>5. அரசினர் சட்ட முன் முடிவுகள்—ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும்.<br>பேரவை மாலையிலும் கூடும் |

[1984 அக்டோபர் 11

| | |
|---|---|
| 16–10–1984 (செவ்வாய்க்கிழமை) .. | 1983–84 மற்றும் 1984–85-ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையின் மீது விவாதம். |
| | பேரவை மாலையிலும் கூடும் |
| 17–10–1984 (புதன்கிழமை) .. | 1. அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். |
| | 2. இதர அரசு அலுவல்கள். |
| | 3. பகல் 12 மணி முதல் 1 மணி வரை இலங்கை வாழ் தமிழர் பிரச்சனை குறித்து ஒரு மணி நேர விவாதம். |
| 18–10–1984 (வியாழக்கிழமை) .. | தனியார் அலுவல்கள். |
| 19–10–1984 (வெள்ளிக்கிழமை) .. | 1. அரசினர் சட்ட முன்வடிவுகள்–ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். |
| | 2. இதர அரசு அலுவல்கள். |
| | 3. பகல் 12–30 மணி முதல் நீதிபதி திரு. நஞ்சப்பன் விசாரணைக் குழு அளித்த அறிக்கை மீது அரசு எடுத்த நடவடிக்கை குறித்து விவாதம்—1 மணி நேரம். |
| 20–10–1984 (சனிக்கிழமை) .. | இதர அரசினர் அலுவல்கள். |

பேரவைக் கூட்டம் 20–10–1984 அன்று முடிவுறும்.

பேரவை வழக்கம் போல் காலை 9–00 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 1–30)



1984 அக்டோபர் 11]

## 6. தனியார் அலுவல்கள்.

### தனித் தீர்மானம்—மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்குதல் (தொடர்ச்சி)

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்குதல் என்ற தலைப்பின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கொடுத்த அந்தத் தீர்மானத்தின் மீது வழிமொழிகின்ற வகையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்பதிலே அவர் எழுதிய ஆதாரங்கள், அவர் எடுத்து வைத்த எண்ணங்கள், அவர் பேசிய அத்தனை பேச்சுக்கள் இவைகள் எல்லாம் பெரிய மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற கருத்திலே எந்தவித மாற்று கருத்தும் கிடையாது. பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாடு பிரச்சினையை கைவிடுகின்ற நேரத்திலே ஒரு கருத்தைச் சொன்னார்கள். திராவிட நாடு பிரச்சினையில், அதற்குத் தடை இருக்கின்ற காரணத்தால், அடக்குமுறை வருகின்ற காரணத்தால் அந்த திராவிட நாடு பிரிவினையை நான் விட்டு விடுகிறேனேயொழிய அதற்கு அடிப்படையான காரணங்களை நான் விடவில்லை என்ற கருத்தை அழுத்தந்திருத்தமாக பேரறிஞர் அண்ணா அவர்கள், பத்திரிகை வாயிலாகவும், அந்தப் பிரச்சினையை கைவிட்டபோது மிகத்தெளிவாக நாட்டு மக்களுக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்தார்கள். அந்தப் பிரச்சினையை, திராவிட நாடு எண்ணத்தை விடவேண்டுமென்ற பிரச்சினையை, பொதுக் குழு 3 நாட்கள் கூடி, அதிலே உள்ள உறுப்பினர்களெல்லாம் கேட்டு அது விட வேண்டிய ஒரு காலக் கட்டாயம் இருக்கின்ற காரணத்தால், திராவிட நாடு பிரிவினையை பேரறிஞர் அண்ணா அவர்கள் கைவிட்டு, அந்தப் பிரிவினைக்கான எண்ணங்களை, அடிப்படை ஆதாரங்களை தமிழகம் மட்டுமல்ல, இந்தியாவிலே இருக்கின்ற அத்தனை மாநிலங்களுக்கும் அதிக, அதிகாரம் வேண்டுமென்ற கருத்திலே, இப்படிப்பட்ட கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அத்தனை மாநிலங்களும் அமல்படுத்தினால் தான் இந்தியாவிலே உண்மையான ஒற்றுமை ஏற்படும் என்று தீர்க்கதரிசனத்துடன் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள்.

அதுமட்டுமல்ல. இந்தியாவிலே தமிழகம் எந்தெந்த வகையிலே தொழிற்துறையிலே புறக்கணிக்கப்படுகிறது என்ற கருத்தை வெகு அழகாக அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். இன்றைய தினம் இவைகளையெல்லாம் படித்துக்கொண்டே

யிருக்கலாம். 'சிந்திரி சிரிக்கிறது அங்கே, முந்திரி தொழிற்சாலை வளரவில்லை இங்கே' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பாமரர்களுக்கும் புரியக் கூடிய வகையிலே, வடபுலம் வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்ற கருத்தை அறிஞர் அண்ணா அவர்கள் மிகத் தெளிவாக வெளியிட்டார்கள். அதுபோல தமிழ்நாட்டில் என்ன இல்லை? வளம் இல்லையா இங்கே? முப்புறம் கடல் இருக்கின்றது, அகில் இருக்கிறது, தேக்கு இருக்கிறது. அருமையான மலைகள் இருக்கின்றன. கனி வளம் இருக்கிறது. ஆனால் தமிழ் மக்களுக்கு வாழ்வுதான் இல்லை. அவர்கள் சிங்கப்பூருக்கும், இலங்கைக்கும் செல்கிறார்கள். அவன் விட்ட கண்ணீர் தான் கடலில் உப்பாக இருக்கிறது என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்த நிலைமையை தனக்கே உரிய முறையில் எடுத்துக்கூறினார்கள். இந்த நாடு தனியாக இருந்தால், நிச்சயமாக நல்ல முறையிலே வாழமுடியும் என்ற கருத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாடு பிரச்சினையை விடுகின்ற போது அந்தக் கருத்தை யாரும் எதிர்க்கவில்லை. நாவலர் அவர்கள் அந்தக் கருத்தின் அடிப்படையிலே, உலகத்திலே இருக்கின்ற நாடுகள் எல்லாம் எப்படி தனித்தனியாக வாழ்கின்ற அந்தக் கருத்தை நாவலர் தனக்கே உரிய பாணியில் சொல்வார். ஐரோப்பாவில் இருக்கின்ற வாட்டிகன் சிடி, போப் ஆண்டவர் வாழும் நகரம். அந்த நகரம் தனி ராணுவம், தனி நாணயம், தனி போலீஸ் படை இவைகளைக் கொண்ட ஒரு சிறிய நகரம். சின்னஞ்சிறு வாட்டிகன் சிடி, அதற்கு ஒரு கொடி பறக்கிறது ஐ.நா. சபையிலே என்று நாவலர் அவர்கள் முழங்கிய அந்தப் பேச்சுக்கள் எல்லாம் நமது இதயத்தை விட்டுமறையவில்லை. அந்த அடிப்படையிலே இந்த நாட்டுக்கு என்ன வளம் இல்லையா? அறிவு வளம் இல்லையா? செல்வ வளம் இல்லையா? ஆனால் என்னக் காரணத்தாலோ இந்திய ஒற்றுமை என்ற பெயரால், இந்த நாட்டிலே அறிவாளிகள் நிறைந்த தமிழ்நாடு, அவர்களுடன் இருக்கவேண்டிய காலகட்டத்திலே இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். மத்திய அரசு இன்றைய தினம் அதிக அதிகாரங்களைக் குவித்து வைத்துக்கொண்டிருக்கிறது. இங்கே மற்ற உறுப்பினர்கள் எல்லாம் பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். அவர்களுக்கு இருக்கின்ற ஒரே அறிவாற்றல் 356 என்ற ஒரு பிரிவு. எந்த அறிவாற்றலும் இல்லாதவர்கள், அந்த 356 என்ற பிரிவை வைத்து ஒரு ஆட்சியைக் கலைக்கிறார்கள். அதற்கு ஒரு கவர்னர். அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். கவர்னர் நாட்டுக்குத் தேவையா என்று. இன்னும் கொஞ்சம் கொச்சையாகத் தமிழிலே சொன்னார்கள். ஆட்டுக்கு அஜாகலசம் என்று. அஜாகலசம் என்றால் தாடி என்று பொருள். எப்படி ஆட்டுக்குத் தாடி தேவையில்லையோ அதைப்போல இந்த நாட்டுக்கு கவர்னர் தேவையிலை என்று அறிஞர் அண்ணா அவர்கள் மிக அழகாகச் சொன்னார்கள்.





ஆங்காங்கே கவர்னர்களை நியமித்துவிட்டு, அவர்கள் நினைத்த நேரத்திலே ஒரு வலிமைமிக்க சர்க்காரை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்காரை கலைக்கிற ஒரு முறையை இந்திய அரசு கடைப்பிடிக்கிறது. என்னைப் பொறுத்த வரையிலே இந்தியாவிலேயே தமிழர்கள்தான் அறிவாற்றல் உள்ளவர்கள். வேறு எங்கும் இவர்களைப்போல அறிவாளிகள் கிடையாது என்பது என்னுடைய நம்பிக்கை. ஆனால் ஒற்றுமை என்ற பெயராலே, மெஜாரிட்டி என்ற பெயரிலே, ஒரு பெரிய இடத்திலே உட்கார்ந்துகொண்டு, இந்த நாட்டை ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கிறார்கள். அறிவாற்றல்தான் இல்லை என்று சொன்னாலும், எதையாவது சுவையாகச் சாப்பிடத் தெரிகிறதா? என்றால் அதுவும் கிடையாது. சுவையாகச் சாப்பிடத் தெரியாதவர்கள் இடத்திலே அதிகாரத்தைக் குவித்துவைத்துவிட்டு, சுவையாகச் சாப்பிடக்கூடிய அறிவாற்றல் மிகுந்த தமிழ்நாட்டுக்காரர்கள் இன்றைய தினம் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பிணைப்பை அறுக்கவேண்டும் என்றால் நமக்கு அதிக அதிகாரங்கள் தேவை.

மொழியை எடுத்துக்கொண்டால், இந்தியினுடைய ஆதிக்கத்தை மெல்ல மெல்ல நுழைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த திராவிடர் இயக்கம் விழிப்போடு இருக்கின்ற காரணத்தால்தான், அந்த மொழி ஆதிக்கத்தை நாம் பூரணமாக எதிர்க்கிற காரணத்தால்தான் இங்கே அவர்கள் வாலாட்ட முடியவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் இந்த நாட்டிலே இந்திய ஒற்றுமை என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இலங்கையிலே தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள். கொலை செய்யப்படுகிறார்கள். பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள். அதைப்பற்றியெல்லாம் இதுவரையிலும் எத்தவிதமான நடவடிக்கையும் இல்லை. திராவிடர் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் நடத்தாத ஊர்வலங்கள் இல்லை, நடத்தாத போராட்டங்கள் கிடையாது. நடத்தாத கடையடைப்புகள் கிடையாது. அரசே கடை அடைப்பை நடத்தியது. ஆனால் அதைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல் இருக்கிறது மத்திய அரசாங்கம். இன்றையதினம் ஒரு அறிக்கையைவிட்டு இருக்கிறார்கள். நாங்கள் என்ன சொன்னாலும் இவர்கள் கேட்கவில்லை என்று. பல வருஷங்கள் கழித்து இலங்கையிலே இருக்கின்ற தமிழர்கள் ரோமாபுரியிலேயும், லண்டனிலேயும், மேற்கு ஜெர்மனியிலேயும் கூலி வேலை செய்து கொண்டு தங்கள் பிழைப்பை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

(திரு. பாபு ஜனார்த்தனன்) [1984 அக்டோபர் 11
(பிற்பகல் 1–30)

அண்மையிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் மேற்கு ஜெர்மனியிலே கூலி வேலை செய்து கொண்டிருக்கின்ற அன்றாடம் ஒருவேளைகூட உணவு உண்ண முடியாத ஒரு தமிழனைப் பார்த்து கேட்டிருக்கிறார்கள். அவனுக்கு இவர்கள் ஏதோ வசூல் செய்து நல்ல உணவை ஒருவேளையாவது சாப்பிடட்டும் என்று உதவி செய்திருக்கிறார்கள். அப்போது அந்தத் தமிழன் என்ன சொல்லியிருக்கிறான் என்றால், என்னுடைய தமிழன் அங்கே சாகடிக்கப்படுகிறான், அவனைக் காப்பாற்ற முடியவில்லை, எனவே எனக்கு நல்ல உணவு தேவையில்லை. நீங்கள் கொடுக்கின்ற பணத்திலே ஒரு துப்பாக்கியை வாங்கிக் கொடுங்கள், என்னுடைய தமிழன் அங்கே போராடட்டும் என்று மேற்கு ஜெர்மனியிலே உள்ள தமிழன் சொல்லுகிறான். நான் கேட்டுக் கொள்கிறேன். இந்திய ஒற்றுமை என்று பேசுகிறீர்களே, ஒரு இனத்தை காப்பாற்ற முடியாத அரசு, அதுவும் அங்கே தமிழர்கள் கொலை செய்யப்படுகிறார்கள், கற்பழிக்கப்படுகிறார்கள், அதைப்பற்றிக் கவலைப்படாத அரசு, பங்களாதேஷ் பிரச்னையில் மட்டும் தலையிட்டு உதவி செய்தார்களே, அதற்கு நீங்கள்...... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 12–10–1984 காலை 9–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

153. தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு மதுவிலக்கு மேல்முறையீடு மற்றும் சீராய்வு விதியை இயற்றுவது தொடர்பாக மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறையின் 16–2–1983ஆம் நாளிட்ட 101-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்—
எதுவுமில்லை.



இணைப்பு.

(13 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 45-க்கான விடையைக் காண்க.)

ஆலயங்களின் உபரிநிதி 1959-ம் ஆண்டு இந்து சமய அற நிலைய சட்டத்தின் 36, 36ஏ, 36பி மற்றும் 66(1) பிரிவுகளின் விதிகளுக்குட்பட்டு செலவழிக்கப்படுகின்றது. திருத்தணி, திருப் பரங்குன்றம் மற்றும் பழனியில் உள்ள ஆலயங்களின் உபரிநிதி ஆலய வாரியாக செலவு செய்யப்படும் விபரம் பின்வருமாறு :

(1) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி.

இத்திருக்கோயிலின் உபரிநிதி நாட்டுடைமையாக்கப்பட்ட பல்வேறு வங்கிகளிலும், மற்றும் மத்திய கூட்டுறவு வங்கியிலும் முதலீடு செய்யப்பட்டு வருகிறது. இக்கோயிலின் உபரிநிதி அன்பு இல்லங்கள், சித்த வைத்தியசாலைகள் பராமரித்தல், மற்ற ஆலயங்களுக்கு கடன் அளித்தல், முதலீடுகள் செய்தல், ஆணையரின் பொதுநல நிதிக்கு அளித்தல், சமயப் பிரச்சாரங்களுக்கு செலவு செய்தல், இலவசத் திருமணங்கள் நடத்துதல் மற்றும் சுதந்திர தின சிறப்பு வழிபாடுகள் நடத்துதல் (சமபந்தி போஜனம்) போன்ற தற்காரியங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது.

(2) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்.

இத்திருக்கோயிலின் உபரி வருமானம், கோயிலின் சார்பில் நடத்தப்பட்டு வரும் முதியோர் இல்லம், பெண்கள் பள்ளிமற்றும் சித்த வைத்திய சாலைகள் பராமரித்தல் போன்ற சிறிய செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேற்கண்ட பராமரிப்பு செலவுகள் செய்யப்பட்டது போக எஞ்சிய தொகை வங்கிகளில் நிலையான வைப்புகளாக முதலீடு செய்யப்பட்டு வருகிறது.

(3) அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி.

இத்திருக்கோயிலின் உபரிநிதி கீழ்க்கண்ட நிறுவனங்களை நிர்வகிக்கும் செலவினங்களுக்கு வழங்கப்படுகிறது :—

1. ஆண்கள் கலைக்கல்லூரி
2. மகளிர் கலைக்கல்லூரி
3. ஆண்கள் தொழில் பயிற்சிக்கல்லூரி
4. பெண்கள் தொழில் பயிற்சிக் கல்லூரி
5. குழந்தைகள் காப்பகம்
6. செவிடர் பள்ளி
7. தமிழ் போதனாமுறைப்பள்ளி
8. பழனியாண்டவர் மெட்ரிக் பள்ளி
9. வேதாகமப் பள்ளி
10. நாதஸ்வரக் கல்லூரி
11. அன்பு இல்லம்
12. நூல் நிலையம்
13. சித்த வைத்தியசாலை
14. அலோபதி மருத்துவமனை.

மற்றும் ஆணையரின் அனுமதியின்பேரில் உபரிநிதியிலிருந்து பிற திருக்கோயில்களுக்கு கடனும் வழங்கப்பட்டு வருகிறது. இலவசத் திருமணம், சிறப்பு விருந்துகள், திருவிழாக் காலங்களில் சமய சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள் இவைகளுக்காகவும் உபரிநிதி செலவழிக்கப்படுகிறது. இவைகளன்றி சட்டப் பிரிவு 36-ன்கீழும் மற்றும் 36(ஏ)-ன்கீழ் ஆணையரின் அனுமதி பெற்று சட்டப் பிரிவு 66(1)-ல் குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

ஆவணக்காப்பக
சென்னை-600
136274
D 1
V211,31 N84
N84.68.3